யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 90 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 01 2025




**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**



































# 2025

# உலக வணிகம்

## விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203
**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com
**இணையத்தளம்** (Website)
www.sangathamil.ca

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சி யும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# ஜமாலியா கடற்பரப்பில் ஏற்பட்ட விபத்தில் விதையான வேங்கைகள் நினைவாக ஒளி தந்த 22 தீபங்கள்






திருகோணமலை மக்களுக்கு அது ஒரு கறுப்பு நாள். திருகோணமலையின் போராட்ட வரலாற்றில் அதுவொரு நெருப்பு நாள். மாபெரும் வரலாறொன்றை சாதித்த வெற்றியுடன் திரும்பி வரும் வேளையிலே அந்த வீரபுருசர்கள் இருபத்தியிரண்டு பேரைக் கடலலை சுருட்டிக் கொண்டது. சிறீலங்காவின் சிங்களச் சிப்பாய்களைக் கண்ணி வெடியிலே சிதறடித்தவர்கள், இந்தியப்படையை சொல்லிச் சொல்லிச் சுட்டவர்கள்.

படகுகள் தயாராகின. வீரர்கள் வந்த மூன்று படகுகளில் ஒரு பட

குதூகலத்துடன் கூறகின்றார்கள்.













ஓ! எத்தனை கோரமான நிகழ்வு அது. ஜமாலியா என்ற அந்த முஸ்லிம் கிராமத்திலே முகாமிட்டிருந்த தமிழினத் துரொகிகளின் (ஈ.என்.டீ. எல்.எவ்) முகாமைக் கடல்மார்க்க மாகச் சென்றடைந்த விடுதலைப் புலிகள் அந்தத் துரோகக் கும்பலைச் சுற்றிவளைத்துத் தாக்க... எதிர்பாராத தாக்குதலாலும், எங்கள் வீரர்களின் அதிவேகமும் கண்டு துரோகக் கூட்டம் ஓரிரு நிமிடங்களிலே தங்கள் முகாமைவிட்டுத் தலை தெறிக்க ஓடிவிட வெற்றி புலிகளுக்கே என்றானது. நூற்றுக்கணக்கான ஆயுதங்கள். எண்ணிலடங்கா தோட்டாக்கள் பெரிய வாளிகளில் படகுகளில் ஏறியது. அந்த ஏராளமான "சுமைகளோடு இரண்டு

கின் படகோட்டி (தனிநபர்)
பயப்பீதியில் காணாமல் போயிருந் தான். அது விதியின் செயலாக இருந்தது. ஏனெனில் ஏராளமான கனத்தின் காரணமாக இரண்டு படகுகளும் நீர்மட்டத்தில் நின்றிருந்தன.

அந்த முகாம் வெற்றியடைந்ததுமே மேஜர் கமல் மூலமாக வெற்றிச் செய்தி எங்களின் மத்திய முகாமை வந்தடைகிறது. உடன் சென்ற மேஜர் மதியும் மேஜர் சுரேசும் "இன்னும் நூறு புதிய புலிவீரர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் கொண்டுவரு கின்றோம்" என வெற்றியின் பெறுமதியைக்

ஆம்! கமலும், மதியும், சுரேசும் ஏற்கனவே பல ஆயுதங்களை சிங்கள, இந்திய இராணுவங்களிடமிருந்து கைப்பற்றியதால் நூற்றுக்கணக்கான புதிய வீரர்கள் உருவானார்கள். ஒரு ஆயுதம் கைப்பற்றப்படும் போது ஒரு புதிய வீரன் கிடைத்ததாக நினைக்கின்ற புரட்சித் தளபதிகள் அவர்கள். நூற்றுக்கணக்கான ஆயுதங்களை வென்றதும் அவர்கள் நூறு வீரர்களைக் கண்டதாகவே ஆனந்தமானார்கள்.

ஆழ நடுக்கடலிலே பயணித்துப் பெரியதொரு வெற்றியைப்
























பெற்றிருந்தார்கள். அந்த மாபெரும் வெற்றியில் மகிழ்ந்த அவர்களின் மீது பொறாமை கொண்ட இயற்கை பெரும் சீற்றத்துடன் அவர்கள் மீது புயலென சீறியது. அது விதியின் சதி. விடுதலைக்கு உரமிட்டவர்களை, மண்ணின் காவலர்களை விதி எனும் கொடும் அரக்கன் வெற்றியை அனுபவிக்க விடாமல் பேரலைகளால் சர்வநாசம் செய்துவிட்டான்.

காலையில் விழித்தெழுந்ததுமே அடுத்த நடவடிக்கைக்கு அடித்தளம் போடுகின்றவர்கள். நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளும், மிதிவெடிகளும் செய்கின்றவர்கள்.
கெரில்லாப் போர்முறையிலிருந்து மெல்ல மெல்ல முன்னேறி, காட்டிலே வீடு கட்டி, பெரிய தோட்டங்கள் செய்து, வாகனங்கள்

துமே சாம்பல்தீவு கிராமம் மகிழ்ந்ததும்… பின் அவர்கள் ஆழ்கடலில் உறைகின்றது தெரிந்ததும் இருண்டதும்…. இன்றைக்கும் மறக்கமுடியாத நினைவு.

சாதனை படைத்தவர்களை கொடிய விதியரக்கன் கடலலையை ஏவி விட்டுவிட்டான் போலும். மக்களின் நெஞ்சங்களிலே வீர மறவர்களாக பவனி வந்தவர்கள் இன்று கதறியழும் மக்களிடை “மாலையிட்ட மாவீரராய்” மறிவிட்டார்கள். அவர்கள் கட்டியாண்ட தேசம் இவர்களைத் தேடி நிற்கின்றது. கமல் மாமா என்ற குழந்தைகளும், சுரேஸ் அண்ணா, மதி அண்ணா என்ற மழலைகளும் விக்கிவிக்கி அழுகின்றார்கள். இனி அந்த மாமா வரமாட்டாரா? என்று கேட்டவர்கள் விழிகளெல்லாம் கண்

கரையிலிருந்து ஐந்து நிமிடதூரம் படகிரண்டும் அசைந்தாடிச் செல்லு கின்ற நேரத்தில் திடீரென பெருமலைகளோடு பேரலைகள் ஆர்ப்பரிக்க ஆரம்பிக்கின்றன. அதுவொரு எதிர்பாராத நிகழ்வு. படகுகளினுள் நீர் நிரம்பிவிடுகிறது. எட்டாத தூரத்தில் கரை தெரிகிறது. போகவேண்டியது ஏராளமான தூரம். படகுகள் நீரினுள் அமிழ்கின்றன.

கைகளில் ஆயுதங்களும், காலிலே பூட்சுகளும், நெஞ்சிலே கோல்ஸ்டகும் நீந்தமுடியாத நிலையாகிறது. உப்பு நீர் வயிற்றை

நிரப்புகிறது. வாந்தியும் வருகிறது. இது சமயம் கரையிலே இந்திய இராணுவம் வேட்டுத் தீர்க்கிறது. தப்பிச்சென்ற













ஓடிவர வழிகள் வெட்டி, புதிய தேசத்தை கானகத்தில் உருவாக்கி, நூற்றுக்கணக்கான வீரர்களுக்கு பயிற்சியளித்து, காட்டினுள் கால் வைக்கும் ஒவ்வொரு சிப்பாயின் சப்பாத்துக் கால்களும் சிதறுகின்ற மாயத்தைக் காட்டு எல்லையிலே குறிபிசகாது செய்துவிட்டு, தேடிச்சென்று நேரடியாக மோதுகின்ற புது யுகத்தை அவர்கள் தினசரியாக்கினார்கள்.

1989ஆம் ஆண்டு தமிழீழமெங்கும் முதல் முதலாக “மாவீரர் நாள்” பிரகடனமாயிற்று. வீரத்தலைவர் மேதகு பிரபாகரனின் ஆசியுடன் எமது வீரர்கள் சாம்பல்தீவு என்ற கிராமத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வருகின்றார்கள். சாம்பல் தீவு எதிரிகளின்

ணீரே.

இந்திய இராணுவம் தமிழீழத்தை விட்டு வெளியேறுகின்ற அந்தக் காலகட்டத்திலே இந்திய அரசின் கைக்கூலிகளாக செயற்பட்ட ஈ.என். டீ.எல்.எவ் போன்ற துரோகிகள் தாங்களும் இந்தியக் கப்பல்களில் ஏறி தப்பியோட ஆயத்தமாகிக் கொண்டிருந்தர்கள்.

இந்தத் துரோகிகள் தப்பிச் செல்லவிருக்கின்ற அந்த ஒரிரு நாட்களில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஸ் போன்ற தளபதிகள் மூன்று படகுகளில் ஆழக்கடலில் பயணித்து ஜமாலியாக் கடற்கரையிலே தரையிறங்கினார்கள். கரையிலிருந்து

ஈ.என்.டி.எல்.எவ். துரோகிகளின் தகவலில் ஜமாலியாவின் அண்மையிலிருந்த லவ்லேன் நெக்ஸ்டோர்ஸ் முகாமிலி ருந்து வந்த இந்தியத் துருப்பு கரையில் நின்று கண்காணிப்புச் செய்தபடி.. துப்பாக்கி முழக்கம் செய்கிறது.

தோட்டா எட்டாத தொலைவிலே எங்கள் வீரரின் இரு படகுகளும் நீரில் மூழ்கிவிட ஆழக்கடலின் அடிமணலிலே கனபாரங்களுடன் மூச்சுக்குப் போராடி மாண்டனர் சிலர்; இனி முடியாது என்றறிந்து சயனைற்றுக் குப்பியை வாயில் மென்று மடிந்தவர் பலர்… ஆயுதங்களை பிள்ளை என்றும், தாயென்றும் மார்போடணைத்துக் கொண்டு சுவாசிக்க மறந்தவரும் பலர்.













(இந்தியப்படை, ஈ.என்.டீ.எல்.எவ்) மத்திய முகாம்கள் அமைந்திருந்த கிராமம். திருமலை நகரத்தின் அண்மையில் அமைந்துள்ள பெரிய கிராமம். அன்று முழுவதும் இந்திய டாங்கிகளும் துரோகக் கூட்டமும் எமது வீரர்களுடன் மோதினார்கள். ஆயினும் கொண்டிருந்த இலட்சியம் அன்றைய தினம் வரை குன்றிடவில்லை. சாம்பல்தீவு தோரணங்களாலும் வண்ண வளைவுகளாலும் ஜொலிக்க, ஒலிபெருக்கி வீரர் புகழ் பாடியது. எங்களின் வீரர்கள் சளையாது சண்டையிட்டு அன்று முழு நாளும் சாம்பல்தீவைக் கட்டுப்பாட்டில் வைத்தி குந்தார்கள்.

இப்படியான வாழ்வின் மறக்க முடியாத சாதனைகளெல்லாம் படைத்த அந்த மறவர்கள் ஒரு பெரிய சாதனையை வென்றெடுத்து வரும்வழியிலே.. பிரிந்தார்கள். எம்மை விடுப்பிரிந்தார்கள். அவர்கள் வெற்றியுடன் வருகிறார்கள் என்று அறிந்த

சுமார் ஐந்து நிமிட நடை தூரத்திலிருந்த ஈ.என்.டி.எல்.எவ் துரோகிகளின் முகாமை புலிகள் சுற்றிக்கொள்ள, சுமார் ஐந்து நிமிட நேரத்தில் முகாம் வீழ்ச்சியடைந்துவிட அந்த முகாமினுள்ளிருந்த மிக ஏராளமான ஆயுதங்களையும், எண்ணிலடங்காரவைக் கேன்கள், பைகள், ரவைக் கூடுளையும் சுமந்து கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

கரையில் இரண்டு படகுகள் மட்டுமே நிற்கின்றன. ஆம் ஒரு படகோட்டி பயப்பீதியில் படகோடு போய்விட்டான். இது விதியின் முதற் படி, எமது வீரர்கள் இரண்டு படகுகளிலும் ஆயுதங்களை ஏற்றிமுடிக்கின்றார்கள். படகுகள் பாரத்துடன் கடலில் மிதக்கின்றன. அடுத்தடுத்து ஒவ்வொருவராக படகிலேறுகிறார்கள்… படகு புறப்படுகின்றது.

நெஞ்சங்களிலே சாதனையால் படைத்த வெற்றிகளின் அந்த வீரக்காளைகள் துன்பப் பெருமூச்சை அள்ளித்தந்துவிட்டு சென்றுவிட்டார்கள்.

ஆனால் அவர்கள் ஒரு காவியத்தை இறுதி நேரத்திலும் வென்று வந்து தான் வீரச் சதியில் சாய்ந்தார்கள். அவர்கள் சாகின்ற கடைசி நேரத்திலும் ஒரு பெரிய வெற்றியை ஈட்டிய மகிழ்வுடன்தான் கடலில் உயிர் விட்டார்கள்.

அந்த நிகழ்விலே உயிர்துறந்த ஒரு வீரனின் தாய் “என்னுடைய மகன் கடலில் செத்ததற்கு நான் வருந்தவில்லை. அவன் வீரனாக செத்திருக்கிறான். அதனால் நான் பெருமையடைகிறேன்” என்று கூறினாள். அந்தத் தாய்க்கு இனிமேல் புலிவீரர்கள் ஒவ்வொருவரும் தன் பிள்ளையாகவே தெரியும்.









வெற்றியுடன் புலிவீரர்களை வர வேற்க ஆயத்தமாகிக் கொண் டிருந்த சாம்பல்தீவு மக்கள் சேதியறிந்ததும் துன்பத்தில் துடித் துப்போனார்கள். திருகோணமலையெங்கும், தமிழீழ மெங்கும் செய்தி கேட்டு மக்கள் இமைக்க மறந்தனர். மூடிய விழிகளி லிருந்து நீர்த்துளிகள். ஒரு குஞ்சை இழக்கவில்லை, தன் குஞ்சுகள் எல்லாவற்றையுமே இழந்தது போல திருமலை மக்கள் ஆறாத்துயரில் ஆழ்ந்து போனார்கள்.

இதில் மேஜர் கமல், மேஜர் மதி, மேஜர் சுரேஷ் போன்ற தளபதிக ளுடன் கப்டன் நேமி, கப்டன் ரகு. கப்டன் குகன், கப்டன் மகேஷ், கப்டன் அன்ரன் ஆகிய இளந்தள பதிகளுடன்.. லெப் கில்பட், 2ம் லெப் கிருபன், 2ம் லெப் அசோக், 2ம் லெப் நவா, 2ம் லெப் சங்கர், வீரவேங்கை சொனி, வீரவேங்கை குமார், வீர வேங்கை விஜி, வீரவேங்கை கருணா, வீரவேங்கை சின்ன மதி, வீரவேங்கை சின்னசுரேஷ், வீர வேங்கை காந்தி, வீரவேங்கை பைரவன், 2ம் லெப் சாந்தன் போன்ற வீரர்களும் கடலிலே கரைந்தவர்கள். இவர்கள் மண்ணை நேசித்தவர்கள், மண்ணுக்காக குருதியை நீராய் இறைத்தவர்கள். கடைசி நேரமும் காவியம் படைத்த சாதனையாளர்கள். அவர்கள் மீட் கத் துடித்த தேசம்.. அவர்களின்றி விக்கித்து நிற்கின்றது. மண் ஒருநாள் மீட்கப்படும். அன்று இந்த வீரர்களின் கனவு நன வாகும். அவர்கள் இப்போதும் அந்த மண்ணின் காவலர் களாகவே உலா வரு கின்றார்கள்.




www.sangathamil.ca




# சிறீலங்கா வன இலாகா திருடிய மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

15.01.2025

வனவளத் திணைக்களம் மக்களிடமிருந்து களவாடிய காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



மான்னார் – முசலி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் புதன்கிழமை (15) இடம்பெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முசலிப் பிரதேசசெயலகப்பிரிவில் பெருமளவான மக்களின் காணிகள் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிப்புச் செய்யப் பட்டுள்ளதாக கிராமமட்ட பொது அமைப்புக்களால் குறித்த கூட்டத்தில் முறையீடுசெய்யப்பட்டது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை முசலிப் பிரதேசசெயலகத்தால் மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதியுடன் வனவளத் திணைக் களத்திடமிருந்து 3510ஏக்கர் காணிகளும், வனஜீவராசிகள் திணைக்களத்திடமிருந்து 1110ஏக்கர் காணிகளும் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளதாகவும் இதன்போது முசலிப் பிரதேச செயலாளரால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறித்த கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பிரதேசசெயலர், கிராமஅலுவலர், காணி உரிமையாளர்களுக் குத் தெரியாமல், வனஇலாகா தமது எல்லைக்கற்களை இட்டு மக்களின் காணிகளை அபகரித்துவருகின்றது.

அத்தோடு வனஜீவராசிகள், தொல்லியல் திணைக்களத்தினர், படையினர் என பல்வேறு திணைக்களங்களும் இவ்வாறு எமது மக்களின் காணிகளை அபகரிப்புச்செய்யும் செயற் பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதில் மிக அதிகளவான மக்களின் காணிகளை வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளது.

இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடு விப்பது தொடர்பில் அரசதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும், அதே போல் நாம் இது தொடர்பில் ஜனாதிபதியுடனும், உரிய ஏனைய தரப்புக்களுனும் பேசத் தயாராக இருக்கின்றோம்.

வனவளத் திணைக்களத்தின் அபகரிப்புச் செயற்பாடே மிக மோசமாகக் காணப்படுகின்றது. எனவே வனவளத்திணைக் களம் மக்களிடமிருந்து திருடிய காணிகளை முதலில் விடுவிக்கப்படவேண்டும் – என்றார்.

இதன்போது குறித்த கூட்டத்தில் பங்கேற்றிருந்த கிராமமட்ட பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கருத்தை கைதட்டி வரவேற்றனர்.

இதன்போது முசலிப் பிரதேசசெயலர் கருத்துத் தெரிவிக்கையில்,

இடப்பெயர்விற்கு முன்னர் மக்களால் பயன்படுத்தப்பட்டு, இடப் பெயர்விற்குப் பின்னர் வனஇலாகவால் கையகப்படுத்தப்பட்டு விடுவிக்கப்படவேண்டிய மக்களின் காணிகள், எதிர்காலத்தில் மக்களின் குடியிருப்புத் தேவை, மக்களின் விவசாயத் தேவை, மேச்சல் தரவை, ஏனைய பொதுத் தேவைகள் கருதி மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதியோடு வனவளத் திணைக்களத்திடமிருந்தும், வனஜீவராசிகள் திணைக் களத்திடமிருந்தும், முசலி பிரதேச செயலகம் உள்ளிட்ட மன்னாரின் ஏனைய பிரதேசசெயலகங்களாலும் காணிகள் விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளது.

அந்தவகையில் முசலி பிரதேசசெயலர் பிரிவில் வன இலாகாவிட மிருந்து 3510ஏக்கர் காணிகளும், வனஜீவராசிகள் திணைக் களத்திடமிருந்து 1110 ஏக்கர் காணிகளும் உரிய முறையில் கள விஜயம் செய்து, அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு காணிகளை விடுவித்துத் தரும்படி கோரப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதி பதியுடனும் பேசி இந்தக் காணிகளை விடுவிப்பதற்கு நட வடிக்கை எடுக்கவேண்டுமெனவும் முசலிப் பிரதேசசெயலாளர் வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்தார்.

# மன்னார் நீதிமன்றம் முன் துப்பாக்கி சூடு: இருவர் உயிரிழப்பு

16.01.2025

மன்னார் நீதிமன்றத்துக்கு முன் இன்று வியாழக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நொச்சிக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந் துள்ளது.




மன்னார் நீதவான் நீதி மன்றத்துக்கு முன்பாக இன்றைய தினம் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந் ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்திருந்தனர்.

வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சூட்டின் போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் படுகாய மடைந்த இரு ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்களான 61 வயதான சவேரியன் அருள் மற்றும் 42 வயதான செல்வக்குமார் யூட் என தெரிய வந்துள்ளது.

படுகாயம் அடைந்த ஆணொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும், காயமடைந்த ஆண் ஒருவரும் இன் றைய தினம் மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்த போதே, மோட்டார் சைக்கிளில் வந்தவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றதாக தெரிய வருகிறது.

தாக்குதல் சம்பவமானது, 2022ஆம் ஆண்டு உயிலங் குளத்தில் நடைபெற்ற படுகொலைகளுடன் தொடர்புபட்டதாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.



2022ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திகதி உயிலங்குளத்தில் நடைபெற்ற மாட்டுவண்டி சவாரி தொடர்பான முறுகல் ஒன்றை அடுத்த ஏற்பட்ட மோதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக 2023ஆம் ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி மன்னார் அடம்பன் பகுதியில் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாகவே இன்றைய தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

# யாழில் வேலையில்லா பட்டதாரிகளின் போராட்டம்

16.01.2025

வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினையையும் கோரிக் கையையும் மக்கள் மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் இன்றைய தினம் வியாழக்கிழமை யாழ். நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லாப்பட்டதாரிகள் ஒன் றிணைந்து மேற்கொண்ட இந்த விழிப்புணர்வு செயற்திட் டத்தில் துண்டுப்பிரசுரம் வழங்கல், மக்களின் கருத்துக்களை உள்வாங்கல், போன்றவற்றை வேலையில்லாபட்டதாரிகளின் கோரிக் கைக்கு வலுச்சேர்க்கும் வகையில் முன்னெடுத்தனர்.

ஆரம்ப நிகழ்வு உலகத்தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினைவு தூபி முன்றலில் ஆரம்பமானது. அதனைத்தொடர்ந்து யாழ் நகர்ப்பகுதிக்குள் பேரணியும் துண்டுப்பிரசுரம் வழங் கலும் இடம்பெற்றது. தொடர்ந்து விழிப்புணர்வு செயற்பாடுக ளும் முன்னெடுக்கப்பட்டன.



# ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீதான வழக்கு ஒத்திவைப்பு

16.01.2025

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் முன்னாள் தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டபாய கடற்படை முகாமின் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் திட்டமிட்டு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைக்காக அழைக்கப் பட்ட அவர் முல்லைத்தீவு காவல்துறையினரால் 20.04.2019 கைது செய்யப்பட்டிருந்தார்

பின்னர் அவர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டு கடந்த பல வருடங்களாக வழக்கு இடம்பெற்று வருகின்ற நிலையில் வழக்குடன் தொடர்புடைய கடற்படை புலனாய்வாளர் அவர் களுக்கு பொறுப்பான அதிகாரி சாட்சியமளிப்பதற்காக வழக்கு விசாரணைகள் 2025.01.16 இன்றைய திகதிக்கு தவணை யிடப்பட்டிருந்தது

இந்நிலையில், இன்று 16.01.2025 முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றது

இன்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் சார் பாக சட்டத்தரணி வி எஸ் எஸ் தனஞ்சயன் முன்னிலையாகியிருந்தார்.

வழக்குடன் தொடர்புடைய கடற்படை புலனாய்வாளர் அவர் களுக்கு பொறுப்பான அதிகாரி மன்றில் சாட்சியமளித்தார் தொடர்ந்து குறுக்கு விசாரணைக்காக குறித்த வழக்கு மீண்டும் 2025.04.03 அன்று தவணை யிடப்பட்டுள்ளது

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தார்.

இதன் போது செல்வபுரம் பேரூந்து நிலையத்தில் வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களையும், ஊடகவியலாளர்களையும் இனம் தெரியாத நபர் ஒருவர் அச்சுறுத்தல் விடுத்ததோடு தனது கைபேசியில் ஒளிப்படம் எடுத்துள்ளார்

இதன்போது, ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த நபரை அடையாளப் படுத்த முற்பட்டவேளை ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் தலையிட்டு குறித்த நபர் யார் என வினவியபோது, அதற்கு அவர் யார் என சொல்ல மறுத்து குறித்த இடத்தினை விட்டு தப்பி ஓடிய போது ஆர்ப்பாட்டக்காரர்களால் பிடிக்கப்பட்டு மீண்டும் விசாரித்த போது தான் கடற்படை அதிகாரி என தெரி வித்துள்ளார்.

அதனை தொடர்ந்து, முல்லைத்தீவு காவல்துறையினரை



சம்பவ இடத்திற்கு வருமாறு அழைத்தபோது அவர்கள் குறித்த இடத்திற்கு வர தாமதமாகியுள்ளது.

குறித்த நபரை வட்டுவாகல் பகுதியில் அமைந்துள்ள கோட் டாபய கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று அவர் கடற்படை யினை சேர்ந்தவரா என வினவியபோது, அவர் தங்களுடைய நபர் என கடற்படையினர் தெரிவித்ததுடன், அவரை குறித்த இடத்தில் வருகை தந்த காவல்துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

இந்நிலையில், தொடர்ந்து குறித்த கடற்படை அதிகாரி ஊடக வியலாளரை பழிவாங்கும் நோக்கில் அன்று மாலை முல்லைத் தீவு காவல்நிலையத்தில் உண்மைக்கு புறம்பான கருத்தினை தெரிவித்து முறைப்பாடு செய்துள்ளார்

இந்த சம்பவம் தொடர்பில் 20.04.2019 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் ஊடகவியலாளரான சண்முகம் தவசீலன் அவர் களை முல்லைத்தீவு காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளை மேற்கொண்ட காவல்துறை யினர் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய நிலையில், அவர் பிணையில் விடுவிக்கப்பட்டதோடு வழக்கு விசாரணைகள் தொடந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 32ஆம் அண்டு நினைவேந்தல்

16.01.2025





இலங்கை இந்திய கூட்டுச்சதிகாரணமாக வங்கக் கடலில் காவியமான கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 32 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக் குழ பணிக்குழுவின் ஏற்பாட்டில் தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் அமைந்துள்ள மண்டபத்தில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளுக்கும் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டு குறித்த நிகழ்வு உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டது.

நிகழ்வில் பணிக்குழு உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்

# குருந்தூர்மலை விவகாரத்தில் ரவிகரன் எம்.பி உள்ளிட்ட மூவர் கைதான வழக்கு; மூவரும் அழைக்கும் வரை முன்னிலைப் படத் தேவையில்லை

## முல்லைத்தீவு நீதிமன்றம்

17.01.2025

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 2022ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்காக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான வழக்கில், நாடாளு மன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட மூவரும் நீதிமன்றால் அழைப்பு விடுக்கும்வரை முன்னிலைப்படத் தேவையில்லை என முல்லைத்தீவு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.



அதேவேளை இந்தவழக்குடன் தொடர்புடைய முன்னிலை யாகத நபர்களை மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு நீதிமன்றுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

குறித்த வழக்கு 16ஆம் திகதி வியாழக்கிழமை விசாரணைக் காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குருந்தூர்மலையில் கடந்த 2022.06.12 அன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்டமைக்காக தொல் லியல் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வன்னிநாடாளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் தலைவர் இ.மயூரன் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிக் கப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் வழக்கிலக்கம் பி1053/22 என்னும் குறித்த வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில், நீதிபதி தர்ம லிங்கம் பிரதீபன் முன்னிலையில் 16ஆம் திகதி வியாழக் கிழமை, விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

அந்தவகையில் தொல்லியல் திணைக்களத்தால் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சார்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் இ.மயூரன் உள்ளிட்ட மூவர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இந் நிலையில் வழக்கினை ஆராய்ந்த நீதவான், மன்றில் ஆஜராகிய மூவரும் நீதிமன்றால் அழைப்பு விடுக்கும்வரை,




நீதிமன்றில் முன்னிலைப்படத் தேவையில்லை என உத்தர விடப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த வழக்குடன் தொடர்புடைய முன்னிலையாகத் தவறியோரை நிதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கு நட வடிக்கை எடுக்குமாறு நீதிமன்றால் பொலிசாருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணையின்போது பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மூவருக்கும் ஆதரவாக நீதிமன்றிற்கு வருகைதந்த அனைத்து சட்டத்தரணிகளும் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிமன்றத்திற்கு முன் துப்பாக்கிச் சூடு: மன்னார் பொலிசார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

17.01.2025

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் 16ஆம் திகதி வியாழக் கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ள இச்சம்பவத்திற்கு மன்னார் பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கி பிர யோகம் உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒரு விடய மாகவும், காட்டு மிராண்டித்தனமான ஒரு விடயமாகும்.

இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிசார் முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டும்.

நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக அந்த நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாக படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப் படுகிறது.

இந்த விடயத்தை கடந்த அரசாங்கத்தில் மக்கள் பாதுகாப்பு தொடர்பாடல் அமைச்சரோடு நான் நேரடியாக பேசியிருந்தேன். காரணம் துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஏ.கே 47 பாவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது எந்த வகையான துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியப் படவில்லை. இந்த துப்பாக்கி பிரயோகம் நொச்சிகுளம் மக்களை பார்த்து தான் பிரயோகிக்கப்படுகிறது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மன்னார் பொலிசாருடைய மெத்தனப் போக்கும் இதில் அடங்கி யிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழ லிலே மீண்டும் மன்னார் நீதி மன்றத்திற்கு முன் இந்த படு கொலைகள் நடைபெற்றிருக்கிறது. ஆகவே இது கண்டிக்கத் தக்கது.

இவ் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி அவர்களினதும் கவனத் திற்கும், பாராளுமன்ற கவனத்திற்கும் முக்கியமான விடயமாக கொண்டு வரவுள்ளேன்.

ஏனென்றால் இது தொடர்ச்சியாக நடைபெறுகிற விடயமாக இருக்கிறது.

போன உயிர்களை மீளப் பெற முடியாது. துப்பாக்கி பிரயோகத் தால் உயிர் நீத்த குடும்பங்கள் பல இந்த கிராம மக்கள் அச்சத் தோடு வாழுகின்ற நிலமை தொடர்கின்றது.

ஆகவே இதன் முழுப்பொறுப்பையும் பொலீசார் எடுக்க வேண்டும். இந்த சம்பவத்திற்கு காரணம் பொலிசாருடைய கவனயீனம் அசமந்தப்போக்கு என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். முப்படைகள் அங்கே பாதுகாப்பு நடவடிக் கையில் இருக்கும் நிலையில் போன்று காட்டிக்கொண்டு இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அந்த வகையில் இவ்வாறான சம்பவங்கள் நிறுத் தப்பட வேண்டிய விடயங்களாகும்.

சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்ட வேண்



டும். இதற்கான குழு அடங்கிய புலனாய்வு துறை நடவடிக் கைகளை பொலிசார் உடனடியாக ஆரம்பித்து செயலில் இறங்க வேண்டும். மன்னாரில் உள்ள பொலிசாரை மட்டும் வைத்து இதற்குரிய நடவடிக்கைகளை செய்து கொள்வது முடியாத காரியமாகும். எனவே கொழும்பில் இருந்து விசேட குழு அடங்கிய பொலிசார் வரவழைக்கப்பட்ட வேண்டும்.

ஆகவே இந்த சம்பவத்தில் உயிர்நீத்தவர்களுக்கு எனது அஞ் சலியை செலுத்துவதுடன் பொலிசார் அதற்கான நடவடிக் கையை துரிதப்படுத்த வேண்டுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கை.என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழகத்தின் பொங்குதமிழ் பிரகடனத்தின் 24ஆம் ஆண்டு எழுச்சிநாள் நிகழ்வு!

17.01.2025

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொங்குதமிழ் பிரகடனத்தின் 24ஆவது ஆண்டு எழுச்சிநாள் நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.



பொங்குதமிழ்ப் பிரகடன பொதுநினைவுத் தூபிக்கு முன்பாக நடைபெற்ற பொங்குதமிழ் பிரகடன உரையினை தொடர்ந்து, பொங்குதமிழ் தூபிக்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் மாணவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழி யர்கள் கலந்துகொண்டனர்.




தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப் படவேண்டும் என பொங்குதமிழ் பிரகடனம் இன்றைய நாளில் கடந்த (17.01.2001) செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







**மாவீரர்களது அற்புதமான இலட்சிய வாழ்க்கை – அவர்களது தியாகங்கள், அவர்கள் அனுபவித்த துன்பதுயரங்கள், ஏக்கங்கள், அவர்கள் கண்ட கனவுகள் – இவை எல்லாவற்றினதும் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே எமது போராட்ட வரலாறு முன்னேறிச் செல்கின்றது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# ஏக்கிய ராஜ்ஜிய சதிக் கோட்பாடுகளை முறியடிப்போம்; யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சூளுரை

17.01.2025

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம், ஏக்கிய ராஜ்ஜிய அரசியலமைப்பு என்பவற்றினால் தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை குழிதோண்டிப் புதைக்கும் முயற்சிகளை அரசியல் கட்சிகள் எதிர்க்க வேண்டும் என்றும், அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்டத்தினை முன்னகர்த்துவதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள், ஐக்கிய முன்னணியொன்றினை அமைத்துப் பணியாற்ற வேண்டும் எனவும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சி.சிவகஜன் குறிப்பிட்டார்.

பொங்கு தமிழ் மக்கள் எழுச்சிப் பிரகடனத்தின் 24ஆம் ஆண்டு நாள் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை (17) பல்கலைக்கழக பொங்கு தமிழ் நினைவுத்தூபியில் நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

திம்புக் கோட்பாடு, பொங்குதமிழ்ப் பிரகடனம் என்பவற்றை நீர்த்துப் போகச் செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் விடுதலை வேட்கையினை இல்லாதொழித்து தமிழ்த் தேசிய நீக்கத்தினை முன்னெடுப்பதற்கு சிறீலங்காவின் ஆட்சிகள் முனைப்போடு பணியாற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆக்கிரமிப்புக்களாலும் அச்சுறுத்தல்களாலும் மேற்கொள்ளப்பட முடியாத தமிழ்த் தேசிய நீக்கத்தை தமிழ்த் தலைவர்கள் எனும் பெயரால் தமிழ்த் தேசியப் போலிகளை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக்கி அவர்களூடாக முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றன.

ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்கப்போகின்றோம் எனும் உரையாடலின் ஊடாக அதிகாரப் பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற ஒன்றை வலுமிக்கதொன்றாக காண்பிக்கும் தோற்றப்பொலிவை உருவாக்க சிறீலங்கா அரசு முனைப்புக் காட்டுகிறது.

நல்லாட்சிக் காலத்தில் வரையப்பட்ட "ஏக்கிய ராஜ்ஜிய" எனும் ஒற்றையாட்சி அரசியலமைப்பு வரைபினை தமிழ் மக்களின் பிரதிநிதிகளை ஏற்றுக்கொள்ளச் செய்வதனூடாக முன்னெடுப்பதற்கான முனைப்புக்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியொன்றினை அமைத்து தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டமாக தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தினையே தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் முன்வைக்க வேண்டும் என்பதோடு 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் ஏக்கிய ராஜ்ஜிய வரைபுகளை முற்றாக எதிர்ப்பதற்கு முன்வர வேண்டுகின்றோம்.

தமிழ்த் தேசியம் தேர்தல் அரசியலுக்கு அப்பாலானதொன்று! தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களாணையை மீறிய கடந்த கால செயல்களின் விளைவே அவர்களின் நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களிற்கு ஏற்பட்ட ஆசனங்களின் குறைவிற்குக் காரணமாகும்.

அவர்களின் ஆசனங்களின் இருப்பானது ஒரு போதும் தமிழ்த் தேசியத்தின் இருப்பை பிரதிபலிக்கப் போவதுமில்லை! வீழ்ச்சியடையச் செய்யப்போவதுமில்லை! தமிழ்த் தேசியத்தை தேர்தல் அரசியலிற்கு அப்பால் மக்களை அரசியற்படுத்தி, அணிதிரட்டி மக்கள் அரசியலை முன்னெடுக்க தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் தவறிவிட்டன.

2009 இற்குப் பின்னர் தனியே அரசியல் விடுதலையை மட்டும் நோக்கிச் சிந்திக்தமையே பின்னடைவுகளிற்குக் காரணமாகும். சமூகவிடுதலை, பெண்ணிய விடுதலை, வர்க்க விடுதலை என்பவற்றில் கவனம் செலுத்தாமல் தமிழ்த் தேசிய எழுச்சியை வெளிப்படுத்த முடியாது. நாங்கள் அடையாள அரசியலிற்கு உரிய மக்கள் கிடையாது. நாங்கள் இறைமை அரசியலை முன்னெடுப்பதற்குரிய, சுயநிர்ணய உரித்திற்குரிய தேசிய இனம்.



தற்போதைய ஜேவிபி அரசாங்கம் வலி-வடக்கில் காணி விடுவிப்புக்களை முன்னெடுக்காது தேசிய பொங்கல் நிகழ்வினை வலி-வடக்கிலேயே முன்னெடுக்கின்றமையானது தமிழ் மக்களை மடையர்களென்றெண்ணிச் செயலாற்றுவதாகும்.

செயல் அரசியலிற்கு அப்பால் இந்த ஜேவிபி அரசு செய்தி அரசியலை நம்பியே ஆட்சிக்கு வந்தது, ஆட்சியை நடத்துகின்றது. ஒரு சில வீதித்தடைகளை மட்டும் நீக்கி விட்டு, இராணுவத்திடமுள்ள காணிகளை விடுவித்து விட்டதாக சமூக வலைத்தளங்களை நம்பி நுண் பரப்புரையில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

# சிறீலங்கா வனஜீவராசிகள் திணைக்களம் கையகப்படுத்திய காணிகளை விடுவிக்கக் கோரிக்கை

17.01.2025

வெருகல் பிரதேச செயலகப் பிரிவின் பெரும்பாலான பகுதி சிறீலங்கா அரச வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனை விடுவிக்குமாறு பிரதேச செயலாளரினால் இன்று (17) நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவு 32,041.66 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டதாக காணப்படுகிறது. இதில் 25,242.13 ஏக்கர் காணி 1970, 1986 ஆண்டு காலப்பகுதிகளில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 11 கிராம சேவகர் பிரிவில் 7 கிராம சேவகர் பிரிவுகள் முழுமையாகவும், 4 கிராம சேவகர் பிரிவுகள் பகுதியளவிலும் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் இதில் மக்களுடைய விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த பகுதியின் உள்ளே 3,526 காணி அனுமதிப் பத்திரங்களையும், 1,002 அளிப்பு பத்திரங்களையும் வழங்கியிருப்பதாகவும் அளிப்பு பத்திரங்கள் வழங்குவதற்காக நில அளவை செய்கின்றபோது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இது வன ஜீவராசிகளுக்குரிய காணி என்பதை நில அளவைத் திணைக்களம் குறிப்பிட்டிருக்கவில்லை.

வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் வர்த்தமானி அறிவித்தலுக்கு முன்பதாகவே மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதில் 19,643.59 ஏக்கர் நிலத்தை விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தபோதும் இதுவரை எவ்வித பகுதியும் விடுவிக்கப்படவில்லை எனவும் இதனால் மக்களுக்கான காணி ஆவணங்களை வழங்க முடியாதுள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் 11,906.35 ஏக்கர் காணிகள் வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் 3,261.58 ஏக்கர் நிலத்தை விடுவிக்கக் கோரியும் 1,001.52 ஏக்கர் நிலம் மாத்திரமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.




# தமிழர் தாயகப்பகுதியில் கொலை கொள்ளையில் சிறீலங்கா படைகள்; இராணுவ வெளியேற்றம் அவசியம்

19.01.2025

வடக்கு குற்றச்செயல்களுடன். சிறீலங்காப் படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் தொடர்புபட்டுள்ளமை படையினரது வெளியேற்றத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மன்னார் மற்றும் யாழ்ப்பாண கொலைகள் மற்றும் கொள்ளைகள் தொடர்பில் கைதானவர்கள் படையினராகவும் புலனாய்வாளர்களாகவும் உள்ளமை அம்பலமாகியுள்ளது

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த வியாழன் (16) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் ஒருவர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி நடுக்குடா கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை வியாழக்கிழமை (16) மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவிருந்த நிலையில் விசாரணைகளுக்காக சென்ற சந்தேகநபர்கள் மூவர் உள்ளிட்ட நான்கு நபர்கள் மீது நீதிமன்றத்திற்கு முன் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் பொலிசார் விசேட தேடுதல்களை மேற்கொண்ட நிலையில் சந்தேக நபரான இராணுவ சிப்பாய் பேசாலை நடுக்குடா பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.



துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் என கருதப்படும் குறித்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு விசா

**சுதந்திரப் பசியில் உறுதிபூண்ட மக்கள் சோற்றுப் பசி தீண்டிவிடப் போவதில்லை**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# யாழில் வருமான வரி பரிசோதகர் என பணம் பறிப்பு: சிறீலங்கா இராணுவ புலனாய்வாளர்கள் உள்ளிட்ட 06 பேர் கைது

17.01.2025

யாழ்ப்பாணத்தில் வருமான வரி பரிசோதகர்கள் என கூறி நகைக்கடையொன்றின் உரிமையாளரிடம் பணம் பறித்து சென்ற சம்பவம் தொடர்பில் சிறீலங்கா இராணுவ புலனாய்வு பிரிவினரை சேர்ந்த இருவர் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள நகை கடை ஒன்றினுள் சென்று தம்மை வருமான வரி பரிசோதகர்கள் என அடையாளப்படுத்திய கும்பல் ஒன்று கடை உரிமையாளரிடம் இருந்து 30 இலட்ச ரூபாய் பணத்தினை பறித்துக்கொண்டு தப்பி சென்றது.

சம்பவம் தொடர்பில் நகைக்கடை உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிசார், சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் எனும் குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியை சேர்ந்த ஒருவரை கைது செய்தனர்.

குறித்த சந்தேகநபரே, நகைக்கடையில் அமைவிடம், கடை உரிமையாளரின் விபரங்கள் என்பவற்றை ஏனைய சந்தேக நபர்களுக்கு கூறி திட்டத்தை வகுத்து கொடுத்துள்ளார் என விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

அதேவேளை குறித்த சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், கண்டியில் இருந்தே வாகனத்தில் ஏனையவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்ததாக கூறப்பட்டதை அடுத்து, கண்டிக்கு விரைந்த பொலிஸ் குழு கண்டியில் வைத்து வாகன சாரதி உள்ளிட்ட மூவரை கைது செய்தனர்.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவர் கொழும்பில் தலைமறைவாக உள்ளதாக பொலிசாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கொழும்புக்கு சென்ற பொலிஸ் குழு கொழும்பில் வைத்து இருவரையும் கைது செய்தனர்.

கண்டி மற்றும் கொழும்பில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் யாழ்ப்பாணம் கொண்டு வந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த ஐந்து சந்தேக நபர்களில் கிளிநொச்சியில் உள்ள இராணுவ முகாமில் பணியாற்றும் இராணுவ புலனாய்வு பிரிவை சேர்ந்த இராணுவ சிப்பாய் உள்ளிட்ட இரு இராணுவ புலனாய்வாளர்களும், தெற்கில் உள்ள அரசியல் கட்சி ஒன்றின் பிரதான செயற்பாட்டாளர்களில் ஒருவரும் உள்ளடங்குவதாக பொலிசார் தெரிவித்தனர்.

அதேவேளை, நகைக்கடை உரிமையாளரிடம் பறித்த 30 இலட்ச ரூபாய் பணத்தினையும் 06 நபர்களும் தலா 05 இலட்ச ரூபாய் வீதமாக சமமாக பங்கிட்டு கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடம் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் பின்னணி, கடந்த 16ஆம் திகதி யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள நகை கடை ஒன்றினுள் சென்று தம்மை வருமான வரி பரிசோதகர்கள் என அடையாளப்படுத்திய கும்பல் ஒன்று கடை உரிமையாளரிடம் இருந்து 30 இலட்ச ரூபாய் பணத்தினை பறித்துக்கொண்டு தப்பி சென்றது.

நகை கடைக்குள் மூவர் அடங்கிய கும்பல் ஒன்று சிவில் உடையில் சென்று, தம்மை வருமான வரி பரிசோதகர்கள் என கூறி கடையின் உரிமையாளரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகளை மேற்கொள்ள முதல், கடையின் கதவுகளை மூடி, கடையினுள் இருந்த கண்காணிப்பு கமராவில் கட்டுப்பாட்டு தொகுதியினை கழட்டி தம் வசம் எடுத்துக்கொண்டும், கடையின் உரிமையாளர் மற்றும், கடை ஊழியர்களின் தொலைபேசிகளை நிறுத்தி வைக்குமாறும் பணித்துள்ளனர்.



பின்னர், கடையில் சட்டவிரோதமான முறையில் பெருந்தொகை நகைகள் உள்ளதாகவும், கணக்கில் காட்டாத பெருமளவான பணம் உள்ளதாகவும் தமக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலையே விசாரணைக்கு வந்துள்ளதாக கூறி கடை உரிமையாளர் மற்றும் ஊழியர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

அதனை தொடர்ந்து கடையினை சோதனையிட வேண்டும் என கூறி, கடையில் காணப்பட்ட நகைகள், கடையில் இருந்த 30 இலட்ச ரூபாய் பணம் என்பவற்றை தாம் எடுத்து செல்வதாகவும் அவற்றினை தமது அலுவலகத்திற்கு வந்து உரிய பற்று சீட்டுக்களை, கணக்குகளை சமர்ப்பித்து அவற்றை பெற்றுக்கொள்ளுங்கள் என கூறி அவற்றினை எடுத்து செல்ல முற்பட்டுள்ளனர்.

நகைகளையும் பணத்தினையும் தாமே அலுவலகம் கொண்டு வருவதாக கடை உரிமையாளர் கூறி அவற்றை எடுத்து செல்ல மறுப்பு தெரிவித்த போது , நகைகளை நீங்கள் கொண்டு வந்து அலுவலகத்தில் ஒப்படையுங்கள், பணத்தினை நாம் எடுத்து செல்கின்றோம் என கூறி பணத்தினை எடுத்து சென்றுள்ளனர்.

# அரசியல் கைதிகள் ஏப்ரலுக்கு முன் விடுதலை செய்யப்படாவிட்டால் வடக்கு, கிழக்கு முடக்கி போராட்டம்

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம்**

19.01.2025

தமிழ் அரசியல் கைதிகளை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன் விடுதலை செய்ய வேண்டும். இல்லாவிட்டால், வடக்கு மற்றும் கிழக்கில் பாரிய அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நெல்லியடி பொதுச் சந்தையில் நேற்று நடைபெற்ற கையெழுத்துப் போராட்டத்தின்போது கருத்து தெரிவித்த சிவாஜிலிங்கம், “நீண்ட காலமாக தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாமல் உள்ளனர். ஆட்சி மாறினாலும் நிலைமை மாறவில்லை. மஹிந்த ராஜபக்ஷ காலத்திலிருந்து இன்று வரைக்கும் எந்தவொரு முன்னேற்றமும் காணப்படவில்லை,” என்று கூறினார்.

“நாட்டின் தற்போதைய நீதி அமைச்சர், “அரசியல் கைதிகள் எவரும் இல்லை” என்று கூறுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. தமிழ் அரசியல் கைதிகளில் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும்” என்றும், “தண்டனை விதிக்கப்படாதவர்களை வழக்குகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். ஆனால், அரசு தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கத் தயங்குகிறது” என்றும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார்.

“சிங்கள மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துவிடக்கூடும் என்பதற்காக தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை நீடிக்கப்படுவதைக் காணலாம்” என்றும், “எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அவர்கள் விடுவிக்கப்படாவிட்டால், வடக்கு மற்றும் கிழக்கில் சிவில் நிர்வாகத்தை ஸ்தம்பிக்க வைக்கும் அளவிற்கு போராட்டம் நடத்தப்படும்,” என்று சிவாஜிலிங்கம் எச்சரித்துள்ளார்.




# வல்வெட்டித்துறை பொலிஸ் தடுப்பு காவலில் கைதி ஒருவர் உயிரிழப்பு; திடீர் சுகவீனம் காரணமா?

20.01.2025

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை பகுதியை சேர்ந்த சந்திரகுமார் சந்திரபாலன் (வயது 49) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை வல்வெட்டித்துறை பொலிசார் குறித்த நபரை கைது செய்து , பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் தடுத்து வைத்திருந்தனர்.

அந்நிலையில் திடீர் சுகவீனம்(?) ஏற்பட்டதாக கூறி அவரை வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

தொடர்ந்து உடற்கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், வைத்திய சாலைக்கு நேரில் சென்று சடலத்தை பார்வையிட்ட, பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான், உடற்கூற்று பரிசோதனைக்காகசடலத்தை யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.

அந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைகள் நடைபெற்று, மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



www.sangathamil.ca

# தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்கள் உடனடியாக மீள்குடியேற்றப்படவேண்டும்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

21.01.2025

ஆக்கிரமிப்பு முற்றுகைக்கள் இருக்கும் முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராமமக்களை மீள்குடியேற்றுவதற்கு புதிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கூட்டுறவு பிரதிஅமைச்சர் உபாலி சமரசிங்க மற்றும் ஆளுந்தரப்பு பராளுமன்ற உறுப்பினர்கள், உரியஅரச அதிகாரிகள் முன்னிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம்ஆகியகிராமங்கள் இதுவரை மீள்குடியமர்த்தப்படவில்லை. தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்குத் தயாராக இருக்கின்றனர். குறித்த கிராமங்களைச்சேர்ந்த மக்கள் தம்மை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு என்னிடமும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக கடந்த 1984ஆம் ஆண்டு அப்பகுதிகளிலிருந்த மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தனர். இருப்பினும் அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இந் நிலையில் இவ்வாறாகத் தம்மை தமது சொந்தக் கிராமங்களில் மீள்குடியேறவிடாமல் தடுத்துவைத்துக்கொண்டு, தமது பூர்வீக கிராமங்களில் வேறு குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றதா என்ற அச்சத்துடன் அப்பகுதிகளுக்குரியமக்கள் காணப்படுகின்றனர்.

எனவே புதிய அரசாங்கமானது தண்ணிமுறிப்பு மற்றும், ஆண்டான்குளம் கிராமமக்களின் மீள்குடியேற்ற விடயத்தில் கூடிகவனஞ்செலுத்தவேண்டும். அவர்களை மீள்குடியேற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார்.

மேலும் தண்ணிமுறிப்பு மற்றும் ஆண்டான்குளம்பகுதிகளில் தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டிற்குமுன்னர் குடியிருந்த பெருமளவான பகுதிகளை தொல்லியல் திணைக்களம், வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன கையகப்படுத்திவைத்துள்ளதுடன், தண்ணிமுறிப்பில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடமான குருந்தூர்மலையில் அடாத்தாக பௌத்த கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# தேராவில் மாவீரர் துயிலுமில்லக் காணி விடுவிப்பு தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடன் கலந்துரையாடல்

21.01.2025

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல காணியை விடுவிக்க கோரி தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினர் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் நேற்று திங்கட் கிழமை (20) மாலை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை சந்தித்து கலந்துரையாடினர்.



தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினர் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணி விடுவிப்பு தொடர்பில் அண்மையில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.இதன் தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்ட சுமார் 2500 பேரின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க கையளிக்கும் முகமாகவும் ஆளுநருக்குரிய மகஜரை கையளித்து காணியை விடுவிக்க கோரும் முகமாகவும் குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டது.

குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தை விடுவித்தல் தொடர்பானது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புன்னைநீராவி கிராமசேவையாளர் பிரிவில் குமாரசாமிபுரம் கிராமத்தில் தேராவில் பகுதியில் உள்ள தேராவில் மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் கடந்த 1995ம் ஆண்டு காலப்பகுத்தியிலிருந்து 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் இறுதிக்காலம் வரை போரில் வீரகாவியமான எண்ணாயிரத்திற்கும் அதிகமான எமது பிள்ளைகள் உரித்துடையோர் அனைவரையும் யுத்தவீரர்களுக்கான மரியாதையுடன் புதைக்கப்பட்டும் நடுகற்கள் நாட்டப்பட்டும் பராமரிக்கப்பட்டு பூசிக்கப்பட்டு வந்தமை இவ்வுலகமும் தாங்களும் அறிந்த உண்மை.



இறுதி யுத்தகாலத்தில் கனரக வாகனங்கள் கொண்டு வடக்கு கிழக்கில் உள்ள புனித துயிலும் இல்லங்கள் அனைத்தும் அழிக்கப்பட்ட போது எமது தேராவில் மாவீரர் துயிலும் இல்லமும் முற்றுமுழுதாக சிதைத்து அழிக்கப்பட்டது. அதன் பின்னரான காலப்பகுதியில் துயிலுமில்ல வளாகமானது வேறு அரச இராணுவ தேவைகளுக்காக கடந்த அரசுகளால் பயன்படுத்தப் பட்டு வருகின்றமை நிதர்சனமான உண்மை.

மேற்படி விடயமானது பெற்றோர்களாகிய எமக்கும் உறவினர்களுக்கும் எங்களுக்கு மிகவும் புனிதமான துயிலும் இல்லங்களை இழிவுபடுத்தும் இத்தகைய செயல்கள் மிகுந்த மன வலியையும் சொல்லொணா மன உளைச்சல் மற்றும் துயரத் தையும் ஏற்படுத்துயுள்ளது.

போர் முடிந்ததிலிருந்து, இலங்கை இராணுவத்தின் 573 வது படையணி தேராவில் துயிலும் இல்லத்தை வலிந்து தமது ஆக்கிரமிப்பில் வைத்துள்ளது. 14 வது இலங்கை தேசிய படையணி (14 SLNG) அங்கு தங்கி சீமெந்து கற்களை உற்பத்தி செய்யும் இடமாக அதைப் பயன்படுத்தினர். தற்போது அந்த செயல்பாடும் அங்கு இல்லை.

உயிரிழந்தவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள இடங்களை வேறு நோக்கங்களுக்காக, அதிலும் குறிப்பாக வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது சர்வதேச விதிமுறைகள் மற்றும் மரபுகளை அப்பட்டமாக மீறுவதாகும், மேலும் அது புனிதத்தை களங்கப்படுத்துவதற்குச் சமம். தற்போது, அங்கு ஐந்து இராணுவத்தினர் மட்டுமே தங்கியுள்ளனர், மேலும் அவர்கள் எந்த வேலையிலும் ஈடுபடவில்லை.

இராணுவம் வேண்டுமென்றே அந்த நிலத்தை தங்களின் வலிந்த ஆக்கிரமிப்பின் கீழ் வைத்திருக்க விரும்புகிறது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

எங்கள் பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் விதைக்கப்பட்டுள்ள தேராவில் துயிலும் இல்ல நிலத்தை விடுவிக்குமாறு நாங்கள் இப்போது உங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த துயிலும் இல்லம் எங்களுக்கு மிகவும் புனிதமானது, அங்கு சென்று நாங்கள் வீழ்ந்த எமது உறவினர்களுக்கு புனித அஞ்சலி செலுத்துவதற்கும், மரியாதை செலுத்துவதற்கும் தனிநபர் சுதந்திரத்தை பாதிக்காத வகையில், சட்ட வழிமுறைகளுக்கு அமைவாக அந்த நிலத்தை விடுவித்து கொடுக்குமாறு வேண்டுகிறோம்.



மேலும், அந்த நிலத்தை விடுவிக்கும் போது, அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டவர்களின் குடும்பங்கள் ஆண்டு முழுவதும், குறிப்பாக 'மாவீரர் நாளன்று' பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் வந்து அஞ்சலி செலுத்துவதற்கு வசதியாக, தடையற்ற அணுகலை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.என தெரிவிக்கப்பட்டுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

21.01.2025

யாழ் வீரசிங்க மண்டபத்திற்கு முன்பாக அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூதியின் முன்றலில் கூடிய பட்டதாரிகள் சங்கத்தினர் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கவனஈர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர்.




இதன் பொழுது வேலை வேண்டும் வேலை வேண்டும் பட்டதாரிகளுக்கு வேலை வேண்டும், படித்தும் பரதேசிகளாக இன்றும் தொடரும் அவலம், பல பரீட்சைகளை தொடர்ந்து என்ன பிரியோசனம் என்றவாறு பல கோஷங்களை எழுப்பிய வண்ணம் உலகதழிராய்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் இருந்து யாழ் நகரினூடாக ஆளுநர் அலுவலகத்திற்கு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் பொழுது கருத்து தெரிவித்த வடமாகாண பட்டதாரிகள் சங்க தலைவர் இன்று பல்வேறுபட்ட திணைக்களங்களில் வடமாகாணத்தில் வேலைவாய்ப்பு வெற்றிடம் காணப்படுகின்றது. அந்த வேலைவாய்ப்புக்கள் எமது பட்டதாரிகளுக்கு வழங்கப்படவேண்டும்.

இதேவேளை இன்று இந்த கல்வி திட்டத்தின் ஊடாக முறையான தகுதி திறனை நாம் கொண்டிருக்கின்றோம். எமக்கு வேலைவாய்ப்பு வழங்கபடவில்லை எனில் அதற்கு முழுப் பொறுப்பும் இந்த கல்வி திட்டத்தினை கொண்டிருக்ககூடிய அரசினதே ஆகும்.

எம்மால் கடந்த முறை சுத்திகரிப்பு தொழிலாளர் வேடமிட்டு போராட்டம் நடத்தப்பட்டமை தொடர்பில் பலர் சமூக ஊடகங்களில் எமக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்தனர். எமக்குள்ளும் பல கூலி தொழிலாளிகள் இன்று காணப்படுகின்றனர்.




எமது பெற்றோர்களும் பல கூலி தொழில்களை முன்னெடுத்து வியர்வை சிந்தியே இந்த இடத்திற்கு எம்மை கொண்டு வந்தார்கள். கூலி தொழில் சுத்திகரிப்பு தொழில் நகைப்புக்குரிய தொழில் அல்ல. இலங்கை அரச கட்டமைப்பின் பட்டபடிப்பு மூலம் நாம் பெற்றது என்ன அரிசிற்கு அழுத்தம் கொடுக்கவே நாம் இவ்வாறாக ஈடுபட்டோம்.

இது தொடர்பில் அன்றைய போராட்டத்தின் பொழுதே முழதெளிவினையும் வழங்கியிருந்தோம். இன்றைய தினமும் எமது அறவழிப்போராட்டம் வீதியூடாக கோஷங்களை எழுப்பி ஆளுநர் அலுவலகத்தினை முற்றுகையிட்டு கோரிக்கை கடிதம் ஒன்றினை வழங்கவுள்ளோம். அரசாங்கம் உருவாகி நான்கு மாதங்களே கடக்கின்றது. எமக்கான பதில் அழுத்தம் மூலமே கிடைக்கபெறுமானால் அதனை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார் .

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் ஆரம்பமாக குறித்த போராட்டம் யாழ். நகரத்தின் ஊடாக பயணித்து ஆளுநர் அலுவலகத்தை வந்தடைந்தது.

இதன் போது போராட்டக்காரர்கள் ஆளுநரை சந்திக்க முற்பட்டனர் இருப்பினும் ஆளுநரின் செயலாளர் ஒருவர் குறித்த போராட்டக்காரர்களை சந்தித்து நான்கு பேர் மாத்திரம் ஆளுநருடன் பேச முடியும் கோரிக்கை மகஜர் கையளிக்க முடியும் என தெரிவித்தார்.



தமக்கு அரசாங்க வேலை பெற்றுத் தருவேன் என உறுதியளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

அதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் வீதியை மறிக்க முற்பட்டதால் பொலிசாருடன் தர்க்கம் ஏற்பட்டது அதனைத் தொடர்ந்து குறித்த சிலரை ஆளுநர் பேசுவதற்கு அழைத்தார்.

போராட்டக்காரர்களைச் சந்தித்த ஆளுநர் வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சனை நாடு முழுவதும் இருப்பதாகவும் இது தொடர்பான ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

என தெரிவித்ததாக குறிப்பிட்டார் இதனை அடுத்து போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் நம்பிக்கை கீழிறங்கியுள்ளது

## தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

21.01.2025

யாழ்ப்பாண கலாசார நிலையம் திருவள்ளுவர் கலாசார நிலையம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல் என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.



யாழ். கலாசார நிலையத்தின் பெயர் மாற்றம் குறித்து பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கலாசார நிலையம் யாழ். மாநகரசபைக்கு உரித்தான காணியில் இந்திய அரசின் நன்கொடையில் உருவானது.

இதற்கான உடன்படிக்கையில் யாழ். கலாசார நிலையத்தை முகாமைத்துவம் செய்கின்ற குழுவில் யாழ் மாநகரசபையினதும் வடமாகாண சபையினதும் சார்பில் ஒவ்வொருவர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இரண்டு சபைகளினதும் கலந்தாலோசிப்புகளின்றி இப்பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளது.

கோத்தபாய அரசாங்கம் யாழ். கலாசார நிலையத்தின் பெயரை மாற்றுமாறு முன்னர் அழுத்தங்களைப் பிரயோகித்தபோது மாநகரசபையின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

இப்போது, இரு சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் திடுதிப்பென்று நிகழ்ந்த இப்பெயர் மாற்றம் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்தியா நாசுக்காக நிறைவேற்றிக்கொடுத்துள்ளது என்றே எண்ண வைத்துள்ளது.

சமயச்சாயத்தை தன் மீது ஒருபோதும் பூசிக்கொள்ளாத திருவள்ளுவரின் பெருமையை ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் போற்றுபவர்களாகவே உள்ளார்கள். அவர் தமிழுக்குத்தந்த பெரும் கொடையாம் திருக்குறளின் மகிமையை ஈழத்தமிழ் மக்கள் ஒரு போதும் மறவார்கள். இதனாலேயே தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைப்போன்று அத்தனை குறள்களையும் காலத்தால் அழியாதவாறு கருங்கல்லில் பொறித்து திருக்குறள் வளாகம் ஒன்றைச் சிவபூமி தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கியுள்ளார்.

ஆனால் இத்தகைய பெரும் பற்றைத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களிடையே யாழ் கலாச்சார மையத்துக்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளமை பெரும் அதிருப்தியையே தோற்றுவித்துள்ளது.

யாழ். கலாசார மையம் தனித்துவமானதெனத் திறப்புவிழாக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அது இந்தியா எமக்கு உவந்தளித்த தனித்துவமான பெரும் கொடையே ஆகம்.

ஆனால், அதன் தனித்துவம் நெடிதுயர்ந்த அழகான அதன் கட்டுமானங்களால் மாத்திரம் உருவானதன்று. பண்பாட்டுச் செழுமையும் பாரம்பரியமும் மிக்க யாழ்ப்பாணம் என்ற பெயரைச் சூடியிருப்பதும் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் அளப்பரிய ஓர் சிறப்பாகும்.

இப்போது, பெயர் மாற்றப்பட்டிருப்பதன் மூலம் அதன் தனித்துவம் ஒரு படி கீழிறங்கியுள்ளது என்பதே நிதர்சனம். அது மட்டுமல்ல, இப்பெயர் மாற்றத்தின் மூலம் ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் பெரும் நம்பிக்கையிலும் ஒரு படி கீழிறங்கியுள்ளது என மேலும் தெரிவித்தார்.

www.sangathamil.ca

# சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் மீது சிறீலங்கா பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் விசாரணை

23.01.2025

சட்டத்தரணி நடராஜர் காண்டீபனை சிறீலங்கா பயங்கரவாதத் தடுப்பு பிரிவினர் இன்று விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

விசாரணை குறித்து அவர் வெளியிட்ட கருத்து:

2025-01-21ஆம் திகதி சிறீலங்கா பொலிஸ் தலைமையகத்தின் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு இருந்தேன். அன்றைய தினம் விசாரணைக்கு சமூகம் அளிக்க முடியாதற்கான காரணத்தை தெரிவித்து குறித்த விசாரணையை 2025-01-23 ஆம் திகதிக்கு மாற்றித் தருமாறு என்னால் செய்யப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இன்றைய தினம் காலை 9.00 மணிக்கு குறித்த விசாரணைக்கு சமூகம் அளித்திருந்தேன்.

உப பொலிஸ் பரிசோதகர் டில்ரங்கா குறித்த விசாரணையை முன்னெடுத்த நிலையில் எனது வாக்குமூலத்தை தமிழில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் நிஷாந்தினி பதிவு செய்தார்.

2023.09.17ம் திகதி தியாகதீபம் திலீபன் அவர்களின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி பவனி திருகோணமலை சர்தாபுரத்தில் காடையர்களால் தாக்குதலுக்குள்ளான நிலையில் 16 மாதங்கள் கடந்து குறித்த விசாரணை இடம்பெறுவது தொடர்பில் எனது ஆட்சேபனையை தெரிவித்திருந்தேன்.

நான்கு மணித்தியாலங்கள் வரையில் இடம் பெற்ற விசாரணையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் கேள்விகளுக்கு எனது பதிலை வழங்கியிருந்ததுடன் தியாக தீபம் திலீபனின் அரசியலை முன்னெடுக்கவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் பணியாகும் எனும் அடிப்படையில் மிகத் தெளிவாக எனது தரப்பு நியாயத்தை முன் வைத்திருந்தேன்.

எனது அரசியல் வேணவாவை விடுதலைப் போராட்டமும் திலீபனும் காவி நின்றதாலேயே நான் அதனை ஆதரித்திருந்தேன். இன்னும் ஆதரிக்கிறேன். இனியும் ஆதரிப்பேன் என்பதை நான் பதிவு செய்தேன்.



# கடமையின் போது போதையில் உறங்கும் சிறீலங்கா பொலிஸ் உத்தியோகஸ்தர்கள்: விசாரணைகள் ஆரம்பம்?

23.01.2025

சிறீலங்கா பொலிஸ் அதிகாரிகள் சீருடை மற்றும் சிவில் உடையில் போதையில் உறங்கும் வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ள நிலையில் அது தொடர்பில் விசாரணைகளை (?) ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடக பிரிவு அறிவித்துள்ளது.



போக்குவரத்து பிரிவு பொலிஸ் அதிகாரி ஒருவர் பொலிஸ் சீருடையுடனும், ஏனைய சிலர் சிவில் உடையிலும் போதையில் உறங்கும் அறை ஒன்றுக்குள் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் மேலும் சில பொலிஸ் உத்தியோகஸ்தர்களுடன் சென்று, சீருடையில் போதையில் காணப்படும் பொலிஸ் உத்தியோ




கஸ்தரை அங்கிருந்து மீட்டு பொலிஸ் வாகனத்தில் அழைத்து செல்லும் வீடியோ பதிவு ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.



இது தொடர்பில் பொலிஸ் ஊடக பிரிவிடம் ஊடகங்கள் வினாவிய போது, சம்பவம் தொடர்பில் விசாரணைகளை (?) முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

# மருதானை பொலிஸ் நிலையத்தில் தமிழ் பெண் உயிரிழந்த சம்பவம்: உண்மை கண்டறியப்பட வேண்டும்

## தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

23.01.2025

மருதானை காவல் நிலையத்தில் தற்கொலைசெய்து கொண்டதாக சொல்லப்படும் தமிழ்ப் பெண்ணின் மரணம் தொடர்பான உண்மைகள் உடனடியாக வெளிக் கொண்டுவரப்படவேண்டும் என தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு இன்றைய தினம் வியாழக்கிழமை அனுப்பி வைத்துள்ள செய்தி குறிப்பிலையே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிளிநொச்சியைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணொருவர் காவல்துறையால் கைது செய்யப்பட்டு மருதானை காவல் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது நேற்று புதன் கிழமை இறந்துள்ளார்.

மருதானை காவல்துறையினர் இம்மரணத்தைத் தற்கொலை என்று தெரிவித்துள்ளதோடு, கஞ்சா வைத்திருந்ததாலேயே கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

செய்தியறிந்து சடலத்தை பார்வையிட்ட தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் இம்மரணம் தொடர்பாகச் சந்தேகங்களை வெளியிட்டுள்ளனர்.

காலங் காலமாக சிறீலங்காவில் காவல்துறையினர் பொய்க் குற்றச்சாட்டுகளைச் சோடித்து வந்துள்ளநிலையில், இக்காவல் நிலைய மரணம் தொடர்பான உண்மை நிலையை வெளிக் கொண்டு வருவதற்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள்



விரைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அந்த செய்தி குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் படிப்படியாக நிலைப்படுத்தி, மக்களின் பங்களிப்போடு விரிவுபடுத்தி, வெகுசன யுத்தமாக பரிணாமம் பெறச்செய்யும் கொள்கைத்திட்டத்தின் அடிப்படையிலேயே, நாம், இந்தப் போராட்ட வடிவத்தை முன்னெடுத்து வருகின்றோம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# கிளிநொச்சியில் வர்த்தக சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்: கிளி. மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை கையளிப்பு

23.01.2025

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர்புறத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தரும் வியாபாரிகள் எந்தவித அனுமதியும் பொறாமல் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சி நகர வர்த்தகர்களின் வியாபாரத்திலும் அவர்களது வாழ்வாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதாகவும் இதற்கான தீர்வினை பெற்றுத்தருமாறும்







கோரி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு வருகை தந்து மாவட்ட பதில் அரசாங்க அதிபரை சந்தித்து கோரிக்கை ஒன்றினையும் கையளித்தனர்.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டு உரிய தீர்வினை பெற்றுத் தருவதாக கூறினார்.



# வடபகுதி கடற்தொழிலாளர்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு குழு அமைக்க தீர்மானம்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற ஊறுப்பினர் துரைராசா ரவிகரன்

24.01.2025

வடபகுதி கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு குழுவொன்றை அமைப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தகவல் தெரிவித்துள்ளார்.



பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் 24.01.2025 இன்று வடமாகாண எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பதினொரு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடமாகாண கடற்தொழிலாளர் இணைய பிரதிநிதிகளுக்கும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றதாகவும் இக் கலந்துரையாடலிலேயே இவ்வாறு குழு ஒன்றை அமைப்பதென்ற



தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் பிரதிநிதிகள் 12பேரும், தேசிய மீனவஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மற்றும், மன்னார் இணைப்பாளர்களும் 24.01.2025 இன்று பாராளுமன்றத்திற்கு வருகைதந்து வடமாகாண எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட, பதினொரு எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

இக்கலந்துரையாடலில் சட்டவிரோத கடற்தொழில் செயற்பாடுகளில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்கள் மற்றும், உள்ளூர் மீனவர்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் பேசப்பட்டது.

அத்தோடு அத்துமீறி எல்லைதாண்டிவரும் இந்திய இழுவைப் படகுகளின் இழுவைமடித் தொழில்களால் வடபகுதியைச் சேர்ந்த சிறுதொழிலாளர்கள் பாதிக்கப்படுவதுடன், மீனவர்களின் கடற்தொழில் உபகரணங்கள் அழிக்கப்புகின்றமை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டது.



இந் நிலையிலேயே வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து, அவற்றைத் தீர்ப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும், கடற்தொழில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி குழுஒன்றை அமைப்பதென இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது – என்றார்.

# வடகிழக்கு பட்டதாரிகள் ஒன்றியம் வேலை வாய்ப்புகளை வழங்குமாறு கோரிக்கை

26.01.2025

தேர்தல் காலத்தின் போது அநுரகுமார திசாநாயக்க வாக்குறுதிகளை அள்ளி வழங்கியதை போன்று காலம் தாழ்த்தாது உடனடியான தீர்வாக வேலைவாய்ப்புகளை வழங்குமாறு வடகிழக்கு பட்டதாரிகள் ஒன்றியத்தின் உறுப்பினர் எம். ஐ. எம் புர்கான் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை (26) இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அசமந்த போக்கு காரணமாக வேலையற்ற பட்டதாரிகள் பல துன்பங்களை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள். பெரும் பொருளாதார கஷ்டம் ஈஸ்டர் தாக்குதல் டெங்கு கொரோனா என பல சவால்களுக்கு முகங்கொடுத்து உள்வாரி வெளிவாரி பட்டங்களை சுமார் 4, 5 வருட கற்கைகளை சிறப்பு பொது பட்டம் என கற்று பூரணமாக்கியதன் பின்பும் தீர்வில்லாமல் தவிக்கிறோம். எங்களை போன்ற இளைஞர் யுவதிகளின் குறிப்பாக வேலையற்ற பட்டதாரிகளின் வாக்குகளை வைத்து ஆட்சியை பிடித்த அரசாங்கம் எதிர்வரும் வரவு செலவு திட்டம் ஊடாக தீர்வை வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்காக 30 ஆயிரம் வெற்றிடங்கள் கிராம சேவகர்களுக்காக 3000 க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாகவும் கூறுகின்றனர். இதை பட்டதாரிகளுக்கு பரீட்சை இன்றி பொது நியமனங்கள் ஊடாக அரச துறையில் நியமனங்களை வழங்க வேண்டும் பல் வேறு பொருளாதார கஷ்டங்களுடன் திருமணம் முடித்த நிலையில் வாழும் எங்களை நிராகரிக்காது கற்ற கல்விக்கான பட்டத்துக்கு தீர்வை தாருங்கள். போட்டி



பரீட்சை என்ற பெயரில் பரீட்சைக்கு முகங்கொடுக்க முடியாத கேள்விகளை எடுத்து தோல்வியை சந்திக்கின்ற நிலை ஏற்படுகின்றது

**எதிரியால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் எமது மண்ணை முதலில் மீட்டெடுப்பது இன்றைய வரலாற்றின் தேவை. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# “யாழ்ப்பாணம்” என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத்தின் அடையாளம்!

## இலங்கை தமிழரசுக் கட்சிப் பதில் தலைவர் சீ.வி.கே. சிவஞானம்

24.01.2025

இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான “யாழ்ப்பாணம்” என்ற பெயரை அகற்றியமை எம்மை அவமதித்ததற்கு சமமாகும்.




“யாழ்ப்பாணம்” என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம் இனத்தின் அடையாளம் ஆகும். எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம். என இலங்கை தமிழரசுக் கட்சிப் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் ஒன்றறை இந்திய துணைத் தூதுவரிடம் சமர்ப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக கடந்த புதன்கிழமை (22) மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் இந்திய துணை தூதுவர் சாய்முரளியைச் சந்தித்து இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் கட்சிப் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கடிதம் ஒன்றறை சமர்ப்பித்துள்ளார்.

அக் கடித்த்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண பொது நூலகத்துக்கு அருகாமையில் திறந்தவெளி அரங்கு அமைந்தி ருந்த யாழ்ப்பாண மாநகர சபைக்கு உரித்தான காணியில் அதற்குப் பதிலாக இந்திய மத்திய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட “யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்” 2023 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் கௌரவ நரேந்திர மோடி மற்றும் இலங்கையின் ஜனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து திறந்து வைக்கப்பட்டது. யாவரும் அறிந்ததே.

இந்த நிறுவனத்தின் நிர்வாகம் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாநகர சபையின் நிதி வசதியீனத்தைக் காரணம் காட்டி அவ்வாறு செய்யப்படாமல் சில முக்கிய அரசியல் காரணங்களால் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்தக் கட்டடம் அதன் முழுமையான அம்சங்கள் ஆராயப்படாமல் நிர்மாணிக்கப்பட்டமையே இந்த நிலை உருவாக காரணமாகியது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் சகலரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இவ்வாறிருக்கையில் கடந்த 18.01.2025 ஆம் திகதி சனிக்கிழமை இதன் பெயர் “திருவள்ளுவர் கலாசார மையம்” என மாற்றப்பட்டதாக இலங்கையின் பிரதி கலாசார அமைச்சரும் இலங்கைக்கான இந்திய தூதுவரும் வேறு சிலரும் கலந்து கொண்ட சந்திப்பில் பெயர் மாற்றத்துடனான பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டதாக ஊடகச் செய்திகள் தெரிவித்தன.

இந்த நடவடிக்கை பற்றிய அறிதல் எதுவும் இந்த மண்ணின் அரசியல் தலைவர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ சிறிதளவேனும் தெரிந்திருக்கவில்லை என்பது எமக்கு மிகவும் ஆச்சரியத்தையும் மன வருத்தத்தையும் ஏற்படுத்தி யுள்ளது என்பதை மிகுந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இந்த நடவடிக்கை பற்றிய ஆழ மான அதிருப்தி உள்ளது என்பதை மட்டும் குறிப்பிட்டு, இது ஒரு இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையேயான உணர்வுபூர்வமான விடயம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் அதனால் விபரமாக அதிருப்தியை பதிவு செய்வதை தவிர்க்கிறோம்.

தெய்வப் புலவர் ஐயன் திருவள்ளுவருக்கு நாமாகவே இந்த மண்ணில் பல இடங்களில் உருவச்சிலைகள் அமைத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல ஔவைக்கும், மாகாத்மா காந்திக்கும், பாரதிக்கும் நாமாக இங்கு சிலை எடுத்தவர்கள் நாங்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இப்படியிருக்கையில் இலங்கைத் தமிழினத்தின் பெருமைக்கும் இறுமாப்புக்கும் உடையதான “யாழ்ப்பாணம்” என்ற பெயரை



அகற்றியமை எம்மை அவமதித்ததற்கு சமமாகும். இது இந்தியாவுக்கும் எமக்குமிடையேயான நல்லுறவில் ஆழமான குழியாக அமைந்து விடக்கூடாது என நாம் திடமாக நம்புகிறோம்.

“யாழ்ப்பாணம்” என்பது விட்டுக் கொடுக்கப்பட முடியாத எம். இனத்தின் அடையாளம் ஆகும். எனவே இந்த விடயத்தை உடனடியாக மீளாய்வுக்கு உட்படுத்தி சீர்செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

மேலும் இந்த புதிய பெயர் மாற்றத்திற்கான அறிவித்தலில் கூட தமிழ்மொழி மூன் றாமிடத்திற்கு தள்ளப்பட்டுள்ளமையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இலங்கை அரசின் அரசமைப்பின் 16 ஆவது இலக்க திருத்தத்தின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே நிர்வாக மொழியாகும்.

சிங்களம் அடுத்த நிர்வாக மொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கும் என்பது அரசியலமைப்பின் ஏற்படாக இருக்கையில் சிங்கள மொழியில் முதலாவதாகவும் ஆங்கில மொழியில் இரண்டாவதாகவும் தமிழ் மொழியில் மூன்றாவதாகவும் பெயர்ப் பலகை எழுதப்பட்டிருப்பது இந்த ஏற்பாடுகளை மீறும் செயலாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடிய பின்பே நல்லுறவைப் பாதிப்பின்றி பேணும் பொருட்டு இந்த மீளாய்வுக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது. என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றாம்.. தங்களது துரிதமான செயற்பாட்டிற்கு நன்றியுடையவராவோம்” என உள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் புதிய நிர்வாக தெரிவு

26.01.2025

உறவுகளின் போராட்டம் நீத்து விடக்கூடாது என்பதற்காக போராட்டத்தை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்வோம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட சங்கத்தின் நிர்வாக தெரிவின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரின் புதிய நிர்வாகத்தெரிவு இன்றையதினம் (26.01.2025) இடம்பெற்றிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் தலைவி ம.ஈஸ்வரி பதவியில் இருந்து விலகியதன் காரணமாக இன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரின் புதிய நிர்வாகத்தெரிவு முல்லைத்தீவு போராட்ட இடத்திற்கு அருகாமையில் இன்று (26.01.2025) இடம்பெற்றிருந்தது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி யோ.கனகனகரஞ்சினி , மன்னார் மாவட்ட தலைவி ம.உதயசந்திரா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சங்க உறுப்பினர்கள் மத்தியில் ஆரம்பமாகிய தெரிவு கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட தலைவியாக நி.வசந்தினி, செயலாளராக பொ.கரன், பொருளாளராக நாகேஸ்வரி, உப தலைவராக ப.வீரமணி, உப செயலாளராக றஞ்சினிதேவியும் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தெரிவு கூட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் பெப்ரவரி 4 ஆம் திகதி சுதந்திரதினம் அன்று கிளிநொச்சியில் மாபெரும் போராட்டம் ஒன்று இடம்பெற இருக்கின்றது. குறித்த போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தர



வேண்டும். அத்தோடு உறவுகளின் போராட்டம் நீத்து விடக்கூடாது என்பதற்காக உண்மைக்கும் நீதிக்குமான போராட்டத்தை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்வோம் என இதன் போது தெரிவித்திருந்தார்கள்.

www.sangathamil.ca

# சிறீலங்கா சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக நினைவு கூர அழைப்பு

## வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் நிர்வாகத்தினர்

27.01.2025

இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக நினைவு கூர்ந்து தமிழ் மக்களின் வலிகளையும் உணர்வுகளையும் சர்வதேசத்திற்கு மட்டுமல்ல அனுர அரசுக்கும் எடுத்துக்கூறுவதற்கு அணிதிரளுமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இறுதி யுத்த காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளின் வாழும் உறவினர்களின் சங்க உறுப்பினர்கள் இன்றைய தினம் திங்கட்கிழமை யாழ் ஊடக அமையத்தில் ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளோரின் உறவுகள் சங்க இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டி, அதற்கு சர்வதேச நாடுகள் தலையிட வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்து ஏறத்தாழ எட்டு ஆண்டுகளாக வாழும் உறவுகள் தொடர்ந்து போராடிவருகின்றனர்.

ஆனால் இதுவரை எதுவிதமான தீர்வுகளும் கிடைக்கப்பெறவில்லை. சுமார் 18 ஆயிரத்துற்கும் அதிகமான உறவுகள் காணாமலாக்கப்படுள்ளனர்.

இது தொடர்பில் பல்வேறு வகையில் வடக்கு கிழக்கெங்கும் எமது சங்கம் போராட்டங்களை முன்னெடுத்து எமது வலிகளை வெளிப்படுத்தியிருந்தது.

இதே நேரம் இக்காலப் பகுதியில் நீதிவேண்டி போராட்டத்தை முன்னெடுத்த உறவுகளின் அன்னையர்கள் 300 இற்கும் அதிகமானோர் தமது அபிலாசைகளை எட்டாது இறந்துள்ளனர்.

ஆனால் தீர்வு தருகின்றோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றும் தமது இயல்பான போக்கையே தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன.

ஆனால் எமது மக்களுக்கு எதுவித தீர்வுகளோ நன்மைகளும் கிடைக்கவில்லை. நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளதாக கூறப்படுகின்றது. ஆனால் எமது மக்களுக்கு இன்னமும் அதன் பலாபலன்கள் கிடைக்கவில்லை.

இவ்வாறான பின்னணியில் வரவுள்ள இலங்கையின் 77 ஆவது சுதந்திர நாளை கரி நாளாக அனுஸ்டிக்க அழைப்பு விடுக்கின்றோம்.

இந்த எதிர்ப்பு நாளை வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

எமது இந்த போராட்டத்துக்கு பல்கலைக்கழகம், அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள், பொது போக்குவரத்து மற்றும் அனைத்து தரப்பினரும் அதரவளிக்குமாறும் அழைப்பு விடுக்கின்றோம் என தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதேவேளை மாற்றங்கள் நிகழுமென்று கூறி மாறிமாறி வந்த அரசகளால் வேதனைகளை தவிர வேறெதுவும் இதுவரை தமிழ் மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

மாறாக சிங்கள் குடியேற்தங்களுக்கான முஸ்தீபுகளையே திரைமறைவில் முன்னெடுத்து வருகின்றது என வடக்கு கிழக்கு பெண்கள் வலையமைப்பு தலைவி ஜெயானந்தன் ஜெயச்சித்ரா குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்றுவரை




அடக்கு முறைகளும், அடாவடிகளுமே எமது இனத்துக்கெதிராக நடந்தேறுகின்றன.

அதைவிட தமது இனப் பரம்பலை வட கிழக்கிலும் வலுவாக்க கடந்த அரசுகளை விட இந்த அரசு முனைப்புடன் செயற்படுகின்றது.

இதற்காக மகாவலி விரிவாக்கல் என்ற குறியீட்டுடன் சிங்களவர்களை குடியமர்த்த மும்முமுரமாக செயற்படுகின்றது.

அதுமட்டுமல்லாது இந்த அனுர அரசும் சிறைகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று கூறியுள்ளது.

அனுர அரசின் இந்த செயற்பாடானது கடந்த கால அரசின் கொள்கையை முன்னெடுப்பதாகவே இருக்கின்றது. அந்த வகையில் அனுர அரசும் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது.

எனவே அனுர அரசின் இத்தகைய போக்கை கண்டித்து வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர நாளை கரி நாளாக கடைப்பிடிப்பதற்கு அனைவரும் ஒன்றுதிரள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை காணிக்கான தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு பாடசாலைச் சமூகம்

27.01.2025

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் தண்ணிமுறிப்பு பாடசாலை இயங்கிய காணியை தனியார் ஒருவர் அடாத்தாக பிடித்து வைத்திருப்பதால் குறித்த காணியை மீட்டுத் தரக்கோரி இன்று காலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்று வருகின்றது.



யுத்த காலத்துக்கு முன்னர் நீண்டகாலமாக பாடசாலை இயங்கி வந்த காணியை யுத்தம் நிறைவடைந்து மீள்குடியேற்றம் வந்தபோது தனியார் ஒருவர் இந்த பாடசாலை காணியினை சுவீகரித்து பாடசாலை அடையாளங்களை அழித்து வீடு ஒன்றை அமைத்துள்ளார்.

இந்நிலையில் பின்னர் உரிய முறைப்படி பிரதேச செயலக அதிகாரிகளை அணுகி அவர்கள் ஊடாகவும் குறித்த தனிநபரை வெளியேற்ற முடியாத நிலையில், இன்றையதினம் காலை பூதன்வயல் தண்ணிமுறிப்பு அ.த.க பாடசாலை அமைந்திருந்த காணிக்கு அருகாமையில் மீண்டும் பாடசாலை காணிக்கான தீர்வு கிடைக்கும் வரை தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஊர்மக்கள், பாடசாலை சமூகத் தினர் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமை குரல், சட்டம் எம்மை கைவிட்டு விட்டதா? பக்கச்சார்பற்ற தீர்வை தாருங்கள், கல்வி என்பது சம உரிமை அவை எமக்கு மட்டும் கிடைக்காதது ஏன்?, திறமை உள்ள எமது கல்வியை தட்டிப் பறிக் காதீர்கள்! போன்ற பல்வேறு பதாதைகளை தாங்கியவாறு தற்காலிக கொட்டகை அமைத்து போராட்டத்தில் ஈடுபட் டுள்ளனர்.



குறித்த பாடசாலை பூதன் வயல் பொது நோக்கு மண்டபத்தில், மரங்களுக்கு கீழ் 53 மாணவர்களுடன் வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகின்றது. குறித்த போராட்டத்திற்கான தீர்வுகள் கிடைக்கப் பெறாத நிலையில் பாடசாலை செல்லும் மாணவர்களை இடைநிறுத்தி மாணவர்களுடன் போராட் டத்தில் ஈடுபடுவோம் என போராட்டக்காரர்கள் தெரிவித் துள்ளனர்

# போதைக்கு எதிராக மிக பெரிய செயற்பாட்டை முன்னெடுக்க முன்வாருங்கள்

## யாழ். பல்கலைக்கழக பேராசியர் சி. ராகுராம்

27.01.2025

இளம் சமுதாயத்தை நாசமாக்க கூடிய போதை பாவணையை தடுத்து நிறுத்தி ஒரு ஆரோக்கியான சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் இந்த கால பொறுப்பை கைகளில் ஏந்த வேண்டும் என யாழ். பல்கலைக்கழக பேராசியர் சி. ரகுராம் அறைகூவல் விடுத்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலான போதைப்பாவனையை தடுத்து நிறுத்துக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவனாக, பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஆரம்பித்துள்ள போதைக்கு எதிரான போராட்டத்திற்கு முழுமையாக ஆதரவு கொடுப்பவனாக சமூகத்திடம் தாழ்மையான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

போதைப்பாவனை எமது சமூகத்தை எல்லா விதத்திலும் பாதித்துள்ளது. பல்கலைக்கழகம் மாத்திரமல்ல, பாடசாலைகள், சமூக நிறுவனங்கள் என ஊடுருவியுள்ள போதைப்பாவனை எங்களுடைய சக்தி மிகு இளம் சமுதாயத்தை சீரழித்து வருகிறது

இந்த போதை பாவனை சுயமாக சிந்திக்க கூடிய எங்கள் இளம் சமூதாயத்தை மிக அசிங்கமான வழியில் சீரழித்துக்கொண்டு இருக்கிறது.

போதை பாவனையை ஊக்கப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக, அதனை எதிர்த்து நிற்கும் மிக பெரிய சமூக பொறுப்பு எங்களுக்கு இருப்பதாக கருதுகிறேன்.

சக்திமிக்க, உலகத்தையே மாற்றியமைக்க கூடிய மாணவ சமூதாயம் போதைப்பொருளை அடிமையாகி வருகின்றனர். பாடசாலைகள் இந்த போதைப்பாவனையை தடுத்து நிறுத்த முடியாமல் திகைத்து நிற்கின்றன.

இந்த மண் இளம் குருத்துக்களை போதைப்பாவனை அற்ற சமூகமாக உருவாக்கி நின்ற மண்.

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஆரம்பித்துள்ள போதைக்கு எதிரான போராட்டம், ஒரு சமூக போராட்டமாக உருவாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலைகளிலும், சமூகத்தை பற்றி சிந்திக்க கூடியவர்கள் இந்த தருணத்தை எங்களுக்காக ஒதுக்கி, இளம் சமுதாயத்தை நாசமாக்க கூடிய போதை பாவணையை தடுத்து நிறுத்தி ஒரு ஆரோக்கியான சமுதாயத்தை உருவாக்க கால பொறுப்பை கைகளில் ஏந்த வேண்டும்.

தனி நபராக சமூகமாக இந்த கால பொறுப்பை பற்றி சிந்தியுங்கள். போதைக்கு எதிராக மிக பெரிய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய கால கட்டமாகும்.

உங்களுடைய ஒவ்வொரு பிள்ளைகளையும் இந்த போதை பழக்கத்தில் இருந்து விடுவித்து, எங்கள் சமூகத்தை ஆரோக்கியமான சமூகமாக திடசங்கற்பம் பூணுவோம் என தெரிவித்தார்.



# மட்டு. கொக்கட்டிச்சோலை படுகொலையின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல்

28.01.2025

இலங்கையில், ஜே ஆர் ஜனாதிபதியாக இருந்த காலம் தொடக்கம் இன்று அனுரகுமார திசாநாயக்க காலம் வரையிலும் 37வருடத்தில் பல ஜனாதிபதிகளைக்கண்டாலும் இனப்படு கொலைகளுக்கு நீதியைத்தராத நிலையிலேயே நாங்கள் நினைவேந்தல்களை செய்துவருகின்றோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.



கிழக்கு மாகாணத்தையே உலுக்கிய படுகொலைகளில் ஒன் றாக கருதப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை யின் 38ஆவது நிறைவு நினைவேந்தல் நிகழ்வு பல்வேறு அச் சுறுத்தல்களுக்கு மத்தியில் செவ்வாய்க்கிழமை (28) நடை பெற்றது.

மட்டக்களப்பு மகிழடித்தீவு சந்தியில் உள்ள படுகொலை செய்யப் பட்டவர்களின் நினைவுத்தூபியில் குறித்த நினைவு வணக்க நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் பா.அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சிறிநாத், படுகொலைசெய்யப் பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஈகச்சுடர் ஏற்றப்பட்டு மலர்வணக்கம் செலுத் தப் பட்டதுடன் உயிர்நீர்த்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி அக வணக்கமும் செலுத்தப்பட்டது.

28-01-1987 மற்றும் 12-06-1991ஆகிய காலப்பகுதிகளில் இரா ணுவம் மற்றும் விசேட அதிரடிப்படையினரால் மகிழடித்தீவு இரால்பண்ணை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதி களில் 239 பேர் படுகொலைசெய்யப்பட்டனர்.

குறித்த படுகொலையில், சிறுவர்கள், பெண்கள் மற்றும் முதி யவர்களும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர்களை நினைவு கூரும் வண்ணமே, கொக்கட்டிச் சோலை படுகொலை நினைவுத்தூபி 2,000ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் 33 ஆண்டுகளுக்கு முன்பு கொக்கட்டிச்சோலை இறால் வளர்ப்பு என்று கூறு கின்ற மகிழடித் தீவு, முதலைக்குடா இறால் வளர்ப்ப பண்ணை, படுவான்கரை பெருநிலத்தில் இராணுவத் தினர் மேற்கொண்ட படுகொலையில் 157க்கும் அதிக மானவர்கள் படுகொலை செய்யப்பட் டார்கள். அதனைவிட கணக்கெடுக்கமுடியாத வகையில் படுகொலைகள் முன் னெடுக்கப்பட்டன. பாரிய இனப்படுகொலை யொன்று முன்னெடுக்கப்பட்டது.

1987ஆம் ஆண்டு என்பது கிழக்கு மாகாணத்தில் இந்த கொக்கட்டிச்சோலை பகுதியில் பெரியளவிலான படுகொலை முன்னெடுக்கப்பட்டது. அதன்பின்னர் இந்தி இலங்கை ஒப் பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் பின்னர் படுகொலைகள் முள்ளிவாய்க் கால் வரையில் இடம்பெற்றது.

கொக்கட்டிச்சோலை படுகொலையென்பது அன்றைய காலகட் டத்தில் சர்வதேச ரீதியாக பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி யிருந்தது. இன்று 38வது ஆண்டினை நினைவுகூரும்போது கூட படுகொலைசெய்தவர்கள் மீதோ அதன் பின்னாளிருந் தவர்கள் மீதோ எந்தவித



விசாரணைகளும் முன்னெடுக்கப்பட வில்லை.







# இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரை சிறீலங்கா பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைப்பு

29.01.2025

முல்லைத்தீவில் வசித்துவரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒருவரை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவுக்கு வருமாறு பயங்கரவாத விசாரணை பிரிவினரால் இன்று (29) அழைப்பாணை வழங் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - மணல் குடியிருப்பு பகுதியில் வசித்து வரும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியனே எதிர்வரும் 01.02.2025 அன்று அளம்பில் சிறீலங்கா பொலிஸ் நிலையத்தில் அமைந்திருக்கும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவுக்கு சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில்,

பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவினால் மேற்கொள்ளப்படும் விசாரணைக்கு அமை வாக வாக்குமூலம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் நபரினை ஒன்று 01.02.2025ஆம் திகதி காலை 10 மணிக்கு அளம்பில் பொலிஸ் நிலையத்தில் அமைந் திருக்கும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் முல்லைத்தீவு உப பிரிவிற்கு வருகை தருமாறு மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.



**சிங்களப் பேரினவாதத்தில் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படும் என நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப்போவதில்லை.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கான நாளினை குறிக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்

## அரசியில் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

28.01.2025

அரசியல் கைதிகள் விடயத்தில் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டையும் அரசின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதோடு அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதமாக்கு மாறும் அதற்கான நாள் குறிக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (28.01.2025) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாடாளுமன்றத் தேர்தலை பின்னர் இந்திய மற்றும் சீன பிரயாணங்களைத் தொடர்ந்து நாடு உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்நோக்கி இருக்கையில் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க எதிர்வரும் வெள்ளிக்கிழமை வடக்கிற்கு வருகை தருவது என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பலப்படுத்தும் அரசியல் பயணமாக அமையாது தமிழர்கள் எதிர்நோக்கம் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார பிரச்சினைகளின் தீர்வுக்கு அடித்தளமிடும் விஜயமாக இருக்க வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

விசேடமாக தமிழர் தாயகத்தில் மக்கள் முன் நின்று ஜனாதிபதி "அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள்" என நம்பிக்கை அளித்ததை நாம் மறக்கவில்லை. ஆனால் அதனை மறுத்தலிக்கும் வகையில் அண்மையில் நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார அவர்கள் அரசியல் கைதிகள் என்று சிறைகளில் எவருமில்லை என தெரிவித்திருக்கையில் இது விடயத்தில் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டையும் அரசின் நிலைப்பாட்டையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதோடு அரசியல் கைதிகளின் விடுதலையை துரிதமாக்குமாறும் அதற்கான நாள் குறிக்குமாறும் கோரிக்கை விடுப்பதோடு அதற்கான துரித நடவடிக்கையை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சியும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு நாம் எதிர்ப்பு தெரிவிப்பது இல்லை எனக் கூறியிருக்கும் சந்தர்ப்பத்தில் அதனை உரிய வகையில் பயன்படுத்தி அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்யுமாறு கேட்கின்றோம்.

மேலும் முன்னாள் போராளிகள் மற்றும் நீண்ட நாள் சிறை கொடுமையின் பின்னர் நீதிமன்றத்தினால் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகள் மீளவும் விசாரணை என அச்சுறுத்துவதும், கைது செய்யப்படுவதும் தடுத்து வைப்பதையும் நிறுத்துவதோடு அவ்வாறு விசாரணை அழைத்து செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுதலை செய்யுமாறும் கேட்கின்றோம்.

அது மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியும் நீங்களும் தெற்கின் மேடைகளில் அடிக்கடி பாராயணம் செய்யும் லஞ்சம், ஊழல், அரசியல்வாதிகளின் மோசடி என்பவற்றை மீண்டும் வடக்கு அபிவிருத்தி குழு கூட்டத்தில் பேசி மக்களை பொது மயக்க நிலைக்கு தள்ளாது வடக்கு கிழக்கு தமிழர்களின் தேசியத்திற்கு தடையாக இருக்கும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அரச பயங்கரவாத செயற்பாடுகளை கிளீன் செய்வதற்கான உத்தர வாதத்தை வெளிப்படுத்துவதும் வடக்கின் அபிவிருத்திக்கு துணையாக அமையும் எனவும் கூறுகின்றோம்.

அபிவிருத்தி என்பது பாதைகள் அமைத்தல் கட்டிடங்களை நிர்மாணித்தல் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் பல புதிய சமூக நலத் திட்டங்களை முன்வைப்பதாக கூறுவது மட்டுமல்ல உண்மையான அபிவிருத்தி மக்கள் மனதில் அரசியல் நம்பிக்கை பலப்படுத்தி தமிழர்களின் தேசியத்தின் தூண்களை காப்பதிலும் தங்கி இருக்கின்றது என்பதே எமது நம்பிக்கை.

ஆனால் இந்த தூண்களை திட்டமிட்டு வகையில் பெரும் தேசியவாதம் அழித்துக் கொண்டு வெளிநாட்டு முதலீடுகள் மூலம் எமது தாயகத்தில் துறைமுகங்களின், விமான நிலையங்களின் அபிவிருத்தி என அயலக அரசியல் சக்திகளின்



அதிகாரத்திற்கு இடமளித்து எமது அரசியல் அபிலாசைகளை மண்தோண்டி புதைப்பதை ஏற்றுக் கொள்ளவும் முடியாது அபிவிருத்தி என மகிழவும் இயலாது.

முன்னாள் ஜனாதிபதிகளை போன்று தேசிய மக்கள் சக்தியாகிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமாகிய அனுர குமார திசாநாயக்கவும் இந்திய மற்றும் சீன விஜயங்களில் பல்வேறு உடன்படிக்கைகளை செய்ததற்குப் பின்னால் அரசியலே உள்ளது எவரும் அறிவர். தமிழர் தாயகத்திலும் அபிவிருத்தி என தாயகத்தை அரசியலை அழிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் தொடர்ந்து அதுவே நடக்கிறது. இவ்வாறு அழிப்பதற்கு இடம் கொடுப்பது முழு நாட்டின் அரசியலையும் இறைமையையும் அழித்துவிடும் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுறுத்த விரும்புகிறோம் என மேலும் தெரிவித்துள்ளார்

# 30 ஆண்டுகளாக சிறையில் அரசியல் கைதியாக இருக்கும் எனது அண்ணனை விடுவியுங்கள்

29.01.2025

30 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் அரசியல் கைதியான எனது அண்ணனை விடுவியுங்கள் என விக்னேஸ்வரநாதன் பார்த்திபனின் சகோதரி வாகினி சிறீலங்கா ஜனாதிபதி அனுர விடம் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய அண்ணாவிற்கு விடுதலை கிடைத்துவிடும் என்று கடந்த 30 ஆண்டுகளாக நாங்கள் பல ஜனாதிபதிகளிடம் முறையிட்டும் எந்த விதமான தீர்வுகளும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

தற்போதய ஜனாதிபதி அனுர யாழ்ப்பாணம் வருகை தந்த போது அவருக்கும் கடிதம் கொடுத்துள்ளேன்.

அதற்கான பதில் எனக்கு கடிதம் கிடைத்தது என்று மாத்திரமே வந்தது.

ஜனாதிபதி அனுர எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார் அவர் வருகைதரும் குறித்த 31ஆம் திகதியுடன் எனது அண்ணா கைது செய்யப்பட்டு 30 ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றது.

கடந்த 30 ஆண்டுகளாக எங்களுடைய அண்ணாவுக்கும் மன்னிப்பு கிடைக்கவில்லை.

இந்த முறை சுதந்திர தினத்தில் என்றாலும் அவரை விடுதலை செய்து அண்ணாவை எங்களுடன் சுதந்திரமாக வாழ விடுங்கள்.

நாங்கள் எங்களுடைய குடும்பம் சார்பில் உங்களை கும்பிட்டு கேட்கின்றோம்.

நீங்கள் என்றாலும் என்னுடைய அண்ணாக்கு பொது மன்னிப்பளித்து விடுதலை செய்யுங்கள்.

30 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து எங்களுடைய அண்ணாவுக்கு தற்போது 50 வயதாக போன்றது.

இனியும் அவரை சிறையில் வைத்து இருக்காதீர்கள், சிறையில் வைத்திருந்து என்ன செய்யப் போகிறீர்கள்.

எங்களுடைய அண்ணா விடுவிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்புடன் எங்களுடைய குடும்பம் காத்திருக்கின்றது.

நான் இறுதியாக ஜனாதிபதி அனுரவின கூட்டத்தில் கலந்து கொண்டபோதும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார்.




அதை நம்பியே நாங்களும் இருக்கின்றோம்.

எங்களுடைய அண்ணா 50 வயதை தாண்டியும் இனியும் வைத்திருந்து என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் கூறியதை நிறைவேற்றுவீர்கள் என நாங்கள் உங்களை நம்பியிருக்கின்றோம்.

கடந்த காலங்களில் வந்த ஜனாதிபதிகள் எவரும் நமக்கான நீதியைப் பெற்றுத்தரவில்லை.

நீங்கள் இந்த சுதந்திர தினத்தில் பொது மன்னிப்பளித்து எங்களுடைய அண்ணாவிற்கு சுதந்திரத்தினை கொடுங்கள் என்று நாங்கள் உங்களை மன்றாடிக் கேட்கின்றோம் என்றார்.

# வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் யாழில் போராட்டம்

29.01.2025

வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் இன்று (29) காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.



யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியின் முன்றலில் கூடிய பட்டதாரிகள் சங்கத்தினர் தமிழ்த்தாய் வாழ்த்துடன் கவனயீர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

இதன்போது பசுமையை வலியுறுத்தி மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

"வேலை வேண்டும் வேலை வேண்டும் பட்டதாரிகளுக்கு வேலை வேண்டும்", "படித்தும் பரதேசிகளாக இன்றும் தொடரும் அவலம்", "பல பரீட்சைகளை தொடர்ந்து என்ன பிரயோசனம்" என்றவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் இருந்து யாழ். நகரினூடாக மாவட்ட செயலகத்துக்கு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாண வருகையின்போது போராட்டம் நடத்த அழைப்பு விடுத்தமை



தொடர்பாக வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத் தலைவரை நாளைய தினம் வியாழக்கிழமை (30) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை பொலிஸாரால் வழங்கப்பட்டது.

அதனையடுத்து, வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரின் போராட்டம் நண்பகல் வேளையில் நிறைவடைந்தது.

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் அறைகூவல்!

29.01.2025

சிங்கள தேசத்தில் ஆட்சி மாறினாலும் சிங்களப் பேரினவாத மூலோபாயம் மாறாது என்பதே நாம் கண்ட அனுபவப் பாடம். அதைவிடுத்து இந்த ஆட்சியில் தீர்வு கிடைக்கும் என நம்புவோமேயானால் எம்மைப் போன்ற அரசியல் அறிவீலிகள் யாரும் இருக்க முடியாது. தற்போதைய அரசானது 'இலங்கையர்' எனும் அடையாளத்தின் கீழ் தமிழ்மக்களின் தனித்துவத்தை அழித்து சிங்கள மேலாண்மையை நிறுவுவதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. மேற்கூறிய விடயங்களைக் கருத்தில் கொண்டு வரும் சிறீலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தைத் தொடர்ச்சியாகத் தமிழர் தேசம் கரிநாளாக அனுசரித்தது போலவே இம்முறையும் அனுசரிக்க அறைகூவல் விடுக்கின்றோம் எனப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் இன்று புதன்கிழமை (29.01.2025) பிற்பகல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி மாதம்-04 ஆம் திகதியினைச் சிறீலங்கா தேசம் தமது சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகின்றது. ஆயினும் அன்றைய தினமே பறிக்கப்பட்ட தமிழர் தேசத்தின் இறையாண்மை ஆங்கிலேயரிடமிருந்து சிங்களப் பேரினவாதிகளுக்குக் கைமாற்றப்பட்ட தினமாகும். வரலாற்று ரீதியாக இலங்கைத் தீவின் வடக்கு- கிழக்குப் பகுதிகள் ஒன்றிணைந்த பகுதிகள் இத் தீவின் மூத்த குடிகளான தமிழ் மக்களின் தாயக பூமியாக இருந்தது என்பதையும் அந்த தாயக பூமி இறையாண்மை உள்ள தனித் தேசமாக இருந்தது என்ற வரலாற்று உண்மையை மறுதலித்து எமது சுதந்திரம் சிங்கள தேசத்திடம் கையகப்படுத்தப்பட்ட நாளாகவே இந்நாள் உள்ளது.

இன்று தேசியமக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி ஏறியுள்ள ஜனதா விமுக்திப் பெரமுன எனும் சிங்கள அடிப்படைவாதக் கட்சி தம்மை மாற்றத்தின் நாயகர்களாகக் காட்ட முற்பட்டாலும் அவர்களின் உண்மை முகம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டே இருக்கின்றது. என்றுமில்லாதவாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி ஏறியவர்கள் இலங்கைத் தீவின் அதி உச்சப் பிரச்சினையான தமிழ்மக்களின் இனப் பிரச்சினை தொடர்பாக எவ்வித அக்கறைகளுமின்றி ஏன் அவ்வாறான ஒரு பிரச்சினையே இல்லை என்ற கோதாவிலேயே நடந்து வருகின்றனர். அத்துடன் சிங்களப் பேரினவாதத்தால் இனத்தின் மீதான இன அழிப்பினை மறுதலித்து அலட்சியத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் இறந்து விட்டதாகக் கூறுகின்றனர். அரசியல் கைதிகள் யாரும் இல்லை என முன்னைய அரசாங்கங்களைப் போலவே தமிழ்மக்களின்




போராட்டத்தினைப் பயங்கரவாதமாகச் சித்தரிக்க முயல்கின்றனர்.

சிங்கள தேசம் தமது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் அதே நாளை நாம் சுதந்திரத்தினை இழந்த நாளாகக் கருத்தில் கொண்டு பொது இடங்கள், கடைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், வணக்கத் தலங்கள், எமது வீடுகள் என்பவற்றில் கறுப்புக் கொடிகளைக் கட்டி உங்களின் எதிர்ப்பினை வெளிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இந் நாளில் உங்களின் உரிமைக் குரலுடன் சிங்கள அரசுக்கெதிரான தன்னெழுச்சியான போராட்டங்களை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தமிழர் தேசம் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இறையாண்மையுள்ள தனித் தேசமாக மலரும் நாளே தமிழினத்தின் சுதந்திர நாள் என்பதனை மனதில் கொண்டு விடுதலைக்காய்ப் போராட அணிதிரளுமாறு அழைப்பு விடுக்கின்றோம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

30.01.2025

வட பகுதி எங்கும் விடுதலைப்புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருள் பாவனை தற்போது பன்மடங்கு அதிகரித்துள்ளதாக தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், போதைப்பொருள் அதிகரிப்பை கட்டுப்படுத்த கடுமையான நடவடிக்கைகள் தேவை எனவும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இன்று (30) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பதாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டபோதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தற்போது முல்லைத்தீவு மாவட்டம் உட்பட வடபகுதி எங்கும் போதைப்பொருட்கள் அதிகமாக காணப்படுகின்றன. போதைப் பொருட்கள் என்னும்போது கசிப்பு, கஞ்சா என்பவற்றைத் தாண்டியும் இன்னும் புதுவிதமான பல போதைப்பொருட்கள் எமது பகுதிகளில் பெருகிவருவதாக மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் இவ்வாறான போதைப் பொருட்கள் எவையும் இல்லை. ஆனால், தற்போது எமது பகுதிகளில் போதைப்பொருட்கள் பல மடங்கு பெருகிக் காணப்படுகின்றன.

யுத்தம் மௌனிக்கப்பட்ட பிறகு, கடந்தகால அரசாங்கங்கள் எமது தமிழ் மக்களை அழிக்கும் நோக்கில் இந்த போதைப் பொருள் பாவனையை எமது பகுதிகளில் ஊடுருவச் செய்து வேடிக்கை பார்த்தனர்.

தற்போதும் பெரியவர்கள் முதல் இளையோர் வரை பெருமளவானோர் போதைப்பொருள் பாவனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.



தற்போதைய அரசதரப்பு பிரதிநிதிகளிடம் எமது பகுதிகளில் பெருகிக்கிடக்கின்ற இந்த போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியிருக்கிறோம்.

எனவே தற்போதைய அரசு போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கூடும் என நம்புகின்றோம் என்றார்.

# சிறீலங்கா ஜனாதிபதி யாழ்ப்பாண விஜகம்; வேலையற்றப்பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டம்

31.01.2025

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் முகமாக வடமாகாண வேலையற்றப்பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் உள்ளிட்ட நிகழ்வில் கலந்து கொள்ள ஜனாதிபதி இன்று வெள்ளிக்கிழமை (31) யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டிருந்த வேளை, வேலையற்ற பட்டதாரிகள் மாவட்ட செயலகத்திற்கு அருகில் தமக்கு வேலைவாய்ப்பு கோரி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்திற்கு தடைவிதிக்க கோரி யாழ் நீதவான் நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்த நிலையில், அமைதியாக போராட முடியும் என கூறி, போராட்டத்திற்கு தடை விதிக்க முடியாது என கூறிய மன்று தடைகோரிய மனுவை நிராகரித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.












# கனடா– அமெரிக்கா எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்தும் கனேடிய அரசாங்களம்

16.01.2025

கனடிய எல்லை பாதுகாப்பை பலப்படுத்துவதாக அறிவித் துள்ளது. அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இன்னும் ஓரிரு நாட்களில் பதவிப்பிரமாணம் செய்து கொள்ள உள்ளார்.




சட்டவிரோத குடியேறிகள் மற்றும் சட்டவிரோத போதை பொருட்கள் எல்லை பகுதிகள் ஊடாக கடத்தப்படுவது தொடர்பில் ட்ரம்ப் கடுமையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இதன் காரணமாக கனடிய அரசாங்கமும் எல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்கும் முனைப்புகளில் ஈடுபட் டுள்ளது.

இதன் ஓர் கட்டமாக அமெரிக்க புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடாவின் ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி விதிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடிய அரசாங்கம் சட்ட விரோதக் குடியேறிகள் எல்லை தாண்டி பிரவேசிப்பதனை தடுத்து நிறுத்துவதற்கான மூலோபாயங்களை வகுத்து வரு கின்றது.

உலங்கு வானூர்திகள் மற்றும் ட்ரோன்களை அதிக அளவில்




பயன்படுத்தி எல்லை தாண்டி அத்துமீறி பிரவேசிப்போரை கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

சட்டவிரோத குடியேறிகளை தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக கனடிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

# ஒன்ராரியோ மாகாணததில் புதிதாக அணு மின் உற்பத்தி நிலையம்!

16.01.2025

ஒன்ராரியோ மாகாணத்தில் புதிதாக அணு மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

ஒன்ராரியோ மாகாணம் தனது அணு சக்தி கொள்ளவினை அதிகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக புதிய அணு மின் உற்பத்தி நிலையம் ஒன்று உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

சக்தி வள அமைச்சர் ஸ்டீபன் லீஸ் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளார். ஹோப் துறைமுகத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள வெஸ்ட் பெலி பகுதியில் புதிதாக அணு மின் உற்பத்தி நிலையம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அணு மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக 2050ம் ஆண்டளவில் 75 வீதமான மின்சார தேவையை பூர்த்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சக்திவளத்துறையில் அணுமின் உற்பத்தி நிலையங்கள் முக் கிய வகிபாகத்தை கொண்டுள்ளன.

இதன் காரணமாக அதிக அளவு அணுமின் உற்பத்தி நிலை யங்களை நிர்மாணிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசாங்கம் கனடா மீது அழுத்தங்களை பிர யோகித்து வரும் பின்னணியில் அணுமின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு ஒன்றாரியோ திட்டமிட்டுள்ளது.

ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் ஏற்கனவே அமெரிக்கா விற்கு மின்சாரத்தை விநியோகம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நான் பிரதமரானால் சிறீலங்காவை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வேன்!

## கனேடிய கொன்சவேட்டிவ் கட்சித் தலைவர் பியெர் பொய்லிவ்

16.01.2025

“அடுத்த தேர்தலில் தான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப் பட்டிருக்கும் தரப்பினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுச் செல்வதற்கு அவசியமான தலைமைத்துவத்தை வழங்கத் தயாராகவிருப்பதாக கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கனடாவின் ரொரான்ரோ நகரில் ‘ஹார்வெஸ்ட் ஒஃப் ஹோப்’ எனும் மகுடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பியெர் பொய்லிவ் மேற் கொண்டவாறு தெரிவித்தார்.



தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நிகழ்த்திய சிறீலங்கா அரசாங்கத்தை தனிமைப்படுத்தி தண்டிக்கும் நோக் கில் 2013 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் புறக்கணித்தமையினை நினைவுக் கூர்ந்த பியெர் பொய்லிவ், கனடாவின் வளர்ச்சிக்கு தமிழ் மக்கள் ஆற்றிய பங்களிப்பினை பெரிதும் பாராட்டினார்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த ராஜபக்ஷர்களையும், ஏனைய குற்றவாளிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவசியமான தலைமைத் துவத்தை கொன்சவேட்டிவ் கட்சியின் பிரதமரான நான் வழங் குவென் எனவும் பியெர் பொய்லிவ் உறுதியளித்தார்.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# ஒன்ராரியோவில் நூதன முறையில் வாகனக் கொள்ளை: காவல்துறை விடுத்துள்ள எச்சரிக்கை

21.01.2025

ஒன்ராரியோவில் நூதன முறையில் வாகனங்கள் கொள்ளையிடப்படுவதாக பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வாகன விபத்துக்களை ஏற்படுத்தி வாகனங்கள் கொள்ளையிடப்படுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இவ்வாறான சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ரொரான்டோ பெரும்பாக பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இந்த சம்பவங்கள் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வாகனங்களுடன் சிறிது அளவிலான மோதலை ஏற்படுத்தி சாரதி வாகனத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து அறிவதற்காக கீழே இறங்கும்போது குறித்த சாரதியுடன் கைகலப்பில் ஈடுபட்டு வாகனத்தை கொள்ளையிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே வாகன விபத்துகளின் போது சாரதிகள் இந்த விடயம்



தொடர்பிலும் அவதானம் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

# ஒன்ராரியோ அரசாங்கம் 200 டொலர் வரித்தள்ளுபடி வழங்குகிது

22.01.2025

கார்பன் வரி மற்றும் அதிக வட்டி விகிதங்களின் தாக்கம் உட்பட, அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுடன் போராடும் குடும்பங்களுக்கு ஆதரவாக ஒன்ராரியோ அரசாங்கம் $200 தள்ளுபடி காசோலைகளை வழங்கத் தொடங்கியுள்ளது. கனடா குழந்தை நலன் (ஊஊஉ)க்கு தகுதியான குடும்பங்களில் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு குழந்தைக்கும் கூடுதலாக $200 வழங்கப்படும்.

இது பற்றி அமைச்சர் விஜய் தணிகாசலம் குறிப்பிடுகையில், “ஒன்ராரியோ மக்களின் பணத்தை மீள அவர்களுக்கே கொடுப்பதில் எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இந்த தள்ளுபடிகள் சவாலான பொருளாதார காலங்களில் நிவாரணம் அளிக்கும் அதே வேளையில் அத்தியாவசிய பொது சேவைகளில் தொடர்ந்து முதலீடு செய்ய முடியும்” எனத் தெரிவித்துள்ளார். இந்த முன்முயற்சியானது, ஒன்ராரியோ முழுவதிலும் உள்ள குடும்பங்களின் வளர்ச்சிக்காகவும், வாழ்க்கைச் செலவுகளை குறைப்பதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.




# ஒன்ராரியோ மாகாணத்தின் பிக்கரிங் பகுதியில் விமான நிலையம் அமைக்கப்படவிருந்த இடத்தில் பூங்கா

## கனடா மத்திய அரசாங்கம்

27.01.2025

ஒன்ராரியோ மாகாணத்தின் பிக்கரின் பகுதியில் விமான நிலையம் அமைக்கப்படாது என மத்திய அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். கடந்த அரை நூற்றாண்டு காலமாக குறித்த பகுதியில் விமான நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து அடிக்கடி பேசப்பட்டு வந்தது.



இதற்காக மத்திய அரசாங்கம் பாரியளவு காணியை ஒதுக்கீடு செய்திருந்தது. தற்பொழுது குறித்த காணியை பூங்காக்கள்




அமைப்பதற்கு பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1972 ஆம் ஆண்டு விமான நிலையம் அமைக்கும் நோக்கில் ரொரான்ரோவிற்கு வடகிழக்கு பகுதியில் காணி ஒதுக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆட்சி பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அரசாங்கங்கள் இந்த விமான நிலையம் அமைப்பது தொடர்பில் காலத்திற்கு காலம் வாத பிரதிவாதங்களை மேற்கொண்டிருந்த போதிலும் விமான நிலையம் அமைக்கப்படவில்லை.

இவ்வாறான ஓர் பின்னணியில் குறித்த காணியில் விமான நிலையம் அமைக்கப் போவதில்லை என போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இந்த விமான நிலையம் அமைப்பதற்காக கனடிய போக்குவரத்து முகவர் நிறுவனம் சுமார் 8,700 ஏக்கர் காணியை ஒதுக்கி வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பூங்காக்களை அமைப்பது தொடர்பில் பொதுமக்கள் மற்றும்




பழங்குடியின சமூகத்தினருடன் கலந்தாலோசனை செய்ய உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.






# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நாம் தமிழர் கட்சி வேட்பாளராக மா.கி. சீதாலட்சுமி –சீமான் அறிவிப்பு–

15.01.2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில் மா.கி.சீதாலட்சுமி போட்டியிடுவதாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5-ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் தொடங்கிய நிலையில், நேற்று வரை 9 சுயேட்சை வேட்பாளர்கள் மட்டும் மனுத் தாக்கல் செய்துள்ளனர். அதிமுக, பாஜக, தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் இடைத்தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித் துள்ள நிலையில், திமுக சார்பில் சந்திரகுமார் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில், மா.கி.சீதாலட்சுமி போட்டியிடுவதாக, அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார். கடந்த 2019-ம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் ஈரோடு தொகுதியிலும், 2024-ம் ஆண்டு மக்களைவைத் தேர்தலில் திருப்பூர் தொகுதியிலும் நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி போட்டியிட்டுள்ளார்.

இடைத்தேர்தலில் போட்டியிட புதிய வேட்பாளரை அறிவித்தால், அவரை வளைக்க ஆளுங்கட்சி முயற்சிக்கும் என்பதால், ஏற்கெனவே நாம் தமிழர் சார்பில் இரு முறை போட்டியிட்ட அனுபவம் கொண்ட சீதாலட்சுமியை வேட்பாளராக நாம் தமிழர் கட்சி தேர்வு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் பிரதான கட்சிகள் போட்டியிடாத நிலையில், திமுக - நாம் தமிழர் இடையே இருமுனைப் போட்டி ஏற்பட்டுள்ளது. இத்தொகுதியில், திமுக சார்பில் சந்திரகுமார் போட்டியிடும் நிலையில், நாம் தமிழர் கட்சி சார்பில் சீதாலட்சுமி தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

திமுக வேட்பாளர் சந்திரகுமார் மற்றும் நாம் தமிழர் வேட்பாளர் சீதாலட்சுமி ஆகியோர் வரும் 17-ம் தேதி வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளனர். வேட்பாளர் சுய விபரம்:

பெயர்: மா.கி.சீதாலட்சுமி
கணவர் பெயர்: இரா.செழியன், எம்.இ.
தந்தை பெயர்: ம.கிருஷ்ணன்
தாயார் பெயர்: காந்திமதி
ஊர்: மாரப்பம்பாளையம்.
படிப்பு: முதுகலை ஆய்வியல் நிறைஞர், (எம்.ஏ. எம்பில்.,) இளங்கலை பொருளாதாரம் .கோபி கலைக் கல்லூரி. முதுகலை ஆய்வியல் பாரதியார் பல்கலைக் கழகம். கோவை.
பணி: 13 ஆண்டுகள் ஆசிரியப் பணி. (2000 - 2013)
தற்போதைய பணி: கேபிள் ஆப்ரேட்டர், விவசாயம்.



# காற்றாலை, சூரிய ஒளி மின் உற்பத்தியில் அரசுக்கு தொலைநோக்கு பார்வை இல்லை: பாமக நிறுவனர் இராமதாஸ் சாடல்

17.01.2025



“தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தலா 50 மெகா வாட் திறன்கொண்ட சூரிய ஒளி மின்னுற்பத்தி பூங்காக்கள் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்து 3 ஆண்டுக ளுக்கு மேலாகிவிட்ட நிலையில் இன்று வரை ஒரு மாவட்டத் தில் கூட சூரிய ஒளி பூங்கா அமைக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளைக் கூட திமுக அரசு மேற்கொள்ளவில்லை” என்று பாமக நிறுவனர் இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை மின்சாரம் ஆகியவற்றைத் தயாரிப் பதற்கான வளங்கள் தமிழகத்தில் ஏராளமாக இருந்தாலும், அந்த வகை மின்சாரங்களின் ஒட்டுமொத்த மின்னுற்பத்தியில் ஒரு காலத்தில் முன்னணியில் இருந்த தமிழகம் இப்போது மூன் றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. மரபுசாராத மின்னுற் பத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கும், ஊக்குவிப்பதற்கும் போதிய கொள்கைகளும், வழிகாட்டுதல்களும் இல்லாதது தான் இதற்கு காரணம் ஆகும். இது தமிழக அரசின் படுதோல்வி ஆகும்.

2024-ம் ஆண்டு டிச.31-ம் தேதி நிலவரப்படி காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்னுற்பத்தில் 32,246 மெகாவாட் நிறுவு திறனுடன் இராஜஸ்தான் மாநிலம் முதலிடத்திலும், 31,482 மெகாவாட் நிறுவு திறனுடன் குஜராத் இரண்டாவது இடத்திலும் உள்ளன. இவற்றுடன் போட்டியிட முடியாத அளவுக்கு மிகவும் பின் தங்கி 24,274 மெகாவாட் நிறுவுதிறனுடன் தமிழகம் மூன்றாவது இடத்தில் தான் உள்ளது.

காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்னுற்பத்தியில் 2017-ம் ஆண்டு வரை தமிழகம் தான் முதலிடத்தில் இருந்தது. காற் றாலை மின்னுற்பத்தியைப் பொறுத்தவரை 2023 ஜனவரி 31-ம் தேதி நிலவரப்படி தமிழகம் 9,964 மெகாவாட் நிறுவு திறனுடன் முதலிடத்திலும், 9,918 மெகாவாட் நிறுவுதிறனுடன் குஜராத் இரண்டாவது இடத்திலும் இருந்தன. ஆனால், அதே ஆண்டின் ஆகஸ்ட் மாத நிலவரப்படி குஜராத் மாநிலம் 11,063 மெகாவாட் நிறுவுதிறனுடன் முதலிடத்தை பிடித்தது.

தமிழகம் 10,248 மெகாவாட் நிறுவுதிறனுடன் இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டது. இப்போதும் அதே நிலை நீடிப்பது மட்டுமின்றி, இரு மாநிலங்களுக்கும் இடையிலான வித்தி யாசம் அதிகரித்திருக்கிறது. கடந்த டிச. 31-ம் தேதி நிலவரப்படி குஜராத் 12,473 மெகாவாட்டுடன் முதலிடத்திலும், தமிழகம் 11,409 மெகாவாட்டுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

அதேபோல், சூரிய ஒளி மின்சார உற்பத்தியில், தமிழகம் வெறும் 9,518 மெகாவாட் நிறுவு திறனுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. இராஜஸ்தான் 26,489 மெகாவாட் திற னுடன் முதலிடத்திலும், குஜராத் 16,795 மெகாவாட் திறனுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளன. முதல் இரு இடங்களைப் பிடித்துள்ள மாநிலங்களுக்கு இடையிலான சூரிய ஒளி மின்னுற் பத்தி நிறுவுதிறன்களின் வித்தியாசத்தை விட(9694) தமிழகத் தின் நிறுவுதிறன் குறைவு ஆகும். காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி தொடர்பாக தமிழக அரசுக்கு எந்த தொலைநோக்குப் பார்வையும் இல்லாததையே இந்தத் தரவுகள் காட்டுகின்றன.

பத்தாண்டுகளுக்கு முன் 2023-ம் நிலவரப்படி காற்றாலை மின்னுற்பத்தித் திறன் தமிழகத்தில் 7245 மெகாவாட்டாகவும், குஜராத்தில் 3313 மெகாவாட்டாகவும் இருந்தன. அப்போது குஜராத் மூன்றாவது இடத்தில் இருந்தது. தமிழகத்தின் காற் றாலை மின்னுற்பத்தி குஜராத்தின் மின்னுற்பத்தியை விட இரு மடங்குக்கும் அதிகம். ஆனால், கடந்த பத்தாண்டுகளில் அனைத்துப் பெருமைகளையும் இழந்து நிற்கிறது தமிழகம்.

சூரிய ஒளி மின்னுற்பத்தியைப் பொருத்தவரை, இராஜஸ் தானுக்கு இணையாக தமிழகத்திலும் அனைத்து மாவட்டங் களிலும் சூரிய ஒளி ஆதாரம் அளவுக்கு அதிகமாக உள்ளது. ஆனால், அதைப் பயன்படுத்திக் கொள்ள தமிழக அரசு முறை யான கொள்கைகளை வகுக்கவில்லை. தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தலா 50 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்னுற்பத்தி பூங்காக்கள் அமைக்கப் படும் என்று தமிழக அரசு அறிவித்து 3 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்ட நிலையில் இன்று வரை ஒரு மாவட்டத்தில் கூட சூரிய ஒளி பூங்கா அமைக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகளைக் கூட திமுக அரசு மேற்கொள்ளவில்லை.

2021-ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த திமுக, தமிழகத்தில் 6,000 மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்திட்டங்கள் அடுத்த இரு ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் அவற்றில் 2,000 மெகா வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்னுற்பத்தித் திட்டங்களை தமிழ்நாடு மின்சார வாரியமே நேரடியாக செயல் படுத்தும் என்று சட்டப்பேரவையில் அறிவித்தது. இந்த அறிவிப்பு செயல் படுத்தப்பட்டிருந்தால், சூரிய ஒளி மின்சார உற்பத்தியில் தமிழகம் இரண்டாவது இடத்துக்கு கூட முன்னேறியிருக்க முடியும். ஆனால், அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் முதல் அடியைக் கூட திமுக அரசு இதுவரை எடுத்து வைக்கவில்லை.

காற்றாலை மின்சாரம், சூரிய ஒளி மின்சாரம் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான வளங்கள் தமிழகத்தில் ஏராளமாக இருந்தாலும் கூட அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற கொள்கைகள் இது வரை வகுக்கப் படவில்லை. அதேபோல், மரபுசாரா எரிசக்தி தான் உலகின் எதிர்காலம் என்று தீர் மானிக்கப்பட்டு விட்ட நிலையில், அதை வளர்த்தெடுக்க தனி அமைச்சகம் தேவை. மத்தியில் 25 ஆண்டுகளுக்கு முன் பாகவே அத்தகைய அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

ஆனால், தமிழகத்திலோ, இன்று வரை மரபுசாரா எரிசக்தித் துறை தொடங்கப்படவில்லை. இத்தகைய போக்கை கைவிட்டு, தமிழகத்தில் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற் பத்தியை அதிகரிக்கும் வகையில் அவற்றுக்கு தனி அமைச்சகம் ஏற்படுத்தப்படுவதுடன், தனித்தனி கொள்கைகளும் வகுக்கப்பட வேண்டும்.” என்று அவர் கூறியுள்ளார்.

www.sangathamil.ca

# “தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது” தமிழ் நாட்டு முதல்வர்

09.01.2025

“5,300 ஆண்டுகளுக்கு முன்பே, உருக்கு இரும்பு தொழில் நுட்பம் தமிழ் நிலத்தில் அறிமுகமாகிவிட்டது. இப்போது தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம், அண்மையில் கிடைக்கப்பெற்ற காலக் கணக்கீடுகள் இரும்பு அறிமுகமான காலத்தை கி.மு.4000-ம் ஆண்டின் முற்பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறது. தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு அறிமுகமாயிருக்கும் என்று உறுதியாக கூறலாம். இதை ஆய்வு முடிவுகளாகவே நான் அறிவிக்கிறேன்” என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.




சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார். தொல்லியல் துறை சார்பில், தயாரிக்கப்பட்ட ‘இரும்பின் தொன்மை’ நூலை முதல்வர் வெளியிட்டார். பின்னர் இந்நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: தமிழர்களுடைய தொன்மையை உலகுக்கு கூறும் மாபெரும் ஒரு ஆய்வு பிரகடனத்தை இப்போது நான் அறிவிக்கப் போகிறேன். இங்கு கூடியிருப்பவர்களும், நேரலையில் இதைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களும் கவனமாக கேட்கவும். தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது. இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகுக்கே திரும்பவும் கூறுகிறேன், தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற மாபெரும் ஆய்வுப் பிரகடனத்தை இந்நிகழ்ச்சியின் வாயிலாக அறிவிக்கிறேன்.

5,300 ஆண்டுகளுக்கு முன்பே, உருக்கு இரும்பு தொழில் நுட்பம் தமிழ் நிலத்தில் அறிமுகமாகிவிட்டது. இப்போது தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம், அண்மையில் கிடைக்கப்பெற்ற காலக் கணக்கீடுகள் இரும்பு அறிமுகமான காலத்தை கி.மு.4000ம் ஆண்டின் முற்பகுதிக்குக் கொண்டு சென்றிருக்கிறது. தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு அறிமுகமாயிருக்கும் என்று உறுதியாக கூறலாம். இதை ஆய்வு முடிவுகளாகவே நான் அறிவிக்கிறேன்.

தமிழக அரசால் தொல்லியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள், உலகத்தின் தலைசிறந்த ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. புனேவில் உள்ள பீர்பால் சகானி தொல் அறிவியல் நிறுவனம், அகமதாபாத்தில் இருக்கும் இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம், ஆகிய தேசிய அளவிலான புகழ்பெற்ற ஆய்வகங்களுக்கும், பன்னாட்டு அளவில் உயரிய நிறுவனமான அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் இருக்கும் பீட்டா ஆய்வகத்துக்கும் மாதிரிகள் பகுப்பாய்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

தேசிய நிறுவனங்களில் ஓஎஸ்எல் பகுப்பாய்வுக்கும், பீட்டா ஆய்வகத்தில் கதிரியக்க கால பகுப்பாய்வுக்கும் ஒரே தாழியில் இருந்து மாதிரிகளை அனுப்பி வைத்தோம். இப்படியாக மூன்று நிறுவனங்களிடமிருந்தும் ஒரே மாதிரியான பகுப்பாய்வு முடிவுகள் பெறப்பட்டுள்ளது. தமிழக அரசின் தொல்லியல் துறை பல்வேறு ஆய்வு நிறுவனங்களுக்கு மாதிரிகளை அனுப்பி பெறப்பட்ட முடிவுகளை கூர்ந்து ஒப்பாய்வு செய்ததில் ஒரே மாதிரியான முடிவுகள் கிடைத்துள்ளது.

இப்போது கிடைத்திருக்கும் கதிரியக்க காலக் கணக்கீடு மற்றும் ஓஎஸ்எல் பகுப்பாய்வு காலக் கணக்கீடுகளின் அடிப்படையில் கி.மு.3345-லேயே தென்னிந்தியாவில் இரும்பு அறிமுகமாகிவிட்டது என்பது தெரியவருகிறது. அதற்கான ஆய்வுகள் முடிவுகள் வரப்பெற்றுள்ளது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# மதுரை மத்திய சிறைச்சாலையை மகப்பேறு மருத்துவமனையாக மாற்ற திட்டம்

25.01.2025

160 ஆண்டுகளை கடந்த பல்வேறு வரலாற்றை சுமந்து நிற்கும் மதுரை மத்திய சிறைச்சாலை, அரசு மகப்பேறு சிறப்பு மருத்துவமனையாக மாற உள்ளது. தற்போது கைதிகளை சீர்திருத்திய இடம், விரைவில் நோயாளிகளுக்கு வைத்தியம் பார்க்கப் போகும் இடமாக மாறுகிறது.

தமிழகத்தில் சென்னை புழல், வேலூர், திருச்சி, சேலம், கோவை, மதுரை உள்ளிட்ட 9 இடங்களில் மத்திய சிறைச்சாலைகள் உள்ளன. சென்னை சிறை 77 ஏக்கர், வேலூர் சிறை 153 ஏக்கர், திருச்சி சிறை 289 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளன. இதில் மதுரை மத்திய சிறைச்சாலை 28.8 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே உள்ளது. மற்ற சிறைச்சாலைகளுடன் ஒப பிடும் போது மதுரை சிறைச்சாலையில் இடநெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இச்சிறைச்சாலை கடந்த 1865-ம் ஆண்டில் கட்டப்பட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட குற்றச் செயல்களுக்கு தகுந்தவாறு, இந்த சிறைச்சாலை வடிவமைக்கப்பட்டது. மதுரை மத்திய சிறையில் அதிகமான கைதிகளை அடைப்பதற்கு போதுமான இடவசதியில்லை.

மேலும், மத்திய சிறைச்சாலை தற்போது அமைந்துள்ள இடம், போக்குவரத்து முக்கியத்துவம் வாய்ந்த இடமாக உள்ளது. கைதிகளை பார்க்க அவர்கள் உறவினர்கள் வந்து செல்வது, அவர்கள் நிறுத்தும் வாகனங்களால் முக்கியத்துவம் வாய்ந்த அந்த சாலையில் போக்கு வரத்து நெரிசல் ஏற்படுகிறது.

அதனால், மத்திய சிறைச்சாலையை, புறநகர் பகுதிக்கு கொண்டு செல்வதற்கு கடந்த சில ஆண்டுகளாகவே பரிசீலிக்கப்பட்டு வந்தது. மதுரையின் புறநகர் பகுதிகளான இடையப்பட்டி, சிறுமலை அடிவாரத்தின் பகுதிக்கு இடமாற்றம் செய்யலாமா என அரசு ஆய்வு செய்தது. தற்போது மேலூர் அருகே செம்பூரில் ரூ.350 கோடியில் 89 ஏக்கரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. பழைய சிறைச் சாலை வளாகம், மகப்பேறு சிறப்பு மருத்துவமனையாக மாற உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மருத்துவத் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது, தற்போது உள்ள 28.8 ஏக்கர் சிறை வளாகத்தில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் ஒரு பிரிவு இங்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்தத் திட்டம் கைகூடினால், அதற்கு அடித்தளம் அமைத்தவராக முன்னாள் ‘டீன்’ இரத்தினவேல் இருப்பார்.

கடந்த 27.2.2024-ல் மதுரை அரசு மருத்துவமனை ஜைக்கா கட்டிடத் திறப்பு விழாவில், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் விழா மேடையிலேயே மருத்துவமனையில் வாகனங்களை நிறுத்தவோ, நோயாளிகள் நடந்து செல்லவோ இடமில்லை என்று ரத்தினவேல் முறையிட்டார். மருத்துவமனையின் ஒரு பிரிவை கொண்டு செல்ல, மத்தியசிறை வளாகத்தை தர வேண்டும் என அவர் கோரிக்கையும் வைத்தார்.

அவரது கோரிக்கை தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் அடிப்படையிலேயே தற்போது மருத்துவத் துறை இணை இயக்குநர் ஒருவர், கடந்த வாரம் சிறை வளாகத்தை பார்வையிட்டுள்ளார். இன்னும் மருத்துவத்துறைக்கு இந்த சிறை வளாகத்தைக் கொடுக்க அதிகாரப்பூர்வமாக ஒப்புதல் கொடுக்காவிட்டாலும், அதற்கான ஆய்வுகளும், ஆலொசனைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.



மதுரை அரசு மருத்துவமனையின் மகப்பேறு மருத்துவ சிகிச்சைப் பிரிவும், மருத்துவ மாணவர்கள் விடுதியும் அங்கு கொண்டு செல்லப்பட வாய்ப்புள்ளது. சென்னையில்கூட மகப்பேறு சிகிச்சைப் பிரிவு அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கிடையாது. அங்கு தனி சிறப்பு மருத்துவமனையாக மகப்பேறு மருத்துவ சிகிச்சைப் பிரிவு செயல் படுகிறது. அது போன்ற சிறப்பு மகப்பேறு அரசு மருத்துவமனையை மதுரை சிறை வளாகத்தில் அமைக்க சுகாதாரத் துறை முடிவு செய்துள்ளது.

இந்த முடிவை செயல்படுத்த தற்போது உள்ள ஆட்சியர், டீன், மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குநர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் குரல் கொடுக்க வேண்டும். மகப்பேறு மருத்துவப் பிரிவில் தற்போது நோயாளிகள் கூட்டம் நிரம்பி வழிகிறது. அதனால், இந்த ஒரு மருத்துவ சிகிச்சைப் பிரிவு மட்டும் அங்கு சென்றால்கூட மருத்துவர்கள், பணியாளர்கள், நோயாளிகளுக்கான வாகன பார்க்கிங் மற்றும் பிற வசதிகளை தற்போது உள்ள அரசு ராஜாஜி மருத்துவமனையில் ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று கூறினார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

## நாம் அரசியல்வாதிகளல்லர், நாம் புரட்சிவாதிகள்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# சிறீலங்கா சிங்கள கடற்படையின் துப்பாக்கிச்சூட்டில் ஐந்து இந்திய மீனவர்கள் காயம்

29.01.2025



காரைக்காலில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற காரைக் கால் மற்றும் தமிழக மீனவர்கள் 13 பேரை சிறீங்லங்கா சிங்களக் கடற்படையினர் நேற்று முன்தினம் இரவு கைது செய் தனர். அப்போது, சிறீலங்காக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 5 இந்திய மீனவர்கள் காயம் அடைந்தனர்.

தமிழ்நாடு காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல்மேடு மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தவேல் என்பவருக்குச் சொந்த மான விசைப்படகில் அதே ஊரைச் சேர்ந்த மாணிக்க வேல்(39), தினேஷ் (30), காரத்திகேசன்(27), செந்தமிழ் (27), பட்டினச்சேரியை சேர்ந்த மைவிழிநாதன்(22), வெற்றிவேல் (28), மயிலாடுதுறை மாவட்டம் சந்திரப்பாடியைச் சேர்ந்த நவெந்து (34), வானகிரியைச் சேர்ந்த ராஜேந்திரன்(36), ராம்கி(30), நாகை மாவட்டம் நம்பியார் நகரைச் சேர்ந்த சசிகுமார்(26), நந்தகுமார்(30), பாபு(31), குமரன்(28) ஆகிய 13 பேர் கடந்த 26-ம் தேதி காலை காரைக்கால் மீன்பிடி துறை முகத்தில் இருந்து கடலுக்கு சென்றனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் கோடியக்கரைக்கு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த சிறீலங்காக் கடற்படையினர் எல்லை தாண்டி (?) வந்து மீன் பிடித்ததாகக் கூறி 13 மீனவர்களையும் கைது செய் தனர். மேலும், அவர்களது விசைப்படகையும் பறிமுதல் செய் தனர். முன்னதாக, மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் (?) சிறீலங்காக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட் டதில் 5 மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இவர்களில் படுகாய மடைந்த 2 பேர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட மீனவர்களையும், இதுவரை சிறீலங்கா சிங்கள கடற்படையால் பறிமுதல் செய்து வைக்கப்பட் டுள்ள மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மைக் காலமாக தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் சிறீலங்காக் கடற்படையால் கைது செய்யப்படுவது மீனவர்களிடையே அச்சத் தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர். சிறீலங்காக் கடற்படையினரால் கைது செய்யப் பட்ட மீனவர்களின் நிலை குறித்து அறிந்து கொள்ள முடியாமல், மீனவர்களின் குடும்பத்தினர் கதறி அழுதது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பின் விவரம்: பாக் ஜலசந்தியில் உள்ள டெல்ஃப்ட் தீவுக்கு அருகே இந்திய மீனவர்கள் மீது சிறீலங்காக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத் தியது. இதில், இருவர் படுகாயமடைந்தனர். மேலும் மூவர் காயமடைந்தனர். 13 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட போது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது. படுகாயமடைந்த 2 மீனவர்களும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அங்கு இந்திய தூதரக அதிகாரிகள் அவர்களுக்கு உதவி வருகின்றனர்.

தூதரை அழைத்து கண்டனம்: சிறீலங்காக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனத்தை பதிவு செய்கிறது. மேலும், இந்திய வெளியுறவு அமைச்சகம், டெல்லியில் உள்ள சிறீலங்காவின் (பொறுப்பு) தூதரை அழைத்து தனது எதிர்ப்பையும் பதிவு செய்துள்ளது. கொழும்பில் உள்ள இந்திய தூதரகம் மூலமும் இந்த பிரச் சினையை சிறீலங்கா அதிகாரிகளிடம் எழுப்பியுள்ளது. இவ் வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "மீனவர்கள் மீது கடற்படையை ஏவுவது ஏற்றுக் கொள்ள முடியாதது. எந்த சூழ்நிலையிலும் சிறீலங்காவின் இத் தகைய தாக்குதலை ஏற்றுக்கொள்ள முடியாது. மீனவர்களின் பிரச்சினைகளை அவர்களின் வாழ்வாதாரக் கவலைகளை கருத்தில் கொண்டு மனிதாபிமானத்துடன் கையாள வேண்டும். மேலும், மீன்பிடி தொழில் தொடர்பாக தற்போதுள்ள இருதரப்பு ஒப்பந்தங்களை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்" என்றும் சிறீலங்காவுக்கும் இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத் தியுள்ளது.

'தவறுதலாக நடந்துள்ளது' (?) – இந்நிலையில், இந்த துப்பாக் கிச் சூடு சம்பவம் தவறுதலாக நடந்துள்ளதாக சிறீலங்கா அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக சிறீலங்கா வெளியிட் டுள்ள விளக்கத்தில் கூறியுள்ளதாவது: கைது சம்பவத்தின் போது சிறீலங்காக் கடற்படையினரின் உத்தரவுகளை மீறி (?) இந்திய மீனவர்கள் செயல்பட்டனர். மேலும் மீன்பிடி படகை வேகமாக செலுத்தியுள்ளனர். சிறீலங்காக் கடற்படையினரை தாக்கவும், கடற்படை வீரர்களிடமிருந்து ஆயுதங்களை பறிக்கவும் (?) அவர்கள் முயற்சி செய்தனர். அப்போதுதான் துப் பாக்கிச்சூடு சம்பவம் தவறுதலாக நடந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாட்டில் ஈழ அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் கோரி வழக்கு

22.12.2024

திருவாதவூர் ஈழ அகதிகள் முகாமில் அடிப்படை வசதிகள் கோரிய வழக்கில் முகாமின் நிலை குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை திருமால்புரத்தைச் சேர்ந்த கார்த்திக் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: மதுரை மாவட்டம் திருவாதவூர் ஈழ அகதிகள் முகாமில் 555 குடும்பங்கள் வசிக் கின்றன. இந்த குடும்பங்களில் 943 ஆண்கள் 800 பெண்கள் 289 குழந்தைகள் என 2000-க்கும் அதிகமானோர் உள் ளனர். இவர்கள் கடந்த 2002-ம் ஆண்டு முதல் மிகச் சிறிய அளவிலான ஆஸ்பெட்டாஸ் போட்ட வீடுகளில் வசித்து வருகின் றனர். தற்போது 520-க்கும் அதிகமான வீடுகள் சேதம் அடந் துள்ளது. முழுமையாக மின்சாரமும் வழங்கப்படுவதில்லை. இதனால் முதியவர்களும் நோயாளிகளும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

முகாமில் 20 கழிவறைகள் தான் உள்ளது. இது இங்குள்ள 2000 நபர்களுக்கு போதுமானதாக இல்லை. இதனால் ஏராள மானவர்கள் திறந்தவெளியை கழிவறையாக பயன்படுத்தும் கட்டாயம் ஏற்படுகிறது. இரவு நேரங்களில் பெண்கள் வெளியே செல்கையில் தேவையற்ற பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். இது தொடர்பாக நடவடிக்கை கோரி அதிகாரிகளிடம் மனு அளித் தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே திருவாதவூர் அகதிகள் முகாமில் ஒவ்வொரு குடும்பத் திற்கும் தனித்தனியான கான்கிரீட் வீடு, கழிவறை வசதியோடு கட்டி தரவும், பொதுக் கழிவறை முறையான சாலை வசதி தெரு விளக்கு வசதி, முழுமையான மின்சார விநியோகம் என அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை இன்று விசாரித்த நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் ஏ. டி.மரிய கிளாட் அமர்வு தமிழக மறுவாழ்வுத்துறை முதன்மைச்



செயலர் புலம்பெயர்ந்தோர் நல வாரியத்தின் ஆணைய, மதுரை மாவட்ட ஆட்சியர் ஆகியோர் திருவாதவூர் அகதிகள் முகாமின் தற்போதைய நிலை குறித்த அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

**நாம் அரசியல்வாதிகளல்லர், நாம் புரட்சிவாதிகள்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

## சனவரியை தமிழ் மாதமாக அறிவிக்க கோரி அமெரிக்க பாராளுமன்றத்தில் தீர்மானம்

15.01.2025

அமெரிக்க பாராளுமன்றத்தில் சனவரி மாதத்தை தமிழ் மொழி மற்றும் பாரம்பரிய மாதமாக அறிவிக்க கோரி தீர்மானம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ராஜா கிருஷ்ணமூர்த்தி எம்.பி. தலைமையில் ரோ கன்னா, அமி பெரா, ஸ்ரீ தானேதர், பிரமிளா ஜெயபால் ,சுஹாஸ் சுப்பிரமணியம் உள்பட 15 உறுப்பினர்கள் இத்தீர்மானத்தை அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கொண்டு வந்தனர்.

இதுதொடர்பாக ராஜா கிருஷ்ணமூர்த்தி கூறும்போது, ஒரு தமிழ்-அமெரிக்கராக, அமெரிக்காவிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மொழி, பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை மதிக்கும் இந்த இரு கட்சி தீர்மானத்தை அறிமுகப்படுத்துவதில் நான் பெருமைப்படுகிறேன். அமெரிக்கா என்பது பல்வேறு மொழிகள், கலாச்சாரங்கள், கருத்துக்கள் மற்றும் மரபுகளின் ஒரு அங்கமாகும்.

இந்தத் தீர்மானம் 3.5 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ்-அமெரிக்கர்களின் வளமான மற்றும் தனித்துவமான கலாச்சாரம் மற்றும் நம்பமுடியாத சாதனைகள் மீது வெளிச்சம் போடும் என்று நான் மனதார நம்புகிறேன். தமிழ்-அமெரிக்கர்கள் சமூகங்களில் ஏற்படுத்திய தாக்கத்தை அங்கீகரிக்க, தீர்மானத்தை விரைவாக எடுக்குமாறு வலியுறுத்துகிறேன் என்றார்.



இத்தீர்மானத்துக்கு பல்வேறு தமிழ் அமைப்புகள் வரவேற்பு தெரிவித்துள்ளன.

## ஹமாஸ் – இசுரவேல் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்து

16.01.2025

காசாவில் 15 மாதங்களாக நீடித்து வரும் போரை நிறுத்த ஹமாஸ் -இசுரவேல் இடையே நேற்று ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

இசுரவேல் மற்றும் ஹமாஸ் இடையில் காஸா போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிக்கும் ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளதாக, இந்த விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்த கத்தார் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

இசுரவேலுக்குள் புகுந்து ஹமாஸ் , கடந்த 2023, அக்., 7ம் திகதி நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கான இசுரவேலியர்கள் பணையக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இதற்குப் பழிவாங்கும் முகமாக இசுரவேல் காசாவில் 15 மாதங்களாக போரை நடத்தி வந்தது. இதில் காசாவில் 60,000க்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில்இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் ஞாயிற்றுக்கிழமை முதல் (ஜன. 19) அமலுக்கு வரும் என்று கத்தார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல் தனி தெரிவித்துள்ளார்.

இந்த போர் நிறுத்தம், "காஸாவில் நடைபெறும் சண்டையை நிறுத்தும், பாலஸ்தீன மக்களுக்கு மிகவும் தேவையான மனிதநேய உதவிகளை அதிகரிக்கும், பணயக்கைதிகளை தங்கள் குடும்பங்களுடன் மீண்டும் இணைக்கும்" என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் சில விவரங்கள் இறுதி செய்யப்பட்டு வருவதாக இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



## இசுரவேல் – ஹமாஸ் போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது: மூன்று பணயக் கைதிகள் விடுதலை!

19.01.2025

ஹமாஸ் உடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக முதல் மூன்று இசுரவேலிய பணயக்கைதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக இசுரவேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.




இதற்கிடையில், போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இசுரவேலுடன் ஒப்புக்கொண்டபடி, பாலஸ்தீனிய போராளிக் குழு மூன்று இசுரவேலிய பெண்களை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்ததாக மூத்த ஹமாஸ் அதிகாரி தெரிவித்தார்.

பெண்கள் நலமாக இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கம் கூறியதாக இசுரவேலிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரோமி கோனென், டோரன் ஸ்டெய்ன்பிரெச்சர் மற்றும் எமிலி டமரி ஆகிய மூன்று இசுரவேலியர்களே விடுதலையானார்கள். எமிலி டமரி இசுரவேல் - பிரித்தானியா என இரண்டைக் குடியுரிமை பெற்றவர்.

இசுரவேல் மற்றும் ஹமாஸ் இடையே மத்தியஸ்தத்தில் முக்கிய பங்கு வகித்த கத்தார், ஞாயிற்றுக்கிழமை இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்தம் தொடங்குவதை உறுதி செய்தது.

பணயக்கைதிகள் இன்று வெளியே வரத் தொடங்குகிறார்கள்! மூன்று அற்புதமான இளம் பெண்கள் முதலில் இருப்பார்கள், டிரம்ப் சமூக ஊடக தளமான Truth Social இல் எழுதினார்.

பிரிட்டிஷ்-இசுரவேலிய பணயக்கைதியான டமாரியின் விடுதலையை பிரிட்டனும் வரவேற்றதாக வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

காசாவில் போர்நிறுத்தத்தை கொண்டு வர மத்தியஸ்தர்களின் முயற்சிகளுக்கு போப் பிரான்சிஸ் ஞாயிற்றுக்கிழமை நன்றி தெரிவித்தார்.

இந்த முக்கியமான முடிவில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் நன்றி. ஒப்புக்கொண்டபடி, அது உடனடியாக கட்சிகளால் மதிக்கப்படும் என்றும், பணயக்கைதிகள் அனைவரும் இறுதியாக தங்கள் அன்புக்குரியவர்களை மீண்டும் கட்டி அரவணைக்க வீட்டிற்கு செல்ல முடியும் என்று நான் நம்புகிறேன் என்று அவர் கூறினார்.

இசுரவேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே போர் நிறுத்தம் தொடங்கிய ஞாயிற்றுக்கிழமை மனிதாபிமான உதவிகளை ஏற்றிச் சென்ற டிரக்குகள் காசா பகுதிக்குள் நுழைந்ததாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இசுரவேல் மற்றும் ஹமாஸ் இடையேயான போர்நிறுத்தம் ஆரம்ப கால தாமதத்திற்குப் பிறகு அமலுக்கு வந்ததை அடுத்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் காஸாவின் தெருக்களில் குவிந்தனர் .

சிலர் கொண்டாடினர், மற்றவர்கள் அன்புக்குரியவர்களின் கல்லறைகளுக்குச் சென்றனர், மேலும் பலர் 15 மாதங்களுக்கும் மேலான போருக்குப் பிறகு தங்கள் வீடுகளுக்குத் திரும்பத்



தொடங்கினர், இது பிராந்தியத்தின் பெரும்பான்மையான மக்களை இடம்பெயர்ந்தது.

"பல மாதங்கள் போருக்குப் பிறகு குழந்தைகள் தங்கள் படுக்கையில் தூங்குவது போல் கனவு காண்கிறார்கள்" என்று யுனிசெஃப் டிடபிள்யூவிடம் கூறுகிறது.

காசாவில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தை ஜனாதிபதி ஜோ பைடன் வரவேற்றார்.

இவ்வளவு வலி, மரணம் மற்றும் உயிர் இழப்புகளுக்குப் பின்னர் இன்று காசாவில் துப்பாக்கிகள் அமைதியாகிவிட்டன என்று ஜோ பைடன் கூறினார். தனது பதவிக்காலம் முடிவதற்குள் ஒரு போர்நிறுத்தம் வரும் என்று அவர் நம்பினார் என அவர் தெரிவித்தார்.

தான் ஈடுபட்டுள்ள கடினமான பேச்சுவார்த்தைகளில் இதுவும் ஒன்று என்று அவர் கூறினார். மோதல் முழுவதும் இசுரவேலுக்கு ஆதரவளிக்கும் தனது முடிவை அவர் ஆதரித்தார்.

இந்த ஒப்பந்தத்திற்கான பாதை எளிதானது அல்ல. இது ஒரு நீண்ட சாலை என்று ஜோ பைடன் கூறினார். ஆனால், அமெரிக்காவின் ஆதரவுடன் ஹமாஸ் மீது இசுரவேல் கட்டியெழுப்பிய அழுத்தத்தின் காரணமாக நாம் இன்று இந்த நிலையை அடைந்துள்ளோம்.

# அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டொனால்ட் ஜான் டிரம்ப் பதவியேற்றார்

20.01.2025

அமெரிக்காவின் 47வது அதிபராக டிரம்ப் திங்கள்கிழமை கேபிடலில் பதவியேற்றார்.

டொனால்ட் ஜான் டிரம்ப், நான் அமெரிக்க ஜனாதிபதியின் பதவியை உண்மையாக நிறைவேற்றுவேன் என்றும், எனது இயலுமானவரை அமெரிக்காவின் அரசியலமைப்பைப் பாதுகாக்கவும் விரும்புகிறேன். எனவே கடவுளே எனக்கு உதவுங்கள் என்று சத்தியம் செய்கிறேன் என பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

பதவிப் பிரமாணம் செய்து கொண்டவுடன் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸும் டிரம்பிற்கு முன்னதாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

டிரம்ப் தனது பதவியேற்புடன் அமெரிக்காவின் பொற்காலம் தொடங்குகிறது என்றார்.

எங்கள் இறையாண்மை மீட்கப்படும், எங்கள் பாதுகாப்பு மீட்டெடுக்கப்படும், நீதியின் அளவுகள் மறுசீரமைக்கப்படும், அமெரிக்க நீதித்துறையின் தீய வன்முறை மற்றும் நியாயமற்ற ஆயுதமயமாக்கல் முடிவுக்கு கொண்டு வரப்படும் என்றார்.

அமெரிக்காவின் பெருமை, செழிப்பு மற்றும் சுதந்திரமான தேசத்தை உருவாக்குவதே எங்கள் முதன்மையான முன்னுரிமை என்று அவர் கூறினார்.



# இசுரவேலியச் சிறையில் இருந்து 90 பாலஸ்தீனியக் கைதிகள் விடுவிப்பு

20.01.2025

இருரவேலிய சிறைகளில் இருந்து தொண்ணூறு பாலஸ்தீனியர்கள் விடுவிக்கப்பட்டனர் மற்றும் காசாவில் மூன்று இசுரவேலிய கைதிகளை விடுவித்ததைத் தொடர்ந்து ஹமாஸ்-இசுரவேல் போர் நிறுத்தத்தின் முதல் கைதிகள் பரிமாற்றத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைக்கு வீடு திரும்பியபோது, ஏராளமான உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

உள்ளூர் நேரப்படி இன்று திங்கள்கிழமை அதிகாலை 1 மணியளவில் 90 பாலஸ்தீனிய கைதிகளை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவைச் சங்கப் பேருந்துகள் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள ரமல்லாவை வந்தடைந்தன. கொண்டாட்டங்கள் அனுமதிக்கப்படாது என்று இசுரவேலியப் படைகள் எச்சரித்த போதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களை வரவேற்றனர்.

விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனியர்களில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமைச் சேர்ந்த 69 பெண்கள் மற்றும் 12 வயதுக்குட்பட்டவர்கள் சிறுவர்களும் இளம் வயதுடையவர்கள் 21 பேரும் விடுவிக்கப்பட்டனர்.



# முன்னாள் சட்டமா அதிபரும், சமாதான பேச்சுக் காலத்தில்தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பிரதம ஆலோசகராக இருந்தவருமான திரு. சிவா பசுபதி அவர்கள் காலமானார்!

22.01.2025

இலங்கை முன்னாள் சட்டமா அதிபர், சமாதான பேச்சு காலத்தில் தமிழீழத் தேசிய தலைவரின் பிரதம ஆலோசகருமான சிவா பசுபதி அவர்கள் ஆஸ்திரேலியா சிட்னியில் கடந்த சனிக்கிழமை (18) அன்று காலமானார்.

காலமான சிவா பசுபதி அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு ஆனந்தா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். இலங்கைத் தமிழ் முன்னணி சட்டத்தரணியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சிவா பசுபதி, அரச வழக்குரைஞர்களின் இயக்குநராகப் பணியாற்றினார்.

1974 முதல் 1975 வரை அரசுத் தலைமை வழக்குரைஞராகவும், பின்னர் அவர் 1975 முதல் 1988 வரை சட்டமா அதிபராகவும் பணியாற்றினார்.

சிவா பசுபதிக்கு 1989 ஆம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது மிக உயர்ந்த தேசிய விருதான தேசமான்ய பட்டம் வழங்கப்பட்டது. முன்னாள் இலங்கை அரச தலைமை வழக்குரைஞரும், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபருமான சிவா பசுபதி ஓய்வுபெற்ற பின்னர், ஆஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து சிட்னியில் வாழ்ந்து வந்தார்.

2002இல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் இடையில் பேச்சுகள் தொடங்கிய போது, விடுதலைப்புலிகளின் பேச்சுக் குழுவுக்கு உதவவும் ஆலோசனைகளை வழங்கவும் விடுதலைப்புலிகளால் நிறுவப்பட்ட அரசியல் விவகாரக் குழுவுக்கு சிவா பசுபதி சட்ட ஆலொசகராகப் பணியாற்றினார்.

2002 - 2006 காலப் பகுதியில் நோர்வே தலைமையிலான அமைதிப் பேச்சுகளில் அவர் பங்கேற்றார். சிவா பசுபதி அவுஸ்திரேலிய மனித உரிமைகள் அமைப்பின் தலைவராகவும், நியூ



சவுத் வேல்சு மாநிலத் தமிழ் மூத்தோர் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க பயணிகள் விமானம் விபத்தில் 67 பேர் பலி: 30 உடல்கள் மீட்பு

30.01.2025

64 பேரை ஏற்றிச் சென்ற அமெரிக்கன் ஏர்லைன்ஸ் பிராந்திய பயணிகள் ஜெட் விமானம், அமெரிக்க இராணுவத்தின் பிளாக் ஹாக் ஹெலிகொப்டருடன் மோதி ஏற்பட்ட விபத்தில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

புதன்கிழமை (29) இரவு வொஷிங்டன் டிசியின் றொனால்ட் ரீகன் தேசிய விமான நிலையத்திற்கு அருகே நடுவானில் ஏற்பட்ட இந்த மோதலை அடுத்து விமானம் குளிர்ச்சியான பொடோமேக் ஆற்றில் விழுந்து நொறுங்கியது.

NBC யின் வொஷிங்டன் துணை நிறுவனமான NEWS 4 செய்திச் சேவை, ஆற்றில் இருந்து 30 க்கும் மேற்பட்ட உடல்களை மீட்கப்பட்டதாக தெரிவித்தது.

கன்சாஸின் விச்சிட்டாவிலிருந்து புறப்பட்ட அமெரிக்கன் ஏர்லைன்ஸின் 5342 விமானத்தில் பயணித்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

ஜெட் விமானத்தில் 60 பயணிகள் மற்றும் நான்கு பணியாளர்கள் இருந்ததை அமெரிக்கன் ஏர்லைன்ஸ் உறுதிப்படுத்தியது.

அதேநேரம், ஹெலிகொப்டர் பயிற்சியின் போது மூன்று வீரர்களை ஏற்றிச் சென்றதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகள் ஜெட் விமானம் ரீகனில் தரையிறங்க நெருங்கிக் கொண்டிருந்தபோது நடுவானில் மோதல் ஏற்பட்டது.

இதேவேளை விமான விபத்து குறித்து விசாரணையைத்



தொடங்குவதாக பென்டகன் தெரிவித்துள்ளது.

www.sangathamil.ca


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
Arasan
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள்
அனைத்து வீட்டு
வேலைகளிற்கும்
அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்தபடி
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# சுதந்திரம் இல்லையேல் நிம்மதியாக வாழ முடியாது

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை, வியர்வை சிந்தி, கண்ணீர் சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப்பெறுவதுதான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமே இல்லை. நாகரீகம் தோன்றிய காலம் தொட்டு இன்று வரை சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடாத்திவருகிறது; யுத்தங்கள் புரிந்து இருக்கிறது. புரட்சிகள் செய்து இருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழ முடியாது. சமாதானமாக வாழமுடியாது. சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும். தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழவேண்டும். பயந்து பயந்து பதற்றத்துடன் வாழவேண்டும். படிப்படியதக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறுவழி எதுவும் இல்லை.

இளைஞர்கள் இருக்கிறார்கள், அவர்கள் போராடித் தமிழீழம் பெறுவார்கள்; அல்லாவிடில் இந்தியா இருக்கிறது. எமக்கு சுதந்திர தனியரசு பெற்றுத்தரும் என்ற வகையில் நாம் சும்மா இருந்துவிட்டால் எமக்குச் சுதந்திரம் கிடைக்கப்போவதில்லை. பொதுமக்களாகிய உங்களின் நேரடிப்பங்களிப்பின்றி எமது தேசிய சுதந்திரப் போராட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை. சுதந்திரப் போராட்டம் என்பதே மக்கள் போராட்டம். பரந்துபட்ட வெகுசனங்கள் ஒன்று திரண்டு ஒரு ஐக்கிய தேசமாக எழுச்சி கொண்டு போராட்டத்தில் பங்களித்தால்தான் எமக்கு வெற்றி நிச்சயம். எமது எதிரியோ தனது ஆயுதப் படைகளை எமக்கு எதிராக ஏவிவிட்டதுமன்றி சிங்கள வெகுசனத்தையும் தமிழருக்கு எதிராக அணிதிரட்டுகிறான். சிங்கள மக்களுக்கு இன வெறியூட்டி, போர்வெறியூட்டி ஆயுதம் தரித்த ஒரு இன யுத்தத்திற்கு தயார்படுத்துகின்றான. இந்த அதர்ம யுத்தத்திற்கு சிங்கள மக்களிடம் இருந்து நிதி திரட்டுகிறான். சிங்கள மக்களும் கோடிக்கணக்கில் பாதுகாப்பு நிதியென்று வாரி வழங்குகிறார்கள். முழுச் சிங்கள தேசமுமே ஒரு இன யுத்தத்திற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. ஆனால், தமிழராகிய எமது நிலைதான் என்ன?

இன ஒழிப்பின் விளிம்பில் நாம் தள்ளப்பட்டும் எமக்கு இன்னும் விடுதலைக்கான விழிப்புணர்ச்சியோ, வீராவேச உணர்ச்சியோ தோன்றவில்லை. பசியும் பஞ்சமுமாக தாங்கொணாத் துன்பங்கள் ஏற்பட்டும் நாம் இன்னும் போராடத் தயாராகவில்லை. இனியும் நாம் பயந்து பயந்து, ஒழிந்து ஒழிந்து, செத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. ஏதோ எங்கிருந்தோ எமக்குப் புறம்பான சக்திகள் கைகொடுத்து உதவும் என்று காத்துக்கொண்டிருப்பது அசட்டுத்தனம். நாம் போருக்குத்தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதை விடப் போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராக வேண்டும். ஈழத் தமிழ்மக்கள் ஒவ்வொரு வரும் விடுதலை வேங்கைகளாக, வீரப்புலிகளாக மாறவேண்டும். தாழ்ந்து போன தமிழ் இனம் வீரப்புலி இனமாக மாற வேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொரு வருக்கும் பங்களிப்புண்டு. இந்த நெருக்கடியான காலகட்டத்தில், முழுச்சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச்சூழ்நிலையில், எம்மத்தியில் சுயநல உணர்வுகள் களையப் பெற்று சமூக உணர்வும் பிறக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவுப்பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலங்கருதாமல் வசதி படைத்தோர் வசதியற்றோருக்கு உதவணேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவவேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி. இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும்.

("எனது மக்களின் விடுதலைக்காக" நூலிலிருந்து)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & ★
Draping
Hair Flowers & ★
Bouquet
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# வெல்லும்வரை வேகம் குறைந்தால் செல்லும்வழி திசை மாறிவிடும்

உலைக்களம் - வியாசன்

வருங்காலம் வசந்தம்.
காற்றுக்கு இனிக் கொண்டாட்டம்.
சுகந்தவாசம் சுமந்து,
மந்தமாருதம் ஊர்கோலம் போகும்.
சந்ததிப் பெருக்கத்துக்காக……
மரங்களெல்லாம் தாய்மை அடையும்.
மாசிப்பனியில் மூட்டம் கலையும்.
வெள்ளை முகிற்கூட்டம் கையசைத்துப் போகும்.
சந்தனமும், பன்னீரும் மணக்க;
கிராமத்துக் கோவில்களில் கொடியேறும்.
மேளகாரரின் கழுத்தில் சங்கிலி குடியேறும்.
காஞ்சிபுரமும், மைசூரும் சலவைக்குப் போய் தயாராகும்.
இளசுகளுக்கு முளைத்த மீசை முறுக்கேறும்.
வசந்தம் வந்தால் எல்லாமும் வடிவுதான்.
எங்கள்மண் மட்டும்தானே
இளவேனில் தழுவாத நிலமாகிப் போச்சு.
இப்போது குயிற்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு;
ஏன் கேட்பதில்லை?
சிறுவர்களெல்லாம் எங்கே தொலைந்தனர்?
வானத்தைப் பார்த்தபடியே கோவிலுக்குப் பயணம்.
உள்வீதிக்குள்ளே சாமிஉலா.
இருட்டுக்குள்ளே முகம் தேடும் இளசுகள்.
விளக்கற்ற வீதியில் கடலை வியாபாரம்.
மேற்கு வீதியின் மேளச்சமாவை
எங்கள் தாயகம் இழந்துவிட்டது.
எட்டுமூலைப்பட்டம் கட்டி ஏற்றியவானம்
குண்டு வீச்சுவிமானங்களுக்காகவா காத்திருப்பது?
அரிவி வெட்டிச் சூட்டுக்கியவுடன்
அந்த வயல்களில் ஒரு வாசம் வீசுமே,
அதையினி மூக்கு எப்போது முத்தமிடும்?
தாமரை படர்ந்த கிராமத்துக் குளங்களில்
கொடிவிலத்திக் குளிப்பது எப்போது?
இந்தவருடத்து வசந்தத்தையும் இல்லாதழிக்க;
எதிரி விஷக்காற்றை வீசுவான்.
எறிகணைப்புகை கொடிகளில் படிவதா?
விடக்கூடாது.
வில்லை வளைத்து நாணேற்று.
மீண்டும் “சமாதானப் பேச்சு”
தலைப்புச் செய்தியாகிவிட்டது.
விவாகரத்துத் தம்பதிகளுக்கு பஞ்சணை விரிக்கப்படுகிறது.
கழுத்தை நெரித்தவன் கையும்,
துடித்துப் புரண்டவன் கையும்,
குலுக்கிக் கொள்ள எப்படித் தேதி குறிக்கமுடியும்?
வேண்டாமென்று வெட்டிய வேர்களை
கட்டுப் போட்டுக் காப்பாற்ற முடியுமா?
இனங்களுக்கிடையே
இழந்துபோன உறவை ஏற்படுத்துவதென்பது
உடைந்துபோன கதிரைக்கு
ஒட்டுப் போடுவது போன்றதல்ல….
முறிந்த மரத்துக்கு முட்டுக் கொடுத்து நிறுத்துவதல்ல…
உறவென்பது புரிந்துணர்விலிருந்து புலரவேண்டும்.
தன்னைப்போல மற்றவனையும் நேசிப்பவனே
உறவுக்கு உரம் போடமுடியும்.
கெமுனுவின் கதையைச் சொல்லிக் கொண்டு
மகாவலி கங்கையை வடக்கே திருப்பமுடியாது.
சிங்கள அரசுக்கு….
தமிழர் கொடுத்த அவகாசங்களெல்லாம்
அர்த்தமின்றி அழிந்து போனதே வரலாறு.
தமிழன் நெஞ்சை நிமிர்த்தி நிமிர்ந்தபோதெல்லாம்
பேச்சுவார்த்தையென்று குனியச் செய்ததே
இதுவரை தொடரும் சரித்திரமாகிவிட்டது.
எல்லோரும் குறித்துக் கொள்ளுங்கள்,
இது தொடர்கதையாக இனியும் நீளக்கூடாது.
போராட்டமென்பதை
வெறும் துப்பாக்கிகள் மட்டும் தீர்மானிக்கமுடியாது.
ஒத்துக்கொள்ளலாம்.
விடுதலையை பேச்சுவார்த்தை மூலமும் பெறமுடியாது.
இதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.
சலுகைகளும், எலும்புத் துண்டுகளுமே
பேச்சுவார்த்தை மேசையில் பெறமுடியும்.
விடுதலையை இரத்தம் சிந்தியே வெற்றி கொள்ளமுடியும்
உலகம் இதையே உணரச் செய்துள்ளது.
ஒரு வியட்னாமியனைக் கேளுங்கள்.
ஒரு சீனத்துக் குடிமகனைக் கேளுங்கள்.
ஒரு கியூபா நாட்டவனைக் கேட்டுப் பாருங்கள் -
ஏன் பேச்சுவார்த்தை மூலம்
விடுதலையைப் பெறவில்லை யென்று.
தக்கபதில் தருவதற்கு அவர்களுக்கே தகுதியுண்டு.
குருதிக் குளத்தில் குளித்தெழுந்து
எஞ்சியுள்ளவர்களையும் அங்கவீனர்கள் ஆக்கிவிட்டு
சுடுகாட்டு மண்ணில் கிடைக்கும்
சுதந்திரம் யாருக்கு வேண்டும்?
விடுதலை வாழ்வதற்காக அன்றி சாவதற்காக அல்ல…
இப்படிக் காதோரம் குசுகுசுப்போர்
கனபேருண்டு.
பேச்சுவார்த்தைகள் முறிந்தபின்னர்தானே.
இந்தமண் போராடத் தொடங்கியது;
சுதந்திரப் போரென்பது;
சுற்றிச்சுற்றிவரும் சூத்திரக்கிணறு மாடுகளல்ல……
போராட்டமென்பது;
இலக்கைச் சென்றடையாமல்
தொடங்கிய இடத்துக்கே செல்வதல்ல……
குருதிவழிவதைப் பார்க்கும் ஆசை எவருக்கும் கிடையாது.
பிணங்களுக்கிடையில் நிற்கும் வக்ரபுத்தியும் எமக்கில்லை.
வேண்டுவதெல்லாம் விடுதலை ஒன்றே.
அது பேச்சுவார்த்தை மூலமும் கிடைக்குமென்றால்
மேசையின் விரிப்பை நாங்களே விரிப்போம்.
கதிரைகளில் அமரக் காத்திருக்கின்றோம்.
அகலச் சிறகுவிரித்து ஆனந்தம்பாடும் பறவைபோல
தளையற்ற வாழ்வே தமிழருக்கு வேண்டும்.
வானுயர்ந்த மாடிமனைகள் மண்மேடாகி விட்டன.
கல்வியிற் சிறந்தவர்கள் “கைநாட்டு” ஆகிவிட்டனர்.
ஈழத்தமிழன் எலும்புக்கூடாக
ஒட்டியுலர்ந்து விட்டான்.
வீட்டுக்கு உள்ளும், வெளியும்
உயிருக்கு உத்தரவாதமில்லை.
அதற்காக……
போராட்டத்தைப் பேச்சுவார்த்தையாக மாற்றமுடியாது.
பருத்தித்துறையிலிருந்து குமணவரை
தமிழீழத்தின் கடல் தழுவிச்செல்லும் நெடுஞ்சாலை வேண்டும்.
அந்த வீதியெங்கும் அழகான கிராமங்கள்
ஊரெங்கும் தமிழர் உழைக்கும் ஓசைகள்.
பூரித்த முகத்தோடு புன்னகைக்கும் மனிதர்கள்.
இல்லானும் இல்லை….. இருப்பானும் இல்லை…..
இதுதான் தமிழீழம்.
இதற்காகவே போராட்டம்.
வெல்லும்வரை வேகம் குறைந்தால்
செல்லும்வழி தீசை மாறிவிடும்.

விடுதலைப்புலிகள் - மாசி 1994




# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தி 77 ஆண்டுகள் பெப். 04.2025



**1948 பெப். 04
அதிகாரம் கைமாறல்**



**பண்டா – செல்வா
ஒப்பந்தம்**



**1961 இல் யாழ்ப்பாணத்தில்
நடந்த சத்தியாக்கிரகம்**



**தமிழீழத்தை மீட்க களம்
புகுந்த தமிழர் படை**



"அந்நிய ஆட்சியால் பிணைக்கப்பட்ட சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும் இன்று வரை பிணைக்கப்பட்டுள்ளமையால் சுதந்திர இலங்கையின் அரசுகள் அனைத்தும் சிங்கள நாட்டினத்தை ஆக்கிரமிப்பு நாட்டினமாக ஊக்குவித்து வளர்ந்ததன் பயனாக இப்போதுள்ள அரசியல் யாப்பு ஒருதலைப் பட்சமாகத் தீர்மானிக்கப்பட்டு தமிழ்நாட்டினம் ஆளப்படும் நாட்டினமாக ஆக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை இடைத் தேர்தல் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பை விடுதலை பெற்ற இறைமை உடைய மதச் சார்பற்ற சமதர்ம நாடான தமிழீழத்தை அமைப்பதற்குரிய ஆற்றல் உரிமையாக ஏற்றுக்கொள்வதென இப் பேரவை தீர்மானிக்கின்றது."

– 1976 பெப். 04 இல் சிறீலங்கா பாராளுமன்றத்தில்
திரு. எஸ். ஜே.வி. செல்வநாயகம் அவர்கள்
கொண்டுவந்த தமிழீழப் பிரேரணை.



நாங்கள் சமாதானத்தின் எதிரிகளோ அதற்கு விரோதமானவர்களோ அல்ல, நாங்கள் விரும்பும் நீதியானதும் நேர்மையானதுமான சமாதானமே. சிறீலங்காவில் ஆட்சிக்கு வந்த எந்த அரசும் இத்தகைய சமாதானத்தை தமிழ் மக்கள் கௌரவத்தோடும் சுய மரியாதையோடும் வாழ்வதற்குரிய சமாதானத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கவில்லை. நாங்கள் விரும்புவது தமிழ் மக்களை எல்லா விதத்திலும் மாற்றவர்களுக்கு சமானமானவர்களாக வாழவைக்க கூடிய நீதியான சமாதானமே.

–தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.



**தேசியத் தலைவரின்
அரவணைப்பில்
தமிழீழக் குழந்தைகள்**



**சிங்கள இனவெறித்தாக்குதல்
உயிருக்கு
மன்றாடும் அரும்புகள்**



**சிங்கள இனவெறி
இரத்த சாட்சி**



**சிங்கள இனவெறி
இரத்த சாட்சி
தமிழ் குழந்தைகள்**



**தேசியத்தலைவா
மேதகு
வே. பிரபாகரன்
பாதையில் தமிழீழ
மக்கள்**

# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தி 77 ஆண்டுகள்
# பெப். 04. 1948 – பெப். 04.2025

| சிறீலங்கா<br>சிங்கள மக்களும் | தமிழீழம், ஈழம்<br>தமிழ் மக்களும் |
|---|---|
| **1948 –1949**<br>குடியுரிமைச் சட்டத்தின் மூலம் அனைத்து சிங்கள மக்களுக்கும் குடியுரிமை – வாக்குரிமை உறுதி செய்யப்பட்டது. | <br>**1948 –1949**<br>தமிழ் மக்கள் இலங்கைத் தமிழர், இந்திய தமிழர் என்று பிரிக்கப்பட்டு, மலையகத் தமிழர்களின் குடியுரிமை – வாக்குரிமை பயிக்கப்பட்டன. 10 இலட்சம் பேர் வாக்குரிமை இழப்பு, தமிழர்கள், இலங்கையர்களா? இந்தியர்களா...? என்பதை உறுதி செய்யவேண்டியிருந்தது. |
| <br>**1948**<br>சிங்கள மக்களின் பாரம்பரியக்கொடியான வாள் ஏந்திய சிங்கக்கொடி இலங்கையின் தேசியக்கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. | **1948**<br>இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவாக, சிவனொளிபாத மலை பொறித்த கொடியையே தேசியக்கொடியாக ஆக்க வேண்டும் என்ற தமிழர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. |
| **1948 –1956**<br>திருகோணமலை மாவட்டம், மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டம், அனுராதபுர மாவட்டம், புத்தளம் மாவட்டம் ஆகிய பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. | **1948 –1956**<br>சிங்களக் குடியேற்றவாசிகளால் தமிழ் மக்கள் [இஸ்லாமியர் உட்பட] தங்களது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அடித்து விரட்டப்பட்டனர். அல்லது அவர்களாகவே அவர்களது நிலங்களை விட்டு வெளியேறும்படியான செயற்கையான நெருக்கடி கொடுக்கப்பட்டது. |
| <br><br>**1956**<br>சிங்களமொழி, ஆட்சி மொழியாக்கப்பட்டது. சிங்கள மக்கள் தங்கள் அரசியல் உரிமையை பெற்றுக்கொண்டனர். | <br>**1956**<br>தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரசைகள் ஆக்கப்பட்டதோடு, தங்களது அடிப்படை அரசியல் உரிமைகள் மறுக்கப்படும் நிலைக்கும் தள்ளப்பட்டனர். சாத்வீக போராட்டம் நடத்திய தமிழர் தலைவர்கள் தாக்கப்பட்டனர் |
| <br>**1956**<br>தமிழின அழிப்பு சிங்கள பௌத்த இனவெறி | **1956 தமிழின அழிப்பு**<br>கல்லோயா குடியேற்றப்பகுதியில் 150 க்கு மேற்பட்ட தமிழர்கள் சிங்களக் காடையர்களால் வெட்டியும் எரித்தும் கொல்லப்பட்டனர். 20 க்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல். 3000 பேர் வரை அகதிகளாக்கப்படல். |
| <br>**1958**<br>தமிழின அழிப்பு பௌத்த சிங்கள இனவெறித் தாண்டவம் | **1958 தமிழின அழிப்பு**<br>1500 கக்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை.<br>500 க்கு மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>25,000 பேர் அகதிகளாக்கப் படல்.<br>100 கோடி ரூபா வரையிலான சொத்துக்கள் நாசமாக்கப்படல். |
|   <br>**1961 – 1971**<br>அரச திணைக்களகங்கள் நீதி மன்றங்கள் என்பவற்றில் சிங்கள மொழி பிரயோகம். | <br><br>**1961 –71**<br>தமிழ் மக்கள் சிங்கள மொழியை படிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்படல். சிங்களம் படிக்காதவர்களின் தொழில் வாய்ப்புகள் பறிபோதல். தம்முடைய தாய் மொழியில் நிர்வாக வேலைக்கு தொடர்பு கொள்ள முடியாத நிலையில் தமிழ் மக்கள்.<br><br>தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சாத்வீக முறையில் மறியல் போராட்டங்கள் நடத்தல். இராணுவம், பொலிஸ் படையினர் மூலம் தமிழர் போராட்டங்கள் நசுக்கப்படல். தமிழர் தலைவர்களை சிறையில் அடைக்கப்படல்.<br><br>சிறீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மலையகத் தமிழர்கள் வலுக்கட்டாயமாக ஆடு மாடுகள் போல் நாடு கடத்தப்படும் நிர்ப்பந்தம் ஏற்படல். 6.5 இலட்சம் மக்கள் நாடற்றவர்களாக்கப்படல். |

# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தி 77 ஆண்டுகள்
# பெப். 04. 1948 – பெப். 04.2025

| சிறீலங்கா<br>சிங்கள மக்களும் | தமிழீழம், ஈழம்<br>தமிழ் மக்களும் |
|---|---|
| <br>**1971**<br>ஏப்ரல். சிங்கள இளைஞர்கள் ஆயுதக் கிளர்ச்சி. | <br>**1971**<br>தமிழர்கள் குறிப்பாக மலையகத் தமிழர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாதல்.<br>சிங்களக் கிளர்ச்சியாளர்களால் அவர்கள் துரத்தியடிக்கப்பட வேண்டியவர்கள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கப்படல். |
| **1972 மே**<br>Ceylon என்பது சிறீலங்கா குடியரசாகல்.<br>பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்படல்.<br>தமிழ மக்களுக்கு பாதுகாப்பளித்த சோல்பரி அரசியல் சட்டத்தின் 29-வது சரத்து நீக்கப்படல்.<br> | <br>தமிழ் மக்கள், சிறீலங்கா 'குடியரசு ஆவதற்கு' அதாவது சிறீலங்கா குடியரசில் இணைந்திருப்பதற்கு சட்ட பூர்வமான அங்கீகாரம் வழங்கவில்லை.<br><br>சிறீலங்கா குடியரசானதும் 1833 கோல்புறூக் அரசியல் சட்டத்தின் கீழ் 'சிறீலங்காவையும் தமிழீழத்தையும் ஒன்றிணைத்த' இணைப்பு சட்ட ரீதியாக செல்லுபடியற்றுப்போதல். சட்டத்துக்குப் புறம்பான வகையில் தமிழீழத்தை இராணுவ பலம் கொண்டு சிறீலங்காவுடன் இணைத்தல். |
| **1972**<br>கல்வியில் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்படல்.<br>சிங்கள மாணவர் கூடுதல் சலுகைகள் பெறுதல். | <br>**1972**<br>தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பு மறுக்கப்படுதல். |
| **1974**<br>சிங்கள இனவெறித் தாக்குதல் | <br>**1974**<br>உலகத் தமிழராட்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நெருக்கடிகள் கொடுத்தல் – மகாநாட்டுக்கு வந்திருந்த மக்கள் மீது பொலிஸ் தாக்குதல். 09 பேர் படுகொலை. |
| **1977**<br>ஆகஸ்ட், தமிழ் இன அழிப்பு.<br>பௌத்த சிங்கள இனவெறி. | <br>**1977 ஆகஸ்ட், தமிழ் இன அழிப்பு**<br>3,500 க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை. 500 க்கும் அதிகமான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>60,000 க்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக்கப்படல்.<br>500 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தமிழர் சொத்துக்கள் சூறையாடல் அல்லது அழிக்கப்படல். |
| **1981**<br>தமிழ் இன அழிப்பு தாக்குதல் (யாழ் நூல்நிலையம்).<br>பௌத்த சிங்கள இனவெறி. | **1978 – 1982**<br>பல பகுதிகளில் தமிழர்களுக்கு எதிரான இன ரீதியிலான சிறு சிறு வன்செயல்கள்.<br>300 க்கு அதிகமான தமிழர்கள் கொல்லப்படல்.<br><br><br>**1981**<br>யாழ்ப்பாணம் நகரம் எரியூட்டப்படல்.<br>தமிழ் மக்களின் கலாச்சாரச் சின்னமான புகழ் பெற்ற யாழ். நூலகம் எரியூட்டப்படல். |
| **1983 ஜூலை தமிழ் இன அழிப்பு.**<br> | <br>**1983 ஜூலை தமிழ் இன அழிப்பு.**<br>6000 க்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படல்.<br>1000 க்கு மேற்பட்ட தமிழ் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல்.<br>250,000 க்கு மேற்பட்ட தமிழர்கள் அகதிகளாக்கப்படல்<br>1000 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட தமிழர் சொத்துக்கள் அழிக்கப்படல்.<br>கொழும்பு வெலிக்கடை சிறையில் 67 தமிழ் அரசியல் கைதிகள் படுகொலை செய்யப்படுதல். |

# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தி 77 ஆண்டுகள்
# பெப். 04. 1948 – பெப். 04.2025

| சிறீலங்கா<br>சிங்கள மக்களும் | தமிழீழம், ஈழம்<br>தமிழ் மக்களும் |
|---|---|
| **1983 – 1993**<br>துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம்<br>மூலமும், சுதந்திர வர்த்தக வலையங்கள் மூலமும்<br>சிங்களப் பகுதிகள் அபிவிருத்தி<br>செய்யப்படல். | <br>1983 - 1993<br>தமிழீழப் பிரதேசங்கள் மீது யுத்தம்.<br>50,000 க்கு அதிகமான தமிழ் மக்கள் கொல்லப்படல்.<br>1000 க்கும் மேலான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு<br>உபட்படுத்தப்படல்.<br>பல ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தமிழர் சொத்துக்கள் அழிக்கப்படல்.<br>தமிழீழப் பிரதேசங்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்படல்.<br><br>5 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் அகதிகளாக்கப்படல்.<br>தமிழர்கள் மீது பொருளாதாரத் தடை.<br> |
| **1993 – 1998**<br>வீடமைப்புத் திட்டம் – சமுர்த்தி திட்டம் – தென்பகுதி<br>(காலி நகர) அபிவிருத்தித் திட்டம் முதலான<br>திட்டங்கள் மூலம், சிங்களப் பகுதிகள் அபிவிருத்தி<br>செய்யப்படல். | <br><br>**1993 – 1998**<br>**30,000 க்கும் அதிகமான மக்கள் கொல்லப்படல்.**<br>**10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதியாக்கப்படல்.**<br>**அதில் 5 இலட்சம் மக்கள் ஒரே இரவில் அகதிகளாக்கப்படல்.**<br>**(யாழ்ப்பாணம் 1995)**<br>**தமிழர் தாயகம் நிர்மூலமாக்கப்படல்.**<br>**யாழ்ப்பாணக் குடாநாடு ஆக்கிரமிக்கப்படல்.**<br>**4.5 இலட்சம் மக்கள் உணவு, மருந்து இருப்பிடம் இன்றி வன்னிக்**<br>**காடுகளில் அவலம்.**<br>**அகதிகளாக்கப்பட்ட மக்கள் மீது தொடர்ந்தும் யுத்தம்.**<br>**நூற்றுக் கணக்கில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் இராணுவத்தினரால்**<br>**கைது செய்யப்பட்டு இரகசியமாக கொலை செய்யப்படல்.**<br>**ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் – தமிழ் பெண்கள் தொடர்ந்து பாலியல்**<br>**வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்படல்.** |
| **1998 – 2009**<br>அபிவிருத்தித் திட்டம் முதலான<br>திட்டங்கள் மூலம், சிங்களப் பகுதிகள் அபிவிருத்தி<br>செய்யப்படல்.<br><br> | <br><br>**1998 – 2009**<br>**200000 க்கும் அதிகமான மக்கள் கொல்லப்படல்.**<br>**பல இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதியாக்கப்படல்.**<br>**தமிழர் தாயகம் நிர்மூலமாக்கப்படல்.**<br>**தமிழீழம் ஆக்கிரமிக்கப்படல்.**<br>**பல இலட்சம் மக்கள் உணவு, மருந்து இருப்பிடம் இன்றி அவலம்.**<br>**அகதிகளாக்கப்பட்ட மக்கள் மீது தொடர்ந்தும் யுத்தம்.**<br>**பல ஆயிரக் கணக்கில் தமிழ் இளைஞர்கள், யுவதிகள்**<br>**இராணுவத்தினரால்**<br>**கைது செய்யப்பட்டு இரகசியமாக கொலை செய்யப்படல்.**<br>**ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் – தமிழ் பெண்கள் தொடர்ந்து பாலியல்**<br>**வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பின் கொலை செய்யப்படல்.**<br>**21 ஆம் நூற்றாண்டு உலகில் நடந்த முதலாவது**<br>**இனப்படுகொலை – முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை. அவலம் இன்னும் தொடர்கிறது...** |



# ஈழத்தமிழர்களை அடிமைப்படுத்தி 77 வது ஆண்டு
# பெப். 04. 1948 – பெப். 04.2025




ஆதி கால குடியிருப்புகள்




ஐரோப்பியர் வருகையின் போது இருந்த அரசுகளும் தமிழர் பிரதேசங்களும்






ஐரோப்பியர் ஈழத்தீவுக்கு வருகை தந்தபோது தமிழர் செறிவாக வாழ்ந்த விரதேசம்

## தமிழ் வன்னிமைகள்

1. பெரும் காற்றுப்பற்று
2. முசலிப்பற்று
3. மேற்குமூலை
4. சின்னச் செட்டிகுளம்
5. நடுச் செட்டிகுளம்
6. கிழக்கு மூலை தெற்கு
7. கிழக்கு மூலை வடக்கு
8. மேல் பற்று வடக்கு
9. மேல் பற்று கிழக்கு
10. மேல் பற்று தெற்கு
11. பனங்காமம்
12. உடையாவூர் (உடையார்கட்டு)
13. துனுக்காய்
14. கரைச்சி
15. புதுக்குடியிருப்பு
16. முள்ளியவளை
17. கரிக்கட்டு மூலை வடக்கு
18. கரிக்கட்டு மூலை தெற்கு
19. மகாவன்னி
20. திருகோணமலை
21. கொட்டியாரம்
22. கட்டுக்குளம்
23. மட்டக்களப்பு
24. மண்முனை
25. பழுகாமம்
26. போரதீவு
27. பாணமை
28. யாலா
29. புத்தளம்




ஆங்கிலேயர் தமிழர் தாயகத்தை 1833 இல் சிறீலங்காவுடன் இணைப்பதற்கு முன் இருந்த மாகாண அமைப்பு




ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மாகாணப் பிரிவினை என்ற பெயரில் தமிழர் தாயகம் சிதைக்கப்பட்டபின் 1889 இல் இருந்த மாகாண அமைப்பு.




1889 ஆம் ஆண்டின் பின் தமிழர் நிலம் சிங்களக் குடியேற்றம்




# உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலை 04.02.1992



கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உருத்திரபுரக் கிராமம் அமைந்துள்ளது. இப்பிரதேச மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகிறது. இந்தப் பகுதியில் அமைந்துள்ள சிவன் கோயில் இக்கிராமத்திற்குச் சிறப்பைக் கொடுக்கின்றது. உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மற்றும் சிவநகர்ப் பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு உருத்திரபுரம் வடக்கு கூழாவடிச் சந்தியில் சந்தை, வாசிகசாலை, கூட்டுறவுச்சங்கம் கமநல நிலையம், விளையாட்டுக்கழகம், கடைகள் என்பன அமைந்துள்ளன.

04.02.1992 அன்று சிறீலங்காவின் நாற்பத்து நான்காவது சுதந்திரநாள். தமிழர்கள் வாழும் பகுதியான வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் சுதந்திரநாளாக கொண்டாட்டங்கள் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன. முற்பகல் 11:00 மணியளவில் விமானப்படையின் இரண்டு “பொம்பர்” விமானங்கள் உருத்திரபுரம் பகுதியை ஐந்து நிமிடங்களாக வட்டமிட்டன. அப்போது கூழாவடிப் பகுதியில் மக்கள் சந்தையில் அதிகளவில் கூடிநின்றனர். இவ் விமானங்களின் இரைச்சலினால் மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சந்தியில் நின்ற பாரிய கூழாமரத்தின் கீழும், சந்தியிலுள்ள மதகின் கீழும் பாதுகாப்புத் தேடி ஒளிந்துகொண்டனர். இந்த நேரத்தில் குண்டுவீச்சு விமானங்கள் நான்கு குண்டகளை அப்பகுதி மீது அடுத்தடுத்து வீசின. அதில் ஒரு குண்டு வெடிக்கவில்லை ஏனைய குண்டுகள் மதகின் அருகில் வீழ்ந்து வெடித்தன.

இச்சம்பவத்தின் போது மதகினுள் பாதுகாப்புக்காகத் தஞ்சம் புகுந்திருந்த பொதுமக்கள் பதினொரு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோரின் உடல்கள் சிதைந்த நிலையிற் காணப்பட்டன. கால்வாயில் பாய்ந்து கொண்டிருந்த நீர் இவர்களின் இரத்தமும் கலந்து சிவப்பாக ஓடியது. இந்த சம்பவத்தின்போது இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஈமச் சடங்குகள் மறுநாள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொதும் “பொம்பர்” விமானங்கள் இந்தப் பகுதியல் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

உயிரிழந்தவர்களின் நினைவாக இப்பிரதேச மக்களாலும், பொது அமைப்புக்களினாலும் கூழாவடிச் சந்தியில் 2002 ஆம் ஆண்டு நினைவாலயம் திறக்கப்பட்டுள்ளது.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி அகில இலங்கை சமாதான நீதவான், திடீர் மரண விசாரணை அதிகாரி சம்பவம் பற்றி தெரிவிக்கையில்.

“திடீர் மரண விசாரனை அதிகாரியாகவும், வைத்தியராகவும் உள்ள நான் 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடிச்சந்தியில் தனியார் மருத்துவ மனையையும். அத்தோடு எனது அலுவலகத்தையும் நடத்தி வந்தேன். 1992 பெப்ரவரி மாதம் நான்காம் திகதியும் வழமை போல எனது வைத்தியசாலையைத் திறந்து நடத்திக்கொண்டிருந்தேன். அன்றைய நாள் சிறீலங்கா சுதந்திரம் அடைந்த நாள் என்பதால், பாடசாலை, அரச திணைக்களகங்கள் எல்லாவற்றிற்கும் விடுமுறை நாள். கூழாவடிச் சந்தியில் தான் சந்தையும் இருக்கின்றது. நேரம் நண்பகல் 11:00 மணியிருக்கும் சந்தையில் நிறையச் சனக்கூட்டமாக இருந்தது. அதுமட்டுமல்லாமல் பாடசாலை விடுமுறை என்பதால், பாடசாலை மாணவர்கள் அங்கு நின்று விளையாடிக்கொண்டும் நின்றார்கள். அந்த நேரம் சிறீலங்கா விமானப் படையினருடைய பொம்பர் விமானங்கள் வானில் வட்டமிட்டன. முதல் ஒரு குண்டு அடிச்சவன் ஒருத்தருக்கும் தேசமில்லை. சனங்கள் எல்லாப்பக்கத்தாலயும் பதற்றத்துடன் ஓடினார்கள். நான் ஒரு வைத்தியர் என்பதால் அங்குள்ள எல்லோரையும் எனக்கு நன்றாகத் தெரியும் சிலர் பாலத்துக்குக் கீழ் ஓடினார்கள் டொக்ரர் வாங்க என்று சொல்லி என்னையும் கூப்பிட்டவர்கள் தான் நான் துவிச்சக்கர வண்டியிலே சிவநகர்ப் பக்கமாக ஓடி விட்டேன். இரண்டாவது குண்டு பாலத்துக்குள்ள விழுந்து வெடிச்சதால சம்பவ இடத்திலேயே ஒன்பது பேரும் உயிரிழந்தார்கள, இருவருக்கு காயம் ஏற்பட்டது. காயமடைந்த இருவருக்கும் நான் தான் மருந்து கட்டிவிட்டேன்.”

04.02.1992 அன்று உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. நாகலிங்கம் தயாபரன் (மாணவன் - 14)
2. கணபதிப்பிள்ளை ஜெயலிங்கம் (மாணவன் - 08)
3. பாலசிங்கம் ஜெயதீஸ்வரன் (மாணவன் - 15)
4. பஞ்சலிங்கம் பாலேந்திரன் (வியாபாரம் - 23)
5. முருகேசு தர்மலிங்கம் (தொழிலாளி -38)
6. கோபாலசிங்கம் ஜெயகோபால் (வியாபாரம் - 20)
7. பேனாட்சோ தயாபரன் (மாணவன் - 12)
8. சுந்தரலிங்கம் சந்திரகுமார் (மாணவன் - 16)
9. விநாயகமூர்த்தி கருணாகரன் (தொழிலாளி - 29)

காயமடைந்தவர்களின் விபரம்

1. கணபதிப்பிள்ளை இராசன் (மாணவன் - 16)
2. கணேசன் தவநேசன் (மாணவான் - 18)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெற முடியவில்லை

# குமரபுரம் படுகொலை 11.02.1996

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குமரபுரம் என்ற இந்தக் கிராமம் இருக்கின்றது. திருகோணமலை மாவட்டத்தில் பாரதிபுரத்திற்கும் கிளிவெட்டிக்கும் இடையிலுள்ள இக்கிராமத்திலிருந்த குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயத்தை தொழிலாக கொண்டவர்களாவார்கள்.

குமரபுர கிராமத்தின் எல்லைகள் பின்வருமாறு:-
கிழக்கு: பிரசித்தி பெற்ற நீர்ப்பாசனத் திட்டமாகிய அல்லைக் குளம்
வடக்கு: இக்கிராமத்தின் வடக்கு எல்லையிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு இராணுவ முகாம் இருக்கின்றது.
மேற்கு: மேற்கு எல்லையில் ஒரு சிறிய விளையாட்டு மைதானமும் பாற்பண்ணையும் இருக்கின்றது.
தெற்கு: இக்கிராமத்தின் தெற்கு எல்லை கிளிவெட்டித் துறை முகமாகும்.

இது ஒரு விவசாய தமிழ்க் கிராமம் ஆகையால் இங்கு பெருமளவிலான ஓலைக்குடிசைகளும் ஆங்காங்கே சில கல் வீடுகளும் காணப்படுகின்றன. மூதூர் நகரத்திலிருந்து வெருகல்முகத்துவாரம் வரை நீண்டுசெல்லும் பிரதான வீதி இக் கிராமத்தின் ஊடாகவே ஊடறுத்துச் செல்லுகிறது.

இங்கு பல இன மக்கள் வாழ்கின்ற போதிலும் அவர்களுக்கிடையிலான இன உறவுகள் பாதிப்படைந்திருக்கவில்லை. 1995ம் ஆண்டிற்குப் பின்னர் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்திருந்ததன் காரணமாக மக்கள் இராணுவத்தினருக்கு அஞ்சி வாழும் நிலையேற்பட்டது. இவ்வாறான ஒரு இராணுவக் கெடுபிடியின் விளைவாகத்தான் 11.02.1996 அன்று இந்தப் படுகொலை சம்பவம் இடம்பெற்றது.

அன்று மாலை 4 மணியளவில் வெடிச்சத்தங்கள் கேட்டன. மக்கள் பயத்தால் இக்கிராமத்தின் கிழக்கு எல்லையான அலலைக்குளத்திற்கு அருகே நெடுக உயர்ந்து அடர்த்தியாக வளர்ந்திருந்த கிளிக்கண்ணா மரக்கூடலுக்குள் ஒளிந்து கொண்டாரகள் வேறு சிலர் வீட்டிலேயே இருந்தார்கள். அவ்வாறு வீட்டில் இருந்தவர்களில் அழகுதுரை என்பவரது வீட்டில் எட்டுப் பேர் இருந்தார்கள். அந்த எட்டுப் பேரும் இராணுவத்தால் வீட்டுக்குள்ளேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இந்த ஊர்த் தலைவர் தமது சாட்சியத்தில் தன்னுடைய வீட்டில் தன்னுடன் கதைத்துக்கொண்டிருந்த இராசேந்திரம் கருணாகரன் என்பவர் தன் கண் முன்னாலேயே சூடுபட்டு இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்ததைத் தான் பார்த்ததாகச் சொன்னார். இந்த இராணுவத்தினரின் அடாவடித்தனமான சூட்டில் தொழிலாளியான நாகராசா என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒரு கண்ணை முழுமையாக இழந்தார். மறுகண்ணில் பார்வைக் குறைபாட்டோடு இன்றும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.



இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது தனது எட்டு வயதுச் சகோதரனான அன்ரனி ஜோசெப் என்ற சிறுவனை வீதிவழியாக கிளிவெட்டிக்கு சைக்கிளிற் கூட்டிக்கொண்டு சென்ற அருமைத்துரை தனலட்சுமி கீதா என்ற பதினாறு வயதுப் பாடசாலை மாணவி துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டு கடை ஒன்றுக்குள் தனது தம்பியுடன் தங்கியிருந்தபோது சிறீலங்கா இராணுவத்தினரால் வெளியே இழுத்துச் செல்லப்பட்டு ஒரு பாற்பண்ணைக் கட்டடத்துக்குள் வைத்து பல இராணுவச் சிப்பாய்களினால் பாலியல்வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டார். கடைசியில் கோப்ரல் குமார் என்ற இராணுவச் சிப்பாய் அவரைத்தானே சுட்டுக்கொன்றதாக நீதிமன்றத்தில் ஒத்துக் கொண்டார். ஏன் சுட்டுக்கொன்றாய் எனக் கேட்கப்பட்டபோது அந்தச் சிறுமி பல இராணுவச் சிப்பாய்களால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்ட போது உடம்பு முழுவதும் ககடிகாயங்களுக்கு உள்ளாகியிருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் பல துண்டுகளாகக் கிழித்து வீசப்பட்டிருந்தன. அவள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தாள் அவளின் பரிதாபகரமான நிலையைப் பார்த்தே சுட்டேன் என்றான்.

இந்தப் படுகொலையின்போது எல்லாமாக இருபத்தாறு தமிழர்கள் ஆண், பெண் என்ற வேறுபாடின்றியும் முதியவர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றியும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இருபத்திரண்டு பேர் சுட்டுப் படுகாயப்படுத்தப்பட்டார்கள். இறந்த எல்லோருடைய மரண அத்தாட்சிப் பத்திரங்கள் துப்பாக்கிச் சூட்டு காயங்களினாலும் நீண்ட நேரம் உரிய சிகிச்சை அளிக்கப்படாது கவனிப்பாரற்று விடப்பட்டமையாலும் ஏற்பட்ட மரணங்களென எழுதப்பட்டிருந்தன. அப்போது மூதூர் நீதி மன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய பொன்னையா சுவர்ணராச் இம்மரணங்களை அத்தாச்சிப்படுத்தியுள்ளார்.

இந்த படுகொலை தொடர்பாக ஒன்பது படையினர் கைது செய்யப்பட்டார்கள். பத்து ஆண்டுகளாக இந்தக்கொலை தொடர்பான வழக்கு திருகோணமலை நீதிமன்றில் நிலுவையிலுள்ளது. இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட சான்றுப் பொருட்களும் தடையப் பொருட்களும் மூதூர் நீதவான் நீதிமன் றத்தினால் கொழும்பு அரசாங்க பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால், அவையாவும் 2005ம் ஆண்டு ஏற்பட்ட விபத்தின் போது எரிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் இந்த வழக்கின் அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதே நீதித்துறை வட்டாரத்தில் எழுப்பப்படும் கேள்வியாகும்.

11.02.1996 அன்று குமரபுரம் இனப்படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:

01. இராமஜெயம்பிள்ளை காமலேஸ்வரன் (வயது 14 - மாணவன்)

# குமரபுரம் படுகொலை 11.02.1996

02. இராசேந்திரம் கருணாகரன்
03. கனகராசா சபாபதிராசா (வயது 16 - கமம்)
04. கிட்டினர் கோவிந்தன்
05. பாக்கியராசா வசந்தினி
06. தங்கவேல் கலாதேவி (வயது 11 - மாணவி)
07. ஆனந்தன் அன்னம்மா (வயது 28)
08. அமிர்தலிங்கம் ரஜனிக்காந்
09. அழகுதுரை பரமேஸ்வரி (வயது 27)
10. அருமைத்துரை வள்ளிப்பிள்ளை
11. அருமைத்துரை தனலெட்சுமி (வயது 16 - மாணவி)
12. அருணாசலம் கமலாதேவி
13. அருணாசலம் தங்கவேல்
14. சோமு அன்னலட்சுமி
15. செல்லத்துரை பாக்கியராசா (வயது 26 - தொழிலாளி)
16. சுந்தரலிங்கம் பிரபாகரன் (வயது 13)
17. சுந்தரலிங்கம் சுபாசினி (வயது 04 - மாணவன்)
18. சுப்பிரமணியம் பாக்கியம்
19. சுப்பையா சேதுராசா (வயது 72 — தொழிலாளி)
20. சிவக்கொழுந்து சின்னத்துரை (வயது 58 - கமம்)
21. சிவபாக்கியம் பிரசாந்தினி
22. சண்முகநாதன் நிதாகரன் (வயது 11 - மாணவன்)
23. வடிவேல் நடராசா (வயது 27 - தொழிலாளி)
24. விநாயகமூர்த்தி சுதாகரன் (வயது 13 - மாணவன்)

காயமடைந்தோர் விபரம்:

01. இராசதுரை சாத்தியப்பிரியா (வயது 24 - சுயதொழில்)
02. இராசதுரை சின்னவன்
03. நாகராசா கிருபைராணி (வயது 35 - வீட்டுப்பணி)
04. நாகராசா சுதாகரன்
05. குலேந்திரன் தவமணிதேவி (வயது 24 - வீட்டுப்பணி)
06. கிட்ணன் (வயது 04)
07. கணபதிப்பிள்ளை நிரோஜன் (வயது 04 - குழந்தை)
08. கணபதிப்பிள்ளை குகதாசன் (வயது 12 - சிறுவன்)
09. கணபதிப்பிள்ளை குமுதினி
10. பாக்கியராசா (வயது 35)
11. பழனிவேல் யோகராணி
12. தம்பிப்பிள்ளை சிற்றம்பலம்
13. திருப்பதி மஞ்சுளா (வயது 12 - சிறுமி)
14. மாரிமுத்து செல்லாச்சியார்
15. மகேஸ்வரன் குவேந்தினி (வயது 06-— சிறுமி)
16. மகேஸ்வரன் வனஜா
17. அழகுதுரை சர்மி (வயது 12 - சிறுமி)
18. அரசரட்ணம் நாகராஜா
19. மோசஸ் அன்ரனி யோசப் (வயது 02 - குழந்தை)
20. சித்திரவேல் வேல்நாயகம்
21. சிற்றம்பலம் கோணேஸ்வரன்
22. ராஜா இன்பமலர் (வயது 24)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# தம்பலகாமம் – பாரதிபுரம் படுகொலை – 01.02.1998



சிறீலங்கா சுதந்திரமடைந்த நாளில் இருந்து, தமிழ்மக்கள் எதிர் கொண்ட, அவர்களை உலுக்கியெடுத்தபடுகொலைகள் ஏராளம். அதிலும் கிழக்கு மாகாணம்படுகொலைகளின் கள மாகவே இருந்தது. காரணம் சிறீலங்கா அரசினால் மேற்கொள் ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களும் அத்து மீறிய குடியேற்றங்களும் கிழக்கு மாகாணத்தை வசப்படுத்த முற்பட்டமைதான். தமிழர் பிரதேசங்களில் படுகொலைகளை நிகழ்த்தி விரட்டியடிப்பதன் மூலம் சிங்களமயமாக்கலைச் செய்வதை உத்தியாகக்கொண்டிருந்தனர். நில அபகரிப் பிற்காக, கிராமப்படுகொலைகள் சத்தமின்றி நடந்தேறின. பாலம்போட்டாறு, ஜெயபுர ஆனதும்ம முதலிக்குளம் மொற வெவ ஆனதும் இப்படித்தான். இதன் தொடர்ச்சியாக, தம்பல காமம் வடக்கில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் தமது எல்லை களை விரிவு படுத்தும் பொருட்டு தம்பலகாமத்தின் ஏனைய பகுதிகளை நோக்கித் தாக்குதல்களை ஆரம்பித்தனர். அதில்தான், 01.02.1998 அன்று பாரதிபுரத்தில் நடந் தேறியது அந்தக் கோரச்சம்பவம்.

பொதுவாக, எல்லைக் கிராமங்களில் நடக்கும் படுகொலைகள், தாக்குதல்களை சிங்கள-தமிழ் மக்களிடையேயான இனக் கலவரம் என வரையறைப்படுத்தி, சிறீலங்கா அரசு அதைக் கண்டு கொள்வதேயில்லை. இது சிங்களத் தாக்குதலாளிக ளுக்கு வாய்ப்பாக இருந்தது மட்டுமன்றி, அரசின் ஊக்கு விப்பாகக்கூட அமைந்தது. ஆனால் தம்பலகாமத்தில் நடந்த படுகொலையில் காடையர்களுடன் காவல்துறையும் சேர்ந்து கொண்டது தான் மிகப்பெரிய அவலம்.

தம்பலகாமம், திருகோணமலை மாவட்டத்தில், விவசாயக் கிரா மங்களைக் கொண்ட பிரதேசம். திருகோணமலை நகரத்தி லிருந்து பன்னிரண்டுமைல் தொலைவில் அமைந்துள்ளது. சம்பந்தரால் பாடல் பெற்ற தலமான திருக்கோணேசரத்துடன் தொடர்புடைய ஆதிகோணேசுரர் ஆலயத்தைக் கொண்ட மைந்த சிறப்புப் பெற்றது. பாரதிபுரம், தம்பலகாமத்தின் பசுமை யான கிராமங்களில் ஒன்று. கந்தளாய்க்குளத்தின் நீரப்பாசனத் தால் விவசாயத்தில் தன்னிறைவைக் கொண்டிருந்த வளமான கிராமம். இதன் காரணமாகவே சிங்களவர்களின் இலக்காக மாறியது.

1990களின் பிற்பகுதியில் தம்பலகாம உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்த அத்தனை தமிழ்க்கிராமங்களும் இனத்தாக் குதலுக்கு உள்ளாகின. மனிதாபிமானமற்ற தாக்குதல்களால் அப்பிரதேசம் ஒட்டுமொத்தமான, பாரிய இடப்பெயர் வைச் சந்தித்தது. பெருமளவு மக்கள் வடபுலம் நோக்கி ஓடிவந்தனர். எஞ்சியோர் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர். கிராமத்து மண்ணையே தமது சீவனோ பாயத்திற்காக நம்பியிருந்த மக்களால் சிலகாலங்கள் கூட நீடிக்க முடியவில்லை. பசி, பஞ்சம், வறுமை வாட்டியெடுக்கத் தொடங் கியதால் உயிரைப் பணயம் வைத்து தமது சொந்த இடங்க ளுக்குச் திரும்பவும் செல்லத் தொடங்கினர். இனவாத அட்ட காசங்கள்சற்றே தணிந்திருந்ததால், சிங்களவர்களால் பறிக் கப்பட்ட கிராமங்கள் போக, மீதி இடங்களில் தமது இருப் பிடங்களை அமைத்துக்கொண்டனர்.

அவ்வாறு மீளக்குடியமர்ந்த கிராமங்களான புதுக்குடியிருப்பு, பொற்கேணி, பாரதிபுரம் போன்றவற்றை இலக்கு வைத்துப் பேரினவாதிகள் மீண்டும் தாக்கத்தொடங்கினர். அதன் உச்சக்கட்டமாக, தமிழர்களை அச்சமுறுத்தும் நோக்கில் ஒரு கோரப்படுகொலையை பாரதிபுரத்தில் நிகழ்த்தி முடித்தது சிறீலங்கா காவல்துறை.

01-02-1998 அன்று காலை, மெது வாக இருள் அகன்று கொண்டிருந்த வைகறை நேரத்தில் துயிலெழுந்த கிராமம் தனக்கான அன்றைய பணி களுக்காக தயாராகிக்கொண் டிருந்தது. ஏறக்குறைய 5.00 மணிக்கும் 6.00 மணிக்கும் இடைப்பட்ட அந்த விடியல் பொழுதில், காவல்துறை நிலையத்தி லிருந்த காவல்துறையினரும் ஊர் காவல் படையினரும், அப்பகுதிகளில் வயல் வெளிக்கும், பணிக்கும் சென்று கொண்டிருந்தவர்களை விசாரணை எனக் கூட்டிச் சென்று காவலரனின் முன்னால் நிற்கவைத்தனர். காரணம் ஏதுமின்றி இழுத்துச் செல்லப்பட்ட அப்பாவிகள் நிதானிக்கும் முன்பு, சுற்றி நின்று சுட்டுத் தள்ளினர். மொத்தமாக எட்டு உடல்கள், சில கணங்களில் பிணமாகச் சரிந்தன. தொடர்ந்து நாலா பக்கமும் இலக்கின்றிச் சுட்டதில் பதி னேழு பேர் படுகாயமடைந்தனர். உயி ரிழந்த எட்டுப்பேரில், நான்கு பேர் பள் ளிப்படிப்பை முடிக் காத மாணவர் கள். அவர்களில் இருவர் பதின்ம வயதில் இருந்த சகோதரர்கள்.

சுட்டுக்கொன்ற பின்னும் கொலை வெறி அடங்காத காவல் துறை, பிண ங்களை உதைத்தும் குத்தியும் உருக் குலைத்தது. உயிரிழந்த ஆறுமுகன் சேகர் என்பவரின் ஆண் உறுப்பை வெட்டி அவரது வாய்க்குள் திணித்து விட்டுச் சென்றது.

அதிகாலை வேளையில் நடந்த கோரக் கொலையால் தமபலகாமம் மீண்டும் ஒருமுறை கதிகலங்கியது. பிணமாகப் பிள்ளையைப் பார்த்த பெற் றோர், தந்தையைப் பார்த்த குழந்தைகளின் கதறல், அந்த வை கறைப் பொழுதை அதிரவைத்தது. அவர்களின் கண்ணீரில் அந்தக் கிராமமேநனைந்தது. அடுத்து என்ன நடக்கப்போகின்றதோ என்ற அச்சத்தில் பலர் உறைந்து போயிருந்தனர். அன்று விழுந்த பேரிடியால், மீண்டும் தமது கிராமத்தை விட்டு இடம் பெயரத்தொடங் கினார்கள்.

வழமையாக இத்தகைய தாக்குதல்களை இனவாதம் என முடிச்சிடும் சிறீலங்கா அரசு, இம்முறை காவல்துறையின் அடாவடி நேரடியான சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டதால், கண்துடைப்பாக ஒருவிசாரணையை மேற்கொண்டது. விசாரணையில் பத்துக்கும் மேற்பட்ட காவல்துறையினரும் ஊர்காவல் படையினரும் சம்பந்தப்பட்டிருப்பதாக நிறுவப்பட் டபோதும், இதுவரை அந்தக் குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுமில்லை, குற்றவாளிகள் தண்டிக்கப் படவுமில்லை.

பாரதிபுரம் 01.02.1998 அன்றைய சம்பவத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்ட அப்பாவிகள் விபரம்

01. அமிர்தலிங்கம் சுரேந்திரன் (மாணவன் - 14)
02. அமிர்தலிங்கம் கஜேந்திரன் (தொழிலாளி - 18)
03. முருகேசு ஜனகன் (மாணவன் - 17)
04. நாதன் பவளநாதன் (தொழிலாளி - 45)
05. சுப்பிரமணியம் திவாகரன் (-)
06. குணரத்தினம் சிவராஜன் (-)
07. ஆறுமுகம் சேகர் (கமம் )
08. பொன்னம்பலம் கனகசபை (கமம்)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை

# தமிழின அழிப்புக்கள் பெப். 04. 1948...!

01. இங்கினியாகலை இனப்படுகொலை - 05-06-1956
02. 1958ஆம் ஆண்டு இனக்கொலை
03. தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை - 10.01.1974
04. 1977ஆம் ஆண்டு இனக்கொலை
05. 1979 அவசரகாலச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள்
06. 1981ஆம் ஆண்டு இனப்படுகொலை
07. 1983ஆம் ஆண்டு இனப்படுகொலை
08. திருநெல்வேலி படுகொலை - 24,25.07.1983
09. சுன்னாகம் காவற்றுறை நிலையப்படுகொலை - 08.01.1984
10. சுன்னாகம் சந்தைப் படுகொலை - 28.03.1984
11. மதவாச்சி - ரம்பாவ படுகொலை 1984 செப்ரெம்பர்
12. ஒதியமலை படுகொலை - 01.12.1984
13. செட்டிக்குளம் படுகொலை - 02.12.1984
14. குமுழமுனை படுகொலை - 02.12.1984
15. தென்னமரவடி படுகொலை - 03.12.1984
16. மன்னார் - முருங்கன் வீதிப் படுகொலை - 04.12.1984
17. கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் படுகொலை 1- 5.12.1984
18. வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்களின் படுகொலை - 06.01.1985
19. முள்ளியவளைப் படுகொலை - 16.01.1985
20. வட்டக்கண்டல் படுகொலை - 30.01.1985
21. புதுக்குடியிருப்பு ஐயன் கோயிலடிப் படுகொலை - 21.04.1985
22. குமுதினிப் படுகொலை - 15.05.1985
23. நற்பிட்டிமுனை படுகொலை - 17.05.1985
24. திரியாய்த் தாக்குதல்கள் - 1985
25. வவுனியா பூந்தோட்டச்சந்திப் படுகொலை - 10.08.1985
26. திம்பு பேச்சுவார்த்தை கால படுகொலை
27. கள்ளம்பற்றைச் சந்திப் படுகொலை - 10.08.1985
28. துவரங்காடு (வரோதயநகர்)ப் படுகொலை - 17.08.1985
29. வயலூர்ப் படுகொலை - 24.08.1985
30. நிலாவெளி படுகொலை - 16.09.1985
31. திருமலைப் படுகொலைகள் யூன், ஒகஸ்ட், செப்ரெம்பர் - 1985
32. பிரமந்தனாற்றுப் படுகொலை - 02.10.1985
33. மூதூஉ கடற்கரைச் சேனைப் படுகொலை - 1985
34. தம்பலகாமம் தாக்குதல்கள்
35. கந்தளாய் படுகொலை - 09.11.1985
36. சம்பூர்ப் படுகொலை - 27.11.1985
37. திருகோணமலைப் படுகொலைகள் - 1985
38. கிளிநொச்சி தொடருந்து நிலையப் படுகொலை - 25.01.1986
39. உடும்பன்குளம் படுகொலை - 19.02.1986
40. தங்கவேலாயுதபுரம் படுகொலைகள் - 19.02.1986
41. ஈட்டிமுறிஞ்சான் படுகொலை - 19,20.03.1986
42. பெரியபுல்லுமலைக் கிராமப் படுகொலை - 1986
43. உப்புவெளிப் படுகொலை - 02.06.1986
44. ஆனந்தபுரம் படுகொலை - 04.06.1986
45. கந்தளாய் படுகொலை - 04,05.06.1986
46. மண்டைதீவுக் கடலில் நிகழ்ந்த படுகொலை - 10.06.1986
47. சேருவிற் படுகொலை - 12.06.1986
48. தம்பலகாமம் படுகொலை - 20.06.1986
49. பரந்தன் விவசாயிகள் படுகொலை - 28.06.1986
50. பெருவெளி அகதிகள் முகாம் படுகொலை - 15.07.1986 திருகோணமலை
51. தண்டுவான் படுகொலை - 17.07.1986
52. மூதூர்-மணற்சேனைப் படுகொலை - 18.07.1986
53. அடம்பன் படுகொலை - 12.10.1986
54. பெரியபண்டிவிரிச்சான் படுகொலை - 15.10.1986
55. கொக்கட்டிச்சோலைப் படுகொலை - 28.01.1987
56. பட்டித்திடல் படுகொலை - 26.04.1987
57. தோணிதட்டாமடுப் படுகொலை - 27.05.1987
58. அல்வாய் வேவிலந்தை முத்துமாரியம்மன் ஆலயம் மீதான எறிகணை வீச்சு - 29.05.1987
59. கொக்குவில், பிரம்படி, பொற் பதி வீதிப் படுகொலை 1987. ஒக்ரோபர். 2ம் வாரம்
60. புதுக்காட்டுச் சந்திப்படுகொலை - 11.10.1987
61. யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை - 21,22.10.1987
62. அராலித்துறைப் படுகொலை - 22.10.1987
63. கொக்குவில் இந்துக்கல்லூரிப் படுகொலை - 24.10.1987
64. அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை - 26.10.1987
65. சாவகச்சேரி சந்தைப் படுகொலை - 27.10.1987
66. மூளாய் வைத்தியசாலைப் படுகொலை - 05.11.1987
67. நெடுங்கேணிச் சந்திப் படுகொலை 1- 1.11.1987
68. மட்டக்களப்பு பொதுச் சந்தைப் படுகொலை - 1987.12.27
69. காத்தார் சின்னக்குளப் படுகொலை - 17.01.1989
70. வல்வை மண்ணில் இந்தியப் படையின் படுகொலைகள் - 02,03,04.08.1989
71. கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலை - 23.05.1990
72. சம்மாந்துறைப் படுகொலை - 10.06.1990
73. சித்தாண்டிப் படுகொலை - 20,27.07.1990
74. வீரமுனைப் படுகொலை - 20.06.1990 - 15.08.1990
75. பரந்தன் சந்திப் படுகொலை - 24.07.1990
76. பொத்துவில் படுகொலை - 30.07.1990



77. திராய்க்கேணிப் படுகொலை - 06.08.1990
78. துறைநீலாவணைப் படுகொலை - 12.08.1990
79. ஏறாவூர் வைத்தியசாலைப் படுகொலை - 12.08.1990
80. கோராவெளி, ஈச்சையடித்தீவுப் படுகொலை 1- 4.08.1990
81. மட்டக்களப்பு - புதுக்குடியிருப்புப் படுகொலை - 21.09.1990
82. மண்டைதீவில் கைது செய்து காணாமற்போனவர்கள் - 25.08.1990 - 23.09.1990
83. மட்டக்களப்பு-சோனகன் வெட்டைப் படுகொலை - 26.08.1990
84. நெல்லியடிச் சந்தைப் படுகொலை - 29.08.1990
85. சத்துருக்கொண்டான் படுகொலை - 09.09.1990
86. ஒட்டுசுட்டான் படுகொலை - 27.11.1990
87. புதுக்குடியிருப்புச் சந்திப் படுகொலை - 30.01.1991
88. வந்தாறுமூலைப் படுகொலை - 08.06.1991
89. உருத்திரபுரம் கூழாவடிச்சந்திப் படுகொலை - 04.02.1992
90. வங்காலைப் படுகொலை 17.02.1991
91. வட்டக்கச்சி அரச நெற்பண்ணை மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சு - 28.02.1991
92. கொக்கட்டிச்சோலைப் படுகொலை - 12.06.1991
93. கிண்ணியடிப் படுகொலை - 12.07.1991
94. கரப்பொழை, முத்துக்கல் படுகொலை - 29.04.1992
95. வற்றாப்பளை படுகொலை - 18.05.1992
96. தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயப்படுகொலை - 30.05.1992
97. மைலந்தனை, புனானைப் படுகொலை - 09.08.1992
98. கிளாலிப் படுகொலைகள் - 02.01.1993 - 29.07.1993
99. மாத்தளன் படுகொலை - 18.09.1993
100. சாவகச்சேரி-சங்கத்தானை புக்காராக் குண்டுவீச்சு - 28.09.1993
101. கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயம் மீதான தாக்குதல் - 29.09.1993
102. யாழ்-குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீதான சுப்பசொனிக் விமானக் குண்டு வீச்சு - 13.11.1993
103. சுண்டிக்குளம் தொடுவை வாய்க்கால் மீனவர் படுகொலை - 18.02.1994
104. யாழ்.நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானக்குண்டுவீச்சு - 09.07.1995
105. யாழ் வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பாடசாலைப் படுகொலை - 1995.09.
106. கொழும்பு புறநகர்ப் படுகொலை

107. செம்மணிப் புதைகுழிகள் - 1996
108. குமரபுரம் படுகொலை - 11.02.1996
109. நாச்சிக்குடாப் படுகொலை - 16.03.1996
110. தம்பிராய் சந்தை கிபீர் குண்டுவீச்சுச் சம்பவம் - 17.05.1996
111. மல்லாவி படுகொலை - 24.07.1996
112. பன்னங்கண்டிப் படுகொலை - 27.07.1996
113. கைதடி கிருசாந்திப் படுகொலை - 07.09.1996
114. வவுனிக்குளம் படுகொலை - 26.09.1996 மற்றும் 15.08.1997
115. கோணாவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் - 27.09.1996
116. முள்ளிவாய்க்கால் படுகொலை - 13.05.1997
117. மாங்குளம் படுகொலை - 08.06.1997
118. அக்கராயன் அரசினர் வைத்தியசாலை மீதான எறிகணைத்தாக்குதல் - 15.07.1997
119. தம்பலகாமம் - பாரதிபுரம் படுகொலை - 01.02.1998
120. பழைய வட்டக்கச்சி கிபீர் விமானக் குண்டுவீச்சு - 26.03.1998
121. சுதந்திரபுரம் படுகொலை - 10.06.1998
122. விசுவமடுப் படுகொலை- 25.11.1998
123. சுண்டிக்குளம் நல்லதண்ணித் தொடுவாய் மீதான கிபீர் குண்டுவீச்சுத் தாக்குதல் - 02.12.1998
124. புதுக்குடியிருப்பு மந்துவில் படுகொலை - 15.09.1999
125. பாலிநகர் படுகொலை - 03.11.1999
126. மடுத்தேவாலயப் படுகொலை - 20.11.1999
127. மிருசுவில் படுகொலை - 19.12.2000
128. பேசாலை படுகொலை - 23.12. 2005
129. திருகோணமலை தமிழ் மாணவர் படுகொலை - 02 01. 2006
130. மானிப்பாய் படுகொலை - 14.01. 2006
131. தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்கள் கடத்தல் - 29 .01.2006
132. திருகோணமலை இனக்கலவரம் - 12.04. 2006
133. புத்தூர் படுகொலை - 18.04. 2006
134. திருகோணமலை மூதூர் படுகொலை - 25.04.2006
135. உதயன் பணிமனை படுகொலை - 02 .05.2006
136. நெல்லியடியி படுகொலை - 04.05.2006
137. மந்துவில் படுகொலை - 06.05.2006
138. அல்லைப்பிட்டி படுகொலை - 13.05. 2006
139. வடமுனை நெடுங்கல் படுகொலை - 07.06 2006
140. வங்காலை படுகொலை - 08.06.2006
141. கைதடி மனிதப் புதைகுழி - 06, 07, 08.06.2006
142. பேசாலைத் தேவாலயம் படுகொலை - 17.06. 2006
143. அக்சன்பெயம் தன்னார்வ நிறுவனம் படுகொலை - 05.08.2006
144. நெடுங்கேணி - சமளங்குளம் படுகொலை - 08.08.2006
145. கிழக்குப் படுகொலைகள் - 08 - 12. 2006
146. அல்லைப்பிட்டி செல்வீச்சு - 13.08. 2006
147. வள்ளிபுனம் செஞ்சோலை படுகொலை - 14.08. 2006
148. பொத்துவில் இரத்தன்குளம் படுகொலை - 17.09.2006
149. புதுக்குடியிருப்பு கைவேலி படுகொலை - 16.09.2006
150. கிளிநொச்சி மருத்துவமனை அருகாமை படுகொலை - 02.11. 2006
139. வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர் படுகொலை - 18.11.2006
140. படகுத்துறை படுகொலை - 02.01.2007
141. சிலாவத்துறை படுகொலை - 02.09.2007
142. பெரியமடு படுகொலை - 25.10. 2007
143. தருமபுரம் படுகொலை - 25.11.2007
144. ஐயன்குளம் படுகொலை - 27.11.2007
145. புலிகளின்குரல் வானொலி நிலையம் குண்டுவீச்சு - 27.11.2007
146. தட்சனாமடு படுகொலை - 29.01.2008
147. கிராஞ்சி படுகொலை - 22.02.2008
148. திருமுறிகண்டி கிளைமோர்த்தாக்குதல் - 23.05.2008
149. நாகதம்பிரானாலய அடியவர் கிளைமோர்த் தாக்குதல் - 02.06.2008
150. புதுக்குடியிருப்பு படுகொலை - 15.06.2008
151. புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் செல்விச்சு - 30.08.2008
152. குமரபுரம் குண்டுவீச்சு - 10.10.2008 .
153. உருத்திரபுரம் செல்வீச்சு - 24.10.2008
154. வள்ளிபுனம் குண்டுவீச்சு - 30.10.2008
155. உழவனூர் கொத்துக் குண்டு வீச்சு - 29.11. 2008
156. வட்டக்கச்சி குண்டுவீச்சுகள் - 1 - 20.12.2008
157. முரசுமோட்டை குண்டுவீச்சு - 31.12. 2008
159. 2009 இல் இடம்பெற்ற தமிழ் இன அழிப்பு
160. 2009 பின்னரும்...



# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே "மகாவம்சம்"

# மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது

## இதுவரை சிங்களத்திலும் பாளி பொழியிலும் மட்டுமே அரசால் வெளியிடப்பட்டுள்ள மகாவம்சம் தொகுதிகள்

**தொகுதி 1 – இலங்கையின் பண்டைய கி.பி. 301 வரை– மகாநாம தேரரால் எழுதப்பட்டது.**
**தொகுதி 2 – கி.பி. 301 முதல் கி.பி. 1815 வரையான ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாடடில் வரும் வரை.**
**தொகுதி 3 – 1815 முதல் 1936 வரை.**
**தொகுதி 4 – 1936 முதல் 1956 பண்டாரநாயக்க ஆட்சியேறும் வரை.**
**தொகுதி 5 – 1956 முதல் 1978 ஜே. ஆரின் இரண்டாவது குடியரசு ஆட்சி தொடங்கும் வரை.**
**தொகுதி 6 – 1978 முதல் 2010 தமிழீழ விடுதலைப் போராட்டம் முடிந்த மகிந்த மீண்டும் ஆட்சியேறும் வரை.**
**ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலப்பகுதி [1978 – 1989]**
**ஆர். பிரமதாச, டி.பி. விஜேதுங்க ஆட்சிக் காலப்பகுதி [1989 – 1994]**
**சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சி காலப்பகுதி [1994 – 2005]**
**மகிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலப்பகுதி [2005 – 2010]**




**முதல் கள்ளத்தோணி விஜயன்**




**ஈழத்தின் பூர்வீக குடிகள்தமிழர்கள்**



# பெப்.04.2025 [Feb.04.2025]

## தமிழீழத்தின் கரிநாள், சிறீலங்காவின் சுதந்திர நாள்

## SRI LANKA'S INDEPENDENCE DAY, A BLACK DAY FOR THAMILEELAM

சிறீலங்கா சிங்கள அரசின் இனப்படுகொலை மற்றும் அடக்குமுறையின் 77 ஆண்டுகளைக் குறிக்கும், ஈழத்தமிழர் தேசத்திற்கு இந்த நாள் ஒரு கருப்பு நாளாகும்.

The day was a black day for the Eelam Thamil Nation that marked 77 years of Genocide & Oppression at the hands of the Sri Lankan Sinhala State.



**தமிழீழ மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்பு படைகள் இருக்கும் வரை எமது தாய் நிலம் சுடுகாடு...**

இலங்கைத்தீவின்
வடக்கு, கிழக்கு பகுதி
தமிழர்களின் மரபு வழித் தாயகம்.
தமிழ் மக்கள் பூர்வகுடித் தேசிய இனம்.
தமிழ் மக்களுக்கு
சுயநிர்ணய உரிமை உண்டு.




JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# இலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் சங்ககால வேள்



கிமு இரண்டாம் நூற்றாண்டின் தமிழ் பிராமி எழுத்தில் மாங்குளம் கலவெட்டுகள், மதுரை மாவட்டம், தமிழ்நாடு

இலங்கையின் பண்பாட்டு வரலாற்றைத் தென்னிந்தியாவின் தென்பகுதியுடன் குறிப்பாகத் தமிழகத்துடன் தொடர்புபடுத்தி ஆராயும் போக்கு அண்மைக் காலங்களில் வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. இதற்குத் தமிழகத்தில் தோன்றி வளர்ந்த பண் பாட்டலைகள் சமகாலத்தில் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தியதே காரணமாகும். இதை இலங்கையின் தொடக்க காலப் பிராமிக் கல்வெட்டுகளிலும் காணமுடிகிறது. இலங்கை யில் இதுவரை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பிராமிக் கல் வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.மு 3 ஆம் நூற் றாண்டுக்கும் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட கால எழுத்து, மொழி, பண்பாடு என்பனவற்றை அறியப் பெரிதும் உதவுகின்றன. வரலாற்றாசிரியர்களில் பலர் இக்கல்வெட் டுகளில் வரும் வடபிராமி எழுத்து, வடமொழிச் சொற்கள் ஆகியன சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவில் இருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்தமைக்கு ஒரு சான்று எனக் காட்டியுள்ளனர். ஆனால், கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இவை பௌத்தமதத்துடன் அறிமுகமாவதற்கு முன்னரே, தமிழ கத்தில் இருந்து பரவிய எழுத்தும், மொழியும் இலங்கையில் புழக்கத்தில் இருந்ததற்கு இக்கல்வெட்டுக்களே சான்றாகும். இதில் தமிழ்மொழிக்கேயுரிய பட்டப்பெயர்கள், வம்சப் பெயர்கள், ஆட்பெயர்கள் உள்ளன. இப்பெயர்கள் சங்க இலக்கியத்திலும், தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளிலும் வரும் பெயர்களோடு பெருமளவு ஒற்றுமை உடையன. அவற்றுள் 'வேள்' என்ற பெயர் பற்றி ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்க மாகும்.

இலங்கைப் பிராமிக் கல்வெட்டு மொழி பற்றிய ஆய்வில் அறி ஞர்கள் கவனத்தை ஈர்த்த ஒரு சொல்லாக வேள் காணப் படுகிறது. 1880 இல் வடஇலங்கையில் பெரியபுளியங்குளக் கல்வெட்டில் இச்சொல்லை அவதானித்த எச். பாக்கர் இதை 'வேளா' என வாசித்து, இரண்டாவதாக வரும் தமிழுக்குரிய 'ஏ' இனை தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்ததற்குரிய சான்றாகக் காட் டினர் (Parkar 1909:43.6). இவரின் வாசிப்போடு உடன்படாத கோல்சிமித், முல்லர், எச்.சி. பெல் போன்றோர் இவ்வெழுத்தை அசோக பிராமிக்குரிய 'லு' எனக் கூறி இச்சொல்லை 'வேலு' என வாசித்தனர். இவர்களின் வாசிப்பே பொருத்தம் எனக் கூறும் எஸ். பரணவிதான கல்வெட்டுகளில் வரும் இச்சொல்லும், பாளி இலக்கியங்களில் வரும் 'வேளு' என்ற சொல்லும் ஒன்றெனக் கூறினார். ஆனால் இலங்கையில் 'ள' எழுத்துப் பயன்படுத்தும் இலக்கியங்களில் 'லு' இற்குப் பதிலாக 'ளு' பயன்படுத்தப்பட்டது தவறு என்றார் (Paranavitana 1970:XXV). இதற்குச் சான்றாக தொடக்க கால கட்வெட்டுகளில் உள்ள 'கட' (Kada), 'அடி' (Adi) போன்ற சொற்கள் கி. பி. 2 ஆம் நூற்றாண்டின் பின் 'அளி' (Ali), 'களி' (Kali) என மாற்றமடைந்ததைச் சான்று காட்டினார். ஆனால் தொடக்ககாலக் கல்வெட்டுகளில் இரு எழுத்துகளும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். இதனால் பரண விதானவால் 'வேலு' என வாசிக்கப்பட்டதை 'வேள்' அல்லது 'வேளா' என வாசிப்பதே பொருத்தமாகும். இலங்கையில் அசோக பிராமிக்கு முன் தென் பிராமி எழுத்து புழக்கத்தில் இருந்ததாகக் கருதும் எஸ். கருணாரத்தின கி. மு. 2 ஆம் நூற்றாண்டில் 'ள' என்ற எழுத்து பயன்பாட்டில் இருந்ததைச் சுட்டிக்காட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (Karunarathna 1984:32).

தமிழ் நாட்டில் 'வேள்' என்ற சொல் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் இருந்து மாங்குளம், மேட்டுப்பட்டி, கரூர், மறுகால்தலை ஆகிய இடங்களில் உள்ள பிராமிக் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட் டதைக் காணலாம் (Mahadevan 1966:61). இச்சொல் சங்க இலக்கியத்தில் 'வேள்', 'வேளிர்' எனப் பல இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளன. இதனால் இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் உள்ள 'வேள்' என்ற தமிழ்ச் சொல்லின் வரலாற்று முக்கியத் துவத்தைச் சங்ககாலப் பின்னணியில் நோக்குவதும் அவசிய மாகிறது.

தென்னிந்திய அரச தோற்றம் பற்றிய ஆய்வில் பிற குறுநில மன்னர்கள் பெறாத முக்கியத்துவத்தை வேளிர் பெறுகின்றனர். மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட குறுநில மன்னர்களுள் இவர்கள் அரசியலிலும், சமூகத்திலும் மிகுந்த செல்வாக்குடன் விளங் கியதைச் சங்க இலக்கியத்தில் வரும் இளங்கோவேள், மாவேள் எவ்வி, நெடுவேள் ஆவி, வேந்தரும் வேளிரும், இருபெரும் வேந்தரோடு வேளிர் போன்ற சொற்றொடர்கள் உணர்த்து கின்றன. வேளிர் என்பது வேள் என்பதன் பன்மை. சங்க இலக் கியத்தில் நன்னன்கங்கள், கட்டி, பரணன் போன்ற வேளிர்த் தலைவர்கள் பேசப்படுகின்றனர் (அகநானூறு செய்யுள் 44, 113, 325). ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வேள் தலைவனாக இருந்திருக்க வேண்டும். அவனின் கீழ் வாழ்ந்த குடிகள் இரத்த உறவினால் பிணைக்கப்பட்ட ஒரு குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கலாம். தமிழ் நாட்டிலுள்ள வேளாபுரம், வேள்கலி நாடு, வேள் நாடு, வேளூர் என்பன வேள் ஆட்சிக்குட்பட்டிருந்த நாடாக, ஊராக இருந்திருக்க வேண்டும். வேள் நாடு என்பது வேள் ஆட்சிக்குட்பட்ட நாடு என எ. சுப்பராயலு கூறியிருப்பது இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய அம்ச மாகும் (Subbarayalu. Chapter 1).

சங்க இலக்கியத்தில் வரும் தொன்முதிர் வேளிர் (புறம் 201: 11, 12), தொன்று முதிர் வேளிர் (புறம் 24: 21) பற்றிய சான்றுகள் தமிழகத்தின் மிகத் தொன்மையான இனக்குழுக்களில் ஒன் றாக வேளிரைக் கருத இடமளிக்கிறது. சிந்துவெளியில் இருந்து கி.மு 800 அளவில் தென்னகம் வந்து குடியேறியவர்களே வேளிர் என்பது என். சுப்பிரமணியத்தின் கருத்தாகும் (Subramaniam 1961 : 258). இவர்களின் வழி வந்தவர்களே பிற்கால வேளார் என எ.மு ஆரோக்கியசாமி கருதுகிறார். தக்காணத்தில் அறுநூறு ஆண்டுகள் சிறப்புற்று விளங்கிய சாளுக்கியரை வேளிர் என்று பிங்கலநிகண்டும், வேள்புல அரசர் எனத் திவாகரமும், வேள் குலச் சாளுக்கியர் எனச் சோழக் கல்வெட்டும் கூறுகின்றன. இதற்குத் தமிழ்நாட்டிற்குரிய வேளிர் தமிழகத்திற்கு வெளியேயும் பரவியதே காரணம் என கிருஷ்ணசாமி ஐயங்கார் விளக்கம் கூறுகிறார் (Aiyangar, 1941: 11). தமிழகத்தில் இருந்தே இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாடு பரவியதென்ற கருத்துடைய செண்பகலட்சுமி வேளி ரின் தோற்றத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்பு படுத்துகிறார். இப்பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்கள் தமிழ் நாட்டிற்குரிய சிறப்பம்சம் எனக்கூறும் இவர், வேளாண்மையுடன் தொடர்புடையவர்களே இப்பண் பாட்டை உருவாக்கியவர்கள் எனக் கூறி வேளிர் வாழ்ந்த இடங் களுக்கும், இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படும் இடங் களுக்கும் இடையிலான ஒற்றுமையைத் தொடர்புபடுத்தலாம் என்றார் (Champakalakshmi 1978 : 52). எஸ். செனிவிரட்ன வேளிர் வாழ்ந்த இடங்களுக்கும் பெருங்கற்கால ஈமத்தாழிகள் காணப்படும் இடங்களுக்கும் இடையிலான ஒற்றுமையைச் சுட் டிக் காட்டியுள்ளார் (Seneviratne 1993 : 70). கா. இராஜன் பெருங் கற்கால நடுகற்களுக்கும் வேளிர் தோற்றத்திற்கும் தொடர்பிருக் கலாம் என்பதற்குச் செங்கம், தருமபுரி நடுகற்களைச் சான் றாதாரம் காட்டுகிறார் (Rajan, 1996: 220).

சங்க இலக்கியத்தில் வேளிர் வேளாண்மையுடன் தொடர்புடை யவர்கள் எனக் கூறுவதற்குச் சான்றுகள் மிகக்குறைவு. மாறாகக் கால்நடை வளர்ப்பிலும் பெருமளவு போர் நடவடிக்கை யிலும் ஈடுபட்டதற்கே சான்றுகள் அதிகம். போர்க் காலங்களில் பங்கெடுத்த வேளிர் பற்றிச் சங்க இலக்கியம் கூறும்போது ஐம்பெரும் வேளிர், பதினொரு வேளிர் எனக் கூறுவதைக் காண்கிறோம் (அகநானூறு 36, 135). கரிகாற் சோழன் பதி னொரு வேளிர்களுடன் போரிட்டான் என அகநானூறு கூறும். எனவே பெருங்கற்காலப் பண்பாட்டில் வேளாண்மையில் ஈடு பட்ட மக்களை வேளிருடன் தொடர்புபடுத்துவது பெருமளவு பொருத்தமாகத் தெரியவில்லை. றோமிலாதபார் வேளாண்மை மக்களும், போர் மறவரும் இருபிரிவினராக இருப்பினும் ஒரு வரையொருவர் சார்ந்து வாழ்ந்தனர் என்றார். இதில் வேளாண் மையில் ஈடுபட்ட மக்களைப் பாதுகாக்கும் போர் மறவராக வேளிர் இருந்திருக்கலாம் (Thapar 1954:32).

'வேள்', 'வேளிர்' என்ற சொல் குலம் குறித்து வந்த பெயர்கள் அல்ல, ஒரு பட்டப் பெயர் என்ற கருத்துண்டு. சங்க இலக்கியத் தில் வேள் என்ற சொல் குறிப்பிட்ட ஒரு குலத்தைக் குறிக்காது ஆய், மலையமான், போசானியர் குலத்திலும் பயன்படுத்தப்பட் டுள்ளமை சான்றாகக் காட்டப்படுகிறது (பூங்குன்றன் 1989: 220). 'ஆநிரை கவர்தல்', மக்களிடையே ஏற்பட்ட போட்டி, பூசல் களிடையே தலைமை தாங்கி நடத்திய தலைவன் காலப்போக் கில் குலத்தலைவனாக நிலைபெற்றான். இதில் தெளிந்த சிந்தனையும், வலிமையும், வீரமும் உள்ள தலைவன் பெற்ற பெயர்களில் ஒன்றே வேள் எனக் கருதப்படுகிறது. ஆநிரை கவர்தல், ஆபிரிக்கக் கால்நடை வளர்ப்பாளரிடையேயும், வேத காலக் கால்நடை மேய்ப்பாளரிடையேயும் காணப்பட்ட பொது வான அம்சம் எனக்கூறும் றோமிலாதபார், வடமொழியில் ராஜ என்பவன் ஆகோள்பூசல் தலைவனாகக் கூறப்படுகின்றான் என்றார் (Thapar 1984: 24). மூலத் திராவிட மொழியில் 'வேள்' என்பதற்கு விருப்பம், தலைமை, ஒளிவிடு என்ற பொருள்கள் உண்டு. ஏறத்தாழ இதே கருத்தை வடமொழி ராஜாவும் கொண் டிருப்பதால் இரண்டும் தலைவன் என்ற கருத்தைக் கொண்டது எனக் கருதலாம். ஏறத்தாழ இதே கருத்தை வடமொழி ராஜாவும் கொண்டிருப்பதால் இனக்குழு வாழ்க்கையில் இருந்து அரசு உருவாகும் போது இடைக்கட்டமாக வேள் இருந்ததென்றார் ஆர். எல்மன் (Elman. 1975: 37). தொடக்க காலத்தில் சமூ கத்தை தலைமை தாங்கியவனை வேள் குறித்து நின்றாலும் காலப்போக்கில் வேள் வழி வந்தவர்கள் தம்மை வேள் குல மாகக் கருதியிருக்க இடமுண்டு. இதையே சங்க இலக்கியத்தில் வரும் வேள் குலம், வேள்குடி போன்ற சொற்கள் உணர்த்து கின்றன. இது முதலியார் பட்டம் பெற்ற ஒருவரின் வழி வந்த வர்கள் பிற்காலத்தில் தம்மை முதலியார் குலம் எனக் கூறிக்

கொள்வதற்கு ஒப்பானதாகும்.

இலங்கையில் வேள் என்ற சொல் 21 கல்வெட்டுகளில் காணப்படுகிறது. ஆ. வேலுப்பிள்ளை மேலும் 5 கல்வெட்டுகளில் இச்சொல் தவறாகச் சுலு (Sulu) என வாசிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார் (Veluppillai 1980:12). இச்சொல் வடமொழி ‘Vailva’ என்ற சொல்லின் அடியாகத் தோன்றியதெனக் கூறும் பரணவிதான இது தனிநபர் (Personal name) பெயரைச் சுட்டுகின்றதென்றார். இதையொரு திராவிடச் சொல் எனக் கூறும் செனிவிரட்ன இதற்குச் சார்பாகத் தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளிலும் சங்க இலக்கியத்திலும் வரும் பெயரைச் சான்றாகக் காட்டுகிறார் (Seneviratna 1985 : 59). எச்.டபிள்யு. எல்லாவலா, தமிழில் ‘வேல்’ என்பது முருகனோடு தொடர்புடையதால் கல்வெட்டுகளில் வரும் ‘வேலு’, ‘வேலுஸ’ போன்ற பெயர்கள் முருகனைக் குறிப்பதாகவும், இவை சிங்கள மக்கள் சைவ மதத்தைப் பின்பற்றியதற்குச் சான்று எனவும் கூறுகிறார். சங்க கால ‘வேள்’, ‘வேளி’ரும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் வேளும் ஒன்றெனக் கூறும் சி.க. சிற்றம்பலம் இது வேள் குலத்தைக் குறிப்பதாகவும், இதன் அடியொற்றித் தோன்றியதே பிற்கால வேளாளர் எனவும் விளக்கம் கொடுத்துள்ளார் (சிற்றம்பலம் 1993 : 546). சங்க காலத்தில் புழக்கத்தில் இருந்த ‘வேள்’ என்ற தமிழ்ச் சொல்லே சமகாலத்தில் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது எனக் கூறலாம். ஆனால் தமிழ் நாட்டில் முதலில் தலைவனைக் குறித்த ‘வேள்’ என்ற சொல் வேள்குலம், வேள்குடி என அழைக்கப்பட்டதற்குச் சான்றுகள் இருப்பதுபோல இலங்கையில் இதுவரை கிடைக்கவில்லை. குலம், குடி போன்ற சொற்கள் கல்வெட்டுகளில் காணப்பட்டாலும் அவை ‘வேள்’ என்ற சொல்லுடன் இணைந்து வந்ததற்குச் சான்றில்லை. கி.மு 1 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டுகளில் வரும் இச்சொல் பிற்பட்ட கல்வெட்டுகளில் படிப்படையாக மறைந்து போகிறது. இதனால் ‘வேள்’ என்ற சொல்லுக்கும் பிற்பட்ட கால வேளாளருக்கும் இடையிலான தொடர்பை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

சங்க இலக்கியத்தில் குறுநில மன்னர் பெயரின் பின்னொட்டுச் சொல்லாக வரும் இச்சொல் சில குறுநில மன்னர் பெயரில் முன்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டதற்கு வேள் எவ்வி, வேள் பேகன், வேள் ஆய், வேள் பாரி, நெடு வேள், ஆதன் போன்ற மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம் (புறம் 24 : 18, அகம் 61: 15, புறம் 105 : 815 : 12). இச்சொல் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் பெரும்பாலும் பின்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டொன்றில் ‘சுமண’ என்ற பெயரின் முன்னொட்டுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (Paranavitana, 1970 : 647). இவ்விரு சொற்களும் (வேள், சுமண) தனியாகவும் இணைந்தும் கல்வெட்டுகளில் வருவதுபோல் மகாவம்சம், மனோரதபுரானி (Manorathapurani), சபஸ்ஸவன்டு (Sabassavanhu), ராஜவாகினி (Rajavahini) முதலான பாளி நூல்களிலும் வருகின்றன (Ellawala 1969 : 61, 112, 115). மன்னர்களினதும், அரச தலைவர்களினதும் வரலாற்றை முதன்மைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்களில் வேளுசுமண படைத் தளபதியாக, வணிகத் தலைவனாக, அரச வருவாய் பெறும் அதிகாரியாக, மன்னனாக வரக்கூடிய தலைவனாகக் கூறப்படுகின்றான். இதனால் சுமண என்ற பெயரில் முன்னொட்டுச் சொல்லாக வரும் வேள் என்ற சொல் ஒரு பட்டப் பெயராகப் பயன்படுத்தப்பட்டதெனக் கருத இடமுண்டு.

மகாவம்சம், கிரி மாவட்டத்தைச் சேர்ந்த வேளுசுமண சிறந்த குதிரை ஓட்டியெனக் கூறுகிறது. ராஜாவாகினி என்ற நூல் வெளிநாட்டில் இருந்து குதிரைகளை இறக்குமதி செய்பவனாக வேளுசுமணவைக் குறிப்பிடுகிறது (Ellawala 1969: 61, 115). பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட போட்டி இரு குழுக்களிடையே தலைவர்கள் தோன்றவும், அவை அரசு உருவாகவும் காரணமாக இருந்தன. இலங்கையின் தொடக்ககாலப் பொருளாதார நடவடிக்கையில் வெளிநாட்டு வர்த்தகமும் முக்கியப் பங்கு வகித்தது. இலங்கையின் தொடக்க கால நகரமயமாக்கத்திற்குத் தென்னிந்தியா ஊடான மேற்காசிய வர்த்தகமே காரணம் எனக் கூறப்படுகிறது. இவ்வர்த்தகத்தில் முத்து ஏற்றுமதிப் பொருளாகவும், குதிரை முக்கிய இறக்குமதிப் பொருளாகவும் திகழ்ந்தன. அநுராதபுரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் ‘பதவேள்’ என்ற சொல் காணப்படுகிறது (Paranavitana 1970: 121). இது பரதவ குலத்துக்குரிய வேள் என எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பரதவ குலம் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டதற்குத் தெளிவான சான்று உண்டு. இக்கல்வெட்டு இக்குலத்துக்குரிய வர்த்தகத் தலைவன் ‘வேள்’ என அழைக்கப்பட்டதை உறுதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம்.

சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் ஆகியோர் போர் மறவர்களாகப் பல இடங்களில் வருணிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் கேகாலை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் ‘கொடய வேள்’ என்ற சொல் காணப்படுகிறது. கொடய என்பதைக் கோட்டை என மொழிபெயர்த்த பரணவிதான இச்சொல்லின் மூலம் வடமொழி ‘கொஸ்டிகா’ எனக் கூறிக் ‘கொடயவேள்’ என்ற சொல்லுக்குக் கோட்டையின் படைத் தளபதி வேலு என விளக்கம் கொடுத்துள்ளார் (Paranavitana 1970 : 778). ‘வேலு’ என்பதைத் தமிழ்ச் சொல்லான ‘வேள்’ எனக் கூறும் வேலுப்பிள்ளை ‘கொடய’ என்ற பிராகிருதச் சொல், தமிழில் ‘கோட்டை’ என விளக்கம் கொடுக்கிறார் (Veluppillai 1981:13). எல்லாளன் – துட்டகாமினி போராட்டத்தில் துட்டகாமினி படையில் இருந்த தளபதியாக ‘வேளுசுமணஹ குறிப்பிடப்படுகிறான். இவ்வாறான தளபதிகள், தலைவர்கள் எல்லாளன் படையிலும் இருந்ததாகத் தெரிகிறது. துட்டகாமினி எல்லாளனை வெற்றிகொள்ளுமுன் அவனுக்குச் சார்பான 32 தமிழ்ச் சிற்றரசுகளை (தலைவர்களை) வெற்றிகொள்ள நேரிட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இச்சிற்றரசுகளில் ‘வேள்’ சிற்றரசும் இருந்திருக்க இடமுண்டு. ராஜவாகினி என்ற நூல் ‘வேளுசுமண’ என்ற ஒற்றன் காக்க வண்ணதிஸனைச் சிறைப்பிடித்து அடிமையாக்குவதாக எல்லாள மன்னனிடம் உறுதி கூறியதாகக் கூறுகிறது (Ellawala 1969 : 61). இங்கே வேள், வேளுசுமண என்ற பெயர்கள் படைத்தளபதியாகக் கூறப்படுவது சங்க இலக்கியத்தில் வேள், வேளிர் போர் மறவர்களாக வருணிக்கப்படுவதை அப்படியே நினைவுபடுத்துகின்றன.

எனவே மேற்கூறப்பட்டவற்றில் இருந்து இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் ‘வேள்’ என்ற சொல்லைத் தனி நபர் பெயராகவோ, இனக்கு குழு சார்ந்த பெயராகவோ கொள்வதிலும் பார்க்க ஒரு பட்டப் பெயராகக் கருதுவதற்கே சான்றுகள் சார்பாக உள்ளன. கல்வெட்டுகளில் ‘சுமண’ என்ற பெயரின் முன்னொட்டுச் சொல்லாகக் கமணி, பருமக, கபதி போன்ற பட்டப் பெயர்கள் வருவது போல், வேள் என்பதையும் ஒரு பட்டப் பெயராகக் கருதலாம். அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டில் ‘பருமக வேள் சுமணனின் மகன் பருமக வேள்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (Paranavitana 1970 : 647). இங்கே வேள் என்பது வம்சப் பெயராகப் பயன்படுத்தப்பட்டதெனக் கருத இடமளிக்கிறது. இதை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

தமிழ் நாட்டில் ஆநிரை கவர்தல் அல்லது பொருளாதார உற்பத்தியில் ஏற்பட்ட போட்டி, இனக் குழுக்களிடையே ‘வேள்’ தோன்றக் காரணமாகும். தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்ட இச்சொல் சமகாலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்டமைக்கு முதலில் வெளிநாட்டு வர்த்தகம் காரணமாக இருக்கலாம். இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான நெருக்கமான வர்த்தகத் தொடர்புக்கான சான்றுகளை பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தெளிவாகக் காணமுடிகிறது. இவ்வர்த்தகத்தைத் தலைமையேற்று நடத்திய தலைவர்கள் தமிழ்நாட்டுத் தொடர்பால் ‘வேள்’ என்ற பட்டப்பெயரைப் பெற்றிருக்கலாம். தமிழ் நாட்டில் புகளூர்க் கல்வெட்டில் ‘ஆதன்’ என்ற வணிகன் பெயரின் முன்னொட்டுச் சொல்லாக ‘வேள்’ குறிப்பிடப்பட்டுள்ளது (வேங்கடசாமி 1983:58 - 59). இப்பெயர்கள் குலம், கடவுளைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதைப் பட்டமாகக் கருதவும் இடமுண்டு. காலப்போக்கில் இப்பெயர் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர்களையும், குறுநில மன்னர்களையும், படைத் தளபதிகளையும் அரசு அதிகாரிகளையும் குறித்திருக்க இடமுண்டு. மகாவம்சம் தமிழ்நாட்டிலிருந்து குதிரைகளைக் கொண்டு வந்த வணிகத் தலைவனின் பிள்ளைகளான சேனன், குத்திகன் என்ற தமிழர்களே இலங்கையில் ஆட்சி புரிந்த முதல் தமிழ் மன்னர்கள் எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நன்றி: போராசிரியர் பரமு புஷ்பரட்ணம்

## ஒருங்குறியில் பிராமி எழுத்துக்களின் முன் தோற்றம்




விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு

437.345.4203



# ஈகையர் திருமலை நடராசன்

**04.02.1957 அன்று**
**தமிழீழம் – திருகோணமலையின் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறீலங்கா சிங்கக்கொடியை சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கையை மீறி சிங்கக் கொடியை அறுத்து வீழ்திய போது சிங்கள பௌத்த இனவாத இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவு**

## 68ஆம் ஆண்டு

# வீரவணக்கம்







நிலையுடன் பெயர்: தியாகி திருமலை நடராசன்
நிலையான பெயர்: திருமலை நடராசன்
வீரப்பிறப்பு:
நிலையான முகவரி: திருகோணமலை
நிகழ்வு: 04.02.1957 அன்று திருமலையின் மணிக்கூட்டு கோபுரத்தில் ஏற்றப்பட்டிருந்த சிறீலங்கா சிங்கக்கொடியை சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கையை மீறி சிங்கக் கொடியை அறுத்து வீழ்திய போது சிங்கள பௌத்த இனவாத இராணுவத்தால் சுடப்பட்டு வீரச்சாவு



# அவசரகால சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்ட தமிழர்கள்!

**"இந்த அவசரகாலச் சட்டத்தின் மூலம் நாம் பிரிய வேண்டிய சந்தியை வந்தடைந்திருக்கிறோமோ?"**






கிட்டத்தட்ட 77 ஆண்டுகளுக்கு இப்படி முன்னர் சொன்னவர் தாசி வித்தாச்சி. 58' கலவரத்தைப் பற்றி அவர் எழுதிய "அவசர காலம் 58" (Emergency 58) என்கிற நூலிலேயே அவர் அப்படி குறிப்பிட்டார். இலங்கையில் இராணுவச் சட்டம் ஆங்கிலேயர் காலத்தில் இருந்து அவசர நிலைமைகளின் போது போடப்பட்டிருகிறது. அதுபோல அவ்வப்போது நிகழும் கலவரங்களின் போது ஊரடங்குச் சட்டம் கூட ஓரிரு நாட்கள் பிறப்பிக்கப்பட்டு நீக்கப்பட்டிருக்கிறது. வடக்கில் பல காலம் தமிழ் மக்கள் ஊரடங்குச் சட்டம் குறிப்பிட்ட நேரத்துக்கு தினசரி நீண்டகாலமாக அனுபவித்து வந்த கொடுமையும் கூட நிகழ்ந்தது.

சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை நசுக்கவும், ஒடுக்குமுறையை பிரயோகிக்கவும் கூட அவசரகால சட்டத்தை ஒரு சம்பிரதாயமாகவே நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். இந்த அவசரகால சட்டங்கள் அப்பாவி மக்களை பாதுகாப்பதற்குப் பதிலாக பல சந்தர்ப்பங்களில் அந்த அட்டூழியங்களில் ஈடுபட்ட படையினரையும், காடையினரையுமே பாதுகாத்திருக்கிறது என்பது பல தடவைகள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அவசரகால சட்டமானது அரச பயங்கரவாதத்துக்கு கட்டற்ற சுதந்திரத்தை வழங்கி அவர்களின் மனித உரிமை மீறல்களுக்கு லைசன்சை வழங்கியது.

வரலாற்றில் 77 ஜே.ஆர்.அரசாங்கம் பதவியேற்ற காலத்திலிருந்து தான் 1978இல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடுப்புச் சட்டமும் (PTA), அவசரகால சட்டமும் (Emergency Regulation) மிகக் கொடூரமாக தமிழ் மக்களை ஒடுக்கப் பயன்படுத்தப்பட்டது. மேலும் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக எதிர்க்கட்சிகளால் "எங்களை ஆட்சியிலேற்றினால் அவசரகால சட்டத்தை நீக்குவோம்" என்கிற வாசகம் ஒரு சடங்காகவே விஞ்ஞாபனங்களில் இடம்பெற்றதையும் நாம் அறிவோம்.

## குட்டிமணியின் தீர்க்கதரிசனம்

83இல் வெலிக்கடை சிறையில் கொல்லப்பட்ட குட்டிமணியும், தங்கத்துரையும் கைது செய்யப்பட்டிருந்தபோது குட்டிமணி நீதிமன்றத்தில் இந்த சட்டம் பற்றி ஆற்றிய உரை பிரசித்தமானது.

"நாங்கள் இனவாதிகள் அல்லர். சிங்களவர்களின் உரிமைகளைப் பறிக்க வந்தவர்களும் அல்லர். நாங்கள் எங்கள் போராட்டத்தில் சிங்கள மக்களின் கருத்தில் கொண்டுள்ளோம். அது போல எங்கள் போராட்டத்தில் சிங்கள மக்களின் ஆதரவையும் நாடி நிற்கிறோம். அடுத்தவரின் விடுதலையில் அக்கறை கொள்ளாதவர் தனது விடுதலையையும் சேர்த்து குழிதோண்டி புதைக்கிறார். இன்று எங்களுக்கு ஏற்பட்டுள்ள கதி இன்னொருதினம் இலங்கையிலுள்ள ஏனையோருக்கும் ஏற்படக்கூடும். அன்றைய தினம் ஆனையிறவு வதைமுகாம் ஹம்பந்தோட்டைக்கு மாற்றப்படும். குரநகர் வதை முகாம் குருநாகலுக்கு கொண்டுசெல்லப்படும். இன்றைய தமிழ் இளைஞர்களுக்கு பதிலாக சிங்கள இளைஞர்கள் அதனை அனுபவிப்பார்கள்..." 1982 - நீதிமன்றத்தில் குட்டிமணி சிறையில் கொல்லப்படும் முன் இறுதி வேண்டுகோள்



இந்த அடக்குமுறை சட்டங்களை எதிர்த்து நிற்கும் சிங்கள ஜனநாயக சக்திகள் குட்டிமணியின் இந்த வாசகத்தை பல தடவைகள் நினைவு கூர்ந்திருக்கிறார்கள்.

வடக்கில் ஆயுதப் போராட்டத்தை நசுக்குவதற்காகவே அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக பல தடவைகள் கூறப்பட்ட போதும் மாறாக அந்த சட்டம் வடக்குக்கு வெளியில் அரசாங்கத்துக்கு எதிரான ஜனநாயக ரீதியில் நீதி கோரும் சாத்வீக போராட்டங்களைக் கூட அடக்க பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. தொழிற்சங்கப் போராட்டங்கள், கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான போராட்டங்கள், வேறு பல வேலைநிறுத்தப் போராட்டங்கள் என்பவற்றையும் கூட இந்த சட்டத்தின் மூலம் மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டிருக்கின்றன.

## அவசரகால சட்டத்துக்கு வயது 83

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் வெளியிட்ட முதல் வெளியீடான "அவசரகாலம் 79" (Emergency 79) என்கிற நூல் ஜே.ஆர்.அரசாங்கத்தின் இந்த இரு சட்டங்களையும் தோலுரிக்கும் நூல். இந்த சட்டங்களின் பெயரால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த மனித உரிமை மீறல் சம்பவங்களை தொகுத்தளித்தது அந்த நூல். அந்த இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக பலமாக குரல்கொடுத்து வந்த பிரபல இடதுசாரித் தலைவருமான உப்பாலி குரே நூலின் ஆசிரியர்களின் ஒருவர். அவருடன் பாதர் போல் கெஸ்பஸ் மற்றும் பி.ராஜநாயகம் ஆகியோர் அதனை எழுதி முடித்தனர்.

இலங்கையில் முதற் தடவையாக 1942 மார்ச் மாதம் 19அன்று அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. சுதந்திரமடைவதற்கு முன்னமே அன்றைய காலனித்துவ அரசாங்கத்தின் ஆளுனரால் பிறப்பிக்கப்பட்டது இது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பான் இலங்கையைச் சுற்றிவளைக்க முயன்று கொண்டிருந்த காரணத்தைக் காட்டி கட்டாய இராணுவச் சேவைக்காகவே இந்த அவசரகால சட்ட நிலை அன்று பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஏப்ரல் 4ம் திகதி கொழும்பிலும் ஏப்ரல் 9ம் திகதி திருக்கோணமலையிலும் ஜப்பான் குண்டுத் தாக்குதலை நடத்தியதை தொடர்ந்து இக்கட்டாய இராணுவச் சேவை அதிகம் வலியுறுத்தப்பட்டது.அதன் பின்னர் 1947 யூன் மாதம் நடந்த தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதனை தொடர்ந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாகவும் அன்றைய சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கபட்டது.

இவ் அவசரகால சட்டத்தை பயன்படுத்தி தொழிலாளர்களின் போராட்டத்தை அரசாங்கம் நசுக்கிய போது கந்தசாமி எனும் தொழிலாளி கொல்லப்பட்டார். இந்த 1947 ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 25ம் இலக்க பொது மக்கள் பாதுகாப்புச் சட்டமே பிற்காலத்தில் 1972ம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் அமைப்பிலும். 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசு அமைப்பிலும் சேர்க்கப்பட்டது. இதனை பயன்படுத்தியே 1953ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடந்த ஹர்த்தால் போராட்டமும் அடக்கப்பட்டது. இவ் ஹர்த்தாலின் போது எட்டு நாட்கள் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் வைத்திருந்தது. ஹர்த்தாலில் 9 பேர் கொல்லப்பட்டனர். பலர் சிறையிடப்பட்டனர். பலர் படுகாயமுற்றனர். இத்தனையும் டட்லி அரசாங்கத்தின் போது கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடந்தன.
டட்லி சேனநாயக்க ஆட்சி செய்த 1825 நாட்களில் 1086 நாட்கள் அவசரகால சாட்டத்தின் கீழ் தான் ஆட்சி செய்யப்பட்டது.

## 58 "அவசரகால" படுகொலைகள்

பண்டாரநாயக்காவின் ஆட்சியின் கீழ், 1958ம் ஆண்டு மே மாதம் இனக்கலவரம் நடந்தது. இவ் இனக்கலவரத்தின் போது நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பத்தாயிரத்துக்கும் மேட்பட்ட தமிழர்கள் கொழும்பில் அகதிகளாக்கப்பட்டனர். பல தமிழர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இவ் இனக் கலவரத்திற்கு அரசாங்கம் தூண்டுகோலாக இருந்தது. ஆனால் இனக் கலவரத்துக்கு காரணமாக கூறி ஜாதிக விமுக்தி பெரமுனவோடு தமிழரசுக் கட்சியையும் தடை செய்தது.

இனக் கலவரம் 27ம் திகதியே தொடங்கி விட்டிருந்த போதும் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகிய மூன்றாவது நாளே அதாவது 29ம் திகதியே அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அதாவது அவசரகால சட்டம் அவசியமான நேரத்தில் போடப்படவில்லை.


வடக்கு, கிழக்கு, தெற்கிலும் இதை அனுபவிக்காதவர்கள் யாருள்ளார்

1958 மே 27ம் திகதிபோடப்பட்டஅவசரகாலச் சட்டம் 1959 மார்ச் 13வரை அமுலிலிருந்தது. அதன் பின்னர் பண்டாரநாயக்க செப்டெம்பர் 25ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அன்றிலிருந்து டிசெம்பர் 2ம் திகதிவரை அவசரகால நிலை அமுலில் இருந்தது. மீண்டும் 1961 ஏப்ரல் 14ம் திகதி

# ‘அவசரகால சட்டத்தின்’ கீழ் 69 வருடங்கள் ஆட்சி செய்தவர்கள். இன்றும் தொடர்கின்றது…



D S Senanayake
**1947 - 52**

Dudley Senanayake
**1952 - 53**
**1960 March - July**
**1965 - 70**

John Kotalawela
**1953 - 56**

S W R D Bandaranaike
**1956 - 59**

W Dahanayake
**1959 - 60**

Sirimavo Bandaranaike
**1960 - 65**
**1970 - 72**
**1972 - 77**
**1994 - 00**



J R Jayewardene
**1977 - 78**

Ranasinghe Premadasa
**1978 - 89**

D B Wijetunge
**1989 - 93**

Ranil Wickremesinghe
**1993 - 94**
**2001 - 04**

Chandrika Kumaratunga
**1994 August - November**

Ratnasiri Wickremanayake
**2000 - 01**
**2005 -**

Mahinda Rajapaksa
**2004 -2015**

யாழ்ப்பாணத்தில் தமிழரசு தபால் சேவையை நடாத்தியதைத் தொடர்ந்து ஏப்ரல் 17ம் திகதி அவசரகால நிலை பிரகடனப்படுத் தப்பட்டது. தமிழரசுக் கட்சியும் அன்றே தடை செய்யப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். வட-கிழக்குப் பகுதி இராணுவ ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 48 மணி நேர ஊரடங்கும் பிறப்பிக்கப்பட்டது. இவ் அவசரகால சட்டம் 1963 மே தினத் தன்று வரை அமுலில் இருந்தது.

டல்லி-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து நாடளாவிய ரிதியில் கொண்டு செல்லப்பட்ட பிரச்சாரங்கள், ஊர்வலங்கள் காரண மாக 1966 ஜனவரி 8ம் திகதி அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட் டதுடன் அது டிசம்பர் 17 வரை அமுலில் இருந்தது. அது நீடிக் கப்பட்டு 11 நாட்களுக்குள் மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப் பட்டு அது 1969ம் ஆண்டு 17ம் திகதி வரை அமுலில் இருந்தது. இக்கால இடைவெளிக்குள் வடக்கு கிழக்குப் பகுதியிலும் மலை யகத்திலும் நடந்த தமிழர்களின் போராட்டங்கள் மோசகரமாக அடக்கப்பட அவசரகாலச் சட்டமே துணை புரிந்தது.

## சிறிமா ஆட்சி முழுதும்…

1971ம் ஆண்டு ஜே.வி.பி எழுச்சி அடைந்ததைத் தொடர்ந்து பீதியுற்ற அரசாங்கம், மார்ச் மாதம் 16ம் திகதி அவசரகாலச் சட டத்தை அமுல்படுத்தியது. இதன் கீழ் அனுமதியின்றி பிணங்களை எரிக்கும் சட்டத்தையும் கொண்டு வந்தது. ஏப்ரல் மாதம் 5ம் திகதி அடக்கப்பட்ட இளைஞர்களால் மேற்கொள்ளப் பட்ட கிளர்ச்சியை 20,000க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்து அடக்கியது. அதே அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத் தியே பல ஆயிரக்கணக்கானோரை சித்திரவதை முகாம்களுக் கும் சிறைக் கூடங்களுக்கும் அனுப்பியது அன்றைய சிறிமாவோ அரசாங்கம். 72 அரசியலமைப்பு ஆட்சிசெய்த அந்த 5 ஆண்டுகால ஆட்சியும் அவசரகால சட்டத்தின் கீழ் தான் நடந் தது. அந்த யாப்பு சிறுபான்மை இனங்களின் பாதுகாப்புக்காக என்று கண்துடைப்புக்கு சேர்த்திருந்த “அடிப்படை உரிமைகள்” பிரிவு அவசரகால சட்டத்தின் மூலம் செல்லுபடியற்றதாக ஆக்கப் பட்டிருந்ததால் அந்த காலம் முழுவதும் அடக்குமுறைக்குள் ளான தமிழர்கள் நீதி பெற முடியவில்லை. 1976 ட்ரயல் அட் பார் வழக்கின் தீர்ப்பின் இறுதியில் அவசரகாலசட்டமும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட சட்டங்களும் செல்லுபடியற்றவை என்று தீர்ப்பு வழங்கியதையும் இந்த இடத்தில் நினைவுகூர வேண்டும்.

சிறிமா அரசாங்கம் 1974ஆம் ஆண்டு “தவச” நிறுவனத்தின் “சன்”, “தினபதி’, “தவச”, உட்பட பல தினசரி, வார, மாதாந்த நாளிதழ்களை அவசரகால சட்டத்தின் கீழ் தடை செய்தது.

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் 72 அரசியலமைப்பை எதிர்த்து காங்கேசன்துறை தொகுதியில் தனது பாராளுமன்ற உறுப் பினர் பதவியை இராஜினாமா செய்த வேளை உரிய நேரத்தில் தேர்தலை நடத்தாமல் 1975ஆம் ஆண்டு வரை இழுத்தடிக்க


ரயரில் எரியூட்டப்பட்டு சாம்பலாகிப் போனவர்கள்

அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தியது.

1979ம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதி வரை இவ் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. இக் கால இடைவெளிக்குள் வடக்கில் நடத்தப்பட்ட போராட்டங்களை நசுக்குவதற்கும் இச் சட்டம் பயன் படுத்தப்பட்டது. 1977ம் ஆண்டு ஜே.ஆர் தலைமையிலான ஐ.தே.க அரசாங்கம் ஆட்சியமைத்தது. 1994 வரையான 17 ஆண்டு கால ஆட்சிக்குள் 11 வருடங்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சி நடத்தியது. வடக்கில் எழுந்த உரிமைப் போராட் டத்தை பயங்கரவாதக் கிளர்ச்சியாகவே பார்த்த ஜே.ஆர் அர சாங்கம் 1979 யூன் 11ம் திகதி அவசரகால நிலையை பிரகடனப் படுத்தியது. இவ் அவசரகாலச் சட்டத்தை அமுலில் வைத்துக் கொண்டே யூலை 12ம் திகதி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றியது. 1979 டிசம்பர் 27ம் திகதி வரை அவ் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது.

## தமிழரை ஒடுக்க மட்டுமா?

1980ஆம் ஆண்டு யூலையில் சம்பள உயர்வு கோரி ஈடுபட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தை நசுக்குவதற்காக யூலை 16ம் திகதி போடப்பட்ட அவசரகாலநிலை ஒகஸ்ட் 15 வரை நீடித்தது. இதற்கான பிரகடனம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதி பதியின் மூலமே வெளியிடப்பட்டது. இதன் இன்னொரு முக்கிய அம்சம் இதே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40,000க்கும் மேற்பட்ட தொழிலாளர் களில் பெரும்பாலானோரை வேலையிலிருந்து நீக்கியது. இத் தொழிலாளர்களில் சிலர் பிற்காலத்தில் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்தனர். (ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் வேலையை இழந்த இத் தொழிலாளர்களுக்கு வேலை பெற்றுத் தருவதாகவும் தேர்தல் காலத்தில் வாக்களித்திருந்த பொ.ஐ.மு ஆட்சிக்கமர்ந்ததன் பின்னர் ஏமாற்றியது.


ரயரில் எரியூட்டப்பட்டு சாம்பலாகிப் போனவர்கள்

இதே காலப்பகுதியில் வேலை நிறுத்த போராட்டங்களில் ஈடு பட்ட தொழிலாளர்களை அடக்குவதற்காக பிரதி பாதுகாப்பு

அமைச்சர் லலித் அத்துலத் முதலி இந்த அவசர காலசட்டத்தைப் பயன்படுத்தினார். அதே லலித் அத்துலத் முதலி பிரேமதாச ஆட்சியின் போது கட்சியிலிருந்து விலகி புது கட்சி தொடங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டபோது அதே அவசர காலசட்டத்தின் மூலம் நைய புடைக்கப்பட்டார்.

அடுத்ததாக 1981ம் ஆண்டு யூன் 2ம் திகதி கொண்டு வரப்பட்ட அவசரகால நிலை ஒரு கிழமைக்கு நீடித்தது. 1981 மே 24ம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்துக்கான மாவட்ட சபைத் தேர்தல் வேட்பாளரான ஐ.தே.க.வைச் சேர்ந்த ஏ.தியாகராஜா இனந் தெரியாத நபர்களால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. மீண்டும் அவசரநிலை 1981 ஒகஸ்ட் 17ல் போடப்பட்டு 1982 ஜனவரி 16ம் திகதி வரை அமு லில் இருந்தது. அதேவேளை 1982ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டம் நிரந்தர சமாக்கப்பட்டது.

## 83இல் இனப்படுகொலையில்



வரலாற்றில் முக்கியமான அவசரகால நிலையாக 1983 மே 18ம் திகதி போடப்பட்டதையே குறிப்பிட வேண்டும். 83 இனப் படுகொலை கூட இதன் கீழ் தான் நடத்தப்பட்டது. “சாதாரண சட்டத்தின் மூலம் அடக்க முடியாத சட்டத்தை இந்த சட்டத்தின் மூலம் தான் அடக்கமுடியும்” என்று கூறிய சிறில் மெதிவ் “அவர்களை விசர் நாய்களைப் போல கொல்லவேண்டும்” என்கிற தொணியில் கர்ஜித்தார்.

இனக் கலவரத்தை திட்டமிட்டு தாமே முன்னின்று நடாத்திய ஜே.ஆர் அரசாங்கம் கலவரத்திற்கு பொறுப்பாளிகள் என்று கூறி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, நவ சமசமாஜக் கட்சி ஆகியவற்றைத் தடை செய்ததுடன் அவற் றின் பத்திரிகைகளையும் கூடவே தடை செய்தது.

அந்த அநீதியான தடையினால் இளைஞர்கள் பலர் தலை மறைவு அரசியலுக்கும் தீவிர அரசியலுக்கும் விரைவாகவே தள்ளப்பட்டார்கள். அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆட் சியிலிருந்த ஐ.தே.கவினரும் படையினரும் சேர்ந்து நடாத்திய இனப்படுகொலைகள் சாதாரணமானவையல்ல. ஆயிரக்கணக் கான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். சொத்துக்கள் அழிக் கப்பட்டன. பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் எத்தனையோ நடந்தேறின. வெலிக்கடைப் படுகொலைகள் நடைபெற்றது. பலர் அகதிகளாயினர். இச்சம்பவம் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை பெருமளவு ஊக்குவித்தது. 1983 மே 18ம் திகதி நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டத்திற்கு அமைச்சர் தொண் டமானும் ஆதரவாக வாக்களித்திருந்தார். மலையக மக்களை ஒடுக்குவதற்கு அவரது ஆதரவு பயன்பட்டது. 77க்குப் பின் அத்தனை தடவையும் தொண்டமான் அவசரகால சட்டத்தை ஆதரித்தே வந்தார்.

அன்றைய அந்த அவசரகாலச் சட்டம் 1989 ஆம் ஆண்டு ஜன வரி 11 வரை அமுலில் இருந்தது. அந்த இடைக் காலத்திற்குள் எவ்வளவோ நடந்து முடிந்திருந்தன. குறிப்பாகத் தென்னிலங் கையில் பல தொழிலாளர்கள் மாணவர்கள் உட்பட பல கிராமிய இளைஞர்களுமாக 60,000க்கு மேற்பட்டோர் கொல்லப் பட்டனர். இவர்கள் அவசர காலச் சட்டத்தின் பேரால்

டயர்களுக்கு இரையாக்கப்பட்டனர். புதை குழிகளுக்கு அனுப்பட்டனர். ஆறுகளில் பிணமாக மிதக்க விடப்பட்டனர். வதை முகாம்கள் எத்தனையோ இயங்கின. இதே அவசர காலச் சட்டத்தின் மூலம் ஆளும் கட்சியினர் தமது சொந்தப் பழிகளையும் தீர்த்துக் கொள்ள வழிவகுத்தது.


ரயரில் எரியூட்டப்பட்ட இளைஞர்களும், முண்டங்களாக மிதந்த பிரேதங்களும்

வடக்கு கிழக்கிலும் பல இளைஞர்கள் அநியாயமாக சந்தேகத்தின் பேரில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். போதாததற்கு இந்திய அமைதிகாக்கும் படையையும் இந்த அநியாயங்களை புரிவதற்கு பங்காளிகளாக்கிக் கொண்டது ஜே.ஆர். அரசாங்கம். இலங்கைப் படையே மேல் எனப் பேசும் அளவிற்கு இந்தியப் படையினரின் அட்டூழியங்கள் நடந்திருந்தது. இதே அவசரகால சட்டம் இந்தியப் படையினருக்கு உச்ச அளவில் பயன்பட்டது.


இந்திய அமைதிகாக்கும் படையினரின் அட்டூழியங்கள்

இந்த அவசரகால நிலையும் 89 ஜனவரி 11ல் நீக்கப்பட்டிருக்கையில் ஒன்பதே நாட்களில் அதாவது ஜனவரி 20ம் திகதி மீண்டும் பிரேமதாசாவால் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. அது 1994 செப்டம்பர் வரை அமுலில் இருந்தது. 94 ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் தோற்ற ஐ.தே.க நவம்பர் மாத ஜனாதிபதி தேர்தலிலாவது வெல்வதற்கான வழிகளில் ஒன்றாக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க செப்டம்பர் மாதம் அவசரகால சட்டத்தை நீக்கினார்.

குறிப்பாக வடக்கில் இந்திய இராணுவம் தனது “அமைதி காக்கும்” பணியில் பல அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த போது தென்னிலங்கை இளைஞர்களை நசுக்க இலங்கை இராணுவத்திற்கு வசதியாக வாய்ப்புக் கிடைத்தது. இந்திய இராணுவம் வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட வேளை தென்னிலங்கையிலும் தமது அழிப்புகளைச் செய்து ஓய்ந்திருந்தது இலங்கை இராணுவம். மீண்டும் அதே இராணுவம் வடக்கில் ஓயாது இன அழிப்பை நடத்துவதற்காக இறக்கிவிடப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான பல இராணுவ நடவடிக்கைகளையும் இனப்படுகொலைகளையும் நடாத்தியிருந்தது. கொக்கட்டிச்சோலை, மயிலந்தனை போன்ற பெரிய இனப்படுகொலைகளைச் செய்ய அவசரகாலச் சட்டமே அங்கீகாரமளித்தது. அக்குற்றங்களை புரிந்த இராணுவத்தினர் மீது இராணுவ விசாரணை எனும் போர்வையில் போலி நாடகமாடியது.

### ஆதரித்தோரும் எதிர்த்தோரும்

1994 இல் ஜே.வி.பி பாராளுமன்றத்தில் இடம்பிடித்தபோது தொடர்ச்சியாக அவசரகால சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்தது. சந்திரிகா அரசாங்கத்தின் போது அவசரகால சட்டத்தை எதிர்த்து ஒற்றைப் பிரதிநிதியாக (நிஹால் கலப்பத்தி) வாக்களித்த ஒரே கட்சி அது தான். அதே அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி 87-89 காலப்பகுதியில் ஜே.வி.பியை கிட்டத்தட்ட முழுமையாக அழித்திருந்தது அரசாங்கம். ஆகவே அதன் வலி தெரியும். ஆனால் அதன் பின் வந்த அரசாங்கங்களின் போது ஜே.வி.பி இனவாத நிலைப்பாடு எடுத்தவேளை அவசரகால சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததையும் வரலாறு மறக்கவில்லை. அதே காலப் பகுதியில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த இ.தொ.கா, ஈ.பி.டி.பி, புளொட், முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட வெளியில் அவசரகால சட்டத்துக்கு எதிராக அறிக்கைவிட்டுக்கொண்டு அந்த சட்ட நீடிப்பன்று அரசாங்கத்துக்கு ஆதவளித்து வந்தன என்பதும் கவனிக்கத்தக்கது. தமிழ் மக்களின் தலைவர்களைக் கொண்டே தமிழ் மக்களின் கண்களை பிடுங்கும் வேலை கச்சிதமாக அரசாங்கத்தால் அரங்கேறியது.

ஐ.தே.க இந்த காலத்தில் முதலில் எதிராக வாக்களித்த போதும் பின்னர் வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நழுவிவிட்டு, சில காலங்களின் பின்னர் ஆதரவளிக்கத் தொடங்கியது. எதிர்த்தால் “பயங்கரவாதத்தை” ஆதரித்ததாக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டுவிடும் என்கிற பயம் அவர்களுக்கு இருந்தது.

2009 இல் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒட்டுமொத்தமாக நசுக்கி துடைத்தெறிய இந்த சட்டமே இரும்புக் கரமாக சிங்கள ஆட்சியாளர்களுக்கு இருந்தது. ஜெனிவாவில் அரசாங்கம் ஒத்துகொண்டபடி 2011 ஓகஸ்ட் 26 அவசரகால சட்டத்தை நீக்கியது. ஆனால் 06.09.2011 வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் அதன் பல அதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது. கூடவே பயங்கரவாத தடைச் சட்டம் இன்னமும் பயன்படுத்தப்படுவது பற்றி “மனித உரிமைகள் கண்காணிப்பு” சமீபத்தில் விமர்சித்திருக்கிறது.


எரியூட்டப்பட்ட யாழ் நூலகம்

1942 இலிருந்து 2025வரையான 83 வருட காலத்தில் அதிகமான காலம் இலங்கை மக்கள் அவசரகால சட்டத்தின் கீழ் தான் ஆட்சிசெய்யப்பட்டிருக்கிறார்கள். இன்றும் தேவையேற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்படுகிறது. டெங்கு ஒழிப்புக்காகக் கூட அது பிரகடனப் படுத்தப்படுகிறது.

நன்றி: என்.சரவணன்




முள்ளிவாய்க்கால் பேரவலம் 2009

# REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

MY EVERYDAY SHOPPING



**1-855-856-6875**

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamle transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

## Member Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.









WWW.MYEVERYDAYSHOPPING.COM




நேரமோ சிறகடித்துப் பறக்கிறது. சற்று முன்தான் ஐந்து மணியைப் பார்த்த மாதிரி இருக்கிறது. பார்த்தால் 5.30 இந் தாண்டி, மணியை நோக்கி வேகமாக முட்கள் நகருகின்றன. வின்ரர் குளிர் வேறு, இருளைச் சீக்கிரம் வரவழைக்கிறது. இன்னும் ஆரணியைக் வில்லை. எரிச்சல், எரிச்சலாக வரு கிறது. என்ன பெண் இவள் எங்கட காலத்தில் விளக்கு வைச்ச பிறகு வீட்டுக்கு வந்திருப்போமன்?

வரத்தான் விடுவார்களா, ஆரணிக்கு இதெல்லாம் புரியுமா? எங்கடை காலத்து பழக்கவழக்கம், பண்பாடுகளை எடுத்துச் சொல்லப் போனால் ஓரிடத்தில் நின்றுதான் கேட்கிறாளா. காதைப் பொத்திக் கொண்டு பழம்பு ராணம் காணும் என்று கத்தத்தான் தெரியும். எங்கடை பண்பாட்டின் அருமை, பெரு மைகளை அறியக்கூ என்ர பிள்ளைக்குக் கொடுத்து வைக்க வில்லை. எப்ப தான் புரிந்து கொள்ளப் போகிறானோ! சில நேரங்களில், கதைகளுக்கு ஓங்கி ஆசைதீர மாறி மாறி அறைய வேணும் போல கைகள் பரபரக்கும். ஆனால் இங்கே அதைக் கூட செய்ய இயலாதே.

என்னுடைய கணவர் வேலை முடிந்து வந்து சேரவே இரவு 8.30 ஆகிவிடும். வதம் போது அனேசு மாக தலைவலிப் பாட் டுடன் வருவார். அந்த நேரம், ஆரணியைப் பற்றி சொல்லவா முடியும்? போதா தற்கு ஆரணி வேறு வீட்டிலிருப்பான். அவள் காதில் விழுத்தால் அவ்வளவு தான். தொலைத்து விடுவாள். இரவில் படுக்கையில் கதை எடுத்தால் இரண்டு, மூன்று தரம் ம், ம் சத்தம் வரும். பிறகு கொரட்டைச் சத்தம் வரும். இருளிற்குத் தான் என் கவலைகளை, பயங்களைச் சொல்லலாம். சனி, ஞாயிறுகளில் கூட அவரிற்கு அலைச்சல் தான். மகளின் படிப்புச் செலவு வீட்டுச் செலவு போன்ற எல்லாச் செலவையும் அவரே சமாளிக்க வேணும் என்றதால், பகுதி நேர வேலையும் செய்து அற வேண்டிய தலையிதி, ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் 4 மணிக்கு வேலை முடிய 4.30 க்கு டாணென்று வீட்டை வந்து நண்பர்கள் சூழ அரட்டை அடிச்ச மனுசன்..... அது எவ்வளவு சந்தோசமான காலம் இங்கே கதைக்கக்கூட ஆளில்லாமல், பூட்டிய வீட்டுக்குள் நடைபயிலுவது ஒரு வாழ்க்கையார் அங்கே யென்றால் பக்கத்துவீட்டு சுதா, விஜி, தங்கம். என்று ஒரு பட் டாளமே வரும். கல, கல வென்று எங்கடை வீடிருக்கும். எங்க ளுடையதும், அக்காவுடைய வீடும் ஒரே வளவுக்குள். யார் வீட்டு சமையல் என்று கூடப் பாராமல் பசி வந்த வீட்டில சாப்பிட்டதும், சிரித்து மகிழ்ந்ததும் ஒரு காலம். அந்த வீட்டைவிட்டு கிளம்புவம் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை. நாங்கள் நினைத்தா எல்லாம் நடக்கிறது.

என்னையறியாமல் கண்கள் மேலே பார்க்கின்றன. அசோக் சிரிக்கிறான். சின்னம்மா என்று அவன் கூப்பிட்டதைப் போல ஒரு சிலிர்ப்பு, என்னுடைய கையால் தூக்கி வளர்த்தபிள்ளை. அக்காவின் பிள்ளை என்றாலும், அவனைப் பொறுத்தவரை நான் தான் அம்மா. அக்காவிற்கு ஏதாவதொக வருத்தம் முதலே மாறிமாறி வரும். அசோக் பிறந்த கையோடு, ஒரு வருசம் படுத்த படுக்கை அறிவு வராத பிஞ்சுப்பருவம் முதல் மழலை பேசும் வரை அவனை வளர்த்தெடுத்தது நான் தான். இதால சின்ன வயசில அவனுக்கே சந்தேகம் தன்ர தாய் யாரென்று என்னைச் சித்தி என்று சொல்லித்தந்தாலும் அம்மா என்று வாய் நிறையக் கூப்பிடுவான். அறிவு வந்த பிறகு கூட சித்தி என்று கூப்பிட மன மில்லாமல் சின்னம்மா என்று தான் கூப்பிடுவான். அனேகமாக காலை முதல் இரவு வரை எம்மோடு தான். படுக்கை மட்டும் தாய் வீடு எமக்குக் குழந்தையில்லாத கவலையைப் போக் கியவன் அவன்தான். எம்மைப் பொறுத்த வரை அசோக்தான் எங்கடை முத்தபிள்ளை. எங்கட செல்லப்பிள்ளை. எங்கடை பிள்ளையில்லாக் கவலை போகட்டும் என்று. அக்காவும் கண்டு கொள்வதில்லை.

இப்படியே காலம் உருண்டோட, ஏழு வருசத்திற்கு பிறகு அக்கா வுக்கு துவாரகாவும் எனக்கு ஆரணியும் ஆறுமாச இடைவெளி யில் பிறந்தனர். ஆனாலும் என்னைப்பொறுத்தவரை ஆரணி இரண்டாவது பிள்ளைதான். அசோக்கைப் பொறுத்தவரையும் துவாரகாக்கும் ஆரணிக்கும் வித்தியாசமில்லை. இன்னும் சொல்லப் போனால் ஆரணியைத்தான் கூடத் தூக்கித்திரிவான். அவளும் அண்ணா, ஆண்ணா என்றபடி அவனையே சுற்றிய படிதான்.

> **"ஆரம்பத்தில் அவள் மழலை மொழியில் கதைக்கும் ஆங்கிலத்தைக் கேட்க எனக்குப் பெருமையாக இருக்கும், மேலும் பேச மாட்டாளா என்றதைப் போல இருக்கும். இப்ப ஆங்கிலத்தை நிறுத்தித் தொலைக்க மாட்டாளா என்று மனம் தவிக்கிறது. தான் நினைத் ததுதான் சட்டம். உடுப்புக்கள் கூட ஒவ்வொரு வருசமும் கொஞ்சம் கொஞ்சமா மேலேறி இப்ப மினியில் நிற்கிறது. இதையும் எதிர்த்தால் எங்கே அதுவுமில்லாமல் போய்விடுமோ என்று பயந்து நான் வாயே திறப்பதில்லை."**

காலச்சக்கரமும் சுழன்றது. செல், பொம்பர் என்று எங்கடை மக் களைப் பிடித்த பீடையும் தொடர்தது. எங்கடைபிள்ளைகளும் வளர்ந்தார்கள். அசோக்குக்கு 12 வயது நடக்கும் போதுதான், எங்கடை குடும்பத்தில் முதல் துர் அதிர்ஸ்டம் திகழ்ந்தது. வேலைக்கு முழுமையா கப்போன அத்தானை பகுதிச் சிதறல் களாக, பெட்டி கூடத் திறக்க முடியாமல் கொண்டாட வைத்தது பொய்பர். யாரையும் பேசிக் கூட அறியாத அப்பாவி மனுசனுக்கு இந்தக்கதி நாங்கள் எல்லோரும் ரொம்பவும் உடைந்து போ னோம். அக்கா திக்பிரமை பிடித்த மாதிரி நினைத்த நேரம் அழு




வதும் அரட்டுவதுமாக. ஒரு காலத்தில் புடவைக்குப் போட்ட ரவிக்கை இம்மியளவு பொருந்தாவிட்டாலும், நேரத்தைப் பற்றிக் கவலை வில்லாமல் வேறு புடவை உடுத்து வரும் அக்கா ரொம் பவும் மாறிவிட்டாள். எதை உடுக்கிறோம் என்ற அக்கறையே இல்லாமல், எல்லாமே ஒன்று தான் என்ற ஞானிபோல, ஏதோ வாழ்க்கையை வாழவேனும் என்றதுபோல. முன்னர் சிரிப்பும் பகிடியுமாக வீட்டில் காலத்தைக் கழிக்கும் அசோக்கின் போக் கிலும் மாற்றமிருந்தது. அவன் பெரிதாக அழவில்லை. சோகத்தை தன்னுள் பூட்டிக் ஏதோ சிந்தனை வயப்பட்டவனாக எங்கோ வெறித்தபடியிருப்பான். கேட்டால் அரைச்சிரிப்புச் சிரிப்பான். அந்த சிரிப்போ, அவனது கண்களை எட்டாத போலிச் சிரிப்பு காலம் போக சரி வரும். சரிவர வேணும் என நம்பி னோம். ஆனால் எல்லோரது நம்பிக்கையையும் காற்றாக்கி விட்டு போய்விட்டான். போராட்டத்தில் புலியாகி தன் பங்களிப் பைச் செலுத்த நான் எதிர்பார்த்த மாதிரி அக்கா அழுது புலம்ப வில்லை அசோக்கின் முடிவு சரி என அடிமனதில் அவளும் உணர்த்திருக்க வேணும்.

எனக்குத்தான் தாளமுடியவில்லை. போதாதற்கு ஆரணிவேறு "அண்ணா எங்கேயம்மா" என்று அரித்தபடி அவளுக்கும், துவாரகாக்கும் உண்மை நிலை விளங்காவிட்டாலும் நிழற் படம் போல ஓரளவு புரியும் வயது. அவர்கள் பிறந்த காலந் தொட்டு கண்டது பங்கரையும் செல்லையும், பொம்பரையும் தானே. இப்படியே ஒரு வருடம் வேகமாகச் சுழன்றது.

அசோக் நண்பர்களுடன் நினைத்த நேரம் வரத்தொடங் கினான். அது இரவு 12 மணியென்றாலும் நானும், அக்காவும் போட்டி போட்டபடி சமைப்போம். அவன் போனபிறகு எனக்கு நித்திரை வராது. ஒரு இரவில்லை எத்தனை இரவுகள் சிவராத் திரி! கண்ணைமூடினால் அவனின் நினைவு, அரை குறையாக தூக்கம் வந்தால், அவன் காயம்பட்டு சின்னம்மா சின்னம்மா என்று தவிப்பது போல கனவு வந்து திடுக்கிட்டுப் பதறுவதும், சாப்பிடன் கூட மனம்வராது என்ற பிள்ளை சாப்பிட்டானோ, இந்த எரிக்கிற வெயிலில காலில் செருப்புமில்லாமல் எப்படித்துடிக்கிறானோ. ஒவ்வொரு நாளும் பேப்பரில், நெஞ்சு நடுங்க வீரச்சாவுப் பெயர்களை வாசிப்பதும், தூரத்தில் சூட்டுச சத்தம் கேட்டால் பதறி அழுவதும், எவ்வளவு பயங்கர காலம்! மனந்தாங்காமல் அசோக் கிட்ட கெஞ்சியிருக்கிறேன், விட்டுட்டு வா ராசா என்று. அவன் சிரித்து விட்டுச் சொல்லுவான், எல் லாரும் இப்படிச் சுயநலமாக இருந்தால், வீட்டுக்கு வீடு தன்ர அப்பா கதிதான் நடக்குமென்று. என்னுடைய ஆசைக்காக அவனின் பாதை மாறாது நாங்கள் மாறினோம். இது தான் வாழ்க்கை என்று ஏற்றுக் கொண்டு போலியாக சிரித்துப்பேசி காலத்தை போக்காட்டினோம். ஆனாலும் செல் சத்தம் கேட்க மனம் ஒரு தரம் அவனைச் சுற்றிவரும். குறுக்கே போனால் கூட பயம். என்ன கெட்ட செய்தி வரப் போகுதோ என்று எந் நேரமும் மனம் அலைபாயும். எங்கும் எதிலும் பயம், பயம் இப்படியே கலக்கத்தில் காலம் கழிய ஆரணியின் ஆறாவது பிறந்த நாளும் வந்தது அசோக் நண்பர்களுடன் கட்டாயம் வருவதாக, ஆரணிக்கு வாக்களித்திருந்தான். அண்ணனுக்கு கடலை வடை பிடிக்கும். லட்டு விரும்பிச் சாப்பிடுவார் என்று அவனுக்கு பிடித்ததெல்லாம் பார்த்துப் பார்த்து செய்து வைத்து விட்டு, கேக் கூட வெட்டாமல் வாசலுக்கும் கேற்றுக்குமாக அலைந்து கொண்டிகுந்தாள். வாகனச் சத்தம் கேட்டதும், எல் லாகும் ஆவலாக வாசலைப் பார்ப்போம். அது தெருவால் போகும் காராயோ லொறியாயோ இருக்கும். நேரமோ ஆறு மணியைத் அசோக்கின் சத்தமில்லை. பலாலிப் பக்கமாக சூட்டுச் சத்தங்கள் தான் கேட்கிறது. எல்லோருடைய முகங்களி லும் ஒரு இனம் புரியாத பீதி இரவு 8 மணி போல, சோகமே உருவாக அவனுடைய நண்பர்களிருவர் வந்தனர். அவர்கள் சொல்ல முதலே நிலைமை புரிந்து நாம் கதறத் தொடங்கி விட்டோம். எங்களால் இந்த இழப்பை நினைத்துக்கூடப் பார்க்க வில்லை.

என்ர அசோக், தான் வளர்த் தெடுத்த பிள்ளை, போய்விட்டான். அந்த சின்ன உயிரை எடுக்க கடவுளுக்குக் கூட மனம் வந்ததே. சின்னப்பூப்போல, எவ்வளவு மிருதுவாக புல் கூட நோகாமல் நடப்பான். கள்ளமில்லாமல் சிரித்தபடி, நொடில்கொருதரம் - சின்னம்மா சின்னம்மா என்று வலம் வந்தவனை, இனி எங்கே காணப்போகிறேன். அந்த பிஞ்சு உடலை ரவைகள் சல்லடை போட்ட நேரம் என்ன நினைத்தானோ, எதைச் சொல்லத்தவித் தானோ, உயிர் பிரியும் நேரம் வலில்குமாமே, என்ர செல்லம் எப்படித் துடித்தானோ இனி எங்கே இப்படி பொரு பிள்ளையைக் காணப்றோம். எதையெல்லாமோ நினைத்துப் புலம்பினோம்.

மனம் தான் ஆறவில்லை.

அவனையும், அவனது தோழர்கள் மூவரது உடல்களையும் பூக்கள் அலங்கரித்த வாகனத்தில், மக்கள் மலர் தூவி கண்ணீர் அஞ்சலி செலுத்த, இறுதி ஊர்வலம் அனுப்பி வைத்தோம். வீதியோரமெங்கும் சுவரொட்டிகள், அவனது வீரத்தை ஆஞ்சாத தன்மையைப் பறை சாற்றின. காயம்பட்ட நிலையிலும் இறுதி வரை பின் வாங்காமல் தீரத்துடன் போராடியது குறித்து கதை கதையாக அவனது நண்பர்கள் பெருமையாகச் சொன்னார்கள்.

அக்கா நாளடைவில் ஓரளவு மனம் தேறினாலும் என்னால் முடிவில்லை. தூங்கினாலும் அவன் நினைப்பு, விழித்தாலும் மனம் அவனையே சுற்றிச்சுற்றி, என்ர விட்டிலேயே அவன் முழு நாளும் வலம் வந்ததாலும் நானே வளர்த்ததாலும் என்னாலே இனி அவனில்லை என்ற நிஜத்தை ஜீரணிக்கவே முடியவில்லை.

இப்படித்தான் வெளியில போனவன் வருவான் என்றது போல, சைக்கிள் சத்தம் கேட்டால் பரபரப்புடன் வாசலைப் பார்த்து ஏமாந்து, என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையில் நிம்மதி என்ற சொல்லின் அர்த்தத்தைத் தொலைத்து விட்டேன். சிரிப்புக்கு முகவரி தேடினேன். இந்நிலையில் தான் ஆரணி சொன்னாள், அண்ணாவைப் போல, வளர்ந்த பிறகு நானும் புலியாகத்தான் போவேன்; அண்ணாவைச் சுட்டவனை சுடுவன் என்று. இதைக் கேட்டு அதிர்ந்து போனேன். ஓங்கித் தலையில் சம்மட்டியால் அடித்தது போல இல்லை, இல்லவேயில்லை. இனியொரு துயரைத்தாங்கும் மனநிலை எனக்கில்லை. இவளும் போய் பிறகு என்ன நடந்ததோ, எப்ப நடக்குமோ என்று அணு அணுவாகத் துடிக்க இனிச்சக்தியில்லை. போதும் இந்த நிலை. இனியொரு முறை அந்த அந்த அனுபவம் வேண்டாம். இதன் விளைவாக இரவு பகல் எனது கணவரைத் தூண்டினேன். அவருக்கோ தாயக மண்ணைவிட்டு பிரியமனமில்லை. பிள்ளையின்ர எதிர்காலத்தில் உங்களுக்கு அக்கறையில்லை. உங்கட சுயநலம் தான் பெரிதாகத் தெரிகிறது என்று பலவாறு ஓதிய பிறகு தான் வேண்டாவெறுப்பாகக் கிளம்ப ஆய்த்தங்கள் செய்தார். அவருடைய சகோதரன் குடும்பமாக அவுஸ்திரேலியாவில் இருந்தது உதவியாக இருந்தது அக்கா எக்காரணம் கொண்டும் கிளம்ப மறுத்து விட்டாள். அசோக்கும். அத்தானும் வாழ்ந்த வீட்டில் தான் தன்ர காலம் முடியுமென்று பிடிவாதமாக இருந்து விட்டாள்.

இதோ 10 வருடங்கள் கண்ணை மூடிக்கொண்டு பறந்து விட்டது. தமிழிழை மறந்து, தமிழில் கதைப்பதுகூட அவமானம் என்ற நிலைக்கு வந்துவிட்டாள். அதாவது என் மகள் வளர்ந்து விட்டாள். அவுஸ்திரேலியாவில் காலடி வைத்த ஆரம்பகாலத்தில், தூக்கத்தில்கூட பெரியம்மாவையும் துவாரகாவையும் நினைத்த முதாள். வந்தவுடன் அவரிற்கும் வேலைகிடைக்கவில்லை. அதைவிட தாய் நாட்டையும் நண்பர் குழாத்தையும் நினைத்து வேதனைப்படாத நாளேயில்லை. வேலையால வந்து வேப்பமரத்து நிழலில், சாய்மனைக் கதிரையில் படுத்திருந்து, பேப்பர் வாசித்துப் பழகின அவராலே மூடிய வீட்டிற்குள் அடைபட்டிருக்க முடியவில்லை. மூச்செடுக்க முடியாதது போல் ஒரு நிலை. என்னைப் பொறுத்தவரை, ஏதோ உத்வேகத்தில் கிளம்பிவிட்டேன். ஆனால் இங்குள்ள சூழல், மனிதர்கள் எல்லாமே அத்தியம்போல, நான் இங்கே ஒட்டாதது போல் ஓர் உணர்வு.



ஏதோ சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பதைப் போல, கழற்றி விட்டால் யாழ்ப்பாணத்தை நோக்கி தலைதெறிக்க ஓட வேணும் போல ஒரு வெறி. இங்கே கதைக்கக் கூட ஆட்களில்லாத மாதிரி மௌனம். ஒரே மௌனம். அங்கே பக்கத்து வீடு, முன்வீடு என்று அரட்டை அடித்துப் பழகின எனக்கு வாய்ப்பூட்டு மொத்தத்தில் நான் இங்கே, என் உயிர் அங்கே. ஆனாலும் எல்லாம் மகளுக்காக அவளின்ர வாழ்வுக்காக என்று என்னை நானே தேற்றிக் கொண்டு வாழத்தலைப்பட்டேன். ஆனாலும் குரங்கு மனம் ஊரைப் பற்றி நினைத்து பெருமூச்சு விடத் தயங்காது. காலப் போக்கில் கணவரிற்கு வேலை கிடைத்துவிட அவரின் பொழுது அதோடு கழிந்தது.

ஆரணியும் புதிய சூழல், புதிய நண்பர்கள் கிடைக்க பழசை மறக்க ஆரம்பித்தாள். துவாரகா, அசோக் பற்றிக் கேட்பது வாரத்துக்கு ஒரு தடவையாகி, மாதத்திற்கு ஒரு தட வையாகி, பிறகு இல்லாமலே போய் விட்டது. ஆரம்பத்தில் அவள் மழலை மொழியில் கதைக்கும் ஆங்கிலத்தைக் கேட்க எனக்குப் பெருமையாக இருக்கும். மேலும் பேசமாட்டாளா என்றதைப் போல இப்ப ஆங்கிலத்தை நிறுத்தித் தொலைக்கமாட்டாளா என்று மனம் தவிக்கிறது. எத்தனை, Mind your own business, I don't care களைக் கேட்டிருப்பேன். தான் நினைச்சது தான் சட்டம். உடுப்புக்கள் கூட, ஒவ்வொரு வருசமும் கொஞ்சம் கொஞ்சமா மேலேறி இப்ப மினியில் நிற்கிறது. இதையும் எதிர்த்தால் எங்கே அதுவுயில்லாமல் போய்விடுமோ என்று பயந்து நான் வாயே திறப்பதில்லை. நினைத்த நேரம் வீட்டிற்கு வருவாள். போவாள், ஏனென்று கேட்க முடியாது. எந்த நேரமும் ஆங்கில இசையால் வீடு இரண்டுபடும். தலைவிதியே என்று சகிக்கிறேன்.

**“ஏதோ சங்கிலியால் பிணைத்து வைத்திருப்பதைப்போல, கழற்றிவிட்டால் யாழ்ப்பாணத்தை நோக்கி தலைதெறிக்க ஓடவேணும் போல ஒரு வெறி.”**

பத்தாததற்கு சுற்றுலா என்ற பெயரில் ஊர்சுற்றி நண்பர்களுடன் கும்மாள மடித்துவிட்டு வருவாள். எமது பண்பாடு மனதை உறுத்த, இருக்கமுடியாமல் வாயைக்கொடுப்பேன். லாரவின்ற அம்மா கேட்கிறதில்லை. சோனியாவை அம்மாலே அவவின் Boyfriend ஓட அனுப்பி வைத்தவர் என்று தொடங்கி வீடு இரண்டுபடும். சுற்றுலாப்படங்களைப் பார்த்து எனக்கு அதிர்ச்சி, முடியை நீட்டாக வளர்த்து. ஒரு காதில் தோடு போட்ட கழுதையொன்று, எல்லாப் படத்திலும் இவளோட உரசியபடி சகிக்க முடியாமல் மெல்ல கதை கொடுத்தால், தோளைக் குலுக்கியபடி We're classmates என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள். ஒரேயொரு நிம்மதி. வீட்டை விட்டு ஓடும் பதினாறு வயது fashionஐ பின் பற்றாமல் எங்களோடு இருக்கிறாளே என்றுதான். இதுவே ஒரு பாக்கியமாக எதனையும் நான் கண்டு கொள்வதில்லை. அவரிற்கோ இதைக்கண்டு கொள்ள நேரமில்லை. மீறிச்சொன்னால் எல்லாம் உம்மாலதானே என்று நெற்றியிலடித்த மாதிரிப் பதில் வகும். அவள் இங்கே வளர்ந்த பிள்ளை. அவர் சொல் லியா புத்தி கேட்கப் போகிறாள். இப்ப புதிசா தலைக்கு சாயங்கள் பூசத் தொடங்கியிருக்கிறாள். இன்றைக்கு நண்பியின் வீட்டு விருந்துக்கு, நரை நிறச் சாயம் பூசியபடி போயிருக்கிறாள். எங்கடை காலத்தில, நரைச்சாலும் என்று பயந்து. கருவேப்பிலை காய்ச்சி தலைக்கு வைத்தது ஞாபகத்துக்கு வருகிறது. என்ன கேடுகெட்ட நாகரிகமோ.

அக்கா துவாரகா பற்றி பெருமையாக எழுதியிருந்தாள். படிப்பில, விளையாட்டில எல்லாத்திலையும் முதல் தான். தாய்க்கு எல்லா உதவியும் செய்து கொடுத்து விட்டுத்தான் பள்ளிக்கூடம் போவா ளாம். பள்ளிக்கூடம் விட்டவுடனே பதினைந்து நிமிடத்தில் வீட்டில நிற்பாளாம் தானுண்டு, தன் வேலையுண்டு என்று படிப்பே கண்ணாக, அவள் ஒரு தரமாவது எதிர்த்துக் கதைக்க மாட்டாளா என்று, தான் நினைப்பதுண்டாம். வாசிக்க இப் படியும் ஒரு பிள்ளையா என்று பெருமைப் பட்டாலும் அடிமனதில் ஊமை வலி. என்ர பிள்ளையும் அங்கேயென்றால் இப்படித் தானே இருந்திருப்பாள். எல்லாம் என்னாலதான். இவளைப் பற்றி பெருமையாக நானென்ன எழுதுவேன். துவாரகா பற்றி சொன்னால் தோளைக் குலுக்கியபடி That is Duwaraka, This is Arani என்று ஆங்கிலத்தில் style ஆக சொன்னாள் என்றா எழுத முடியும். எதை எழுதுவேன். எல்லாமே என்னால் வந்த வினை.

அசோக்கைப் பார்க்கிறேன். இந்த ஆரணி புலிக்குப் போயிருமென்றே சின்னம்மா பயந்தனீங்கள், அவன் சிரிக்கிறான். என்னுடைய சுயநலத்தைக் குத்திக் காட்டுவது போல, பெருங்குரலெடுத்துச் சிரிக்கிறான். இந்தப் பிள்ளைபோன சரியான பாதையை உணர முடியாததாலதானே எனக்கிந்த கதி. நாற்பது வயசில தமிழ் பண்பாட்டை யோசிக்கும் நானெங்கே! பன்னிரெண்டு வயசில தமிழுக்கு உயிர் விட்ட அவனெங்கே! புதிய கோணத்தில் அவனைப் பார்க்கிறேன். சுயநலமேயற்ற தெய்வப்பிறவியாக கோயிலில் உறையும் தெய்வத்திற்குச் சமானமாக என்னை ஒரு புழுப்போல உணருகிறேன்.

என்ரை பிள்ளை தப்பவேனும் என்ற ஒரே நோக்கில் வந்த நான், இந்தப் பத்து வருடமும் தென்ன. அந்திய மண்ணிலே அந்தியனாக வாழ்ந்து மிஞ்சியதென்ன. கவலையும் துக்கமும் தான். நான் இங்கே வந்தது. இல்லாமல் ஆகிவிடாதா.

காலச்சக்கரத்தை ஒரு பத்து வருடம் பின்னோக்கி தள்ள முடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அசோக் என்னை மன்னிப்பாயாடா. இந்த சுயநலப் பேய்க்கு பாவ மன்னிப்பு தருவாயாடா, அவன் எம்முடன் வாழ்ந்த அந்தப் புனிதமான காலத்திலே, விரும்பி முணுமுணுக்கிற பாடல் சாட்டையடியாக என் காதில் ஒலிக்கிறது.

“நடந்து வந்த பாதை தனை திரும்பிப் பாரடா! நீ நாச வேலை செய்த பின்னால் வருந்துவாயடா”

***நான் செய்தது தப்பு; பெரிய தப்பு. நாங்களிங்கே வந்திருக்கவே கூடாது. எங்களிற்கு என்றொரு தேசம் வேணும். எங்கடை பண்பாடு தலை நிமிர்ந்து வாழ வேணும், என்ர மண்ணில தான் என்னுடைய பிள்ளை வாழ வேணும். எங்களுக்கென்று ஒரு தனிப் பெருமை மிக்க வரலாறு. பண்பாடு. தேனினும் இனிய மொழி இருக்கென்று அவள் உணர வேணும். ஆங்கிலம் தெரியுமென்றதைவிட, என்னுடைய தமிழ் எனக்குத் தெரியும் என்று அவள் பெருமைப்பட வேண்டும். தமிழனாகப் பிறந்ததற்கு அவள் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும். தமிழிற்காகப் போராடி உயிர் துறந்த அந்தப் புனித உள்ளங்களின் வீர வரலாறுகளை அவள் தெரிந்து பெருமைப்பட வேண்டும்.***

இங்கேயே இருந்து. அவளை உயிரோடு கொல்வதைவிட, நாங்கள் வந்த பாதை வழியே மீளவும் தாயகம் போய் விட வேண்டும். எனது முடிவு அவரிற்கு மிருந்த மகிழ்ச்சியைன் கொடுக்கும். ஆரணி அழுவாள் ஆர்ப்பாட்டம் செய்வாள், தன் சொந்தக் காலில் நிற்கக்கூடிய வல்லமை இன்னும் வராததாலே அடங்கி விடுவாள்.

அசோக்கைப் பார்க்கிறேன். கள்ளமில்லாமல் சந்தோசமாகச் சிரிக்கிறான்.

ஆரணியும் தமிழ்ப் பெண்ணாக மாறுவாள்.

நீ காட்டிய பாதையில் நடப்பாளடா.

மானசீகமாக அவனைக் கையெடுத்துத் தொழுகிறேன். நான் பண்ணிய தப்பிற்கு பிராயச்சித்தம் தேடப்போகிறேன். எனது அடிமனதில் நம்பிக்கை எனும் சிறு வெளிச்சம், விடி வெள்ளியாக மலருகின்றது. இந்தப் பத்து வருட வாழ்க்கையில் முதல் தரமாக நிம்மதி என்னை வந்து தழுவ, மகிழ்ச்சியோடு சிரித்தபடி ஆரணியின் வரவிற்காகக் காத்திருக்கிறேன்.

தமிழீழத்திலிருந்து செல்வி. ச. வதனா

(1994 முத்தமிழ் விழாவில் சர்வதேச சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது)

**நாம் அரசியல்வாதிகள் அல்லர். நாம் புரட்சிவாதிகள். நாம் பழைய அரசியல்வாதிகள்போல மக்களை அணுகக்கூடாது. மாலைகள் அணிந்து, மேடைகள் மீது முழங்கி, மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு, மக்களுக்குப்பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி அந்தக்காலத்து அரசியல்வாதிகள் நாடக மாடினார்கள். நாம் மக்களை வித்தியாசமாக அணுக வேண்டும். மக்களுக்கு உண்மைநிலையை விளக்கவேண்டும். பொய்யான, நடை முறைச்சாத்தியமற்ற வாக்குறுதிகளை நம்மக்களுக்கு வழங்கக்கூடாது. நாம் எதற்காகப் போராடுகிறோம், எந்தக் கொள்கையில் அடிப்படையில் போராடுகிறோம், நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்ன? என்பதையெல்லாம் நாம் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். உண்மைநிலையை எடுத்துவிளக்கும் பொழுதான் மக்கள் எம்மீதுநம்பிக்கைகொள்வார்கள்.**

**–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–**

# ஜாலியன்வாலா பாக்
# படுகொலையும் - பழிவாங்கலும்



பஞ்சாபில் ஜாலியன்வாலா பாக்

**நவீன வரலாற்றில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகளில் ஜாலியன்வாலா பாக் படுகொலையும் ஒன்றாகும்.**

**இந்தியாவிலுள்ள பஞ்சாப் மாநிலத்தில் அமைந்திருக்கின்ற ஜாலியன்வாலா பாக் என்ற மைதானத்தில் 1919ஆம் ஆண்டு ஏப். 13ஆம் திகதி இப்படுகொலை நடந்தது.**

**அதனாலேயே அப்படுகொலை ஜாலியன்வாலா பாக் படுகொலை என அழைக்கப் படுகின்றது.**

**அப்போது இந்திய தேசத்தை ஆக்கிரமித்து வைத்திருந்த பிரிட்டிஷ் படைகளினால் நடாத்தப்பட்ட இக் கொடூர - காட்டு மிராண்டித்தனமான படுகொலை நிகழ்ச்சியில் 2000 இந்தியர்கள் கொல்லப்பட்டனர்.**



முதலாம் உலகப்போர் 1918ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிவடைந்ததைத் தொடர்ந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிட மிருந்து இந்தியா சில நன்மைகளைப் பெறும் என, இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் நம்பினார்கள்.

அதன் மூலம் படிப்படியாக இந்திய அரசு இயந்திரத்தில் இடம் பிடித்து, தன்னைத்தானே ஆளுகினற் ஒரு அரசியலமைப்புச் சட்டமொன்றை உருவாக்கி, இந்திய தேசத்திற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துவிடலாமென எதிர்பார்த்தனர்.

ஆனால், இந்தியர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக, இந்திய மக்களின் அரசியல் அபிலாசைளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, ஒரு புதிய சட்ட வரைவை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியர்கள் மீது திணித்தனர்.

ஆனால் அச்சட்ட வரைவை முழுமையாக எதிர்க்க இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் முடிவு செய்தனர்.

நாடு தழுவிய ரீதியில் - அகிம்சை வழியில் எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்திய மக்கள் எடுத்தனர். ஆக்கிரமிப்பாளர்களான பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் எதிர்ப்புக் கூட்டங்களும் நடாத்தப் பட்டன.

இந்திய மாகாணங்களுள் ஒன்றான பஞ்சாப்பின் ஆளுநராக இருந்த மைக்கல் ஒ டயர் (Michael O' Dwyer) என்ற பிரிட்டிஷ்காரன் தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிளில் மக்களின் எதிர்ப்பை ஆயுத பலம் கொண்டு ஒடுக்க முடிவு செய்தான்.



ஆளுநர் மைக்கல் ஓடயர்

அதன் பொருட்டு மாகாண இராணுவத் தளபதி ஜெனரல் டயரை (General Reginold Edward Harry Dyer) அழைத்து இராணுவ வழியில் மக்களின் எதிர்ப்பை நசுக்குமாறு பணித்தான்.

ஏப். 13.ஆம் திகதி மாலை, அமிர் தசரஸ் நகரிலுள்ள ஜாலியன் வாலா பாக் மைதானத்தில் ஒரு எதிர்ப்புக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஆனால் சகல கூட்டங்களும் தடை செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

மக்கள் மிரட்டல்களுக்குப் பணியவில்லை. ஏற்கெனவே தீர மானித்த படி ஜாலியன்வாலா பாக்கில் மகைள் கூடத் தொடங்கினர்.

கூட்டத்திற்கு சுமார் 5,000பேர் வந்திருந்தனர் தேசபக்திப் பாடல்களுடன் கூட்டம் ஆரம்பமானது.

கூட்டம் நடைபெறுவதைக் கேள்வியுற்ற இராணுவத்தளபதி ஜெனரல் டயர் ஆத்திரம் கொண்டு, தனது போர் வீராகளுடன் ஜாலியன்வாலா பாக் நோக்கிப் புறப்பட்டான்.

கூட்ட மைதானத்திற்குச் செல்லும் பாதை மிக ஒடுங்கியதாக இருந்ததால் அவன் கொண்டு சென்ற கவச வாகனங்களையும், இயந்திரத்துப்பாக்கிகளையும் வெளியே விட்டுவிட்டு 90 போர் வீர்களுடன் கூட்ட மைதானத்திற்குள் நுழைந்தான்.

மைதானத்துள் சென்றதும், தனக்கு வலப்புறமாகவும் இடப் புறமாகவும் அணிவகுத்து கூட்டத்தினரை நோக்கி நிலையெடுக்கும் படி போர்வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

கூட்டத்தைக் கலைந்து செல்லும் படி கேட்கவுமில்லை; கூட்டத்தினரை எச்சரிக்கை செய்யவுமில்லை.

திடீரென, கடுப்படி கட்டளையிட்டான். படையினர் சுடத்தொடங்கியதும் மக்கள் மிரண்டு ஓடினர். இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது.

படுகொலை நடைபெற்ற போது ஜெனரல் டயரினது மெய்ப்பாது காவலனாக நின்ற “சார்ஜன் அண்டர்சன்” (Sergent W.J. Anderson) என்ற போர்வீரன் பின்னர் சொன்னான்...

“நாங்கள் சுடத்தொடங்கிய போது கூட்டம் மிரண்டு வீழ்ந்தது. பின்னர் எழுந்து ஓடியது. இடையிடையே துப்பாக்கிச் சூடுகள் நிறுத் தப்பட்ட அந்த ஒரு சில வினாடிகளில், குண்டடிபட்டு வீழ்ந்தவர்களது முனகல்கள் எனக்குக் கேட்டது.



உத்தம் சிங்

எந்தெந்தத் திசைநோக்கி துப்பாக்கிச் சூடுகளை நடாத்த வேண்டுமோ அங்கெல்லாம் ஜெனரல் டயர் தனது கைவிரலால் சுட்டிக் காட்டியபடி கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்”.

இப்படுகொலையில் பங்குபற்றிய இன்னொரு பிரிட்டிஷ் போர் வீரனான கப். பிறிக்ஸ் (Captain Briggs) பின்வருமாறு சொல்லி யிருந்தான்.

“நாங்கள் சுடத்தொடங்கிய போது கூட்டம் இரண்டு பகுதியாகப் பிரிந்து ஓடியது. முதலில் ஒரு பகுதி மீது சுடும் படி எங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் மறு பகுதி மீது சுடும்படி பணிக்கப்பட்டோம்.

துப்பாக்கிகளின் ரவைகள் தீர்ந்த பின்னர் மீண்டும் ரவைகளை நிரப்பி தொடர்ந்தும் சுடும்படி ஜெனரல் டயர் கட்டளையிட்டான்.

அம் மைதானத்தில் எங்கெங்கு மக்கள் அடர்த்தியாக - நெருக்கமாக நின்றார்களோ அங்கெல்லாம் சுட்டிக்காட்டி, சுடும்படி கட்டளையிட்டுக்கொண்டிருந்தான்”.

ஜெனரல் டயரினது நேரடி உத்தரவின் பேரில் அவனது காட்டு மிராண்டிப்படைகள் தொடர்ச்சியாக 10 நிமிடங்கள் சுட்டுத் தள்ளின.



## ஜெனரல் றெஜினோல்ட் எட்வேட் டையர்



ஜாலியன் வாலாபாக் மைதானம் மனித இரத்தத்தால் முழுக் காட்டப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவம் நடந்து சுமார் எட்டு மாதங்கள் வரை உலகின் கண்களுக்கு மூடிமறைக்கப்பட்டது.

இறுதியில் படுகொலைச் சம்பலம் வெளிச்சத்திற்கு வந்தபோது நீதி விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டும் என அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது.

கன்ரர் பிரபு (Lord Hunter) என்பவரது தலைமையில் பிரிட்டிஷ் பிரசைகளையும், இந்தியப் பிரசைகளையும் கொண்ட விசாரணைக் குழுவொன்று உருவாக்கப்பட்டு விசாரனை நடந்தது.

விசாரணைக் குழுமுன் ஜெனரல் டயர் திமிராகப் பதிலளித்தான்.

மைதானத்திற்குச் செல்லும் நுழைவாயில் அகலமானதாக இருந்திருப்பின் இயந்திரத்துப்பாக்கிகளையும் உள்ளே கொண்டு சென்று பயன்படுத்தியிருப்பீர்களா? என ஒரு விசாரணைக் குழு அங்கத்தவர் கேட்ட கேள்விக்கு, "ஆம்!" என ஜெனரல் டவர் பதிலளித்தான்.

யாராவத ஒருவர் ஒருவர் ஜாலியன்வாலா பாக் படுகொலையைப் பற்றி ஜெனரல் டயரிடம் கேள்வி கேட்டால் அதற்கு அவன் எப்பொழுதும் அளித்த பதில்…

"ஆம், நான் அதேமாதிரி ஒரு படுகொலைச் சம்பவத்தை இனியும் செய்யத்தயார்." இத்தகைய கொலை வெறியனுக்கு அளிக்கப் பட்ட தண்டனை என்னவெனில், இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்குத் திருப்பி அழைக்கப்பட்டது மட்டும்தான்.

பிரிட்டிஷ் அரசாங்கம் விசாரணைக் குழுவொன்றை அமைத்து விசாரணை நடாத்தியது போல, இந்திய தேசபிதா மகாத்மா காத்தியில் தலைமையில் இயங்கிய இந்திய தேசிய காங்கிரசும் ஒரு விசாரணைக்குழுவை நியமித்தது.

அந்தக்குழு, படுகொலையை நேரில் நின்று நடாத்தி முடித்த ஜெனரல் டயர் மட்டுமல்ல இவற்றுக்கெல்லாம் சூத்திரதாரியான பஞ்சாப் ஆளுநர் மைக்கல் ஓ டயரும் காரணமெனப் பிரகடனப் படுத்தியது.

### பழிவாங்கல்

இப்படுகொலை நடைபெற்ற போது கூட்டத்திற்கு வருகை தந்தவர்களுக்கு குடிதண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த "உத்தம் சிங்" என்ற சிறுவனும் கையில் காயமடைந்து நிலத்தில் வீழ்ந்தான். அவனுக்குமேல் அடுக்கடுக்காக விழ்ந்த மனித உடல்கள் அச்சிறுவனைச் சூழ கவசமாக வீழ்ந்து கிடந்தன அதனால் அச்சிறுவன் உயிர்பிழைத்தான்.

படுகொலை முடிந்து ஜெனரல் டயரினது படைகள் வெளியேறிய பின்னர், பிணங்களை விலக்கிக் கொண்டு அவன் எழுந்து பார்த்தான். மைதானம் முழுவதும் மனிதப் பிணங்கள் மலை போலக் கிடந்தன.

இப்படுகொலை நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவனை பழி வாங்குவதென, அன்றே அச்சிறுவன் சபத மெடுத்தான்.

இப்படுகொலையின் சூத்திரதார்யாக, அரசியற் போர்வைக்குள் நின்று செயற்பட்ட பஞ்சாப் ஆளுநர் மைக்கல் ஓ டயரையே உதயம் சிங் கருதினான்.

நேரடியாக நின்று படுகொலையைப் புரித்த ஜெனரல் டயரை. ஒரு அம்பாகவே கருதினான்.

எனவே எய்தவன் இருக்க அம்பை நொந்து பயனில்லை என நினைத்து மைக்கல் ஓ டயரைக் கொன்று பழிதீர்க்க முடிவெடுத்தான்.

படுகொலை முடிந்தபின், அதற்காக ஜெனரல் டயருக்கு உடனடியாகப் பதவி உயர்வு வழங்க வேண்டுமென, பிரிட்டிஷ் அரசுக்கு ஆளுநர் மைகளல் ஓ டயர் சிபார்சு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆளுநர் மைக்கல் ஓ டயரைத் தண்டிப்பதற்கென சரியான தருணத்தை எதிர்பார்த்து உத்தம் சிங் காத்துக்கிடந்தான்.

தனது சொந்த நாட்டில் வைத்துத் தண்டனை வழங்கச் சந்தர்ப்பம் கிடைக்காததால் கப்பலேறி ஆளுநரின் தேசமாகிய இங்கிலாந்து சென்றடைந்தான்.

அங்கே ஆளுநர் மைக்கல் ஓ டயரைத் தேடி வருடக்கணக்காக அலைந்தான்.

சுமார் 20 வருடங்களின் பின்னர் அவனுக்கு அச் சந்தர்ப்பம் கிடைத்தது.

1940ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி லண்டனில் நடைபெறும் கூட்டமொன்றில் கலந்து கொள்ள வரும் மைக்கல் ஓ டயருக்கு அங்கு வைத்து தண்டனை வழங்க முடிவுசெய்தான்.

உத்தம் சிங் எதிர்பார்த்தது போல ஜாலியனவாலா பாக் படுகொலையின் சூத்திரதாரி மைக்கல் ஓ டயர் கூட்டததிற்குச் சமூக மளித்திருந்தான்

தனது கைத்துப்பாக்கியை எடுத்த உதயம் சிங் 2000 இந்தியக் குடிமக்களின் படுகொலைக்குக் காரணமாகவிருந்த மைக்கல் ஓ டயரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து தண்டனையை வழங்கினான்.

அவ் இந்தியத் தேசபக்தன் உடனடியாகவே பிரிட்டிஷ் பொலிசாரினால் பிடிக்கப்பட்டு, மரண தண்டனைக் குட்படுத்தப்பட்டான்.

ஆனாலும் 2000 இந்தியக் குடிமக்களின் இரத்தத்தால் தோய்க்கப்பட்ட ஜாலியன்வாலா பாக் மண். அத் துயரத்திற்குக் காரணமான ஆக்கிரமிப்பு ஆட்சியாளனைக் கொன்று, தார்மீகக் கடமையை நிறைவேற்றியது.

உத்தம் சிங் என்ற அந்த மாவீரன் - தேசபக்தன் இன்றும் மக்களின் மனதில் வாழ்கின்றான்.

விடுதலைப்புலிகள் - மாசி 1992



# புலிகளின் அரசியல் ஆலோசகராக பணியாற்றிய இலங்கை முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி

**- நவீனன்-**

24.01.2025

இலங்கை முன்னாள் சட்டமா அதிபர், சமாதான பேச்சு காலத்தில் தமிழீழ தேசிய தலைவரின் பிரதம ஆலோசகர் திரு. சிவா பசுபதி அவுஸ்திரேலியா சிட்னியில் கடந்த சனிக்கிழமை ஜனவரி 18 அன்று காலமானார்.



சிவகுமாரன் பசுபதி என்ற இயற்பெயர் கொண்ட சிவா பசுபதி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு ஆனந்தா கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். இலங்கைத் தமிழ் முன்னணி சட்டத்தரணியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சிவா பசுபதி, அரச வழக்குரைஞர்களின் இயக்குநராகப் பணியாற்றினார்.

**முன்னாள் இலங்கை சட்டமா அதிபரான சிவா பசுபதி, பின்னாள் தமிழரின் சட்டவாளரானது சிறீலங்கா அரசுகளின் இனவாதத்தை உலகிற்கு அம்பலப்படுத்திய பெருஞ் சான்றாகும்.**

1974 முதல் 1975 வரை அரசுத் தலைமை வழக்குரைஞராகவும், பின்னர் அவர் 1975 முதல் 1988 வரை சட்டமா அதிபராகவும் பணியாற்றினார்.

சிவா பசுபதிக்கு 1989 ஆம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது மிக உயர்ந்த தேசிய விருதான தேசமான்ய பட்டம் வழங்கப்பட்டது.

முன்னாள் இலங்கை அரச தலைமை வழக்குரைஞரும், இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபருமான சிவா பசுபதி ஓய்வு



பெற்ற பின்னர் அவுஸ்திரேலியாவுக்குக் குடிபெயர்ந்து சிட்னியில் வாழ்ந்து வந்தார்.

2002இல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் இடையில் பேச்சுகள் தொடங்கிய போது, விடுதலைப்புலிகளின் பேச்சுக் குழுவுக்கு உதவவும் ஆலோசனைகளை வழங்கவும் விடுதலைப் புலிகளால் நிறுவப்பட்ட அரசியல் விவகாரக் குழுவுக்கு சிவா பசுபதி சட்ட ஆலொசகராகப் பணியாற்றினார்.

2002 - 2006 காலப் பகுதியில் நோர்வே தலைமையிலான அமைதிப் பேச்சுகளில் அவர் பங்கேற்றார்.

அத்துடன் சிவா பசுபதி அவுஸ்திரேலிய மனித உரிமைகள் அமைப்பின் தலைவராகவும், நியூ சவுத் வேல்சு மாநிலத் தமிழ் மூத்தோர் சங்கத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

## இலங்கை சட்டமா அதிபர்:

இலங்கையில் மிக நீண்ட காலம் சட்டமா அதிபராக பணியாற்றிய திரு. சிவா பசுபதி (Mr. Siva Pasupathi) தனது வாழ்வில் பெரும் சவால்களை எதிர்கொண்டார். தனது பதவிக் காலத்தில், அரசியலமைப்புச் சட்டத்தை நிலைநிறுத்தவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் அயராது உழைத்தார்.



அதே நேரத்தில் சிறீலங்கா அரசின் அழுத்தங்கள் மற்றும் அரசியல் தலையீடுகளுக்கு மத்தியிலும் அவரது நேர்மை மற்றும் துணிச்சல் அவருக்கு சக ஊழியர்கள் மற்றும் சுயாதீன பார்வையாளர்களிடமிருந்து மிகுந்த மரியாதையைப் பெற்றுத் தந்தது.

அவர் தனது சொந்த பதவியை ராஜினாமா செய்த பின்னர், அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்த பிறகு, திரு. பசுபதி தமிழர் நலனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக, அவர் தனது சமூகத்தின் நலனுக்காக அயராது பங்களித்தார். எண்ணற்ற வழிகளில் தனது நிபுணத்துவத்தையும் அறிவுரையையும் தொடர்ந்து வழங்கினார்.

## குரலற்றவர்க்கான அவுஸ்திரேலியர்:

மனித உரிமைகள் ஆதரவு அமைப்பான "குரலற்றவர்களுக்கான அவுஸ்திரேலியர்கள்" என்ற அமைப்பை நிறுவுவதில் அவர் முக்கிய பங்கு வகித்தார். இந்த தளத்தின் மூலம், பெரும் பாலும் குரல்கள் கேட்கப்படாதவர்களின் உரிமைகள் மற்றும் உரிமைகளை பாதுகாத்து போராடினார்.

**திரு. சிவா பசுபதி தமிழ் சமூகத்திற்கு அளித்த மதிப்புமிக்க பங்களிப்பிற்காக, குறிப்பாக அவுஸ்திரேலியாவில் நாங்கள் அவரை வணங்குகிறோம், நன்றி கூறுகிறோம். அவரது தைரியம், தொலைநோக்கு பார்வை மற்றும் அயராத அர்ப்பணிப்பு அவரை அறிந்த அனைவருக்கும் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது**

குறிப்பாக 2003 இல் விடுதலைப் புலிகள் தலைமையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது இடைக்கால சுயராஜ்ய ஆணையம் (ISGA) முன்மொழிவை உருவாக்குவதில் திரு. சிவா பசுபதி ஒரு முக்கிய ஆலோசனைப் பங்கை வகித்தார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சு வார்த்தைகளின் பொழுது அக்டோபர் 2003 சமர்ப்பிக்கப்பட்ட "இடைக்கால தீர்வுத் திட்டத்தை" (Interim Self-Governing Authority - ISGA) உருவாக்கிய அரசியல் சட்ட அறிஞர் குழுவில் முக்கிய பங்காளராக அவுஸ்திரேலியாவில் இருந்து பணிபுரிந்து இலங்கை அரசுக்கு அச்சமும் எரிச்சலும்




ஊட்டிய இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் அமரர் சிவா பசுபதி அவர்களின் இனமானப் பற்று அளவிட முடியாத்தாகும்.



சமாதான காலத்தில் இடைக்காலத் தேர்வு திட்டத்திற்கு சட்ட ஆலொசனைகள் / பரிந்துரைகள் வழங்கிய அவருடன் சேவையை தமிழ் பேசும் மக்கள் மறந்திட மாட்டார்கள்.

தனது இலங்கை சகாக்கள், நண்பர்கள் மற்றும் அரசாங்கத்திடமிருந்து ஏற்படக்கூடிய எதிர்வினைகளை அறிந்திருந்தும், அவர் தமிழ் மக்களுக்கான தனது உறுதிப்பாட்டில் உறுதியாக நின்றார். அமைதிச் செயல்பாட்டின் இந்த முக்கியமான தருணத்தில் வழிகாட்டுதலையும் அவரது அரசியலமைப்பு நிபுணத்துவத்தையும் வழங்கினார்.

திரு. சிவா பசுபதி தமிழ் சமூகத்திற்கு அளித்த மதிப்புமிக்க பங்களிப்பிற்காக, குறிப்பாக அவுஸ்திரேலியாவில் நாங்கள் அவரை வணங்குகிறோம், நன்றி கூறுகிறோம். அவரது தைரியம், தொலைநோக்கு பார்வை மற்றும் அயராத அர்ப்பணிப்பு அவரை அறிந்த அனைவருக்கும் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

திரு. சிவா பசுபதி எப்போதும் நன்றியுடனும் போற்றுதலுடனும் நினைவுகூரப்படுவார்.

**விடுதலை என்பது ஓர் அக்கினிப்பிரவேசம், நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம், தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம். இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை ஈகம் செய்தவர்கள் மாவீரர்கள்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# திருகோணமலையில் சோலார் திட்டத்தால் பறிபோகும் வயல் நிலங்கள்...!

## பா.அரியநேத்திரன்

22.01.2025

2025.ஜனவரி.03 திருகோணமலை முத்து நகர் விவசாயக் காணிகளை இந்திய சோலார் திட்டத்திற்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த முத்து நகர் கிராமத்தில் பல வருட காலமாக தாம் இரு போக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாய காணிகளும் காணப் படுவதாகவும் இருப்பினும் குறித்த காணிகளை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான காணி என வர்த்தமானியின் அடிப்படையில் கையகப்படுத்திய அரச இயந்திரம் தற்போது அதனை இந்தியா சோலார் திட்டத்திற்கு வளங்க திட்ட மிட்டிருப்பதாக அறியக்கிடைத்திருப்பதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த காணிகள் விடுவிக்கப்படவேண்டும் அங்கு காணப்படும் குளங்கள் புனரமைத்து தரப்படவேண்டும் எனும் கோரிக் கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவு, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் நில ஆக்கிரமிப்பு தொடர் வதால் மக்கள் கொந்தளிக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கள் நாட்டை பொறுப் பேற்றதன் பின்பும் கூட தீர்வு இல்லாமல் காணப்படுகிறது. திரு கோணமலை மாவட்டத்தில் உள்ள திரியாய், முத்து நகர், சம்பூர் உள்ளிட்ட தனியார் விவசாய மற்றும் குடியிருப்பு காணிகளை தொல் பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக் களம், இலங்கை துறை முக அதிகார சபை உள்ளிட்ட பல அரச திணைக்களங்கள் பௌத்த பிக்குகள் போன் றோர் அபி விருத்தி என்ற போர்வையிலும் புனித பூமி என்ற போர்வை யிலும் அடாத்தாக நிலங்களை அபகரித்துள்ளனர்.

கடந்த வருடத்தில் (2024) வாரி சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அரசாங்கம் குளங்களை திருத்த நிதி ஒதுக்கீடு செய்தது தகர வெட்டுவான் குளம் 80 வீதம் திருத்தப்பட்ட நிலையில் இலங்கை துறை முக அதிகார சபையால் நிறுத்தப்பட்டது. இதே




கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் இதை அனுமதிக்க முடியாது எனவும் மக்கள் தெரிவிக் கின்றனர்.

குறித்த சட்ட விரோதமான செயற்பாட்டிற்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குச்சவெளி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் மாவட்ட செயலாளர், கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்ட அரச திணைக் களங்கள் மற்றும் அரசியல் வாதிகளிடமும் இது தொடர்பான மகஜர்களை கையளிக்கவுள்ள தாகவும் மக்கள் தெரிவித்தனர்.

இதையிட்டு கருத்து தெரிவித்த குச்சவெளி பிரதேச செயலாளர் இது தொடர்பாக தொல்லியல் திணைக்கள திருகோணமலை மாவட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் இது தொல் லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினுடைய அதி காரத்திற்கு உட்பட்டது எனவும் அவர்களுடன் கலந்தாலோசித்து தீர்வினை பெற்றுத்தர முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

திரியாய் பகுதியிலும் விவசாய காணிகளை அப்பகுதி விகாராதி பதி ஒருவரான அரிசி மலை பௌத்த பிக்கு அடாவடியாக தனியார் காணிகளுக்குள் அத்து மீறி நிலத்தை உழுது நெற் செய்கைக்காக தயார் படுத்தியதனால் மக்கள் போராட்டம் அங்கு எழுந்தது இது தொடர்பில் உரிய தரப்புக்களுக்கு அறிவித்த போதும் எது வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பிரதேசங்களை இலக்கு வைத்து தொடர் நில அபகரிப்பால் சிறுபான்மை சமூகங்களை சேர்ந்த தமிழ் முஸ்லீம் மக்களே பாதிக்கப்படுகின்றனர். நெற் செய்கையை வாழ்வாதாரமாக நம்பி வாழும் விவசாயிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளனர் .



நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோஷன் அக்மீமன மற்றும் சன்முகம் குகதாசன் ஆகியோரிடம் வழங்கிவைக்கப்பட்டும் இருந்தன.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக் குட்பட்ட முத்து நகர் பகுதியானது பூர்வீகமாக தமிழ் விவசா யிகள் காலம் காலமாக இரண்டுபோக விவசாய செய்கையில் நெற்செய்கையில் ஈடுபடும் வளம்மிக்க வயல் நிலங்களாக உள்ளன.



குறித்த முத்து நகர் பகுதியில் ஐந்து சிறு குளங்களை கொண்ட 1600ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் 1200 விவசாயிகள் விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் 50ஏக்கருக்கும் மேற்பட்ட மேட்டு நிலப் பயிர்களுக்கும் இதில் மேற்கொள்ளப் பட்டு சுமார் 5000 குடும்பங்கள் பயனடைகின்றனர்.

குறிப்பாக வடகிழக்கில் சிறுபான்மை சமூகங்களின் விவசாய, குடியிருப்பு காணிகள் கபளீகரம் செய்யப்படுகிறது இதனடிப் படையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி போல் அம்மன் குளத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு திருத்தம் செய்ய அனுமதியை மறுத்து தடுத்து நிறுத்தியதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர் .

சோலார் பவர் திட்டத்தை எமது விவசாய பகுதிக்குள் நடை முறைப்படுத்தினால் குளங்கள் மூடப்படலாம் எப்படி அபிவிருத்தி செய்வது நாட்டுக்கு வருடந்தோறும் பெரும்போகத்தில் 1600 ஏக்கர் X 70 புசல் = 112000 நெல்லை உற்பத்தி செய்து தரும் எமது வாழ்வாதார ஜீவனோபாய வயல் நிலங்கள் பறிக்கப் படுமாக இருந்தால் விவசாயிகளான இத் திட்டத்தை எதிர்த்து போராடுவதன் மூலம் நாம் உயிரை விடவும் ஆயத்தமாக உள் ளோம் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளதால் இந்த சோலர் திட்டம் நிறுத்தப்படவேண்டும் அல்லது அந்த இடத்தை விட்டு வேறு மாற்று இடத்தில் இதனை முன்எடுப்பதே உகந்த நடைமுறையாகும்.

இதுபோன்று 2011, ல் திருகோணமலை, சம்பூர்பகுதியில் அனல் மின் நிலையம் அமைக்க இந்தியா இலங்கை அரசாங் கங்களிடையே 2011 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் கைச்சாத்தானது.

எனினும், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் என மக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது வயல் நிலங்களில் சோலார் பொருத்தும் திட்டம் ஒரு பக்கம் உள்ள நிலையில் அடுத்த ஆக்கிரமிப்பாக குச்சவெளி, வெருகல் பகுதிகளில் எவ்வித அறிவித்தலும் இன்றி இரவோடு இரவாக பெயர்ப்பலகையை காட்சிப் படுத்தி இந்த காணிகளில் தொல்லியல் சின்னங்கள் எவையும் இல்லாத நிலையில் தொல் லியல் திணைக்களம் இந்த காணிகளை கையகப்படுத்த முயற் சிப்பதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பிரதேச சபைக்குச் சொந்தமான 1985ஆம் ஆண்டுக்கு முன்னர் கடைத்தொகுதிகளுடன் காணப்பட்ட பகுதியும் மற்றுமொரு இடத்தில் நெற் களஞ்சியமாக காணப்பட்ட பழைய கட்டிடங்க ளுடன் கூடிய பகுதியையும் தொல்லியலுக் குரிய இடமாக



ஜே ஆர் ஜெயவர்தன தொடக்கம் சந்திரிகா, ரணில், மகிந்த, மைத்திரி, கோட்டா, ரணில், அநுர என எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சியை பொறுப்பேற்றாலும் நில அபகரிப்புக்கள் சொடர்ந்து கொண்டே உள்ளது . நில ஆக்கிரமிப்பை தடுக்க தற் போதைய அரசு புதிய அரசாங்கம் புதியதொரு பொறி முறை களை உருவாக்க வேண்டும் என்பதே மக்களது எதிர்பார்ப் பாகும்.

ஆனால் அநுர ஆட்சி நான்கு மாதங்களை எட்டும் நிலையில் அவர்களால் ஏற்கனவே கூறிய எந்த நல்லெண்ணமும் செய் கையில் காட்டப்படவில்லை. கடந்த ஆண்டு டிசம்பரில் இந் தியாப் பயணமும் இந்த ஆண்டு ஜனவரியில் சீனாப் பயணமும் என புதிய ஜனாதிபதி தமது பயணத் தொடர்புகளை முன் எடுப்பதை மட்டுமே காண முடிகிறது.

ஜனாதிபதி தேர்தலும், பொதுத்தேர்தல் இரண்டிலும் தேசிய மக்கள் சக்தி தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்களை கூறி யிருந்தும் எதிர்பார்த்த எதையுமே இதுவரை செய்யவில்லை என்ற குறை மக்கள் மத்தியில் உள்ளது. மாறாக வடகிழக்கில் தமிழ் நில ஆக்கிரமிப்பு தொடர் வதையே காணலாம்.

www.sangathamil.ca

## 38 ஆம் ஆண்டு

# வீரவணக்கம்



**லெப். கேணல் அற்புதன் [பொன்னம்மான்]**
**[யோகரத்தினம் குகன்**
**கலட்டி, யாழ் - 23.12.1956]**



மேஜர் கேடில்ஸ்
[மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை கிளி
11.05.1966]



கப்டன் வாசு
[உருத்திராபதி சுதாகர்
வல்வெட்டித்துறை, யாழ்
13.03.1961]



லெப். சித்தார்த்தன்
[வைத்திலிங்கம் வசீகரன
சுண்டுக்குளி, யாழ்
09.05.1959]



2 ம் லெப். பரன்
[கிருட்னர் அர்ச்சுனன்
வல்வெட்டித்துறை, யாழ்
27.05.1967]

**14.02.1987 அன்று கைதடியில் சிறீலங்காப் படையின் நாவற்குழிமுகாமைத் தாக்கும் முயற்சியின்போது எதிர்பாராது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள்**



வீரவேங்கை குமணன்
[கந்தையா மோகனலிங்கம்
மட்டுவில், யாழ்
20.10.1965]



வீரவேங்கை தேவன்
[தம்பிப்பிள்ளை வசந்தகுமார்
மீசாலை, யாழ்
24.02.1963]



வீரவேங்கை யோகேஸ்
[சுந்தரன் தனபாலசிங்கம்
ஆழியவளை, யாழ்
09.06.1960]



வீரவேங்கை கவர்
[கதிர்காமு நகுலேஸ்வரன்
வவுனியா
23.12.1966]



வீரவேங்கை அக்பர்
[அருளம்பலம் யோகநாதன்
மட்டுவில், யாழ்
22.05.1963]

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# மாவீரர் கப்டன் மலரவன்
# மலரவனின் ‘போர் உலா’ (War Journy)




மலரவனின் ‘போர் உலா’ (றுயச துழரசநெல) ; இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள் ; இளங்கோ

‘போர் உலா’ 1990 களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்த மலரவன் என்பவரால் எழுதப்பட்ட ஒரு நூல். ஆங்கிலத்தில் இது ‘War Journey’ என மொழியாக்கம் செய்யப்பட்டு பெங்குவின் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டிருக்கின்றது. இது 1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் இருந்த சிங்கள இராணுவ முகாமைத் தகர்ப்பதற்காய் மணலாற்றிலிருந்து செல்கின்ற போராளி அணியின் கதையைச் சொல்கின்றது.

மலரவன் இயக்கத்தில் இருந்தபோது அப்போது முக்கிய ஒரு படைத்துறையாக வளர்ந்து கொண்டிருந்த பசீலன் 2000 பீரங்கிப்படையில் முன்னணிப் படைவீரராக இருக்கிறார். இது இயக்கத்தின் உள்ளூர்த் தயாரிப்பு மோட்டார்களைக் கொண்டிருந்தது. யாழ் கோட்டையை அன்று இயக்கம் கைப்பற்றியதில் இந்தப் படையணியின் பங்கும் அளப்பரியது என்பதை அன்றைய காலத்தில் ஈழத்தில் இருந்த பலர் அறிவர். அந்த பீரங்கிப் படையணியில் ஒருவராக, மோட்டார்களை தளம் விட்டுத் தளம் நகர்த்துகின்றவராக மலரவன் அன்றைய காலங்களில் செயற்பட்டார்.

மணலாற்றில் இருந்து பீரங்கிகளையும் நகர்த்த வேண்டும். அதேசமயம் இலங்கை இராணுவத்தின் விமானங்களின் கண்களுக்கும் தெரியக்கூடாது. இதை நகர்த்தும்போது சாதாரண மக்களும் காணக்கூடாது. இல்லாவிட்டால் ஒரு தாக்குதல் நடக்கப்போகின்றது என்ற செய்தி பரவி, முழுத்தாக்குதலுமே தோல்வியில் முடியும் ஆபத்து இருக்கின்றது.

மலரவனும், அவரது தோழர்களும் மணலாற்றிலிருந்து மாங்குளம் நோக்கி ஐந்தாறு டிராக்டர்களில் பயணத்தைத் தொடங்குகின்றனர். காட்டுப் பாதையில் இரவில் நகர்கின்ற டிராக்டர்களை ஹெலி துரத்தித் சுடும்போது அவர்கள் தப்பினாலும், அருகிலிருந்த குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பொதுமக்கள் இறக்கவும், காயமடையவும் நேருகிறது. அந்த இழப்பின் துயரத்தோடு அவர்கள் பயணத்தைத் தொடர்கின்றபோது, டிராக்டரின் ஸ்டிரியங் இடைநடுவில் உடைய, அவர்களோடு வந்த ஒரு தோழன் படுகாயமடைகின்றான். அவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தபின்னர், பயணம் தொடர்கின்றது.

மலரவன், தனியே போர் சம்பந்தமான விடயங்களைக் கூறாமல் அவர்கள் வழியில் சந்திக்கும் மனிதர்களையும், அன்றைய வன்னியின் இயற்கை அழகையும் விரிவாக விபரித்துச் செல்கின்றார். ஒருவகையில் இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன்பான வன்னிநிலப்பரப்பை நாம் இந்நூலினூடாகத் தரிசிக்கின்றோம். இவர்களுக்கு உணவில்லாதபோது அள்ளியள்ளி உணவளிக்கின்ற தாய்மார்களையும், அள்ளியணைக்கின்ற குழந்தைகளையும் பார்க்கின்றோம். அந்த மக்களுக்கு இலங்கை / இந்திய இராணுவங்களால் தனிப்பட்ட இழப்புகள் நிகழ்ந்திருந்தாலும் போராட்டம் மீதும், போராளிகள் மீதும் அவ்வளவு பற்றுறுதியுள்ளவர்களாக இருப்பதைக் காண்கின்றோம்.

இவர்கள் அணியினர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தைத் தாண்டும்போது மலரவனுக்கு 1986 இல் நடந்த நிகழ்வுகள் மனதுக்குள் ஓடத் தொடங்குகின்றன. அந்த பொலிஸ் நிலையத்தில்தான் இராணுவம் இவரின் மூத்த சகோதரனைப் பிடித்து வைத்திருக்கின்றனர். தமையன் பிடிபட்ட நான்காம் நாள் விடிகாலையில் தாயும் மலரவனும் முகாமிற்குச் சென்றதை மலரவன் எழுதியிருப்பது, இப்போது வாசித்தாலும் வாதையை உண்டுபண்ணக் கூடியது. மலரவன் இவ்வாறு எழுதிச் செல்கின்றார்:

“எங்க அண்ணனைப் பிடிச்சுக் கொண்டு போய் நாலாம் நாள் விடிய ஒரு ஆறுமணியிருக்கும். முதலாவது பஸ்சில வந்திட்டம். விடிய சரியான பனி, மரமே நடுங்கும். வந்து சென்றியக் கேட்டுக்கொண்டு சும்மா நிற்க, நான் பார்த்தன். முள்ளுக் கம்பி இருக்கல்லே, அதை நிலத்துக்கு மேல அரையடி உயரத்தில அடித்துவிட்டு, முள்ளுக்கு மேல ஒரு பொடியன குப்புறக் கிடத்தி கட்டி வைத்திருந்தான்கள். பனியில் ஆடாமல் அசையாமல் கிடந்தான்.

கொஞ்சத்தால மச்சான், ஏழெட்டுப்பேர் வந்தான்கள். நடுவில் பெரியவன் ஒருவன் எருமை மாதிரி வந்தான். வந்தவன் ஏறி உழக்கினான். ‘ஐயோ’ என்று பொடியன் கத்தினான். மச்சான், யானை கூட இப்படி சத்தமாய் கத்தாது, அப்படி இருந்ததடா. முதுகில ஏறி நின்று பிடரி மயிரைப்பிடித்து மேல இழுத்து குதிரைச்சவாரி விட்டான். அவன் கத்தின சத்தம் கேட்கேலாது. மயிரை விட்டிட்டு நெத்தியில பிடிச்சு ஒரேயடியா இழுத்து விட்டான். ‘அம்மா’ என்ற சத்தம் அரைகுறையாய் நிற்க கழுத்து முறிஞ்ச கோழி, சேவல் மாதிரி இழுத்துக்கொண்டான். பிறகு ஆடவேயில்லை. கம்பிக்கு கீழால ரத்தம் சொட்டுச் சொட்டாய் ஊத்திச்சு. அம்மா என்னையும் இழுத்துக்கொண்டு வெளியால ஓடினா.”



இப்போது இந்த ஒட்டுச்சுட்டான் முகாம் புலிகளால் கைப்பற்றப்பட்டு தகர்க்கப்பட்டிருக்கின்றது. மலரவன் அதை ஒரு விடுதலையாக உணர்ந்து பெருமூச்சு விட்டுக் கொள்கின்றார். கொஞ்ச நேரத்தில் அவர்கள் தாக்கவேண்டிய மாங்குளம் முகாமைச் சுற்றிய சூழலை இவர்களின் அணி நெருங்கி விடுகின்றது. மாங்குள முகாம் தகர்ப்பிற்கு முன்பான உளவு நகர்வுகளை இதில் மலரவன் விரிவாக எழுதிச் செல்கின்றார். அவரது நண்பர்கள் இந்த முகாமை கிட்டத்தட்ட 360 பாகை கோணத்தில் எல்லாப் பக்கமும் சுழன்று சுழன்று பார்க்கின்றனர். அவ்வாறு முன்னணிக் காவலரணில் நின்று உளவு பார்க்கும்போது அவர்களுக்கருகில் சிறுநீர் கழிக்க வருகின்ற இராணுவத்தைச் சுடுகின்றனர். அது ஒரு சிறு யுத்தமாக மாறுகின்றது. மனிதர்கள் இறக்கின்றனர். ஆயுதங்கள் கைப்பற்றப்படுகின்றன. யுத்தத்தில் நியாயம், அநியாயம் என்பவற்றுக்கு இடமில்லை. யார் முந்துகின்றார்களோ அவர்கள் மட்டுமே அடுத்த கணம் உயிர்தப்ப முடியும் எனும் போரின் கொடிய விதி இங்கு மீண்டும் நமக்கு இன்னொருமுறை நினைவூட்டப்படுகின்றது.

இராணுவ முகாமின் வரைபடம் விரிவாகத் தயாரிக்கப்பட்டு எங்கே எறிகணை செலுத்திகள் நிறுத்தப்பட வேண்டும், எப்போது எறிகணைகள் இராணுவ முகாமுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்று திட்டமிட்டு, மலரவன் குழுவினர் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றனர்.

ஏற்கனவே அதற்குச் சில மாதங்களுக்கு முன் மாங்குளம் முகாமைத் தகர்க்க முயற்சித்து புலிகள் தோல்வியைச் சந்தித்திருந்தனர். அத்தாக்குதலின்போது இராணுவம் காட்டுக்குள் மேலதிகத் துருப்புகளை உலங்குவானூர்த்தியினால் இறக்கி, மாங்குளம் முகாமிற்கு அனுப்பி வைத்திருந்தது. இப்போது முகாம் மேலும் பன்மடங்கு விஸ்தரிக்கப்பட்டும் இருக்கின்றது.

தாக்குதல் தொடங்கப்பட்டு இரண்டு தரப்பிலும் பெரும் இழப்புகள் நடக்கின்றன. இறுதியில் புலிகள் அந்த இராணுவ முகாமை வெற்றிகொள்கின்றனர்.




**ஒடுக்கப்படும் மக்களே ஒடுக்குமுறைக்கு எதிராக போராடவேண்டும், அநீதிக்கு ஆளாகி நிற்பவர்களே அநீதியை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**







ஒரு தாக்குதலை புலிகள் எப்படிச் செய்திருக்கின்றனர் என்பதை மிக விரிவாக விபரித்து எழுதிய ஈழத்து நூல் இது எனலாம். இதை எழுதிய மலரவன் இதற்கு அடுத்த இரண்டு வருடங்களில் பலாலியில் நடந்த தாக்குதலில் இறந்துவிடுகின்றார். அப்போது அவர் விட்டுச்சென்ற உடமையைப் பார்க்கும்போதே, மலரவன் எழுதி வைத்திருந்த இந்த நூலைக் கண்டுபிடிக்கின்றனர். இந்த நூல் 1993 இல் தமிழில் வெளிவந்தது. அண்மையில் இது மாலதி என்பவரால் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இன்றைக்கு, எது போரிலக்கியம் என்பது குறித்து பல்வேறு விவாதங்கள் நடக்கின்றன. எவ்வித சந்தேகமுமின்றி போராளி ஒருவரால் போரைப் பற்றி எழுதப்பட்ட இந்த நூலை ஈழப் போராட்டம் பற்றி எழுதப்பட்ட முதலாவதும் முதன்மையானதுமான போரிலக்கிய நூலென நாம் சொல்ல முடியும்.

இருபது வயதுக்குள் உக்கிரமான சமர்க்களத்தில் களமாடியபடி மலரவன் ‘போர் உலா’ என்ற நூலை மட்டும் எழுதவில்லை. ‘புயல் பறவை’ என்ற நாவலையும், வேறு பல கவிதைகளையும் எழுதியிருக்கின்றார். அவரின் ஒன்றிரண்டு நாவல்கள் கிடைக்காமலே அழிந்து போயிருக்கின்றன எனச் சொல்லப்படுகின்றது. ‘போர் உலா’ நூலின் முடிவில், அவர் அடுத்து பங்குபற்றிய சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதல் பற்றி எழுதவிருப்பதான குறிப்பு ஒன்று உள்ளது. அதை எழுத முன்னர் மலரவன் காலமாகிவிட்டார் என்பது துயரமானது. அந்தச் சிலாவத்துறை சமரில் மலரவன் படுகாயமுற்று தனது சிறுநீரகம் ஒன்றையும் இழக்கின்றார்.

‘புயல் பறவை’ நூல், பின்னர் மலரவனின் தாயால் வெளியிடப்பட்டிருக்கின்றது. ‘புயல் பறவை’ நூலில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து இயக்கத்துக்குப் போகின்றவர்கள் பற்றியும், இயக்கத்தில் பெண்களைச் சேர்ப்பது குறித்த உரையாடல்களும் பேசப்படுகின்றன.

மலரவன் சிலாவத்துறை சமரில் (சிறுநீரகம் இழந்தபோது) காயங்களை ஆற்றுப்படுத்திக் கொண்டிருந்த சமயத்தில், அவரின் தாயாரோடு இந்தப் பிரதிகளைப் பற்றிப் பேசி, திருத்தங்களைச் செய்திருக்கின்றார் என அவரது தாயான எழுத்தாளர் மலரன்னை ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

போர் என்பது எங்கு நடந்தாலும் அதற்கு எதிராகவே குரல் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அது எல்லோரையும் பாதிக்கின்றது. நமக்கு நெருக்கமான பலரைக் காவு கொள்கின்றது. ஆனால் எதற்காய் இந்தப் போர்கள் தொடங்கப்படுகின்றன என்பதற்கான காரணங்களை அறியாமல், போரை ஒழிப்பதென்பது மிகக் கடினமான காரியமே.

அன்றைய மாங்குள முகாம் தகர்ப்பில் புலிகள் தரப்பில் 60 இற்கு மேற்பட்டவர்களும், இராணுவத் தரப்பில் 100 இற்கும் மேற்பட்டவர்களும் உயிரிழந்தார்கள். இன்று 30 ஆண்டுகளுக்குப் பின் இதையெழுதும் போதும் இதற்கான அர்த்தம் என்னவாக இருக்கின்றதென யோசித்தால், பெரும் வெறுமையே சூழ்கின்றது. இறந்தவர்கள் எந்தத் தரப்பாயினும் அவர்கள் மீண்டு வரவா போகின்றார்கள்? அன்று முகாமைத் தாக்கி வெற்றி கொண்டவர்கள் பின்னர் தோற்றுப் போயிருக்கின்றனர். அன்று தோற்றவர்கள் பிறகு வென்றிருக்கின்றனர் எனில், இந்த யுத்தங்கள் எதைத்தான் நமக்குக் கொண்டு வந்திருக்கின்றன? இழப்புகளையும், வெறுப்புகளையும், காலத்தால் ஆற்றமுடியா வடுக்களையும் அல்லவா நினைவுகளாக அவை விட்டுச் சென்றிருக்கின்றன.

மலரவனும் அவரது 20 ஆவது வயதில் களத்தில் மரணித்திருக்கிறார். இன்றைக்கு அவர் உயிரோடு இருந்தால் 50 வயதுகளைத் தாண்டியவராக இருந்திருப்பார். நம்மோடு பேசிக் கொண்டிருப்பவராக, இதைப் போன்ற அருமையான நூல்களை எழுதும் ஓர் ஆளுமையாக அவர் இருந்திக்கக்கூடும். ஆனால் அற்புதமான இப்படிப்பட்ட நூலை எழுதிய மலரவனையும் இந்தப் பாழாய்ப்போன யுத்தத்திற்குள் இழந்திருக்கின்றோம் என்பது எவ்வளவு அநியாயமானது!

நன்றி: இளங்கோ (எழுநா முகநூல்)









# கிளீன் சிறீலங்கா: பொதுக் கழிப்பறைகள்

19.01.2025

கிளீன் சிறீலங்கா தொடர்பாக கடந்த வாரம் நான் எழுதிய கட்டுரையை வரவேற்று ஒரு நண்பர் கருத்து தெரிவித்திருந்தார். சிறீலங்காவை ஓரளவுக்காவது கிளீன் பண்ணக்கூடிய இடம் சுற்றுச்சூழல் விவகாரங்கள்தான் என்பதை ஏற்றுக் கொண்ட அவர் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். நீண்ட தூரப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை சிரம பரிகாரத்துக்காக நிறுத்தும் இடங்களில் உள்ள சுகாதாரக் கேடுகளை அவர் சுட்டிக் காட்டினார். குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்து வழியில் பேருந்துகள் இடைநிறுத்தப்படுகின்ற உணவகங்களில் உள்ள கழிப்பறை வசதிகளைக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை அவர் சுட்டிக் காட்டினார்.



நண்பர் அதை எனக்குக் கூறுவதற்கு முன்னரே நாட்டின் அரசுத் தலைவராகிய அனுர, கிளீன் சிறீலங்காவை அறிமுகப்படுத்தும் பொழுது நாடாளுமன்றத்தில் பின்வருமாறு உரையாற்றியிருந்தார்… “நம் நாட்டுப் பெண்கள் கழிப்பறைக்குச் செல்ல இந்த நாட்டில் சுத்தமான கழிப்பறை அமைப்பு இருக்கிறதா என்பதும் கேள்விக்குரியாகும், தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு வரும் சில பெண்கள் வீடு வரும்வரை தண்ணீர் அருந்துவதில்லை. சுத்தமான கழிப்பறை கட்டமைப்பொன்று இல்லாமையே அதற்கு காரணமாகும். கழிப்பறை கட்டமைப்பு கட்டப்பட்டாலும், சமூகத்தில் நல்ல மனப்பான்மை கட்டியெழுப்பப்படவில்லை. சாதாரண மக்களுக்கு பொது இடமாக அன்றி அவை அழிவுகரமான இடமாக மாறியுள்ளன. இதனால் என்ன தெரிகிறது? இது எமது நாட்டு ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவிடம் காணப்படுகின்ற அணுகுமுறையாகும். எனவே, தூய்மையான இலங்கை வேலைத் திட்டத்தின் ஊடாக அவ்வாறான மனோபாவத்தையும் மாற்ற எதிர்பார்க்கின்றோம்.”

அனுர அவ்வாறு பேசியபோதுதான் எனக்கு ஒரு விடயம் தெரிந்தது என்னவென்றால், தமிழ்ப் பெண்களைப் போலவே சிங்கள, முஸ்லிம் பெண்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினை அதுவென்று. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணப் போக்குவரத்து நேரம் கிட்டத்தட்ட ஏழு மணித்தியாலம். இக்காலப் பகுதியில் பெரும்பாலான பெண்கள் நீர் அருந்துவதில்லை. ஏன் என்று கேட்டால் இடையில் அவர்கள் சிறுநீர் கழிப்பதற்காக நிறுத்தும் இடங்களில் சிறுநீர் கழிக்க முடியாது. அவை அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருக்கும். அந்த இடத்தை நெருங்கும் பொழுதே துர்வாடை வீசும். அந்த இடத்தில் கால் வைப்பதற்கே கூசும். முறிகண்டியில் கட்டணம் செலுத்தும் கழிப்பறைகள் உண்டு. அங்கேயும் நிலைமைகள் பாராட்டும் அளவுக்குச் சுகாதாரமாக இல்லை.



பொதுக் கழிப்பறைகளை தொடர்ச்சியாகக் கழுவி, துப்புரவாகப் பேண மாட்டார்கள். அந்த அசிங்கத்துக்குள் போனால் சகல நோய்களும் தொற்றிக்கொண்டு விடும் என்ற அச்சம் ஏற்படும். எனவே சிறுநீர் கழிப்பதற்கு ஒரு நரகத்துக்குள் போவதை விடவும், சிறுநீரை 6 மணித்தியாலங்களுக்கு அடக்கி கொண்டிருப்பதை விடவும், நீரைக் குடிக்காமல் விடலாம் என்று ஒரு பகுதி பெண்கள் கருதுகிறார்கள். இதுவும் ஆபத்தானது. நீண்ட தூர, நீண்ட நேரப் பயணங்களில் நீரிழப்பால் உடலுக்கு ஏற்படக் கூடிய ஆபத்து அதிகம்.

அது சொகுசு வாகனம்தானே? குளிரூட்டப்பட்டதுதானே? நீர் இழப்பு குறைவாக இருக்கும் என்று ஒரு விளக்கம் கூறப்படலாம். அவ்வாறு சொகுசு வாகனம், சொகுசுப் பயணம் என்று கூறி அதற்குத் தனியாகப் பணம் அளவிடும் வாகன உரிமையாளர்கள் ஏன் தாங்கள் வாகனங்களை நிறுத்தும் இடங்களிலும் சொகுசான, வளமான, சுகாதார வசதிகளைக் கொண்ட கழிப்பறைகளைக் கட்டக் கூடாது?

பொதுப் போக்குவரத்து வாகனங்களை சாப்பாட்டு இடைவேளைக்காக அல்லது சிரம பரிகாரத்துக்காக எங்கே நிறுத்துவது என்பதனை பயணிகள் தீர்மானிக்க முடியாது. வாகன உரிமையாளர்களும் சாரதிகளும்தான் அதைத் தீர்மானிக்கிறார்கள். அது வாகன உரிமையாளருக்கும் குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடைக்கும் இடையிலான ஒரு வணிக உடன்படிக்கை. இருதரப்புக்கும் அங்கு லாபம் உண்டு. பயணிகளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் இந்த இரண்டு தரப்புக்கும் பயணிகளுக்கான கழிப்பறைகளை சுகாதாரமாக பேண வேண்டிய பொறுப்பு உண்டு.

அவர்கள் வாங்கும் பயணச் சீட்டுக்குள் அந்தச் செலவும் அடங்குகிறது. பயணிகளின் கழிப்பறை வசதிகளை சுகாதாரமாகப் பேண வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதற்கும் சேர்த்துத்தான் கட்டணம் அளவிடப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் நீண்ட தூரப் பயணங்களில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் அவர்கள் எந்தெந்த இடங்களில் நிறுத்துகிறார்களோ அந்த இடங்களில் உள்ள உணவக உரிமையாளர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. இவை அனைத்தையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

இந்த விடயத்தில் பெண்கள் படும் அவஸ்தை தெரிந்த ஒருவர் இப்பொழுது அரசுத் தலைவராக இருக்கிறார். எனவே அவர் இந்த விடயத்தில் உடனடியாகக் கை வைக்கலாம். வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், தனி வாகனங்களில் பயணம் செய்கிறவர்கள் விரும்பிய, சுகாதாரமான, வசதியான இடத்தில் நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். குறைந்தது காட்டுப்பகுதிகளிலாவது வாகனத்தை நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். தென்னிலங்கை நகரங்களில் வளமான ரெஸ்ரோரன்களில் சுகாதார வசதிகள் கூடிய கழிப்பறைகள் உண்டு. ஆனால் பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்தும் பெண்களுக்குத்தான் இந்தத் தண்டனை.

நாட்டின் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களில் சிறுநீரை அடக்கிக் கொண்டு பயணம் செய்கிறார்கள் அல்லது சிறுநீர் கழிப்பதை தவிர்ப்பதற்காக நீர் அருந்தாமல் சிறுநீர் பையை பழுதாக்குகிறார்கள் என்பது நாட்டின் வாழ்க்கை தரத்தை காட்டும் ஒரு குறிகாட்டி. சுகாதாரம், பால் சமத்துவம், பாதுகாப்பான பயணம் போன்ற பல்வேறு நோக்கு நிலைகளில் இருந்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஒரு நாட்டின் பொதுச் சுகாதாரக் குறிக்காட்டிகளில் ஒன்று பொதுக் கழிப்பறையாகும். மேற்கத்திய பண்பாட்டில் பொதுக் கழிப்பறைகள் பெரியவைகளாகவும் சுத்தமானவர்களாகவும் இருக்கும். அவற்றைத் தொடர்ச்சியாகப் பராமரிப்பார்கள். அவை பெருமளவுக்கு உலர் கழிப்பறைகள்தான். அவற்றை தொடர்ச்சியாகச் சுத்தமாகப் பேணும் ஒரு பண்பாடு அங்கு வளர்ந்திருக்கிறது. கழிப்பறைகளைப் பராமரிப்பது மட்டுமல்ல பொதுமக்கள் கழிப்பறைகளைச் பொறுப்போடு சுத்தமாக சுகாதாரமாகப் பயன்படுத்துவதும் ஒரு பண்பாடுதான். அந்தப் பண்பாடு அங்கே வளர்ந்திருக்கிறது. அது அந்த சமூகங்களின் சமூகத் தராதரத்தைத் விழுமியங்களை, கூட்டுப் பொறுப்புணர்ச்சியை வெளிக்காட்டும் விடயங்களில் ஒன்று. ஆனால் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் நிலைமை அவ்வாறு இல்லை. பொதுக் கழிப்பறை என்றாலே அசுத்தமானது, அடிவருப்பானது, துர் வாடை வீசுவது, இலையான் மொய்ப்பது என்று நிலைமைதான் பொதுப் போக்காக உள்ளது.

மேட்டுக்குடி அரசியல் பாரம்பரியத்தில் வராத அனுர இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றியது வரவேற்கத்தக்கது. அதேசமயம் அவர் கூறுவதுபோல நெடுந்தூரப் பயணங்களில் தமிழ் நோக்கு நிலையில், இது ஒன்று மட்டும்தான் விவகாரம் இல்லை என்று வாகன உரிமையாளர்களும் சாரதிகளும் முறைப்பாடு செய்கிறார்கள். நீண்ட தூரப் பயணங்களில் குறிப்பாக இரவு வேளைகளில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயண வழியில் தமது வாகனங்கள் அடிக்கடி பொலிசாரால் மறிக்கப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அவ்வாறு மறிக்கப்பட்டு பொலீஸ் நிலையத்துக்கும் நீதிமன்றத்துக்கும் அலைக்கழிக்கப்படுவதை விடவும் அவர்கள் கேட்கும் காசைக் கொடுத்துவிட்டு ஓடித் தப்புவதுதான் புத்திசாலித்தனமானது என்று பல சாரதிகள் கருதுவதாக ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு.

இந்த நடைமுறை தமிழர்களுடைய பயண வழிகளில்தான் அதிகமாக உண்டு என்றும் தென்னிலகையில் ஏனைய நெடுந்தூரப் பயண வழிகளில் இந்தளவுக்குச் சோதனைகள் இல்லை என்றும் ஓர் ஒப்பீடு உண்டு. போர்க் காலங்களில் தமிழ் மக்கள் அதனை தமக்கு எதிரான கூட்டுத் தண்டனையின் ஒரு பகுதியாக விளங்கி வைத்திருந்தார்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாகவும் அந்தத் தண்டனை தொடர்கிறதா? அப்படியென்றால் அதை உடனடியாக நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஏனென்றால் நிறைவேற்று அதிகாரமுடைய அரசுத் தலைவரால் தமிழ்ச் சாரதிகளும் வாகன உரிமையாளர்களும் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா இல்லையா என்பதனை விசாரித்து அறிவது கடினமானது அல்ல.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஒரு அரசாங்கமும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஓர் அரசுத் தலைவரும் நினைத்தால் முடிவுக்கு கொண்டு வரக் கூடிய விடையங்கள் இவை. அரசியல், பொருளாதாரத் தளங்களில் அரசாங்கத்துக்கு வரையறைகள் உண்டு. வெளி நிர்பந்தங்கள் இருக்கலாம். ஆனால் பொதுக் கழிப்பறைகள் சுகாதாரமாகப் பேணப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் பொது போக்குவரத்து வாகனங்கள் குறிப்பாக தமிழ் வாகனங்கள் பொலீசாரால் அதிகம் மறைக்கப்படுகின்றனவா என்பதனை விசாரிப்பதற்கும் அரசாங்கத்தால் முடியும். உடனடியாக முடியும். சிறீலங்காவை கிளீன் பண்ணக்கூடிய சாத்தியமான இடங்கள் இவை. அரசாங்கம் அதைச் செய்யுமா ?

கடந்த தைப் பிறப்பிலன்று வன்னியிலிருந்து ஒரு குடும்பம் வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தது. முன்னிரவு வேளை. கும்மிருட்டுக்குள் நின்று பொலீசார் மறித்தார்கள், கள்வர்களைப் பிடிப்பதுபோல மறைவில் நின்றார்கள். அங்கே தெருவிளக்குகள் இருக்கவில்லை. பொலீசாரிடம் டோர்ச் லைட்கள் இருக்கவில்லை. பதிலாக கைபேசி டோர்ச் லைட்டுகளைப் பயன்படுத்தினார்கள். வாகனத்தின் இலக்கத்தையும் ஏனைய விபரங்களையும் பதிய வேண்டும் என்று கூறி சாரதியை இறக்கிக் கொண்டு போனார்கள். கைபேசியின் டோர்ச் லைட் வெளிச்சத்தில் பதிந்தார்கள். அப்பொழுது சாரதி கேட்டார்,ஏன் உங்களிடம் டோர்ச் லைட் இல்லையா? இந்தக் கைபேசி டோர்ச் லைட்டை வைத்துக் கொண்டு கள்ளர்களை எப்படிப் பிடிப்பீர்கள்?” என்று. அதற்கு ஒரு பொலீஸ்காரர் தமிழில் சொன்னார் “துப்பாக்கி வைத்திருக்கிறோம் சுட்டுப் பிடிப்போம்” என்று. கிளீன் சிறீலங்கா?

நன்றி: நிலாந்தன்

# சமரசமற்ற பேனாப் போராளி: ராவய விக்டர் ஐவன்

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

22.01.2025

தற்போது ஆளும் தேசிய மக்கள் சக்தியின் முன்னைய ஜேவிபியின் ஆரம்பகால மிக முக்கியஸ்தரான விக்டர் ஐவன் (பொடி அத்துல - Victor Ivan) கண்டுகொள்ளப்படாத பேனாப் போராளியாக மரணித்துள்ளார்.

1971 ஆண்டு ஜேவிபியின் நாடுதழுவிய கிளர்ச்சியின் போது கொழும்பு மாவட்டத்துக்கான கிளர்ச்சிக்குழுவின் பொறுப்பாள ராக செயற்பட்டவர் விக்டர். அவர் பிற்காலத்தில் ஜேவிபியுடன் கருத்து வேறுபாடு காரணமாக அதிலிருந்து வெளியேறி சுயாதீன பத்திரிகையாளராக செயற்படத் தொடங்கினார்.

"ராவய" என்ற சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக அதன் தொடக்க காலத்திருந்து நீண்ட காலம் பணியாற்றியவர். நாட்டில் நடக்கும் ஊழல்களையும் தவறு களையும் அம்பலப்படுத்த உறுதிபூண்ட சர்ச்சைமிகு பத்திரிகை யாக ராவயாவை வளர்த்தெடுத்தார்.






### ஜேவிபியின் மூத்த உறுப்பினர்:

இறக்கும் போது அவருக்கு வயது 75. முதலாவது 1971 கிளர்ச் சியின் போது ஜேவிபியின் மூத்த உறுப்பினராக இருந்த அவர், பொடி அத்துல என்று அழைக்கப்பட்டிருந்தார். உடல்நலக் குறை வால் பாதிக்கப்பட்டிருந்த பத்தி, செய்தித்தாள் எழுத்தாளரும், ராவயவின் ஆசிரியர் விக்டர் ஐவன் கராபிட்டிய மருத்துவ மனையில் 19.01.2025இல் காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் ஆட்சியில் இருந்த அரசுகளுடன் எப்போதும் சர்ச்சைக்குரிய பத்திரிகையாளராக விளங்கினார்.

தற்போது ஆளும் கட்சியில் முன்பு முக்கிய பொறுப்பில் இருந் தவர் இந்த விக்டர் ஐவன். ஆயினும் கடந்த ஆண்டு அவரது பத்திரிகையான ராவய நிறுவகத்தை இவரால் விற்பனை செய் யவோ, இடமாற்றம் செய்யவோ, வாடகை அல்லது குத்தகைக்கு விடவோ, இடிக்கவோ, அதன் வழியாக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை அகற்றவோ, செய்தித்தாள் வெளியிடவோ கூடாது என கட்டாய தடை அறிவிப்புடன் கூடிய பல தடை உத்தரவுகளை விக்டர் ஐவன் எதிர்கொண்டு நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டார்.

ராவய பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிய விக்டர் ஐவன் 1949 ஜூன் 26ஆம் திகதி பிறந்தவர். கட்டுகஸ் தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான அவரது அர்ப் பணிப்பு அவருக்கு பரவலான மரியாதையைப் பெற்றுத் தந்தது.

"ராவய" பத்திரிகை தொடங்கப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். விக்டர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட் டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல புத்தகங்களையும் எழுதி யுள்ளார்.

### அச்சமற்ற செய்தியாளர்:

1971 இளைஞர் கிளர்ச்சி தொடர்பான பிரதான நீதிமன்ற வழக் கில் அவர் 7ஆவது குற்றவாளியாக இருந்தார். சந்தேகத்துக் குரிய அனைத்து பிரதிவாதிகளிலும் மிகவும் வண்ணமயமான நபர் என்று நீதிபதிகள் குழு அவரை விவரித்தது. விசாரணை யின் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைவாசத்தின்போது அவர் ஜே.வி.பி.யின் கோட்பாட்டையும் மார்க்ஸியத்தின் கோட்பாட்டையும் கைவிட்டார். வன்முறைக் கோட்பாட்டை நிராகரித்த அவர், மகாத்மா காந்தி விளக்கிய அகிம்சை தத்துவத்தை ஏற்றுக்கொண்டு அதனை தீவிரமாகப் பின்பற்றுபவராக மாறினார்.

சிறீலங்காவில் இனவாதம் தலைதூக்கி, சிங்கள அரசுகளால் வடகிழக்கில் தமிழர்கள் மீதான வன்முறைகள் வெடித்ததால் நாடு கொந்தளிப்பில் இருந்த 1986ஆம் ஆண்டு விக்டர் ஐவன் பத்திரிகைத் துறையில் நுழைந்தார்.

அவர் தொடங்கிய "ராவய" என்ற மாத இதழ் விரைவில் வாசகர் களிடையே பிரபலமடைந்து, அந்த நேரத்தில் அதிக தேவை கொண்ட பத்திரிகையாக மாறியது. இந்த பத்திரிகை ஊடாக அவர் பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக் கின்றமை குறிப்பிடத்தக்கது.

**இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச்சைக்குரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்த விக்டர் ஐவன், தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரிமைப் போராட்டத்தை அங்கீகாரம் செய்யா விடினும், தனது இனத்தின், ஆளும் அரசுகளின் கொடுஞ் செயல்களை எதிர்த்து குரல் கொடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது**

அச்சமற்ற செய்தி அறிக்கையிடல் மற்றும் கூர்மையான வர்ண னைக்கு பெயர் பெற்ற இவர், இலங்கை ஊடகங்களில் ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்.

### புலிகளுடன் சமாதான பேச்சின் முன்னோடி:

மூத்த பத்திரிகையாளர் விக்டர் இவான் 1993 ஆம் ஆண்டு யாழ் குடா முழுமையாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் யாழ்ப்பாணத்திற்கு துணிந்து பலதடவைகள் விஜயம் செய்தவர்.

அத்துடன் 1994 - சந்திரிக்கா குமாரணதுங்க ஆட்சிபீடம் ஏறுவதற்கு மிகமுக்கியமான மூளையாக, சூத்திர தாரியாக செயற்பட்ட ஊடகவியலாளர் இவர் விளங்கினார்.

புலிகளுடன் சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்று சந்திரிக்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்தவர்களில் இவரும் முக்கியமான ஒருவர்.

ஆரம்பத்தில் சந்திரிக்கா அரசை அனுசரித்துப் போனாலும், பின்னர் அவர் கடுமையாக விமர்சித்தார்.

அக்காலத்தில் அவர் எழுதிய பிரபலமான புத்தகங்களில் ஒன்று "The Queen of Deceit" என்பதாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவினது ஆட்சிக் காலம் குறித்த சர்ச்சை தரும் புத்தகமாக வெளியாகியது.

சிங்கள ஊடகங்களில் இறுதிவரை மிகுந்த பரபரப்பான சர்ச் சைக்குரிய ஊடகவியலாளராகத் திகழ்ந்தவர். இலங்கைத் தீவில் நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டு வரும் தமிழ் பேசும் மக்களின் தேசிய சுய நிரணய உரிமைப் போராட்டத்தை அவர் அங்கீகாரம் செய்யவில்லை.

ஆயினும் ஆளும் அரசுகளுடன் சமரசமற்று முரண்பட்டு போராடினார். தனது இனத்தின் கொடுஞ் செயல்களை எதிர்த்து குரல் கொடுத்து வந்தார் என்பதும் வரலாற்று உண்மையாகும்.

சிங்கள பத்திரிகை உலகின் இன்னோர் ஜம்பவான் விடை பெற்று உள்ளார். சக மொழி பத்திரிகையாளர்களை நேசத் துடன் பழகிய, சமரசமற்ற பேனாப் போராளியான 'ராவய' புகழ் விக்டர் ஐவனுக்கு எம் ஆத்மார்த்த அஞ்சலிகள் உரித்தாகட்டும்.









# தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டமும் அது தழுவிய சமச்சீரற்ற வல்லரசுகளுக்கிடையிலான புதிய பனிப்போரும்



"உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கின்றது, தமிழீழத்திலேதான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது, தமிழீழத்திலேதான், தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கின்றது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

"எமது நிரந்தரமான நண்பர்களும் இல்லை, நித்தியமான பகைவர்களும் இல்லை. எங்கள் நலன்கள் நிரந்தரமானவை. அவை தொடர்ந்தும் இருப்பவை. அந்த நலன்களைப் பேணுவதே எமது பணி"

பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் பாமஸ்ரன் பிரபு (1784-1865)

"We have no eternal allies and we have no perpetual enemies. Our interests are eternal and perpetual and those interests it is our duty to follow" - British Foreign Secretary, Lord Palmerston (1784-1865)

உலகம் தர்மச்சக்கரத்தில் சுழலவில்லை என்பதை நாம் அறிவோம். இந்த உலகத்தில் ஒவ்வொரு நாடும் தத்தம் நலன்களையே பேணுகின்றனர். இன்றைய உலக ஒழுங்கை பொருளாதார வர்த்தக நலன்களே தீர்மானிக்கின்றன, நீதிக்கான சட்டங்களோ மக்களின் உரிமைகளோ அல்ல. இத்தகைய நலன்களே நாடுகளுக்கிடையேயோன உறவுகளையும் இராசதந்திரத்தையும் தீர்மானிக்கின்றன. இதனால் எமது போராட்டத்தின் ஞாயத்திற்கான அங்கீகாரத்தை சர்வதேச சமூகத்திடம் உடனடியாக நாம் எதிர்பார்க்கமுடியாது. உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி, எம்மிலே தங்கியுள்ளது, உலகத்தில் அல்ல. எமது வெற்றி எங்கள் முயற்சிகளில், எமது பலத்தில், எமது உறுதியில் மட்டுமே தங்கியுள்ளது என தமிழீழத்தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் கூறியுள்ளமை மனம் கொள்ளத்தக்கது.

"We are fully aware that the world is not rotating on the axis of human justice. Every country in the world advances its own interests. Economic and trade interests determine the order of the present world not the moral law of justice nor the rights of people. International relations and diplomacy between countries are determined by such interests. Therefore we cannot expect an immediate recognition of the moral legitimacy of our cause by the international community… In reality, the success of our struggle depends on us, not on the world. Our success depends on our own efforts, on our own strength, on our own determination." Tamileelam National Leader Velupillai Pirabakaran - 1993

இலங்கைத் தீவில் இன்று இரண்டு போராட்டங்கள் இடம் பெறுகின்றது. ஒன்று சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயான போராட்டம். மற்றது இப் பிராந்தியத்தில் தமது நலன்களைப் பேண தமிழர்களின் போராட்டத்தை கருவியாக்கும் வல்லரசுகளுக்கிடையேயான போராட்டம்.

இலங்கை காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது முதல் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர் நிரந்தரமான ஆள்வோர்களாகவும் எண்ணிக்கையில் குறைவான தமிழ் மக்கள் நிரந்தரமாக ஆளப்படுவோர்களாகவும் ஆக்கப்பட்டனர். நாட்டின் அரசியல், பொருளாதாரம், மற்றும் சமூக கலாச்சார வாழ்வில் தமிழ் மக்கள் புறம் தள்ளப்பட்டனர். இதற்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் பாராளுமன்றத்தின் உள்ளே வாதங்களாகவும் பாராளுமன்றத்திற்கு வெளியே அகிம்சைப் போராட்டங்களாகவும் வடிவம் பெற்றன. அரசியல் கோசமாக சமஸ்டிக் கோட்பாடு முன் வைக்கப்பட்டது. இவையாவும் அரச பயங்கரவாதத்தால் நசுக்கப்பட்டன.



முடிவில் சமஸ்டிக்கோரிக்கையை முன்வைத்து காந்திய வழிப்பட்ட அகிம்சைப் போராட்டத்தை முன்னெடுத்த வந்த தமிழ்த் தலைவர் தந்தை செல்வா அதனை கைவிடுவதாக 1976ஆம் ஆண்டு அறிவித்து தன் பாராளுமன்றப் பதவியைத் துறந்து தேர்தலில் குதித்தார். அவர் ஈட்டிய அமோக வெற்றியைத் தொடர்ந்து சமஸ்டிக் கோரிக்கையை கைவிட்டு பிரிந்துபோகும் தனி நாட்டுக்கான பிரகடனத்தை அறிவித்தார்.

"We have completely abandoned the Federal concept, we have decided to separate. If we don't separate we can never win back our lost rights. We will try in every way to set up a Separate state. This is certain. as the voice of my people I tell this to Sri Lanka and the world from this house. We know this is not an easy task. We know it is a difficult path. But either we must get out of the rule of the Sinhalese or perish. This is our Ideal."

"சமஸ்டிக் கோட்பாட்டை நாம் முற்றாகக்கைவிட்டு விட்டோம். பிரிந்து போவதாக நாம் முடிவு செய்து விட்டோம். நாம் பிரிந்து செல்லாது விட்டால் இழந்த எமது உரிமைகளை ஒரு போதும் திரும்பப் பெற முடியாது. தனிநாடு ஒன்றை உருவாக்க நாம் எல்லா வழிகளையும் முயற்சிப்போம். இது நிச்சயம். என் மக்களின் குரலாக நான் இந்தச் சபையில் இருந்து கொண்டு சிறீலங்காவிற்கும் உலகத்திற்கும் கூறுகின்றேன். இது ஒரு சுலபமான காரியம் அல்ல என்பது எமக்குத் தெரியும். இது ஒரு கடினமான காரியம் என்பதும் எமக்குத் தெரியும். ஆனால் ஒன்றில் நாம் சிங்களவரின் ஆட்சியில் இருந்து வெளியேற வேண்டும் அல்லது அழிந்து போகவேண்டும். இது எமது இலட்சியம்"

தந்தை செல்வா நாம் பிரிந்துபோவதைத் தவிர வேறுவழி இல்லை என்பதை சிங்களவருக்கு மட்டுமல்ல உலகத்திற்கும் அறிவிக்கிறார். ஒரு நாட்டின் பிறப்பிற்கும் அதற்கான அங்கீகாரத்திற்கும் சர்வதேசத்தின் ஆதரவு வேண்டும் என்பதை அவர் அறியாமலா என்ன. தனிநாட்டை அமைக்க நாம் எல்லா வழிகளையும் நாடுவோம் என அவர் கூறியபோது ஆயுதப் போராட்டத்திற்கான காளரம் திறாக்கப்படவேண்டிய வரலாற்றின் நிற்பந்தத்தையும் அவர் அறியாமலா இருந்திருப்பார்.



ஆனால் தந்தை செல்வா இறந்தபோது யாழ் ஆயர் அம்பல வாணர் கூறியதுபோல்,

“He died like Moses himself, without reaching the promised land but the vision he saw, he leaves behind as the heritage and challenge to his people”

“யூதர்களின் மோசசைப் போல் இவர் மரணம் இவரால் உறுதி யழிக்கப்பட்ட தனிநாட்டை அடையமுன்பே நிகழ்ந்து விட்டது. ஆனாலும் இவர் கண்ட காட்சி தன் மக்களுக்கு இவரால் விட்டுச்செல்லப்பட்ட பாராம்பரியமும் சவாலுமாகும்.”

இந்தப் பாராம்பரியத்தை சுமந்தவண்ணம் இதற்காக உயி ரையே அர்ப்பணிக்கும் தொன்மமாக நச்சுக் குப்பியை கழுத்தில் கட்டிய தலைமுறையொன்று தமிழ் மண்ணில் வேர்விட்டு எழுந்தது.

“In the long history of the world only a few generations have been granted the role of defending freedom in its hour of maximum danger” JFK

உலகின் நீண்ட வரலாற்றில், சுதந்திரத்திற்கு கடுமையான அபாயம் ஏற்படும்போது அதை பாதுகாக்கும் பொறுப்பு சில தலை முறையினருக்கு மட்டும் வழங்கப்படுகிறது எனக் கூறினார் ஜோன் எவ் கெனடி. ஈழத் தமிழர்களைப் பொறுத்த வகையில் வரலாறு அந்தச் சுமையை எம் பிள்ளைகளான புலிகளுக்கு அளித்துள்ளது.

இந்த எழுச்சியின் விளைவான தேசிய விடுதலைப் போராட்டம் மூன்று தசாப்தங்களாகத் தொடர்கின்றன. இந்தப் போராட்டம் சிங்களவருக்கும் தமிழர்களுக்கும் இடையேயான போராட்ட மாக இருந்திருப்பின் அது எப்போவோ ஒரு முடிவிற்கு வந் திருக்கும். இங்குதான் மற்றவர்களின் போராட்டம் நிழக் கின்றது.

இன்று சர்வதெச சமூகத்தில் இருந்து இப்பிரச்சனைக்கான தீர்வாக நீதியுடன் கூடிய சமாதானம் என்ற குரல்களும், இராணுவத் தீர்வல்ல அரசியல் தீர்வே என்ற குரல்களும் ஓங்கி ஒலிக்கின்றபோதும் தத்தம் நலன்களைப் பேணும் அவர்களின் நடைமுறையானது தமிழ் மக்களுக்கு நீதியினை வழங்க மறுக்கின்றது. ஒருபுறம் சர்வதேச சக்திகள் இலங்கைத்தீவில் இடம் பெறும் முரண்பாட்டால் ஏற்பட்டுள்ள வாய்ப்புக்களை தமது நலன்களைப் பேணுவதற்காகப் பயன் படுத்துகின்றனர். மறுபுறம் சிங்கள ஆட்சியாளர் இதனால் கிடைத்துள்ள அரசியல் வாய்ப்பினைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது இன்றுள்ள கசப்பாண உண்மையாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இன்று ஒரு புதிய பனிப்போரில் இறங்கியுள்ள அமெரிக்கா - இந்தியா - சீனா ஆகிய மும் மூர்த் திகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்பினைப் பயன்படுத்தி அவர்கள் மூவரதும் ஆதரவுடன் தமிழ் மக்களை மீளா அடிமைகளாக வைத்திருக்க சிங்கள ஆட்சியாளர் கங்கணம் கட்டி நிற்கின்றனர். இதற்காக தீவின் பல பகுதிகளையும் அவை சார்ந்த கடல்பகுதிகளையும் சிங்கள அரசு ஏலம் போடுகின்றது.

இந்தியாவிற்கு திருகோணமலை எண்ணைக்குதங்கள், சீனா விற்கு அம்பாந்தோட்டையில் துறைமுக அமைப்பு, அமெரிக்கா வுடன் இராணுவம் சம்பந்தமான பத்து வருட ஒப்பந்தம் (Ten year Acquisition and Cross – Serving Agreement) அத்தோடு அமெரிக்க ஒலிபரப்பு (Voice of America) சம்பந்தப்பட்ட இணைப் புக்கள். ஆத்திலை போற தண்ணீலை அண்ணை குளி தம்பி குளி என எல்லோருக்கும் மன்னார் கடல் வேள்வியில் கூறுகள் என ஏலவிற்பனை தொடர்கிறது.

இந்த வல்லரசுகளை தன்வசப்படுத்த சிறீலங்காவும் இவர்களுக் கிடையே ஒரு வலுச் சமநிலையை கையாள முனைகிறது. ஆனால் சிலரை சில நேரங்களில் ஏமாற்றலாம் எல்லாரையும் எல்லா நேரங்களிலும் ஏமாற்ற முடியுமா? குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியா இதனை அனுமதிக்குமா. அத்தோடு வந்திருக் கும் மும்மூர்திகளும் தமக்குள் ஒத்துழைப்பார்களா. எதில் ஒத் துச் செல்வர். எதிர் போட்டிபோடுவர். யார் யாருடன் ஒத்துழைப் பர். யாருடன் போட்டி போடுவர். 1987 இந்திய இலங்கை ஒப்பந் தத்திற்கு அமெரிக்கா அளித்த ஆதரவு போல் இனியும் ஆதரவு நல்குமா? அது பனிப்போர்க்காலம் மட்டுமல்ல இந்தியா மூக்கு உடைபட்டு வெளியேறும் என்பதும் அமெரிக்காவால் எதிர்பார்க் கப்படாத ஒன்றா?

பேராசிரியர் நவரட்ண பண்டார கூறுவதுபோல் தமிழத் தேசிய முரண்பாடு எண்பதுகளில் சிறீலங்கா என்னும் தீவைக் கடந்து இந்திய வல்லரசின் கரைகளை வலம்வந்தபோது இந்தியாவே தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிட்டது. இப்போது இந்தக் கிள்ளலுக்கும் தடவலுக்குமான ஏகபோக உரிமையை அவர்கள் உதாசீனம் செய்து விட்டார்கள். இப் போது மேற்கு உலகம் இதனை கையாளத் தொடங்கியுள்ளது. சிங்களத்தின் மனித உரிமை மீறல்கள் தொடக்கம் பல அழுத் தங்களை இவர்கள் இப்போது அடக்கி வாசிப்பதில்லை. இது எதற்காக?

இந்த வல்லரசுகள் ஏன் இங்கு நங்கூரம் இடத் துடிக்கின்றன? ஆசியாவில் வலிமை பெற்று வரும் சீனாவும் இந்தியாவும் 21ஆம் நூற்றாண்டில் முக்கிய நாயகர்கள் எனவும் இந்து சமுத்திரம் 21ஆம் நூற்றாண்டினை வசப்படுத்தும் திறவு கோலை தன்னகத்தே கொண்டுள்ளதெனவும் அமெரிக்க மற்றும் இராணுவ பொருளாதார வியூகங்களுக்கான கற்கை களில் ஈடுபட்டுள்ள பலரும் கூறுகின்றனர். துரித வளர்ச் சியினைப் பெற்று வரும் சீனா இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அதற்கான எரிபொருள், எண்ணை என்பன தங்கு தடையின்றி ஓட இந்து சமுத்திரத்தின் கடல்வழிப் பாதைகளும் போக்கு வரத்துப் பாதைகளும் முக்கியமாகின்றன. எண்ணை மற்றும் எரிபொருள்களை கொண்டுள்ள நாடுகளின் முக்கியமான ஒடு பாதை இந்து சமுத்திரமே. இந்தச் சமுத்திரத்தில் இலங்கைத் தீவின் அமைவிடம் அதன் கேந்திரச் சொத்தாகும்.

இந்தக் கடல்வழிப் பாதையை தன் வசப்படுத்த சீனா கையாளும் வியூகத்தை முத்துச்சரம் என்பர் (The String of Pearls Strategy) பர்மா, பங்களாதேஸ், மடகாஸ்கர், பாகிஸ்தான் என்னும் நாடு களில் கடல்சார் தளங்களை அமைத்து வரும் சீனாவிற்கு சிறீலங்காவின் அம்பாந்தோட்டையும் அதில் கோர்க்கப்படும் ஒரு முத்தாகும். இந்தக் கோர்ப்பு இந்தியாவைச் சுழ இடம் பெறுவது அங்கு பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளதை அவர்களின் செயல்பாடுகள் காட்டுகின்றன. சீனாவை சுற்றிவளைத்து கட்டுப் படுத்த முயலும் அமெரிக்காவிற்கும் இது ஒரு சவாலாகிறது.



பிரித்தானிய வெளிவிவகாரச் செயலாளர் பாமஸ்ரன் பிரவு (1784–1865)

சிறீலங்காவின் கேந்திர அமைவிடம், அதன் அமைவு ஒரு பெரும் தொடர்பாடலுக்கான மையமாக அமைந்திருத்தல், பிரித் தானிய கடற்படைத்தளபதி நெல்சனால் உலகின் அற்புதமான துறைமுகம் என வர்ணிக்கப்பட்ட திருகோணமலைத் துறை முகம் என்பன இந்த வல்லரசுகளுக்கிடையே ஒரு புதிய பனிப் போரை உருவாக்கியுள்ளது எனலாம். இவர்களோடு பாகிஸ் தான், ஈரான், ரஷ்சியா, ஜப்பான, பிரித்தானியா மற்றும் ஐரொப் பிய நாடுகள் தங்கள் மூக்குகளையும் நுளைத்துள்ளன. முடி வில் இவர்கள் ஏதோ ஒரு வகையில் அந்த மும் மூர்த்திகள் பின்னே விரும்பிச் செல்லும் கூட்டாளிகளாக இடம்பிடிக்கலாம். தம்மைத் தாமே இணைத்தலைமை நாடுகள் என்று சிலர் கூறவில்லையா.

இந்தப் பகைப்புலத்தில் நிகழ்வதே தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமாகும். தேசத்தை நோக்குவதால் இது தேசியம். அன்னிய சிங்கள அடக்குமுறையில் இருந்து விடு படுவதால் இது விடுதலைப் போராட்டம். இதனால் சர்வதேச அங்கீகாரம் எமக்கு வேண்டும். நாடுகளுக்கு நிரந்தரமாகவும் தொடர்ச்சியாகவும் இருப்பவை அவர்களின் நலன்களே. அந்த





வகையில் எமது எதிரிகள் நாளை நமது நண்பர்களாகலாம். தராக்கி டி. சிவராம் கூறியதுபோல் சிறீலங்காவில் உறுதி நிலையை ஏற்படுத்த முயலும் இந்தியாவினதோ அமெரிக்காவினதோ நலன்களுக்காக எம் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த எம் தந்தையர் மண்ணை, அவர் தங்கமதலைகள் ஈன்று அமுதூட்டி பின்னர் அங்கவர் மாய அவர் உடல் பூந்துகள் ஆர்ப்பரித்த எம் தாய்நாட்டை நாம் எவர்க்கும் தாரைவார்க்க மாட்டோம். எல்லோர் நலன்களும் எம்நலன்களாக வாழ நாம் தயாராக உள்ளோம்.

“யாவரும் கேளீர்” எனப்து எமது பாரம்பரியம். சிவராம் கூறியது போல் ஒரு நாட்டு மக்கள் பிளவுபட்டு இருக்கும் போதே அன்னியப் படைகள் நுழைந்து வெற்றிபெற முடியும். மக்களை அரசியல் விழிப்புணர்ச்சி கொண்டவர்களாகவும் இனப்பற்றுள்ளவர்களாகவும் அவர்களின் புத்தியை, சிந்தனை ஆற்றலை வளர்ப்பதற்கான செயல்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். இந்த வகையில் பொங்குதமிழ் நிகழ்வுகளோடு நின்றுவிடாது கலாச்சாரம் பண்பாடு, தழுவிய உன்னதங்களால் மக்களை ஆகர்சித்து நிற்கவேண்டும். எமது இலட்சியம் புனிதமானது. அதில் உறுதியாக இருப்போமேயானால், யார் வலைப்பின்னல்களை பின்னினாலும் அதை மனித ஆற்றலால் உடைத்து வெளியேற முடியும் என்பதற்கு வரலாற்று சாட்சி.

1505 ஆம் ஆண்டு லொறன்ஸ் டஷ அல்மைடா என்னும் போர்துக்கேய மாலுமி புயலால் சிக்குண்டு காலித்துறை முகத்தை வந்தடைந்ததும் அவர்கள் முதலில் கேட்டது ஒரு வெறும் பண்டகசாலையே என்பதும் அதை கோட்டை மன்னன் புவனேகபாகு கொடுத்ததும் அதன் விழைவுகளும் பழைய கதை. ஆனாலும் The Life of Reason என்னும் நூலின் ஆசிரியர் George Santayana கூறும் “Those who cannot remember the past are condemned to repeat it” வரலாற்றை ஞாபகத்தில் வைக்காதோர் அதனை மீண்டும் எழுத நிற்பந்திக்கப்படுவர் என்பதை இங்கு சிங்கள ஆட்சியாளர்களுக்கு அழுத்திக் கூறுவதில் பிழையில்லை.

தேசிய விடுதலைக்காகப் போராடும் மக்கள் இத்தகைய பின்புலத்தில் மிகவும் விழிப்புடன் செயல்படவேண்டும். தேசிய விடுதலைப் போராட்டமே வரலாற்றில் அந்தத் தேசத்தினை அதற்குரிய பங்கைச் செலுத்த வழிசமைக்கின்றது. தேசியப் பிரக்ஞையின் இதயத்தில்தான் உலகம் தழுவிய பிரக்ஞை வாழவும் வளரவும் முடியும். இதற்காக நாம் எமது இலட்சியத்தில் உறுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் ஏனெனில்?

**“உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும் தமிழீழத்திலே தான் தேசிய ஆன்மா வழிப்புப் பெற்றிருக்கின்றது. தமிழீழத்திலே தான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது, தமிழீழத்திலேதான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கின்றது.”**
தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

ஆயின் எமது தேசிய விடுதலை, தேசநிர்மாணம் என்பன மனிதத்தின் உன்னதங்களைத் தட்டி எழுப்பும்போதே, வீறுணர்ச்சி பெறும்.

சங்ககாலத்து ஔவையார் கூறுவதுபோல் ஒரு நாட்டின் பெருமை அதன் வளங்களைப் பொறுத்தன்று, அது அங்கு வாழும் மக்களைப் பொறுத்தது.

வீரம், தன்மானம், தாரளமான நட்பு, விரிவான கலைப்பயிற்சி, பயனுள்ள தொழில் முயற்சி, சாதிமத பிடிவாதங்கள் அற்ற சுதந்திரமான நிமிர்ந்த நடை, செல்வச் செருக்கற்ற சரளமான உறவு என்பவற்றை வலியுறுத்தியவள் ஔவை. வீரயுகம் ஒன்றின் கவியரசி அல்லவா அவள். நாடு என்பது மக்களைத் தழுவியது என்கிறாள் ஔவை. நாடாக இருந்தால் என்ன, காடாக இருந்தால் என்ன, மேடாக இருந்தால் என்ன, பள்ளமாக இருந்தால் என்ன எங்கு மக்கள நல்லவர்களோ அநத மக்களைக் கொண்ட நிலமே நீ வாழ்வாயாக.

“நாடா கொன்றோ, காடா கொன்றோ
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை; வாழியநிலனே. (புறநானூறு 187)

சர்வதேசம் சிங்கள மக்களை நேசிக்கவும் இல்லை தமிழ் மக்களை வெறுக்கவும் இல்லை. அவர்கள் தங்கள் நலன்களைப் பேணவே வந்துள்ளனர். அதனை வெளிப்படையாகப் பேசுவோம் என நாம் கேட்கவேண்டும். ஏனெனில் இலங்கைத் தீவில் அவர்கள் மட்டுமல்ல இதுவே சரியான வழியுமாகும். போராசிரியர் ஜோன் நில்சென் (Prof.John P Neelsen) கூறுவது போல் வரலாறும் புவியியலும் சிங்கள வரையும் தமிழரையும் முஸ்லீங்களையும் அருகருகே வாழ விதித்துள்ளது. அளவால், கலாசாரத்தால், செழிப்பால் வேறுபட்ட பல நாடுகளை ஒன்று படுத்தும் முயற்சியில் ஐரோப்பா முன்னணியில் நிற்கின்றது. அதிகாரங்களையும் வளங்களையும் பகிர்ந்து குவித்தும் செயல்படும் தேசங்களே சுபீட்சமடையும் என்கிறார் இவர். இந்த வகையில் பல நூற்றாண்டுகளாகக் குரோதப்பட்டும் போரிட்டும் வந்த ஜேர்மினயும் பிரான்சும் சிறீலங்காவிற்கும் தமிழீழத்திற்கும் மாதிரியாக அமையலாம் என்ற இவரது கருத்து முரண்பாட்டை தீர்ப்பதற்கான உரத்த சிந்தனை மட்டுமல்ல, புதிய ஓடபாதையும்தான். ஒரு மக்கள் தம்மைத் தாமே ஆள்வதும், இன்னொரு மக்களை ஆளு மறுப்பதும் சனநாயகத்தின் முதிர்ச்சியாகும். அங்குதான் உறுதியான ஸ்திரத்தன்மை நிலவும். எல்லோரும் வெல்ல முடியும். எல்லோரதும் நிரந்தரமான நலன்களை பேணப்படுவதோடு எல்லோரும் பரஸ்பர நண்பர்களாவும் புதியதோர் உலகம் செய்வோம்.

பயன்பட்டவை:

1. International Dimensions of the Conflict in Sri Lanka (CJPD)
2. Tamilnation.org
3. Envisioning New Trajectories for Peace in Sri Lanka
4. புறநானூறு

நன்றி: ம.தனபாசிங்கம் –சிட்னி அவுஸ்திரேலியா
எரிமலை சனவரி - பெப்ரவரி 2009



# 16ம் ஆண்டு நினைவில்



பிறப்பு:
02.12.1982

தமிழீழ
மண்ணுக்காக:
12.02.2009

ஈகைப் பேரொளி

# முருகதாசன்

உன்னை எழுதவும் பாடவும் எமக்கிருக்கும்
வார்த்தைகளில் எதுவுமேயில்லை.
உன்னை வணங்குகிறோம்.
நீ
எரிந்தபொழுதினில் எம்நெஞ்சில்பட்ட
சுடுதழும்பை ஆறவிடாமல் வன்மம் வளர்ப்போம்.
காலம் எவ்வளவு கடந்தாலும் அனலாடிய உன்
ஆன்மத்தை, அதனிலும் உயர்ந்த உன் ஈகத்தை
எம்முள் நிரந்தரமாய் படிந்துவிட்ட காயத்தை
எதையுமே நாம் மறவோம்.
நீ நினைத்த விடுதலையை நாளைப்பொழுது
மீட்டுவரும். நம்பிக்கையோடு இரு.

# முழுமையாகக் கையளிக்கப்படாத; முழுமையாகத் திறக்கப்படாத; கலாசார மண்டபத்தின் பெயரை மூன்றாவது தடவை மாற்றியது

28.01.2025

தமிழ்ப் பகுதிகளில் கடலட்டை ஒரு ராஜதந்திரப் பொருளாகிவிட்டது. காற்றாலை ஒரு ராஜதந்திரப் பொருளாகிவிட்டது. ஒரு கலாச்சார மண்டபமும் அதன் பெயரும் ராஜதந்திரப் பொருட்களாகிவிட்டன. தமிழர்களுக்கான குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கான இந்திய அரசாங்கத்தின் பரிசு என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாண கலாச்சார மண்டபம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தமிழர்கள் சார்ந்த பலப் பிரயோகத்தின் குறியீடா?

ஒரு பெரிய நாடு அயலில் உள்ள ஒரு சிறிய நாட்டின் சிறிய மக்கள் கூட்டத்துக்கு பரிசாகக் கட்டிய கலாச்சார மண்டபம் என்று பார்த்தால், உலகிலேயே மிகப்பெரியது இந்த கலாச்சார மண்டபம் தான். உலகின் வெவ்வேறு பகுதிகளில் இதுபோன்ற வெவ்வேறு கட்டுமானங்களை வெளிநாடுகள் கட்டிக் கொடுத்திருக்கின்றன. ஆனால் அவ்வாறு ஒரு மக்கள் கூட்டத்துக்கு பரிசாக என்று கூறிக் கட்டப்பட்ட கலாச்சார மண்டபங்களில் ஆகப்பெரியது யாழ். கலாச்சார மண்டபம்தான் என்று கூறப்படுகின்றது.

அந்த மண்டபம் 10 மாடிகளைக் கொண்டது. யாழ்ப்பாணத்தின் சுண்ணக்கல் தரையமைப்பைப் பொறுத்தவரை ஆறு மாடிகளுக்கு மேல் கட்டுவதற்கு விசேஷ அனுமதிகள் தேவை. யாழ்.கலாச்சார மண்டபம் அவ்வாறான விசேஷ அனுமதிகளோடு, விசேஷ கட்டுமானத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது. அதனால் தான் வடக்கு கிழக்கில் உள்ள ஆக உயரமான-10 மாடிக்கட்டடமாக-அது கட்டி எழுப்பப்பட்டது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள மிக உயரமான கட்டிடமும் அதுவே. தமிழ்ப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்ட பின் முழுமையாகத் திறக்கப்படாத, முழுமையாகப் பயன்படுத்தப்படாத ஆகப்பெரிய பொதுக் கட்டடமும் அதுவே.

கடந்த 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் குறிப்பிட்ட எண்ணிக்கையான சிலரை 18ஆம் திகதி கலாச்சார மண்டபத்துக்கு வருமாறு அழைத்தது. வழமையாக அங்கே நடக்கும் சந்திப்புகள், கலாச்சார நிகழ்வுகளைப் போன்று எதோ ஒரு நிகழ்வுக்காகத்தான் அழைக்கப்படுவதாகக் கருதி அழைக்கப்பட்டவர்கள் சென்றார்கள். கலாச்சார மண்டபத்தின் ஒரு பகுதியில் அமைந்திருக்கும் சிறிய கைக்கடக்கமான மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது. அதில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், அரச அதிகாரிகள், ஊடக முதலாளிகள் உள்ளடங்கலாக மிகச்சிறிய தொகையினர் காணப்பட்டார்கள்.







நிகழ்வில் முதலில் பேசியவர் இலங்கையின் புத்தசாசன அமைச்சர். அவர் பேச வரும்போது கையில் ஒரு புத்தகத்தை வைத்திருந்தார். பேச்சின் போது அது சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் என்று கூறினார். அது முதலாவது மொழிபெயர்ப்பு என்றும் 1961ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது என்றும், அதன்பின் பல்வேறு மொழிபெயர்ப்புகள் வந்துவிட்டதாகவும் அவர் அங்கு சொன்னார். திருக்குறளைப் புகழ்ந்து பேசினார்.

அதன்பின் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் பேசினார். அவரும் திருக்குறளைப் புகழ்ந்து பேசினார். அந்த கலாச்சார மண்டபம் “லோக்கல்” அதாவது உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று பேசினார். மேலும் அதை முழுமையாக உபயோகத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் பேசினார். முடிவில் டிஜிட்டலாக அந்த மண்டபத்தின் பெயர் திருவள்ளுவர் கலாச்சார மண்டபம் என்று மாற்றப்பட்டது.

ஒரு மக்கள் கூட்டத்துக்கு பரிசாக வழங்கப்பட்ட ஒரு கட்டடத்தின் பெயரை, அந்த மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் போன்றோரைக் கலந்தாலோசிக்காமல் ரகசியமாக மாற்றியமை என்பது பரவலாக விவாதிக்கப்படும், விமர்சிக்கப்படும் ஒரு விடயமாக மாறியது. பெயர் மாற்ற நிகழ்வில் பேசிய கொழும்புக்கான இந்திய தூதர் லோக்கல் கட்டமைப்பின் மூலம் அதை நிர்வகிக்கப்பட வேண்டும் என்று பேசியிருந்தார். ஆனால் பெயர்மாற்ற விடயத்தில் லோக்கல்-உள்ளூர் உணர்வுகள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

“சிறந்த தமிழ் கவிஞரும் தத்துவஞானியுமான திருவள்ளுவரை நினைவுகூர்ந்து கௌரவமளிக்கும் வகையில் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்கு ‘திருவள்ளுவர் கலாசார நிலையம்’ எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் மூலம் மேன்மைக்குரிய திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தப்படுகின்றமை மட்டுமல்லாமல், இந்திய இலங்கை மக்களிடையிலான ஆழமான கலாசார, மொழி, வரலாற்று, மற்றும் நாகரிக பிணைப்புகளுக்கான ஒரு சான்றாகவும் இது திகழ்கின்றது”. என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ருவிற்றர் பதிவில் கூறப்பட்டுள்ளது. இந்தியப் பிரதமர், இந்திய வெளியுறவு அமைச்சர் போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களும் அவ்வாறுதான் காணப்படுகின்றன.

அதேசமயம் உள்ளூர் உணர்வுகளைக் கவனத்தில் எடுக்காமல் அவ்வாறு பெயர் மாற்றியதன் விளைவுகளைத் தாம் உணர்ந்திருப்பதாகவும், அதுதொடர்பாக டெல்லிக்கு அறிவிக்கப்பட்டதாகவும், அந்த அடிப்படையில் மண்டபத்தின் பெயரில் யாழ்ப்பாணம் என்ற சொல் மீண்டும் சேர்க்கப்பட்டதாகவும் இந்தியத் துணைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் என்பது ஒரு புவியியல் பதம் மட்டும் அல்ல. அதைவிட ஆழமான பொருளில், அது ஒரு பண்பாட்டுப் பதம். ஓர் அரசியல் பதம். ஈழத் தமிழர்களின் கலாச்சார தலைநகரங்களில் ஒன்று என்ற அடிப்படையில் அது ஈழத் தமிழ் அடையாளங்களில் முக்கியமானது. எனவே அந்தப் அரசியல், பண்பாட்டுப் பெயரை மாற்றியமை ஈழத் தமிழர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டு உணர்வுகளைப் புண்படுத்துவதாக அமைந்திருப்பதைத் தாம் உணர்ந்திருப்பதாக இந்தியத் துணைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்பெயர் மாற்றத்திற்கு உத்தியோக பூர்வமாக கூறப்படும் காரணம் எதுவாகும் இருக்கலாம். ஆனால் அதற்குப் பின்னால் வேறு ஒரு ராஜதந்திர இலக்கு உண்டா என்ற கேள்வியுண்டு.

கட்டி முடிக்கப்பட்ட பின் இன்றுவரை முழுமையாகக் கையளிக்கப்படாத, முழுமையாகத் திறக்கப்படாத ஒரு பொதுக் கட்டிடம் அது. ஏன் அவ்வாறு முழுமையாக கையளிக்கவோ அல்லது திறக்கவோ முடியவில்லை? ஏனென்றால் அதில் இரண்டு விடயங்கள் சம்பந்தப்படுகின்றன. முதலாவது, தமிழ் மக்களுக்கு உரிய தன்னாட்சி அதிகாரத்தின் அளவை அளக்கும் ஒரு கட்டடம் அது. இரண்டாவது தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அதிகாரம் தொடர்பில் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்தின் மீது இந்தியா பிரயோகிக்கக்கூடிய அழுத்தங்களின் அளவைக் குறிக்கும் ஒரு கட்டடம் அது.

பிரதமர் மோடி அதனை சில ஆண்டுகளுக்கு முன்பு “மென் திறப்பு” என்று கூறி அரைவாசி திறந்து வைத்தார். அதற்குப் பின்னர் இரண்டு அரசாங்கங்கள் வந்துவிட்டன. ஆனால் இப்பொழுதும் அதனை முழுமையாகத் திறக்க முடியவில்லை. ஏன்?

அந்த மண்டபத்தை இந்தியா தமிழர்களுக்கான பரிசு என்று கூறுகிறது. அதை தமிழர்களையும் உள்ளடக்கிய குறிப்பாக யாழ். மாநகர சபை நிர்வாகத்தையும் உள்ளடக்கிய, ஒரு கட்டமைப்புத்தான் பரிபாலிக்க வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது. ஆனால் இதுவரையிலும் இருந்த இலங்கை அரசாங்கங்கள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அது கூடுதலான பட்சம் கொழும்பில் உள்ள மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று கொழும்பில் இதுவரையிலும் இருந்த அரசாங்கங்கள் சிந்தித்தன.

மணிவண்ணன் யாழ்.மாநகர சபை முதல்வராக இருந்த காலத்தில் ஒரு சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது. அதில் கொழும்பில் உள்ள இந்திய துணைத் தூதுவரும் பங்குபற்றினார். உரையாடலின்போது அந்தப் பெரிய மண்டபத்தை பரிபாலிப்பதற்கு வேண்டிய நிதிக் கொள்ளளவு மாநகர சபையிடம் இல்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் தனக்கு நிதி உதவி வழங்கப்பட்டால் தான் அதனை நிர்வாகிக்கத் தயார் என்று மணிவண்ணன் தெரிவித்திருக்கிறார். அந்த நிதியை குறிப்பிட்ட காலத்துக்கு இந்தியா வழங்கும் என்று இந்திய துணைத் தூதுவர் தெரிவித்துள்ளார். அப்பொழுது சந்திப்பில் பங்குபற்றிய கலாச்சார அமைச்சின் செயலாளர்-அவர் ஒரு மருத்துவர்-மணிவண்ணனைப் பார்த்துப் பின்வருமாறு கூறியுள்ளார்... “நீங்கள் இந்தியாவை நம்பக் கூடாது் எங்களைத் தான் நம்ப வேண்டும்” என்று.

மேலும் அந்த மண்டபத்தில் உள்ள ஒரு மாடியைத் தனது அமைச்சுக்குத் தருமாறு நாமல் ராஜபக்ச முன்பு அமைச்சராக இருந்த பொழுது கோரிக்கை விடுத்ததாகச் செய்திகள் வெளிவந்தன. அதுபோலவே யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீலங்கா படைத்தரப்பும் அதில் இரு மாடிகளை தமது பிரயோகத்துக்குத் தருமாறு கேட்டதாக ஒரு தகவல் உண்டு. ஆனால் இந்தியத் துணைத் தூதரகம் அந்த வேண்டுகோள்களை சாதகமாகப் பரிசீலிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. இதுதான் இந்த மண்டபத்தை சூழ்ந்திருக்கும் அரசியல் யதார்த்தம். அதை முழுமையாகத் திறக்கவோ அல்லது தமிழ் மக்களிடம் கையளிக்கவோ முடியவில்லை.

அதனால்தான் அந்தக் கட்டடத்தை மென் திறப்பு என்று அரைவாசி திறக்க வேண்டியிந்தது. அதைத் திறந்து இத்தனை ஆண்டுகளின் பின்னரும் முழுமையாக திறக்க வேண்டும் என்று கோரிக்கை விட வேண்டியிருக்கிறது. இப்பொழுது கொழும்பில் புதிய அரசாங்கம் வந்திருக்கிறது. அந்த அரசாங்கத்தை இந்த விடயத்தில் சம்மதிக்கச் செய்யலாமா என்று இந்தியா சிந்திக்கக்கூடும். குறிப்பாக அரசுத் தலைவர் சீனாவுக்குச் சென்று வந்த சில நாட்களில் இந்த விடயத்தை ஒரு பேசு பொருளாக்க இந்தியா விரும்பியிருக்கலாம். மண்டபத்தின் பெயரில் யாழ்ப்பாணம் என்ற அரசியல் பதத்தை அகற்றினால் கொழும்பை நம்பச் செய்யலாம் என்று இந்தியா சிந்தித்ததா?

ஆனால் பெயர் மாற்ற விவகாரம் ஒரு சர்ச்சையாக மாறிய பின்னணியில், அந்நிகழ்வில் பங்குபற்றிய அமைச்சர் சந்திரசேகரன் இந்த விடயத்தில் தமிழ் வாக்காளர்களின் உணர்வுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்தோடு பதில் கூறியிருக்கிறார். பெயர் மாற்ற விவகாரம் தனக்கு முன்கூட்டியே தெரியாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் அவரோடு வருகை தந்த புத்தசாசன அமைச்சருக்கு ஏற்கனவே அது தெரியும். ஏனெனில் அவர் சிங்களத் திருக்குறளையும் கையில் எடுத்துக் கொண்டே பேச வந்தார். ஆயின் அமைச்சர் சந்திரசேகரனுக்கு தமிழ் மக்கள் தொடர்பாக அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் அறிவிக்கப்படுவதில்லையா?

எதுவாயினும் யாழ்.கலாச்சார மண்டபம் இதுவரை முழுமையாகத் திறக்கப்படவில்லை என்பதுதான் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலுமான அரசியல் யதார்த்தம் ஆகம். அப்பெருமண்டபம் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கிய அன்பளிப்பு மட்டுமல்ல, அது தமிழ் மக்களுக்கான தன்னாட்சி அதிகாரத்தின் அளவைக் குறிக்கும் ஒரு குறியீடு. தமிழ் மக்கள் தொடர்பாக இந்தியா, கொழும்பின் மீது பிரயோகிக்கக்கூடிய அழுத்தத்தின் அளவைக் குறிக்கும் ஒரு குறியீடு என்பதுதான் கடந்த பல ஆண்டு கால அரசியல் யதார்த்தம்.

நன்றி: நிலாந்தன்



# தமிழீழ விடுதலை வரலாற்றில் பெப்ரவரி



### சிங்களம் மட்டும் சட்டம்



மூத்த சிங்கள இனவாதியான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவினால் சிறீலங்காப் பாராளு மன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டம் 08.02.1956 அன்று கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தால் இலங்கைத்தீவில் தமிழ் இரண்டாம்பட்ச மொழியாக்கப்பட்டது.

### தியாகி திருமலை நடராஜன் நினைவு நாள்



04.02.1957அன்று சிங்ளச் சிறீ சட்டத்தை எதிர்த்து தமிழர் தேசமெங்கும் சிறீலங்காவின் சுதந்திரதினத்தை தமிழர்கள் பகிஸ்கரித்தனர். திருமலையில் சிங்கக்கொடியை அகற்றி கறுப்புக் கொடியைக் கட்டமுயன்ற 22 வயது நிரம்பிய இளைஞனான திருமலை நடரராஜன் சுட்டுக் கொல்லப்பட்டான். இனப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய தியாகி நடராஜன். எவ்.ஜி.மனுவல். டீ. சில்வா என்ற சிங்களக் காடையனால் கோழைத்தனமான முறையில் சுடப்பட்டான்.

### சிறீலங்காப் பொலிசார் மீதான முதல் தாக்குதல்

14.02.1977 அன்று காங்கேசன்துறை மாவிட்டபுரப் பகுதியில் சிறீலங்காப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோத்தர் ஒருவர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

### சிறீலங்காவின் காவல்துறைப் பரிசோதகர் கொல்லப்பட்டார்

தமிழின அழிப்பில் முன்னின்ற பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியான பரிசோதகர் விஜயவர்தனாவும் அவரது சாரதியும் விடுதலைப் புலிகளால் 18.02.1983 அன்று சுட்டுக்கொல்லப்பட்டனர்.

### குருநகர் சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் தகர்ப்பு

பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களின் வதை முகாமாக விளங்கியதும், சிறீலங்கா இராணுவத்தின் பிராந்தியக் காரியாலயமாக விளங்கியதுமான குருநகர் இராணுவ முகாம் கட்டிடங்கள் விடுதலைப் புலிகளால் 24.02.1984 அன்று வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன.

### கொக்கிளாய் சிறீலங்கா ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் மீதான தாக்குதல்

13.02.1985 அன்று கொக்கிளாய் சிறீலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலே தமிழீழ விடுதலை வரலாற்றில் முதலாவது சிங்கா ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சி ஆகும். இத் தாக்குதல் 5 மணித்தியாலங்கள் நீடித்தது. இத்தாக்குதலில் நூற்றிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முப்பதிற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இதேவேளை நாயாற்று முகாமிலிருந்து உதவிக்கு வந்த சிங்கள இராணுவத் தொடரணி மீது மேற் கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் நடவடிக்கையின் விளைவாக சிறீலங்கா இராணுவம் திரியாய், கொக்கிளாய் பகுதிகளிலிருந்து பின்வாங்கி பதவியாவில் நிலைகொண்டது.

### அம்பாறை உடும்பன்குளப் படுகொலை

தென்தமிழீழத்தின் அம்பாறை உடும்பன்குளப் பகுதியில் வயல் வேலை செய்துகொண்டிருந்த 60 தமிழர்கள் சிறீலங்கா அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வைக்கோலுக்குள் வைத்து எரியூட்டப்பட்டனர். இச்சம்பவம் 19.02.1986 அன்று இடம்பெற்றது.



### லெப். கேணல் பொன்னம்மான் உட்பட 7 போராளிகள் வீரச்சாவு




விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் மூத்த தளபதியுமான லெப்.கேணல் பொன்னம்மான் 14.02.1987 அன்று கைதடியில் இடம்பெற்ற எதிர்பாராத வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். ஆயிரக்கணக்கான புலிவீரர்களை உருவாக்கிய பயிற்சி முகாம்களுக்கு பொறுப்பாளராகவும், இராணுவத் தொழில் நுட்பப்பிரிவில் பலசாதனைகளையும் இவர் படைத்தார். கைதடியில் நிகழ்ந்த வெடிவிபத்தில் இவருடன் மேஜர் கேடில்ஸ், கப்டன் வாசு, லெப். சித்தாத்தன், 2ம்லெப். பரன், வீரவேங்கை யோகேஸ், வீரவேங்கை தேவன், வீரவேங்கை குமணன், வீரவேங்கை அக்பர், வீரவேங்கை கவர் ஆகிய 7 போராளிகள் வீரச்சாவடைந்தார்கள்.

### வன்னிவிக்கிரம முறியடிப்பும் உலங்குவானூர்தி தகர்ப்பும்



வவுனியா பூவரசங்குள வழியாக வன்னி விக்கிரம என்ற குறியீட்டுப் பெயருடன் முன்னேற முற்பட்ட சிறீலங்கா இராணுவம் வந்த வழியே திருப்பி அனுப்பப்பட்டது. இதன் போது 10.02.1991 அன்று உலங்குவானூர்தி ஒன்று விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

### முல்லைத்தீவு பூனைத்தொடுவாய் மீனவர் படுகொலை

18.02.1994 அன்று முல்லை பூனைத்தொடுவாய் கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்ட மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 10 மீனவர்கள் கொல்லப்பட்டனர்.



### கிளிநொச்சியின் மையப்பகுதி மீட்பு

கிளிநொச்சியூடாக யாழ் குடாநாட்டிலிருந்து பேரூந்தில் சுதந்திரதினத்திற்கு தமிழர்களைக் கண்டிக்குக் கொண்டு வருவேன் எனச் சபதம் செய்த ரத்வத்தையின் பேராசை, 01.02.1998 அன்று கிளிநொச்சியின் மையப்பகுதி விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டதையடுத்து நிராசையானது. அதன் போது விடுதலைப் புலிகளால் 5 கி.மீ நீள நகரப்பகுதி மீட்கப்பட்டது. அத்துடன் பல நூற்றுக்கணக்கான முன்னணி சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் மடைந்தனர். காயமடைந்தனர்.



### 02.02.1998 அன்று கிளிநொச்சியில் சிங்கக்கொடி பறப்பைமாற்றி தமிழீழக் கொடியை பறக்க செய்த தாக்குதலுக்குப் பலம் சேர்த்து வீரச்சாவடைந்த 13 கரும்புலிகள்

சிறீலங்காவின் சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்டத்திற்கு கிளிநொச்சியூடாக யாழ். மக்களை கொண்டுசெல்வோம் என்ற இறுமாப்பு மிக்க சிங்கள அரசதரப்பின் நிலைப்பாட்டுக்கு 02.02.1998 அன்று விடுதலைப் புலிகள் கொடுத்த பலமான அடி. கிளிநொச்சி நகர் மீட்பாகும். கிளிநொச்சியில் சிங்கக் கொடி பறப்பைமாற்றி தமிழீழத் தேசியக் கொடியை பறக்கச் செய்த தாக்குதலுக்குப் பலம் சேர்த்துக் கொடுத்த கரும்புலிகளான லெப். கேணல் சுபேசன், மேஜர் ஜெயராணி, மேஜர் குமுதன், மேஜர் ஆசா, மேஜர் மங்கை, கப்டன் தனா, கப்டன் இந்து, கப்டன் நளாயினி, கப்டன் செங்கதிர், கப்டன் குமரேஸ், கப்டன் உமையாள், கப்டன் நெடியோன், கப்டன் அருண் ஆகியோர் வீரச்சாவடைந்தனர்.




### லெப். கேணல் நிர்மா வீரச்சாவு – 28.04.2001



தமிழீழத்தில் இடம்பெற்ற பல முக்கிய களங்கள் லெப்.கேணல் நிர்மா (மேரிசாந்தினி ஞானசுந்தரம், கிளிநொச்சி - 23.09.173)வின் பணியை வேண்டிநின்றன. லெப். கேணல் பொன்னம்மான் கண்ணிவெடி அணியின் 2வது பொறுப்பாளராக செயற்பட்டவர். தீச்சுவாலை 01 எதிர் நடவடிக்கை வெற்றிக்கு வலுச்சேர்த்து வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

### லெப். கேணல் கௌசல்யன் வீரச்சாவு – 07.02.2005



மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரான கௌசல்யன் சுனாமியால் பாதிக் கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மீள்கட்டுமானப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட வேளை 07.02.2005 அன்று மட்டு மாவட்ட இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் நடாத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்தார். இவருடன் மேஜர் புகழ்மாறன், மேஜர் செந்தமிழன், 2ம் லெப். விதிமாறன் ஆகியோரும் வீரச்சாவடைந்தார்கள்.

### அம்பாறை மாவட்ட முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சந்திரநேரு அரச பயங்கரவாதத்தினால் சாவடைந்தார்.






அம்பாறை மாவட்ட முன்னால் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமை ஆர்வலருமான திரு. சந்திரநேரு அரியநாயகம் 07.02.2005 அன்று மட்டு மாவட்ட இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் வைத்து சிறீலங்கா இராணுவத்தால் நடாத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்து 08.02.2005 அன்று மருத்துவமனையில் சாவடைந்தார். இவரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் மாமனிதர் என்ற அதியுயர் தமிழீழத்தின் தேசிய விருதை வழங்கிக் கௌரவித்தார்.

## லெப். கேணல் தவா(துவம்) உட்பட நான்கு போராளிகள் வீரச்சாவு – 17.02.2008

தமிழீழ தேசியத்தலைவரின் மாவீரர் நாள் உரைகள், பேச்சுவார்தைகள், சமர்கள படப்பிடிப்புக்கள், ஒளிவீச்சு சஞ்சிகை உருவாக்கம், தேசிய தொலைக்காட்சியின் முதன்மை படப்பிடிப்புக்கள், அரங்க நிகழ்வுகள், தமிழீழ திரைப்படங்கள் உருவாக்கம் என தமிழீழ விடுதலைப் போராட்த்தின் அனைத்து வரலாற்று நிகழ்வுகளையும் ஆவணமாக பதிவு செய்த லெப். கேணல் தவா 17.02. 2008 அன்று மேஜர் புகழ்மாறன், போர் உதவி படைவீரர்களான நிதர்சனப் பணியாளர்கள் ரவி, அகிலன் ஆகியோரும் மண்ணின் மடியில் மடிந்தனர்.



## சிறீலங்காவின் "பாவதா" தரையிறக்கும் கப்பலும் "வலம்புரி" சரக்குக் கப்பலும் மூழ்கடிக்கப்பட்ட பெரும் கடற்சமரின் போது வெற்றிக்கு வலுச் சேர்த்து வீரச்சாவடைந்த 11 கடற்கரும்புலிகளின் நினைவு நாள் – 22.02.1998




திருகோணமலையிலிருந்து யாழ். குடாவுக்கென “பாவதா” தரையிறக்கும் கப்பலும் இராணுவ சரக்குக்கப்பலான “வலம்புரி”யும் மேலும் இரண்டு போர்க்கப்பலும் 8 டோரா படைகுகள் பாதுகாப்பு வழங்க துருப்புக்களையும் இராணுவ தளபாடங்களையும் கொண்டு சென்ற “பாவதா” தரை யிறக்கும் கப்பலும் “வலம்புரி” சரக்குக்கப்பலும் மூழ்கடிக்கப்பட்ட பெரும் கடற்சமரின் போது



வெற்றிக்கு வலுச்சேர்த்து வீரச்சாவடைந்த 11 கடற்கரும்புலிகளான லெப். கேணல் கரன், மேஜர் தமிழினியன், மேஜர் சுலோயன், மேஜர் குமரேஸ், கப்டன் வள்ளுவன், மேஜர் தமிழ்மங்கை, கப்டன் வனிதா, கப்டன் ஜனார்த்தினி, கப்டன் நங்கை, கப்டன் தமிழன்பன், கப்டன் மேகலா ஆகியோரின் நினைவு நாள் 22.02.1998.

## ஈகைப்பேரொளி முருகதாசன் நினைவு நாள் – 12.02.2009



உலகத் தமிழ் மக்களிடையெ குறிப்பாக புலம்பெயர் இளையோர்களிடையே பெரும் தாக்கத்தையும் வீரத்தையும் போராட்ட குணத்தையும் விதைத்துச்சென்ற ஈகப்பேரொளி முருகதாசன் வர்ணகுல சிங்கம் (02.12.01982). ஐ.நா மனித அவையின் முன்றலில் 2009 பெப்ரவரி 12 வியாழக்கிழமை இரவு இன அழிப்பிலிருந்து ஈழத்தமிழ் மக்களை காப்பாற்றக்கோரி தீக்குளித்து சாவை அணைத் துக்கொண்டார். இவர் 7 பக்கங்களுக்கு “உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத் மார்த்த வேண்டுகோள்” என்ற தலைப்பில் ஒரு மரண சாசனம் எழுதி வைத்து விட்டு தீக்குளித்தார்.

## ஊடகவியலாளர் சத்திமூர்த்தி நினைவு நாள் – 12.02.2009



சிறீலங்கா இனவாத அரசு தமிழினத்தின் மீது நடத்திய இன அழிப்பு நடவடிக் கையில், அது மேற்கொண்டுவந்த கருத்து ஆக்கிரமிப்பை உடைக்கும் தமிழ்த் தேசிய ஊடகப் பணியில், அம் மண்ணில் நிகழ்ந்த கடும் ஆக்கிரமிப்பு போரினால் இடப்பெயர்வுகள், பேரவலங்கள் மத்தியில் நின்று திறம்பட செயற்பட்டு வந்தவர் சத்தியமூர்த்தி புண்ணியமூர்த்தி (30.10.1972). தமிழீழ விடுதலைப் புலிகளால் நாட்டுப்பற்றாளராக மதிப்பளிக்கப்பட்டார்.

## தமிழீழ நிதிப் பொறுப்பாளர் பிரகேடியர் தமிழேந்தி வீரச்சாவு – 10.03.2009



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் இருந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக தன்னை முழுமையாக அர்ப்பணித்து தனது தனித்துவமான திறமையால் நிதித்துறையை திறம்பட செயலாற்றி, தேசியத் தலைவர் அவர்களதும், போராளிகளினதும் நன்மதிப்பு வெற்றிருந்தவர். 10.03.2009 அன்று சிறீலங்கா ஆக்கிரமிப்பு படையின் எறிகணைத் தாக்குதலில் தமிழேந்தி (சபாரத்தினம் செல்லத்துரை - 13.02.1950) வீரச்சாவடைந்தார்.

## முதலாவது வான் கரும்புலித் தாக்குதல் 20.02.2009



சிறீலங்காவின் தலைநகரில் அமைந்துள்ள சிறீலங்கா வான்படை தலைமையகம் மீதும் கட்டு நாயக்காவில் அமைந்துள்ள வான்படைத்தளம் மீதும் வான் கருதம்புலிகளின் பெற்றிகரத் தாக் குதலில் வீரச்சாவவைத் தழுவிக்கொண்ட முதல் வான் கரும்புலிகளான கேணல் ரூபன், லெப். கேணல் சிரித்திரன் ஆகியோரின் நினைவுநாள் 20.02.2009.




16 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
ரவி 02.02.2009
இராஜா 07.02.2009
இரவிச்சந்திரன் 07.02.2009
அமரேசன் 08.02.2009
தமிழ்வேந்தன் 18.02.2009
சிவப்பிரகாசம் 21.02.2009
கோகுலகிருஷ்ணன் 25.02.2009
சீனிவாசன் 01.03.2009
எழில்வளவன் 05.03.2009
ஆனந்த் 15.03.2009
இராசசேகர் 17.03.2009
பாலசுந்தரம் 22.03.2009
மாரிமுத்து 22.03.2009
சிவானந்தன் 17.04.2009
சுப்பிரமணி 23.04.2009
தமிழின் இரத்த உறவுக்காய்
தணலிற்கே தம்முயிர் தந்து – தமிழனின்
தன் மானத்தை நிலைநாட்டிய வீரச் செம்மல்களே
எம் தொப்புள்கொடி உறவுதனை
தரணியெங்கும் உணர்த்திட்ட தீரர்களே!
உங்கள் சுடரின் வழியில் எம் பயணம் தொடரும்...
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்